
Save the Children

# பங்குபற்றுகை



பரிந்துரைத்தல் விடயங்கள்

## சிறுவர்கள் தமது உலகை மாற்றுவதற்கு உதவுதல்

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் பரிந்துரைத்தலுக்கான வழிகாட்டி

Save the Children

# பங்குபற்றுநர் கையேடு

## பரிந்துரைத்தல் விடயங்கள்

## சிறுவர்கள் தமது உலகை மாற்றுவதற்கு உதவுதல்

### சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் பரிந்துரைத்தலுக்கான வழிகாட்டி

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பே உலகின் சுயாதீனமான முன்னணி சிறுவர் உரிமைகள் நிறுவனமாகும். 27 நாடுகளில் தமது உறுப்பினர்களை கொண்டு 100க்கும் அதிகமான நாடுகளில் நிகழ்ச்சிகளை செயற்படுத்தி வருகின்றது. உலகெங்கிலும் வாழும் சிறுவர்களின் உரிமைக்காகவும், அதனை மேம்படுத்தி வழங்குவதற்காகவும் போராடி வருகின்றோம்.

இலக்கு
சேவ் த சில்ரன் உலகத்திற்காக செயற்படுகின்றது.

- அது ஒவ்வொரு சிறுவர்களினதும் விழுமியங்களை மதிக்கின்றது.
- சிறுவர்களுக்கு செவிமடுக்கும் அது, அவர்களிடமிருந்தும் கற்றுக் கொள்கின்றது
- இங்கு அனைத்து சிறுவர்களுக்கும் எதிர்பார்ப்பும், சந்தர்ப்பமும் கிடைக்கின்றது.

குறிக்கோள்
சிறுவர்களின் உரிமைகளுக்காக சேவ் த சில்ரன் போராடுகின்றது.
உலகெங்கும் வாழும் சிறுவர்களிற்காக துரிதமான, நீண்ட கால அபிவிருத்திகளை நாம் வழங்குகின்றோம்

**இந்த பரப்புரை பயிற்சி வழிகாட்டி தயாரித்தவர்கள்:**
சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு
பரப்புரை வழிகாட்டி தூண்டல் குழு
Aina Bergstrom, சேவ் த சில்ரன், நோர்வே
Birgit Lundbak, சேவ் த சில்ரன், டென்மார்க்
Carol Miller, சேவ் த சில்ரன், ஐக்கிய அமெரிக்கா
Mali Nilsson, சேவ் த சில்ரன், சுவீடன்
Sarah Roma, சேவ் த சில்ரன், ஐக்கிய அமெரிக்கா (ஒருங்கிணைப்பாளர்)
Julia Sherwood, சேவ் த சில்ரன், ஐக்கிய இராச்சியம்
Anita Sheth, சேவ் த சில்ரன், கனடா

**எழுதியவர்:** மேலே குறிப்பிட்ட அனைவரினதும் ஒத்துழைப்புடன், லூயிசா கொஸ்லிங் மற்றும் டேவிட் கொஹென் (Louisa Gosling and David Cohen)

*கொஸ்லிங் மற்றும் கொஹென் ஆகியோர் சுயாதீனமான ஆலோசகர்கள் மற்றும் பயிற்சி, இலகுபடுத்தல் மற்றும் பரப்புரையில் பல வருட அனுபவங்களை கொண்டவர்கள்.*

**தயாரித்தது:**
சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:**
The Coordinator
Campaigns and Advocacy Team
Save the Children UK
1 St John's Lane
London EC1M 4AR
Tel: +44 (0) 20 7012 6400

முதல் பதிப்பு 2007

© சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு 2007

REGISTERED CHARITY NO. 10768220

இந்த பதிப்பு பதிப்புரிமை உடையது. ஆனால் கற்பித்தல் தேவைகளுக்காக கட்டணம் அல்லது முன் அனுமதியின்றி எந்த முறையிலும் மீள்பதிப்பிக்கப்படலாம். ஆனால் மீள் விற்பனைக்கு அல்ல. வேறு சூழ்நிலைகளில் பிரதியெடுப்பதற்கு பதிப்பாளரின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். அதற்கான கட்டணமும் செலுத்தப்படல் வேண்டும்.

**வடிவமைத்தவர்:** ஜோலி மெரிங்டன் (Joely Merrington)

**தொகுத்தவர்:** கத்ரீன் ஓ நெல் (Kathryn O'Neill)

**விளக்கமளித்தவர்:** ஜெஸ் ஸ்ரோக்கம் (Jess Stockham)

இந்த செயற்றிட்டத்திற்கு பகுதியளவில் சர்வதேச அபிவிருத்திக்கான கனடா நிறுவனத்தின் (CIDA) , கனடா பங்காளித்துவ பிரிவினால் ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

# பரப்புரை விடயங்கள்:

# சிறுவர்கள் தமது உலகை மாற்றுவதற்கு உதவுதல்

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் பரப்புரைக்கான வழிகாட்டி

அன்புடையீர்,

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் சார்பில், முதலாவது கூட்டமைப்பு பரப்புரை வழிகாட்டியை அறிமுகப்படுத்துகின்றோம். **–பரப்புரை விடயங்கள்: சிறுவர்கள் தமது உலகை மாற்றுவதற்கு உதவுதல். சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் பரப்புரைக்கான வழிகாட்டி.**

சேவ் த சில்ரன் வரலாற்றில் பரப்புரை என்பது மிகவும் முக்கியமான பங்கினை ஆற்றியுள்ளது. எங்களுடைய ஸ்தபாகர் இகலன்டைன் ஜெப் (Eglantyne Jebb), ஐரோப்பாவுக்கான விநியோகம் தடைசெய்யப்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவும் வகையில் 1919ஆம் ஆண்டு சேவ் த சில்ரன் அமைப்பை ஆரம்பித்தார். இந்த தடையை நீக்குவது தொடர்பில் சட்டமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் கலந்துரையாடிய அவர், 1923ஆம் ஆண்டு சிறுவர்களின் உரிமை தொடர்பான பிரகடனத்தை தயாரித்தார். இதனை அடிப்படையாகக் கொண்டதாகவே சிறுவர் உரிமைகளுக்கான தற்போதைய ஐ.நாவின் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சேவ் த சில்ரனின் மிகவும் முக்கியமான பலங்களில் ஒன்று முன்னேறிச் செல்வதற்கு ஒன்றிணைந்து செயற்படும் கூட்டமைப்பு மூலோபாயம் மற்றும் சிறுவர்களுக்கான எமது பணியில் பரப்புரையை இணைத்துக் கொள்ளல் ஆகிய தகைமைகளிலேயே தங்கியுள்ளது. இந்த செயற்றிட்டத்தில் வெளிக்காட்டப்படும் கூட்டுறவு, ஒருங்கிணைந்த கூட்டுறவின் சக்தியை வெளிப்படுத்துகின்றது. பரப்புரையிலும், தொடர்பாடலிலும் எமது தகைமையை வளர்த்துக் கொள்வதற்கு சிறந்த, பயனுள்ள வளமாக இந்த பரப்புரை விடயங்கள் காணப்படுகின்றது. இந்த கையேட்டை பயன்படுத்துவதுடன், உங்கள் சக ஊழியர்கள் மற்றும் பங்காளர்களுடனும் இந்த கையேட்டை பகிர்ந்து கொள்ளுங்கள்.

இந்த வழிகாட்டியில், எங்கள் கூட்டமைப்பின் ஆறு உறுப்பினர்களாலும் எழுதப்பட்ட பரப்புரை, தொடர்பாடல் மற்றும் இயலுமையை கட்டியெழுப்பல் ஆகியவற்றின் திரட்டப்பட்ட செல்வம் மற்றும் அனுபவங்களும், வெளியக நிபுணர்களின் அறிவுப் பகிரலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. சேவ் த சில்ரனின் ஸ்திரமான, உலகளாவிய பயன்பாட்டிற்காக தற்போது பயன்பாட்டில் உள்ள பரப்புரை கற்றல் சாதனங்களை மீளாய்வு செய்வதற்கும், ஆவணப்படுத்துவதற்கும் மற்றும் சிறந்த கற்றல் சாதனங்களையும், கருவிகளையும் அடையாளங் கண்டு கொள்வதற்கு மொழி மற்றும் பதப் பிரயோகங்களை கலந்துரையாடுவதற்கும் அதிக காலம் செலவிடப்பட்டது.

கூட்டமைப்பு கூட்டுறவின் பரிசோதனை நடவடிக்கை தொடர்பில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளோம். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கையேடு உங்களுக்கு சிறப்பான பயனை அளிக்கும் என எதிர்பார்க்கின்றோம். நாங்கள் ஒன்றிணைந்து முன்னேறி, உலகெங்கிலும் உள்ள சிறுவர்களின் வாழ்க்கையில் என்றும் நிலைத்திருக்கும் மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

இங்ஙனம்,

சார்ள்ஸ் மெக்கோமக் (Charles MacCormack), தலைவர், சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி,
சேவ் த சில்ரன், அமெரிக்கா

ஜெஸ்மின் விட்பிரட் (Jasmine Whitbread), சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி,
சேவ் த சில்ரன், ஐக்கிய இராச்சியம்

க்ஹோ பிறேக்கன் (Gro Braekken), சிரேஷ்ட நிறைவேவ்வு அதிகாரி,
சேவ் த சில்ரன் நோர்வே,

மிமி ஜேகொப்சென் (Mimi Jakobsen), சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி,
சேவ் த சில்ரன், டென்மார்க்

சார்லொட் பெட்ரி கோனிட்ஸ்கா (Charlotte Petri Gornitzka), செயலாளர் நாயகம்,
சேவ் த சில்ரன், சுவீடன்

டேவிட் மோர்லி (David Morley), தலைவர் , சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி,
சேவ் த சில்ரன், கனடா

# சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் பரப்புரைக்கான வழிகாட்டி குறித்த கண்ணோட்டம்

## இந்த வழிகாட்டி என்ன?

இந்த வழிகாட்டி பரப்புரையில் ஈடுபட்டுள்ள சேவ் த சில்ரன் ஊழியர்களுக்கும், பங்காளர்களுக்குமானது. நீங்கள் பரப்புரை தொடர்பான செயலமர்வு ஒன்றை நடத்தும் போது இந்த வழிகாட்டியை பயன்படுத்த முடியும். அல்லது பொதுவான பரப்புரைக்கான வளப்பொதியாக இதனை நீங்கள் பயன்படுத்த முடியும். இந்த கற்றல் சாதனத்தில் பிரயோக பயிற்சிகள் மற்றும் கோட்பாடுகள் இணைந்ததாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பங்குபற்றுநர்கள் தமது தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு பொருத்தமானதாக பரப்புரை குறித்து கற்றுக் கொள்ள முடியும். செயலமர்வின் இறுதியில் அவர்கள் பரப்புரை மூலோபாயம் குறித்த ஆவணத்துடன் வெளியே வருவார்கள்.

இந்த வழிகாட்டியில் இரண்டு பூர்த்திசெய்யப்பட்ட கையேடுகள் உள்ளன. வளவாளரின் கையேடு மற்றும் பங்குபற்றுநரின் கையேடு ஆகியன இணைத்து பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

- **வளவாளர் கையேடு:** பயிற்றுநர்களாக அல்லது வழக்குரைஞர் போதிய அளவு அனுபவம் இல்லாத நபர்களும் உள்ளடங்கலாக பரப்புரை செயலமர்வை வடிவமைக்கும் அல்லது இலகுபடுத்துபவர்களை இலக்கு வைத்ததாக இந்த கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. பகுதி ஒன்றில் கற்பித்தல் வழிமுறைகள் பற்றிய சில குறிப்புக்களுடன் செயலமர்வு ஒன்றை எவ்வாறு வடிமைப்பது, திட்டமிடுவது மற்று நடத்துவது என்பது தொடர்பிலான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பகுதி இரண்டில், ஒவ்வொரு அமர்வையும் எவ்வாறு நடத்துவது தொடர்பான விரிவான விளக்க முறைகளுடன் தனிப்பட்ட அமர்வுகளை திட்டமிடும் முறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- **பங்குபற்றுநர் கையேடு:** ஒவ்வொரு தலைப்பு, சம்பவங்கள் மற்றும் மேலதிக ஆதாரங்களுக்கான குறிப்புக்கள் தொடர்பிலான பின்புல சாதனங்களை உள்ளடக்கியது. வளவாளர்களுக்கும், பங்குபற்றுநர்களுக்கும் வள வழிகாட்டியாக இருக்கும் வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுவான பரப்புரை ஆதாரமாகவும் இந்த பங்குபற்றுநர் கையேடு பயன்படுத்தப்படலாம்.

## குறிக்கோள்கள்:

இந்த பயிற்சியில் கலந்து கொள்ளும் பங்குபற்றுநர்கள்:

- சிறுவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகள் தொடர்பில் பிரயோகிக்கப்படும் அனுபவங்கள் மற்றும் ஆதாரங்கள் சார்ந்த பரப்புரை தொடர்பில் ஆழமான புரிந்துணர்வை பெற்றுக் கொள்வதுடன், செயற்படும் வரைவிலக்கணத்தை விருத்தி செய்ய முடியும்.
- பரப்புரையின் அடிப்படை அம்சங்கள், சேவ் த சில்ரனில் அதன் பங்கு மற்றும் சிறுவர்களுக்கான உண்மையான, என்றும் நிலைத்திருக்கக் கூடிய நிகழ்ச்சிகளில் அது எவ்வாறு இணைத்துக் கொள்ளப்படுகின்றது என்பவற்றை புரிந்து கொள்ள முடியும்.
- மூலோபாய பரப்புரையை திட்டமிடுவதற்கான படிமுறைத் தொகுதிகளை கற்றுக் கொள்வதுடன், உங்கள் பணி சார்ந்த பரப்புரை திட்டத்தை வடிவமைப்பதற்கு ஆரம்பிக்க முடியும்.
- சக வழக்குரைஞர்களுடான தனிப்பட்ட உறவை வலுப்படுத்தல், ஒவ்வொருவருடைய அனுபவங்களிலிருந்தும் கற்றல், பரப்புரை பயன்படுத்துநர்களைக் கொண்ட சமுதாயத்தை கட்டியெழுப்புவதனை நோக்கி பணியாற்றல்.
- இந்த செயலமர்வில் கற்றுக் கொண்ட விடயங்களை உங்கள் சக ஊழியர்கள், நண்பர்கள் மற்றும் வாக்காளர்கள் பகிர்ந்து கொள்வதற்கான திட்டம் ஒன்றை வடிவமைக்கவும்.

## யாருக்காக இது?

இந்த வழிகாட்டி சேவ் த சில்ரன் ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் இணைந்து கடமையாற்றும் வேறு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான இலக்குக் குழுக்களாக கருதப்படுபவர்கள்:

- தமது பணியில் பரப்புரையை உள்ளடக்கிய நிகழ்ச்சி ஊழியர்கள்
- சக ஊழியர்களுக்கும், பங்காளர்களுக்கும் தமது பணியின் ஒரு பகுதியாக பரப்புரை பயிற்சியை வழங்கும் நிகழ்ச்சி ஊழியர்கள்
- நிறுவனத்தின் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக பரப்புரையுடன் போதியளவு நெருக்கமானவர்கள் வெளிக்காட்ட வேண்டிய சிரேஷ்ட ஊழியர்கள்
- ஊழியர் அபிவிருத்தியின் ஒரு பகுதியாக பரப்புரையை கற்று வரும் ஊழியர்கள்
- பரப்புரை, தொடர்பாடல், நிதி சேகரித்தல், ஆய்வு போன்ற பிரிவுகளில் செயற்பட்டு வரும் மக்கள்

பின்வரும் குறியீடுகள் இந்த வழிகாட்டியின் குறிப்பிட்ட பகுதிகளை விளக்குவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன:

உதாரணம்:
நாங்கள் விளக்கும் எண்ணக்கருக்களை மேலும் தெளிவாக குறிப்பிடுவதற்கான பிரதான உதாரணங்களை இந்த குறியீடு சுட்டிக்காட்டுகின்றது.

பயிற்சி:
புதிய கோட்பாடு அல்லது தகைமையை பயிற்சி செய்வது அல்லது உங்கள் சூழ்நிலைக்கு பிரயோகிப்பது போன்ற விடயங்களை இந்த குறியீடு சுட்டிக்காட்டுகின்றது.

சம்பவம்:
பரப்புரையை பிரயோகத்தில் பயன்படுத்திய உண்மைக் கதைகளை இந்த குறியீடு சுட்டிக்காட்டுகின்றது.

குறிப்புக்களும், வழிகாட்டிகளும்:
பிரதான குறிப்புக்கள், வழிகாட்டிகள், தரங்கள் அல்லது பட்டியல்களை இந்த குறியீடு சுட்டிக்காட்டுகின்றது.

# முன்னுரை

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் பரப்புரை வழிகாட்டி முறைப்படுத்தும் குழுவின் ஒருங்கிணைப்பாளர் சாரா றோமாவின் (Sarah Roma) முன்னுரை,

---

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும், சிறுவர்களுக்கு என்றும் நிலைத்திருக்கக் கூடிய மாற்றத்தை உருவாக்கும் இறுதி இலக்கை நோக்கியதாக பயணிக்கும் எங்கள் நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக பரப்புரையை கொண்டுள்ளனர். ஆனால் எங்கள் அணுகுமுறைகள் அல்லது செயற்பாடுகளில் எங்களுடைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைச் சார்ந்ததாகவும், நாங்கள் பணியாற்றும் வேறுபட்ட சூழ்நிலைகளுக்கு அமைவானதாகவும் ஓரளவு வித்தியாசம் இருக்கலாம். கூட்டமைப்பு மிகுந்த நெருக்கமாக செயற்பட ஆரம்பித்ததன் பின்னர், நாம் அதனை இலகுப்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட கருவியையும், வழிகாட்டியையும் ஒன்றாக்கி இது போன்ற வழிகாட்டியை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. நாங்கள் இணைந்து கூட்டமைப்பு பரப்புரை செயலமர்வுகளை நடத்த ஆரம்பித்தவுடன் இந்த செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கான தூண்டுதல் ஏற்பட்டது. இதன் போது எங்கள் உறுப்புரிமை நிறுவனங்களுக்க இடையில் வேறுபட்ட பரப்புரை கையேடுகளும், வரைபுநகல்களும் இருப்பதனை நாம் கண்டறிந்தோம். கூட்டமைப்பு என்ற முழுமைக்கும் இவை மிகவும் முக்கியமானதாக இருக்கின்ற போதிலும், அவற்றிற்கு இடையில் காணப்படும் வேறுபாடுகள் சிக்கலையும் தோற்றுவிக்கலாம்.

இதன் பயனாக, சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் கனடா, டென்மார்க், நோர்வே, சுவீடன், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய ஆறு நாடுகளைச் சேர்ந்த ஆறு பேரைக் கொண்ட பரப்புரை பிரிநிதிகள் குழு, அனுபவம் வாய்ந்த இரண்டு நிபுணர்களின் உதவியுடன், தனிப்பட்ட கூட்டமைப்பு உறுப்பினர்களால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சாதனங்கள் மற்றும் அவர்களின் அனுபவங்களின் அடிப்படையில் கூட்டமைப்பு ஊழியர்கள் அனைவருக்குமான திரட்டப்பட்ட பரப்புரை கருவிகள் மற்றும் வளங்களை வடிவமைக்கும் இந்த செயற்றிட்டத்தை ஆரம்பித்தது. இதன் மூலம் ஒன்றிணைந்து செயற்படுவதில் இலகுத்தன்மையையும், புரிந்துணர்வையும் அதிகரித்து, வேறுபட்ட வரைபுநகல்கள் மற்றும் வரைவிலக்கணங்களுக்கு மத்தியில் பரப்புரை திட்டங்களில் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய சக ஊழியர்களுக்கு இடையிலான குழப்பநிலையை குறைத்து என எதிர்பார்க்கின்றோம். அதுதவிர, இந்த வழிகாட்டி மேலும் முழுமையான ஆதாரமாக இருப்பதுடன், எந்த பகுதியில் இருப்பவராயினும் புதிதாக பரப்புரை சம்பந்தமான செயலமர்வை ஒழுங்கு செய்வதற்கு படிமுறை ரீதியிலான வளவாளர் கையேடாகவும் இருக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இருப்பினும், நாங்கள் பணிபுரியும் அனைத்து வேறுபட்ட சூழ்நிலைகளிலும், ஏனைய உறுப்பினர்களை விட ஒரு உறுப்பினருக்கு தொடர்ந்தும் பொருத்தமானதாக கருதும் வேறுபட்ட பிரிவுகளை உள்ளடக்கிய அனைத்து கூட்டமைப்பு உறுப்பினர்களாலும் பயன்படுத்தக் கூடிய வழிகாட்டியொன்றை தயாரிப்பதற்கும் நாங்கள் முயற்சி செய்தோம். ஆனால் இந்த கற்றல் சாதனத்தின் கட்டமைப்பு வேறுபட்ட அணுகுமுறைகளின் விழுமியங்கள் அறிந்துகொள்வும், அவற்றை செயற்படுத்துவதற்கும், அனைவருக்கும் உதவும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இதன் மூலம் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு இடையில் கற்றல் மற்றும் பகிரல் சந்தர்ப்பம் அதிகரிக்கும்.


பரப்புரை ஒழுங்கு செய்வது என்பதற்கு எப்போதும் வேறுபட்ட சூழ்நிலைகளுக்கு பொருந்தக் கூடிய அணுகுமுறைகளை உள்வாங்குதல் தேவையாக இருக்கின்றது. அந்த வகையில் இந்த வழிகாட்டி ஒரு ஆரம்பப் புள்ளியாக இருக்கின்றது. நீங்கள் இதனை பயன்படுத்தி மற்றும் உள்வாங்கி உங்கள் கருத்துக்களை எங்களோடு பகிர்ந்து கொள்வீர்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். எனவே, நாங்கள் தொடர்ந்தும் இந்த சாதனங்களை மேலும் வலுப்படுத்துவது குறித்து செயற்படுவோம். அதேவேளை, நீங்கள் இந்த வழிகாட்டியை பயன்படுத்தும் போது நீங்கள் கண்டறிந்த பயனுள்ள விடயம் என்ன, மேம்படுத்தப்படல் வேண்டும் என நீங்கள் கருதுவது எதனை மற்றும் வேறு கருத்துக்களை எங்களுடைய மின்னஞ்சல் முகவரிக்கு ampaigns@savethechildren.org.uk அனுப்பி வையுங்கள். என்றும் நிலைத்திருக்கக் கூடிய சிறுவர்களுக்கான மாற்றத்திற்காக பணியாற்றும் சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பில் வலுவான, உதவிகரமான பரப்புரையாளர்கள் சமுதாயம் உருவாகுவதற்கு இந்த வழிகாட்டி உறுதுணை புரியும் என நாம் நம்புகின்றோம்.

## உள்ளடக்கம்

9
1 பரப்புரைக்கு வரவேற்கின்றோம் 12
1.1 உங்களால் முடியும் 15
1.2 சேவ் த சில்ரனில் பரப்புரை 20
2 பரப்புரையில் சிறுவர் பங்குபற்றல் 33
3 உங்கள் பரப்புரையில் மூலோபாயத்துடன் இருத்தல் 35
3.1 பரப்புரை வட்டத்தில் நிலைகள் 40
3.2 பரப்புரையை ஒரு விடயமாக தெரிதல் 47
3.3 பரப்புரைக்கு சிறந்த ஆதாரத்தை உருவாக்குவது என்ன? 53
3.4 பரப்புரை இலக்குகள், குறிக்கோள்களை நிர்ணயித்தல் 56
3.5 உங்கள் பரப்புரை இயலுமையை மதிப்பிடல் 60
3.6 பரப்புரை சவால்களை மதிப்பிடல் 66
3.7 அவசரகாலங்களில் பரப்புரை 70
4 கொள்கைச் சூழலை புரிந்துகொள்ளல் 72
4.1 கொள்கைகள் மற்றும் அதிகாரங்களை பகுப்பாய்தல் 79
4.2 பரப்புரைக்கான சந்தர்ப்பங்களை அடையாளங் காணல் 83
5 பரப்புரை இலக்குகள் 85
5.1 பிரதான இலக்குகள் மற்றும் ஆதிக்கங்களை அடையாளங் காணல் 88
5.2 உங்கள் இலக்குகள் தொடர்பில் ஆதிக்கம் செலுத்தல் 92
6 சம்பவத்தை தயாரித்தல் 94
6.1 பரப்புரைக்கான செய்தியை வடிவமைத்தல் 103
6.2 ஆதரவு திரட்டல் 109
6.3 ஊடகங்களுடன் செயற்படல் 116
7 சேர்க்கப்பட்ட வலுவை கட்டியெழுப்பல் 118
7.1 கூட்டமைப்புக்களுடன் பணியாற்றல் 126
7.2 மக்களை ஒன்று திரட்டல் 132
7.3 தனியார் துறையுடன் ஒப்பந்தம் செய்தல் 142
8 செயற்பாடு திட்டமிடல் 144
8.1 செயற்பாடு திட்டத்தை வடிவமைத்தல் 149
9 கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் பரப்புரை 152
9.1 பரப்புரையை கண்காணிப்பதற்கான பிரயோக ரீதியான வழி முறைகள் 156
9.2 பரப்புரையின் விளைவுகளை மதிப்பீடு செய்தல் 165
10 வளங்களை ஒன்று திரட்டல் 172
அடுத்தது என்ன? 173
பரப்புரை பதங்கள் தொடர்பான விளக்கம் 177
ஆதாரங்களின் பட்டியல்

1.1 உங்களால் முடியும்

1.2 சேவ் த சில்ரனில் பரப்புரை



## அத்தியாயம் 1

# அறிமுகம்

இக்லன்டைன் ஜெப்பின் இலக்கை கட்டியெழுப்பும் போது, சேவ் த சில்ரன் முன்னெடுக்கும் பணிகளில் பிரதான அம்சமாக பரப்புரை எப்போதும் காணப்படுகின்றது. இந்த இலக்கு குறித்த எமது அர்ப்பணிப்பு, எங்களுடைய நீண்ட கால வரலாறு மற்றும் சிறுவர்களுடனும், அவர்களுடைய குடும்பத்தினருடனும் செயற்பட்டு வரும் அனுபவங்கள் பரப்புரையை முன்னெடுத்துச் செல்வதற்கு எமக்கு சட்ட பூர்வமான அனுமதியை வழங்குகின்றன. அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். அவற்றில் சில பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று நாம் அறிந்து வைத்துள்ளோம். அரசியல் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்கும், நிதி தேவையாகவுள்ள சிறுவர்களுக்கு என்றும் நிலைத்திருக்கக் கூடிய மாற்றத்தை கொண்டு வரும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகளை கண்டறிந்து கொள்வதற்கும் இந்த ஆதார அடிப்படையை நாம் பயன்படுத்துகின்றோம்.

உலகம் முழுவதிலும் நாங்கள் முன்னெடுக்கும் நிகழ்ச்சிகளில் பரப்புரை என்பது வெவ்வேறு வடிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிகளில் பல சிறுவர்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் வெற்றியடைந்துள்ளன. ஆனால், எங்களுடைய பரப்புரையை இயன்றளவில் பயனுறுதிமிக்கதாக உருவாக்குவதற்கு, எங்கள் நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக பரப்புரை என்பது நன்கு திட்டமிடப்பட்டு, மூலோபாய ரீதியில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதை நாம் அறிவோம்.

சிறுவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு பணியாற்றும் மக்கள் எந்தவொரு விடயமானாலும் (கல்வி, சுகாதாரணம், போஷாக்கு, பாதுகாப்பு அல்லது வேறு எதுவிதமான எட்டப்படாத தேவை), சிறுவர் வழக்குரைஞர்களாக மாற வேண்டும்: பயனுறுதி மிக்க வழக்குரைஞர் ஒருவருக்கு அர்ப்பணிப்பு மற்றும் நம்பிக்கை, சில புதிய திறமைகள் மற்றும் முறைசார் அறிவு ஆகியன தேவை என்பதனை நாம் விளக்க வேண்டும். உங்களுக்கு சட்டத்தரணிகள், கொள்கை பகுப்பாய்வாளர்கள் அல்லது வேறு வகை நிபுணர்கள் தேவை இல்லை. ஆனால் உங்களிடம் திறந்த மனப்பாங்கு இருத்தல் வேண்டும்.


பரப்புரை பணி செய்யும் மக்களின் அனுபவங்களை நாங்கள் மதிக்கின்றோம். ஏனையோருக்கும், இந்த பயிற்சிகளுக்கு புதியவர்களுக்கும், பரப்புரை என்பது புதிய மற்றும் அச்சம் ஏற்படுத்தும் நடவடிக்கையாக இது இருக்கின்றது. நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்டிருந்த விடயங்களை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் வழக்குரைஞர்களுக்கு ஏற்படும். புதியவர்களாக இருப்பதன் மூலம், கடந்த கால நிராகரிப்புக்களை கடந்து வருவதற்கு ஒரு புதிய சக்தி கிடைக்கும்.

சிறுவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், சிறுவர்களின் வழக்குரைஞர்களை ஊக்குவிக்கும் கதைகளை சொல்வதற்கும் மக்கள் தமது நாளாந்த முயற்சியில் பயன்படுத்தக் கூடிய கருவிகளை உருவாக்குவதன் மூலம் எங்கள் பணி பரப்புரையை வெளிப்படுத்தும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த வழிகாட்டியின் எந்தவொரு பகுதியிலிருந்தாவது ஆரம்பிப்பதே மிகவும் முக்கியமானது. ஏதாவது ஒரு தலைப்பின் கீழான செயலமர்வும் பரப்புரை தொடர்பான உங்கள் அறிவை மேம்படுத்தும் திண்மையான வரைவிலக்கணம் தொடர்பில் நீங்கள் கவனஞ் செலுத்த வேண்டாம். உங்களின் சுயமான அனுபவங்களில் இருந்து உங்களுக்கான முறையொன்றை உருவாக்கிக் கொள்ளுங்கள். அந்த அனுபவத்தை மதியுங்கள். சம்பவ அறிக்கைகள் மூலம் ஏற்கனவே இடம்பெற்று வரும் பரப்புரை பணிகள் தொடர்பில் அறிந்து கொள்ள முடியும். எனவே, வழக்குரைஞர்களாக மற்றையவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும். அவ்வாறே, நாங்கள் பரப்புரை பயிற்சி பெறுபவர்கள் கொண்ட நிலையான சமூகத்தை உருவாக்குகின்றோம்.

பரப்புரை குறித்து சிந்திப்பதற்கும், அதன் உட்கூறுகளை பிரயோகிப்பதற்குமான வரைபுநகல் ஒன்றை நாம் வழங்கியுள்ளோம். இந்த கையேட்டின் ஆசிரியர்கள் பரப்புரையை பயிற்சி

செய்யும், புதிய எண்ணக்கருக்களையும், தொழில் நுணுக்கங்களையும் கற்கும் சாதாரண மக்களாவர். அந்த வகையில், ஒருவரால் அடைய முடியாது என நினைக்கும் இலக்கை அடைவதற்கு இது உதவி புரியும். அத்துடன் ஆச்சரியமிக்க நல்ல முடிவை நோக்கியும் நம்மை வழிநடத்தும். எப்போதும் அல்ல. ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உங்களைப் போன்றவர்களின் கடுமையான, பயனுறுதிமிக்க உழைப்பு சிறந்த பலனை தந்திருக்கின்றது.

தீர்மானம் எடுப்பவர்களுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றல், சட்ட மன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடல், அல்லது விடயம் ஒன்றும் தொடர்பில் மக்களின் விழிப்புணர்வை அதிகரித்தல் என்பன உள்ளடங்கலாக, ஒருங்கிணைந்த வேறுபட்ட அணுகுமுறைகளின் ஊடாக பரப்புரை இலக்குகளை எட்ட முடியும். அத்தியாவசியமாக அது எதிர்முகப்படுத்த வேண்டியதில்லை. ஆனால், சிறுவர்களின் உரிமைகளை முழுமைப்படுத்தக் கூடிய எங்களுடைய கருத்துக்களை பலவந்தமாக நிறுவனங்கள் அல்லது அரசியல் சக்திகளுக்கு சமர்ப்பிக்க வேண்டிய நடைமுறை நிலையின் சவால்களை எதிர்கொள்வதற்கு நாங்கள் எப்போது தயாரானவர்களாக இருத்தல் வேண்டும். பரப்புரைக்கான வேறுபட்ட அணுகுமுறைகளை மிகவும் அவதானமாக கவனஞ் செலுத்துவதற்கு மூலோபாய திட்டம் நமக்கு துணை புரியும். இதன் மூலம், எங்களுடைய இலக்குகளை அடைவதற்கான சிறந்த அணுகுமுறையை நம்மால் தெரிவு செய்ய முடியும்.



Jari Wade and friends in a sewing project in St Luis, Senegal. (Supported by Save the Children)

1.1 உங்களால் முடியும்

பரப்புரை என்பது சிறுவர்களுக்காக குரல் எழுப்புவதுடன், அவர்களை வலுப்படுத்தி தமக்காக அவர்கள் குரல் கொடுப்பதற்கு வழி சமைக்கின்றது[1]. சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் சேவ் த சில்ரனின் ஊழியர்கள் பலரும் சிறுவர்களுக்காக குரல் எழுப்புவதன் மூலம் நாளாந்தம் பரப்புரையை தமது பணியில் சந்திக்கின்றனர்.இந்த குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களுக்கு அப்பால் மூலோபாய மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட அணுகுமுறையை நோக்கி நகர வேண்டியது மிகவும் முக்கியமான விடயமாக இருக்கின்றது.

கொள்கைகள் மற்றும் சட்டம் இயற்றல் ஆகியவற்றை மாற்றுவதனை பரப்புரை தனது இலக்காக வைத்துள்ளது. இதன் மூலம் அவர்களுக்கு சிறுவர்களின் வாழ்க்கை தொடர்பில் ஐயமற்ற விளைவு கிடைக்கும். தீர்மானம் எடுத்தல் இடம்பெறுவதை மேலும் உள்ளடக்கத் தன்மை வாய்ந்தாக மாற்றுவது தொடர்பிலும் அதன் இலக்கு அமைந்துள்ளது. இதில் சிறுவர்களின் தகைமைகள் மற்றும் தன்னம்பிக்கையை கட்டியெழுப்பல் என்பன தொடர்புபடுகின்றது. இதனால் அவர்கள் பயனுறுதி மிக்க வழக்குரைஞர்களாக மாற முடியும். அத்துடன், தீர்மானம் எடுத்தலில் பங்கு பெறுவதற்கு சிவில் சமூக குழுக்களுக்கும் சந்தர்ப்பம் உருவாக்கி கொடுக்கப்படுகின்றது. மேலும், சிறுவர்கள் சார்ந்த சமூகத்தின் விதிமுறைகள் மற்றும் நடத்தைகளையும் அடையாளங் கண்டு கொள்ள முடியும். சிறுவர்களுக்கு பயனளிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் முறையாக சமூகத்தில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டிய சிக்கலான பணியும் பரப்புரையைச் சார்ந்தது.

பரப்புரை என்பதற்கு பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்படுகின்றன. அத்துடன், பரப்புரையை முன்னெடுக்கும் பல வழிகளும் காணப்படுகின்றன. சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு பின்வரும் வரைவிலக்கணத்துடன் உடன்படுகின்றது.

> பரப்புரை என்பது, சிறுவர்கள், அவர்களுடைய குடும்பங்கள் மற்றும் சமூகத்துடன் நேரடியாக பணியாற்றுவதன் மூலம் பெற்ற அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் சிறுவர்களின் வாழ்க்கை தொடர்பில் ஐயமற்ற விளைவை அடைவதற்கான ஏனையவர்களின் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கைகளின் தொகுதியாகும்.

**பரப்புரை என்பது நீங்கள் முன்னெடுக்கும் பணியில் "சேர்த்துக் கொள்ளப்படும்" ஒரு விடயம் அல்ல.** சிறுவர்களுக்கு பிரயோக ரீதியான உதவியை வழங்கும் வகையில் அது உங்கள் நிகழ்ச்சியில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

**நம்பிக்கையான மாற்றுவழிகளை வழங்கும் ஐயமற்ற செயற்பாடாக பரப்புரை காணப்படுகின்றது.** ஏதோவொரு விடயத்திற்கு எதிரானது மாத்திரமல்ல அது. அது ஐயமற்ற மாற்றுவழிகளை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

**பரப்புரையானது சிறுவர்களுக்கான கொள்கை மற்றும் மாற்றமாகும்.** சிறுவர்களின் வாழ்க்கை தொடர்பில் செல்வாக்கு செலுத்தக் கூடிய நபர்களுக்கு இது வழிகாட்டியாக அமைகின்றது. இதன் குறிக்கோள் நிறுவன ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தலாகும். சிறுவர்களின் விடயங்கள் அரசியல் மொழியினால் விளக்கப்படல் வேண்டும்.

**பரப்புரைக்கு தெளிவான குறிக்கோள்களும், அளவிடக் கூடிய இலக்குகளும் தேவையாக இருக்கின்றன.** இது இலகுவான விடயம் போலத் தோன்றலாம். ஆனால், அது மிகவும் சிக்கலான பகுதியாக இருக்கின்றது.

---

[1] டென்மார்க் சேவ் த சில்ரன், *சிறுவர் உரிமைகள் பரப்புரை வழிகாட்டி 2006* இலிருந்து உள்வாங்கப்பட்டது.

**பரப்புரை என்பது ஒரு குறிப்பிட்ட கால அவகாச விடயமல்ல.** அது நீண்ட கால செயற்பாடாகும். குறுகிய கால அவகாசத்தில் குறிப்பிடத்தக்க இலக்குகளையும், நீண்ட கால அடிப்படையில் பரந்த குறிக்கோள்களையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.

**பரப்புரை என்பது ஒரு முடிவல்ல:** சிறுவர்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவது தொடர்பான முடிவுக்கான தேவை. நிகழ்ச்சி நிரலில் பிரச்சினை தொடர்பில் குறிப்பிடுவது மாத்திரம் போதாது. அது பின்பற்ற வேண்டியதும் மிகவும் முக்கியமாகும்.

**களத்திலிருந்தே பரப்புரை ஆரம்பிக்கின்றது.** நீங்கள் உதவி வழங்க வேண்டிய மக்களின் குரல்களும், முன்னுரிமைகளும் உங்கள் பரப்புரையில் விளக்கப்படல் வேண்டும். அது உங்கள் நிகழ்ச்சிகளின் ஆதாரங்களின் அடிப்படையிலானதாகும்.

**பரப்புரையில் சவால்கள் உள்ளன:** பொதுமக்கள் கொள்கைப் பிரிவிலேயே இது இடம்பெறும். இதில் சில சவால்களும் காணப்படலாம். ஏற்படக் கூடிய சவால்கள் தொடர்பில் நீங்கள் கவனஞ் செலுத்த வேண்டும். அவை எவ்வாறானவை, அவற்றை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது தொடர்பிலும் நீங்கள் கவனஞ் செலுத்த வேண்டும்.

**பரப்புரை என்பது கூட்டமைப்புக்கள் சார்ந்தது:** சிவில் சமூக நிறுவனங்கள், தீர்மானம் எடுப்பவர்கள் மீது செல்வாக்கு உள்ள மக்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட ஏனையவர்களுடனான கூட்டமைப்பின் மூலமே இது கட்டியெழுப்பப்படுகின்றது. உங்களுக்கு கிடைக்கும் உதவியின் அளவு அடிப்படையிலேயே நீங்கள் பரப்புரை இலக்கை அடைவதற்கான வாய்ப்புக்களின் அளவும் தங்கியுள்ளது.

பரப்புரையும், அது சார்ந்த கோட்பாடுகளும்

பொதுவான எண்ணக்கருக்களை பகிரும் ஏனைய அணுகுமுறைகளுடன் இணைந்ததாக பரப்புரை என்பது தவறாக விளங்கிக் கொள்ளப்படுகின்றது. பரப்புரை என்றால் என்ன என்பது தொடர்பில் தெளிவான புரிந்துணர்வை பெற்றுக் கொள்வதற்கு, எதுவெல்லாம் பரப்புரை இல்லை என்பதை தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகும். கீழ்வரும் பட்டியலை பயன்படுத்தி, பரப்புரையை அது சார்ந்த கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு, வேறுபாட்டினை அறிந்து கொள்ளலாம்.

| கோட்பாடு/பரப்புரை | இலக்கு குழுக்கள் | குறிக்கோள் | நீங்கள் எவ்வாறு வெற்றியை அளவிடுவீர்கள்? |
|---|---|---|---|
| நடத்தை மாற்றம் மற்றும் தொடர்பாடல் (BCC), தகவல், கல்வி, தொடர்பாடல் (IEC), மக்கள் தொடர்பு | சமுதாயத்தின் தனிநபர்கள் மற்றும் கூறுகள் (ஆண்கள், பெண்கள், இளைஞர்கள்) | விழிப்புணர்ச்சியை வளர்த்தல், புரிந்துணர்வை அதிகரித்தல் மற்றும் நடத்தையை மாற்றி வலிமைப்படுத்தல் | அறிவு அல்லது தகைமையில் மாற்றம் (நடத்தை மாற்றம்), விழிப்புணர்ச்சி மற்றும் புரிந்துணர்வு அதிகரித்துள்ளது. |
| மக்கள் தொடர்பு | நுகர்வோர்: நிதியுதவியாளர்கள், பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்கள் | நிறுவனத்தின் அடையாளத்தை மேம்படுத்தல் மற்றும் நிகழ்ச்சி வலையமைப்பு மற்றும் நம்பகத்தன்மையை அதிகரித்தல். | பொதுமக்கள் எண்ணங்கள் முன்னேற்றமடைந்துள்ளன. நிதியுதவிகள் அதிகரித்துள்ளன. நிகழ்ச்சி வலையமைப்புக்கள் அதிகரித்துள்ளன. நிதியுதவியாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் எண்ணங்கள் மேம்பட்டுள்ளன. |
| சமுதாய திரட்டல் | சமுதாய உறுப்பினர்களும், தலைவர்களும் | தேவைகளை கண்டறியவும், நடவடிக்கை எடுப்பதற்காகவும் சமுதாயத்தின் இயலுமையை கட்டியெழுப்பல் | விசேடமான செயன்முறை மற்றும் வெளிப்பாட்டு குறிகாட்டிகளை விநியோகித்தல். பங்குபற்றலின் தரம் |
| பரப்புரை | பொது நிறுவனங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் | கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் வள ஒதுக்கீட்டை மாற்றல் | கொள்கைகளில் மாற்றம் (கொள்கைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன, மாற்றப்பட்டுள்ளன, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகள் அல்லது வள ஒதுக்கீட்டில் மாற்றங்கள் |

செயன்முறை படிவம்

**1.2 பரப்புரை சார்ந்த கோட்பாடுகள்**


| கோட்பாடு | இலக்குக் குழுக்கள் | குறிக்கோள் | நீங்கள் எவ்வாறு வெற்றியை அளவிடுவீர்கள்? |
|---|---|---|---|
| நடத்தை மாற்றம் மற்றும் தொடர்பாடல் (BCC), தகவல், கல்வி, தொடர்பாடல் (IEC), மக்கள் தொடர்பு | | | |
| மக்கள் தொடர்பு | | | |
| சமுதாய திரட்டல் | | | |
| பரப்புரை | | | |

## 1.2 சேவ் த சில்ரனில் பரப்புரை

நேரடி இடையீடுகள் நாங்கள் புரியும் பணிகளை பரப்புரை பூர்த்தி செய்கின்றது. அத்துடன், அதன் விளைவுகளை அதிகரிக்கவும், மேலும் ஸ்திரத்தன்மையானதாக அந்தப் பணி மாறுவதற்கும் பரப்புரை உதவுகின்றது. அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ள இரண்டு சம்பவ அறிக்கைகளும், எங்களுடைய நிகழ்ச்சி அனுபவங்களை பயன்படுத்தி தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தில் உள்ள மக்கள் மீது செல்வாக்கு செலுத்தியதன் ஊடாக சிறுவர்களின் வாழ்க்கை நிலையில் மாற்றங்களை கொண்டு வந்த இரண்டு சம்பவ அறிக்கைகள் அடுத்த பக்கத்தில் உள்ளன. நேரடியான இடையீடுகளின் ஊடாக மேலதிகமாக பல சிறுவர்களை நாம் சென்றடைய முடியும்.

சிறுவர்கள் உரிமைகள் நிகழ்ச்சியின் (CRP) மூன்று முக்கிய ஊன்றுகோல்களின் மாதிரி கீழே தரப்பட்டுள்ளது. சிறுவர்களில் ஐயமற்ற மாற்றத்தை கொண்டு வரக்கூடிய வகையில் எவ்வாறு நிகழ்ச்சிகளை வடிவமைப்பது என்பதனை வெளிக்காட்டுவதற்கு சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் உறுப்பினர்களால் இவை பரந்தளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை, நேரடியான நடவடிக்கைகளில் இருந்து எவ்வாறு ஆதாரங்களையும், அனுபவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் (முதலாவது ஊன்றுகோல்), கொள்கை, சட்டம் இயற்றல் மற்றும் கட்டமைப்புக்களின் மாற்றங்களை தெரிவித்தல் மற்றும் செல்வாக்கு செலுத்தல் (மத்திய ஊன்றுகோல்). மிகவும் பயனுள்ள வகையில் செயற்றிறனுடன் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளடங்கிய வலிமையான மற்றும் திரட்டப்பட்ட சிவில் சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடாகும் (மூன்றாவது ஊன்றுகோல்).

ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஏற்ற வகையிலும், வேறுபட்ட சேவ் த சில்ரன் நிறுவனங்களுக்கு இடையிலும் இந்த ஊன்றுகோல்களின் செயற்பாடு வேறுபடும். உதாரணமாக, நீங்கள் நேரடியாக நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தலில் ஈடுபடாமல் இருக்கலாம். ஆனால் பங்காள நிறுவனங்களுடன் இணைந்து செயற்படலாம். சிவில் சமூகத்தை வலுப்படுத்துவதில் நீங்கள் மிகவும் அரிதான ஈடுபாட்டை கொண்டிருக்கலாம். ஆனால், உள்ளூர் தீர்மானம் எடுப்பவர்களுடன் நெருக்கமாக செயற்படலாம்.



## கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதற்கு நிகழ்ச்சி அனுபவங்களை பயன்படுத்தல்

பங்களாதேஷில் புதிதாக பிறந்த குழந்தைகளின் உடல்நலன்

பங்களாதேஷில் புதிதாக பிறந்த குழந்தைகளின் உடல் நலனை முன்னேற்றுவது தொடர்பிலான நேரடி இடையீடுகளில் சேவ் த சில்ரன் பணிபுரிந்தது. மேலதிக ஸ்திரமான முன்னேற்றங்களை கொண்டு வருவதற்காக, உடல் நலன் தகவல் முறைமையில் புதிதாக பிறந்தவர்களின் உடல் நலன் குறிகாட்டிகளை உள்ளடக்கும், தேசிய பயிற்சிக்கான வரவுசெலவுத்திட்டத்தில் புதிதாக பிறந்த குழந்தைகளுக்காக 11மூ ஐ ஒதுக்குவதற்குமான முழுமையான தேசிய கொள்கையை நாங்கள் வெற்றிகரமாக பரப்புரை செய்தோம். நிகழ்ச்சி அனுபவங்களை பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் சார்ந்த ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்கு பயன்படுத்தியதன் மூலம்இதேபோன்ற வெற்றிகளை சேவ் த சில்ரனின் பொலிவியா முதல் மாலி வரையான வதிவிட அலுவலகங்கள் எட்டியுள்ளன.

பிலிப்பைன்ஸில் பருவமானவர்கள் மற்றும் இனப்பெருக்க உடல் நலன்

எங்கள் நிகழ்ச்சி அனுபவங்களை பயன்படுத்தி, சேவ் த சில்ரன் சுகாதார சேவை வழங்குநர்களின் பங்குபற்றலுடன் பிலிப்பைன்ஸில் பருவமானவர்கள் இனப்பெருக்க உடல்நலன் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என பரப்புரை செய்யப்பட்டது. இதன் பயனாக, தேசிய தலைமைப் பிராந்தியத்தின் சுகாதார திணைக்களம் பருவமானவர்கள் இனப்பெருக்க உடல் நலனுக்கு முன்னுரிமை வழங்கியது: நகரத்தின் சுகாதார அலுவலகங்களில் ஒன்று சேவ் த சில்ரனின் இடையீடுகளை பரவலாக்குவதற்கு நிதி ஒதுக்கியது: அத்துடன், அரசாங்கம், சேவை வழங்குநர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்காளித்துவத்துடன், பருவமானவர்கள் நட்புறவு இனப்பெருக்க சுகாதார சேவைகள் குழுவினால் பருவமானவர்கள் இனப்பெருக்க உடல் நலனை மேம்படுத்துதலை முழுமையாக்கும் பணி உருவாக்கப்பட்டது.

தேசிய மற்றும் சர்வதேச பரப்புரையை இணைத்தல்
உள்ளூர் மட்டத்திலான உங்கள் நிகழ்ச்சி இடையீடுகள் சிறுவர்களின் வாழ்க்கை நிலையை செயன்முறையில் முன்னேற்றுவதற்காகவே வடிவமைக்கப்படல் வேண்டும். மேலும் பல சிறுவர்களின் வாழ்க்கை நிலையில் மாற்றத்தைக் கொண்டு வருவதன் பொருட்டு தேசியக் கொள்கைகள் மற்றும் செயன்முறையில் செல்வாக்கு செலுத்துவதற்கு நீங்கள் இந்த அனுபவத்தை பரப்புரை ஊடாக பயன்படுத்த முடியும். சர்வதேச அளவில் மாற்றத்திற்கு செல்வாக்கு செலுத்துவதற்கு சாத்தியமான, தேசிய அளவிலான கற்றலை நீங்கள் பயன்படுத்த முடியும். அதேவேளை, தேசிய அளவில் பரப்புரைக்கு உதவி வழங்குவதற்கு சர்வதேச அனுபவம் மற்றும் தொடர்புகளை பயன்படுத்தலாம்.

உங்களுடைய வதிவிட நிகழ்ச்சியில் ஒரு வகையான பரப்புரை ஒன்று ஏற்கனவே இருக்கலாம். ஆனால், உங்களிடம் தெளிவான பரப்புரை மூலோபாயம் இருக்காது. பரப்புரை மூலோபாயமே மாற்றங்கள் அவசியமாக இருக்கின்ற, அந்த மாற்றங்களை செய்வதற்கான அதிகாரம் யாரிடம் இருக்கின்றது மற்றும் தீர்மானம் எடுப்பவர்கள் மீது நீங்கள் எவ்வாறு செல்வாக்கு செலுத்தலாம் போன்ற கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை நிர்ணயிக்கின்றது.

நிகழ்ச்சிகளில் திட்டமிடல் பரப்புரை
முக்கியமாக, பரப்புரை என்பது உங்கள் நிகழ்ச்சியில் பின்னர் சிந்தித்து சேர்க்கப்பட்டதாக இன்றி, ஆரம்பத்தில் இருந்து திட்டமிடப்பட்ட, முழுமை வாய்ந்த பகுதியாக இருத்தல் வேண்டும். உங்கள் நிகழ்ச்சி திட்டமிடல் நடைமுறை குறிக்கோள்கள் மற்றும் இலட்சியங்களையும், அவற்றை எவ்வாறு அடைவது என்பது தொடர்பிலான விடயங்களையும் அடையாளங் காண வேண்டும். இணைந்த நேரடி இடையீடுகள், பரப்புரை மற்றும் சிவில் சமூகத்தை வலுப்படுத்தல் என்பவற்றின் ஊடாக இதனை அடைய முடியும் (மூன்று ஊன்றுகோல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று). சில கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் தற்போது பரப்புரை மூலோபாயத்தை தயாரிப்பதற்கான வடிவம் உள்ளடங்கிய திட்டமிடல் வரைபுநகல்கள் உள்ளன. ஆனால், இந்த திட்டமிடல் நடைமுறைகள் இதுவரை திரட்டப்படாத நிலையில், நீங்கள் பரப்புரை தற்போதைய நிகழ்ச்சியில் கட்டியெழுப்ப ஆரம்பித்தால், உங்களுடைய நேரடிய இடையீடுகள் மற்றும் பரப்புரைக்கு இடையில் செயன்முறை தொடர்பை உருவாக்கிக் கொள்வதற்கு பின்வரும் கேள்விகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

ஆதாரம்
உங்களுடைய நிகழ்ச்சி அனுபவம் எவ்வாறு பரப்புரைக்கான ஆதாரத்தை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட முடியும்? பிரச்சினைகள் தொடர்பில் அது கூறுவது என்ன? சாத்தியமான தீர்வுகள் தொடர்பில் அது கூறுவது என்ன?

தொடர்புகள்
நிகழ்ச்சிப் பணியின் ஊடாக நீங்கள் உருவாக்கிக் கொண்டுள்ள பரப்புரைக்கு பயன்படுத்தப்படக் கூடிய தொடர்புகள் எவை (உதாரணமாக, சாத்தியமான இலக்குகள், செல்வாக்குகள், கூட்டமைப்புக்கள், வலையமைப்புக்கள், சிறுவர்கள்/பாதுகாவலர்களின் குழுக்கள் ஆகியவற்றுடன்)? தொடர்பு என்பது, நீங்கள் ஒரு வழக்குரைஞராக, ஒரு கூட்டத்திற்கு அழைக்கும் போது, தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொள்ளும் போது அல்லது மின்னஞ்சல் ஒன்றை அனுப்பும் போது உங்களுக்கு பதில் கிடைத்தலாகும். அதன் அர்த்தம் நீங்கள் பதிலளிப்பதற்கு தயாரக இருக்க வேண்டும் என்பதாகும். பிரதிச்சலுகை, ஏற்றுத் தன்மை மற்றும் பொறுப்பு ஆகியன பொதுமக்கள் தொடர்பில் மிகவும் முக்கியமானதாகும்.

சட்ட உரிமை நிலை
உங்களுடைய நிகழ்ச்சித் திட்டம் பரப்புரைக்கு சட்ட உரிமை நிலையை வழங்குகின்றதா(உதாரணமாக, பிரச்சினைகள் மற்றும்.'.அல்லது தீர்வுகளின் நேரடி அனுபவம், சிறுவர்களுடனான நேரடி பணியாற்றல்)?.

ஸ்திரத்தன்மை
உங்களுடைய நிகழ்ச்சியின் பயனுறுதித் தன்மை பரப்புரையின் ஊடாக எவ்வாறு மேலும் ஸ்திரத்தன்மையுடைதாக மாற்றப்பட முடியும்? உங்கள் நிகழ்ச்சியின் மூலம் நீங்கள் சுட்டிக்காட்டும் மறைந்திருக்கும் பிரச்சினைகளுடன் அது எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்கின்றது?

## இகலன்டைன் ஜெப்:
## சேவ் த சில்ரன் ஸ்தாபகர் மற்றும் பரப்புரைக்கு ஆதர்சமானவர்



1876 ஆண்டு பிறந்த இகலன்டைன் ஜெப், சமூக திருத்தங்கள் தொடர்பில் எப்போதும் ஆர்வமுடையவராக இருந்தார். "ஏதாவது பயனுடைய விடயத்தை புரிய வேண்டும் என்ற அவருடைய ஆவல், அவரது அமைதியின்மைக்கு காரணமானது" என ஒரு சந்தர்ப்பத்தில் அவருடைய சகோதரி டொரோதி புக்ஸ்டன் தெரிவித்துள்ளார். முதலாவது உலக மகா யுத்த காலத்தில், 1912ஆம் ஆண்டு பால்கன் நிவாரண நிதியத்தில் பணி புரிந்த போது, யுத்தத்தின் பாரிய அழிவை அவர் கண்டார். ஐரோப்பாவில் பொருட்கள் விநியோகத்திற்கான தடையினால் பாதிக்கப்பட்ட மக்கள், விசேடமாக சிறுவர்கள் தொடர்பில் அவர் கவலை கொண்டார். 1919ஆம் ஆண்டு அவரும், அவருடைய சகோதரியும் அரசாங்கத்தின் சட்ட மன்றத்தில் இந்த பிரச்சினையை எடுத்துக் கூடிய தடையை நீக்கக் கோரினர். அத்துடன், நாடுகளுக்கான லீக் ஒன்றை உருவாக்குவதற்கும் இவர்களே அழுத்தம் கொடுத்தனர்.

ஐரோப்பாவில் உணவின்றி துன்பத்தில் தவிக்கும் சிறுவர்களுக்கு உணவு வழங்கும் நோக்கில் நிதி சேகரிப்பதற்காக 1919ஆம் ஆண்டு இகலன்டைன் சேவ் த சில்ரன் நிதியத்தை ஆரம்பித்தார். இதற்கு மக்கள் பெருமளவில் நிதியுதவி வழங்கினர். நிபுணத்துவம், துரிதமாக உதவி வழங்கல் மற்றும் குறைந்த செலவு என்பவற்றின் காரணமாக 1922ஆம் ஆண்டளவில் ஐக்கிய இராச்சியத்தில் மிகவும் முக்கியமான அறக்கட்டளைகளில் ஒன்றாக சேவ் த சில்ரன் உருவெடுத்தது. அது மிகவும் பயனுறுதி மிக்க விளம்பர பிரசாரங்களையும் முன்னெடுத்தது.

இகலன்டைன், பன்னாட்டுக்குப் பொதுவான நலனே முக்கியம் என கருதும் நபர்களில் ஒருவர், சிறுவர் நலன்புரி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த அங்கமாக நிதிகளை பகிர்ந்தளிக்கவும், சிறுவர்களின் நலன்புரி தொடர்பான ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிலையமாகவும் 1920ஆம் ஆண்டு அவர் சேவ் த சில்ரன் சர்வதேச ஒன்றியத்தை அமைத்தார். இன ரீதியான, பிரிவு ரீதியான அல்லது அரசியல் அடிப்படையிலான வேறுபாடுகள் இன்றி அனைத்து நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கும் உதவி புரிவதே இதன் இலக்காக இருந்தது.

உயரமான, மெல்லிய, வெள்ளை தலைமயிருடைய இகலன்டைன் சக ஊழியர்களால் "வெள்ளைச் சுடர் (The White Flame) " என்ற பட்டப்பெயரால் அழைக்கப்பட்டார். அரவது கடுமையான உழைப்பும், அயராத பணியும் பலருக்கு உத்வேகத்தை ஏற்படுத்தின. 1928ஆம் ஆண்டு திடீரென நோய்வாய்ப்பட்ட அவர், 52ஆவது வயதில் ஜெனீவாவில் டிசம்பர் 17ஆம் திகதி உயிரிழந்தார்.

எல்லா தரங்களிலும் மிகவும் சிறப்பான நபராக இகலன்டைன் திகழ்ந்தார். துணிவான, தீர்மானமிக்க நிறுவனம் தொடர்பான குறிக்கோள் ஒன்றினையுடைய ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள உலக சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடையவராக அவர் இருந்தார். அவர் இறந்து சில வருடங்களுக்குப் பின்னர், அவருடன் நெருக்கமாக உழைத்த சிலர் அந்தச் சுடரை அணையாது ஒரு நிறுவனமாக்கினர். இன்றும், இகலன்டைனின் கனவை நிஜமாக்கும் பணியில் சேவ் த சில்ரன் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா பிரகடனத்தின் சமவாயத்திலிருந்து....

சேவ் த சில்ரனின் விளைவுகள் உச்சமானதாக அமைய வேண்டுமாயின் நிவாரணப் பணி என்ற கட்டத்தைச் கடந்து செல்ல வேண்டிய கட்டயாத்தினை இகலன்டைன் ஜெப் அறிந்திருந்தார். இது தொடர்பில் அவரது பிரதிபலிப்பு புத்தி கூர்மையுடையதாகவும், தொலைநோக்குப் பார்வை கொண்டதாகவும் அமைந்திருந்தது. உலகம் முழுவதிலும் சிறுவர்களது உரிமைகள் மற்றும் நலன்புரிக்கான அத்திவாரம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் அவர் சிந்தித்தார். அவரது தனித்துவமான சிந்தனை ஒரு சாதாரணமாக குறிப்பாகும். சிறுவர்கள் என்று கூறப்படும் அனைவரதும், செல்வந்தர்கள், வறியவர்கள் என்ற பாகுபாடின்றி உரிமைகள் பாதுகாக்கப்படும் தனித்துவமான பார்வை அவரிடம் இருந்தது. பரப்புரை என்பது புதிய அல்லது அண்மைக்கால நடவடிக்கை என குறிப்பிடப்பட்டாலும், சேவ் த சில்ரன் என்ற அமைப்பு பரப்புரை நிறுவனமாகவே தமது சேவைகளை ஆரம்பித்தமையை சுட்டிக்காட்ட வேண்டும்.

சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் சர்வதேச சேவ் த சில்ரன் ஒன்றியத்தினால் 1923ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்டு, பிரசாரப்படுத்தப்பட்ட விடயமாகும். ஒரு வருட காலத்திற்குள் ஜெனீவாவில் இடம்பெற்ற நாடுகளின் லீக்கில் இது உள்வாங்கப்பட்டது. சுமார் 65 வருடங்களின் பின்னர், இந்த சமவாயம் சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனத்தின் (UNCRC) அடிப்படையாக மாறியது. 1989ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்ட சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனமே சிறுவர் உரிமைகள் தொடர்பான மிகவும் முக்கியமான பரப்புரையாக இருக்கின்றது.

### சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனம் அறிக்கைப்படுத்தல் பொறியமைப்பை பயன்படுத்தல்

சிறுவர்கள் உரிமைகளுக்கான வழக்குரைஞர்களாக முன்வருபவர்களுக்கு சட்டரீதியான உதவியை வழங்கும் ஆவணமாக சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனம் இருக்கின்றது. சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனத்தில் கண்காணிப்புக்கான பொறியமைப்பு உள்ளது. சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஆலோசனை மற்றும் மாற்று அறிக்கைகள் ஆவணத்தை வழங்குவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிறுவரை இலக்கு வைத்துள்ள நிறுவுனங்கள் உள்ளடங்கலாக "திறனுள்ள அங்கங்களுக்கு" ஜெனீவாவில் உள்ள சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனக் குழு அழைப்பு விடுத்துள்ளது (உறுப்புரை 45க்கு அமைய).

குழுவுக்கான மாற்று அறிக்கைகளை தயாரிப்பதானது, சிறுவர் உரிமைகள் தொடர்பில் கடமையாற்றும் நிறுவனங்கள் ஒன்றிணைவதற்கு பரப்புரை செய்வதற்கான சிறந்த சந்தர்ப்பமாக இருக்கின்றது. இந்த குழுவின் இறுதியான பரிந்துரைகள் பின்தொடருவதற்கான பிரதான சந்தர்ப்பங்களை உள்ளடக்கியுள்ளன. ஜெனீவாவில் சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனத்தில் அங்கம் வகிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் குழு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் குறித்த பணிகளுக்கும், சிறுவர்கள் உரிமைகள் தொடர்பில் அறிக்கையிடல் மற்றும் வலையமைப்பை ஏற்படுத்தலுக்கான கையேட்டினை தயாரிப்பதற்கு உதவி வழங்குகின்றன. க்கு பொறுப்பான நிறுவனம் முதலிடத்தை வகிக்கின்ற போதிலும், இதில் சேவ் த சில்ரனுக்கும் மிகவும் முக்கியமான இடம் இருக்கின்றது. சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடன அறிக்கையிடலுக்கான வழிகாட்டியை சேவ் த சில்ரன் அண்மையில் பிரசுரித்திருந்தது[2].

### வேறுபட்ட துறைகளில் பரப்புரைக்கான சிறுவர் உரிமைகள் அணுகுமுறையை பிரயோகித்தல்

சிறுவர்களை பாதிக்கும் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு அல்லது வாழ்வாதாரம் போன்ற எந்தவொரு உள்ளூர் அல்லது சர்வதேச விடயங்களிலும் பரப்புரைக்கான சிறுவர் உரிமைகள் அணுகுமுறையை[3] பிரயோகித்தல் சாத்தியமானதும், பெறுமதியானதுமாகும்.

சிறுவர் உரிமைகள் நிகழ்ச்சியின் ஊடாக பரப்புரைக்கான அணுகுமுறையை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனம் வழங்குகின்றது. நீங்கள் பணி புரியும் பகுதிகளில் காணப்படும் சிறுவர் உரிமைகள் மீறல்கள் மற்றும் சூழ்நிலையை மாற்றுவதற்கான பொறுப்புடைய கடமையை வகிப்பவர்ளுக்கான அடிப்படை காரணங்களை அடையாளங் காணபதற்கான சிறுவர் உரிமைகள் சூழ்நிலை பகுப்பாய்வின் அடிப்படையில் இது அமையும். கடமைப் புரிபவர்களின் நம்பகத்தன்மையை பரப்புரை தக்க வைக்கின்றது.

நிகழ்ச்சிகள் மற்றும் பரப்புரை சார்ந்த பிரதான விடயங்களை அடையாளங் காண்பதற்கு உறுதியான ஆரம்பப் புள்ளியை சிறுவர் உரிமைகள் சூழ்நிலை பகுப்பாய்வு வழங்குகின்றது. சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா பிரகடனத்தின் கொள்கைகளின் அடிப்படையில் இந்த பகுப்பாய்வு அமைதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, சிறுவர்களின் நல்லார்வங்கள், உயிர்பிழைத்தல் மற்றும் அபிவிருத்தி, பாரபட்சமின்மை மற்றும் சிறுவர்களின் பங்குபற்றல்.

---

[2] ஐக்கிய இராச்சியம், சேவ் த சில்ரன்- சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா குழுவிற்கான அறிக்கையிடல் 2007.

[3] சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு, சரியாக புரிந்துகொள்ளல், சிறுவர் உரிமைகள் நிகழ்ச்சிக்கான பயிலுனர் வழிகாட்டி 2007.

அத்தியாயம் 2

# பரப்புரையில் சிறுவர் பங்குபற்றல்



## அத்தியாயம் 2

# அறிமுகம்

சிறுவர்களுக்கென்ற தனியான குரல் உள்ளது - அவர்கள் விடயங்கள் தொடர்பில் தெளிவாகவும், எளிமையாகவும் கதைப்பார்கள். அவர்களுக்கு அரசியலில் ஆர்வம் இல்லை. அவர்களுக்கு மாற்றங்கள் மாத்திரமே தேவை. தீர்மானம் எடுப்பவர்கள் வழமையாக சிறுவர்களை தொடர்பு கொள்வதில்லை. அவ்வாறு தொடர்பு கொள்ளும் போது சிறுவர்களின் கருத்துக்கள் புதுமையாக இருப்பதை அவர்கள் உணர்கின்றார்கள். அத்துடன், சிறுவர்கள் கூறும் விடயங்களை கவனத்திற் கொள்ளவும் செய்கின்றார்கள்.

உலகெங்கிலும் உள்ள சிறுவர்களும், சிறுமிகளும் பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் தமது உரிமைகளை மேம்படுத்துவதற்கும், உதவுவதற்கும் ஒன்றிணைந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். தமது அக்கறைகள், முன்னுரிமைகள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் தமது பெற்றோர்கள், உள்ளூர் சமுதாயங்கள், ஊடகம், உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அவர்கள் வெற்றியடைந்துள்ளனர்.

சிறுவர்கள் பரப்புரையில் வேறுபட்ட வகைகளில் பங்குபற்ற முடியும். சிறுவர்களின் அக்கறைகள் சார்ந்த விடயங்களின் பெரியவர்கள் முன்னெடுக்கும் பரப்புரையில் அவர்கள் கலந்து கொள்ளலாம். அல்லது அவர்கள் தாமாகவே வழக்குரைஞர்களாகுவதற்கு வலுவூட்டப்படலாம். சிறுவர்களை பாதிக்கும் விடயங்கள் தொடர்பில் பணியாற்றும் நிறுவனங்கள், சிறுவர்கள் தொடர்பில் கதைப்பதிலிருந்து, சிறுவர்களுக்கு கதைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கான நிலைக்கு நகர வேண்டும். தமது தேவைகள் குறித்து தாமே கதைப்பதற்கு அவர்களை வலுப்படுத்தல் வேண்டும். உலகெங்கிலும் உள்ள தாம் மற்றும் தமது வயதுப் பிரிவினருக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பில் குரலெழுப்புவதற்கு சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு சேவ் த சில்ரன் சந்தர்ப்பம் உருவாக்கிக் கொடுக்கின்றது.

இந்த கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள பரப்புரை தந்திரோபாயத்தை வடிவமைக்கும் அனைத்து நிலைகளிலும் உள்ள விடயங்களை சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் தமக்கு பொருத்தமான இடத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியும். தேவையான சந்தர்ப்பங்களில் மொழியை மாத்திரம் உங்களுக்கு ஏற்றதாக்கிக் கொள்ளலாம். உங்கள் பரப்புரை பணியில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் பங்குபற்றல் பாதுகாப்பானதாக, அர்த்தமுள்ளதாக மற்றும் நன்னடத்தையுள்ளதாக உள்ளமையை உறுதி செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட செயன்முறை தரங்களை (பக்கம் 28ஐ பார்க்கவும்) உங்கள் வழிகாட்டியாக பயன்படுத்தவும்.

**சிறுவர்களை மத்தியமயப்படுத்தப்பட்ட பரப்புரை** என்பது சிறுவர்களது ஆர்வங்கள் மத்தியமயப்படுத்தப்பட்ட, அவர்களது குரல்கள் தெளிவாக செவிமடுக்கப்பட்ட வகையில் சிறுவர்கள் பரப்புரை மூலோபாயத்தில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களாகும். பருவமானவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களாக அன்றி, சிறுவர்களால் வெளிப்படுத்தப்பட்ட தேவைகளின் அடிப்படையிலேயே பரப்புரை நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

**சிறுவர் தலைமையிலான பரப்புரை** என்பது தமக்கு மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பில் சிறுவர்கள் தாமே பரப்புரையை மேற்கொள்வதாகும். சேவ் த சில்ரன் அல்லது வேறு பெரியவர்கள் இந்த பரப்புரையை முன்னெடுப்பதற்கு ஆதரவு வழங்குவர்.

சிறுவர் தலைமையிலான பரப்புரையின் சில சாதகத் தன்மைகள்:

- சிறுவர்களின் கோணத்திலிருந்து அது யோசனைகளை முன்வைக்கும். அத்துடன், சிறுவர்களின் கண்ணோட்டத்திலிருந்து பிரச்சினையையும், தீர்வினையும் பெரியவர்கள் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.
- தீர்வுக்கான உரிமை சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கானதாக இருக்கும்.
- சிறுவர்கள் சமூகத்தின் செயற்பாட்டாளர்களாக மற்றும் செயற்றிறன் மிக்க பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதை சிறுவர்கள் உணர்வார்கள்.

~ சிறுவர்கள் புதிய தகைமைகளை கற்றுக் கொள்வதுடன், தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்வர்.
~ சிறுவர்கள் செயற்படும் போது, பொதுவாக பெரியவர்களின் அர்ப்பணிப்பு அதிகமாக இருக்கும்.

சிறுவர்கள் தலைமையிலான பரப்புரை என்பதின் மூலம் சிறுவர்களும், இளைஞர்களும் தனித்து விடப்பட்டுள்ளார்கள் என அர்த்தம் கொள்ளக் கூடாது. பெரியவர்கள் என்ற வகையில் நாம் சிறுவர்களையும், இளைஞர்களையும் சிக்கலில் தள்ளிவிடக் கூடாது அல்லது சவாலில் சிக்க விடக் கூடாது. சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் வழக்குரைஞர்களாக செயற்படச் செய்வதற்கு மற்றும் ஆதரவு வழங்குவதற்கு அவர்களுக்கு கொள்கைகள் மற்றும் சட்டங்கள் தொடர்பான அறிவு உள்ளடங்கிய தேவையான தகவல்களை நாம் வழங்க வேண்டும். சிறுவர்கள் புரிந்துக் கொள்ளக் கூடிய வகையில், அவர்களது வேற்றுமையை அங்கீகரிக்கும் அடிப்படையில் (பால், வயது, இனக் குழுக்கள், மாற்றுத் திறன்) நாம் இந்த தகவல்களை வழங்க வேண்டும். அத்துடன், சிறுவர்களின் வயது, மொழி, இயலுமைகள் மற்றும் இன்னபிற விடயங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

சிறுவர்களுக்கு உதவி வழங்கக் கூடிய முறைகள் தொடர்பில் அவர்களிடம் இருந்தே நாம் கற்றுக் கொள்ள வேண்டும். சிறுவர்கள் எவ்வாறு வழக்குரைஞர்களாக மாற முடியும்? சிறுவர்களின் பரப்புரை அனுபவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடியது என்ன? பரப்புரைக்கு சிறுவர்களை ஒன்றிணைப்பது எவ்வாறு? சில சிறுவர்கள் ஓவியம், நாடகம் அல்லது வேறு ஊடகங்களை தமது பரப்புரைக்கு பயன்படுத்துவர். ஏனையோர், பிரசாரத்தில் ஈடுபடுவர்.

## நைஜீரியா: கொள்கை மேம்படுத்தலில் சிறுவர்களின் பங்களிப்பு

எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட நிர்க்கதியானவர்கள் மற்றும் பலவீனமான சிறுவர்களுக்கான செயற்பாட்டுக்கான தேசிய திட்டத்தை தயாரிப்பதற்று அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட குழு திட்டத்தை உருவாக்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தொடர்ச்சியான பிராந்திய செயலமர்வுகளில் சிறுவர்களை உள்ளடக்கும் எமது பரிந்துரையை ஏற்றுக் கொண்டது (பாரிய அளவிலான சட்டமன்ற ஆலோசனைகளின் பின்னர்).

திட்டமிடலில் சிறுவர்களின் பங்குபற்றுதல் முக்கியமானது என்பதனை உறுதி செய்ய வேண்டியது தொடர்பிலான பெரியவர்களின் எதிர்ப்பை நாங்கள் வெற்றிகரமாக கடந்தோம். சிறுவர்களின் பங்களிப்பினால் முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டமிடல்களை நாங்கள் அவர்களுக்கு அறியப்படுத்தினோம். சிறுவர்கள் தற்போது உலகாளவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமையை அவர்களுக்கு தெளிவுபடுத்தினோம்.

**நாங்கள் கற்றுக் கொண்டது என்ன?**
சிறுவர்களுக்கு சரியான சூழல், முன்னேற்பாடு மற்றும் ஆதரவு வழங்கப்படும் போது, அவர்கள் மாற்றுத் திறன் தொடர்பில் வித்தியாசமான கருத்துக்களை கொண்டுள்ளமையையும், தமது கருத்துக்களை சிறப்பாக வெளிப்படுத்துவதையும் சிறுவர்களின் பங்களிப்பு பெரியவர்களுக்கு வெளிப்படுத்தியது. சிறுவர்கள் வழங்கிய வெளியீடுகள் திட்டமிடலின் மேம்படுத்தலுக்கு மிகவும் உதவியாக இருந்தது.

## சிறுவர்களை பங்குபெறச் செய்தல் - எவ்வாறு ஆரம்பிப்பது?

- சிறுவர்களை உங்களுடைய பிரதான பங்குதாரர்களாக, சமூக செயற்பாட்டாளர்களாக மற்றும் நண்பர்களாக பார்க்கவும். தம்மை பாதிக்கும் சிறுவர்கள் உரிமைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் தனித்துவமான கண்ணோட்டத்தை அவர்கள், உங்களுக்கு வழங்குவார்கள்.
- உங்களுடைய சூழல், சூழ்நிலை மற்றும் வளங்களுக்கு அமைவானதாக ஆரம்பப் புள்ளியை தீர்மானித்துக் கொள்ளுங்கள். இந்த நடவடிக்கை எத்தனை சிறுவர்கள் மற்றும் எந்த குழுக்கள் ஈடுபடும் என்பதில் தாக்கம் செலுத்தும்.
- உங்களிடம் ஏற்கனவே உள்ள வளங்களை கட்டியெழுப்பல் அல்லது வலுப்படுத்தல் (சிறுவர்கள் கழகங்கள், பாராளுமன்றங்கள், இன்னபிற).
- சிறுவர்களின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கு தற்போது உங்களிடம் பயன்பாட்டில் உள்ள பரப்புரைப் பணியை அத்திவாரமாக அல்லது சந்தர்ப்பமாக பயன்படுத்துங்கள்.
- பரப்புரை முயற்சிகளில் சிறுவர்களின் பங்குபற்றலுக்கு அங்கீகாரத்தை உருவாக்குங்கள். பரப்புரையில் சிறுவர்களின் பங்குபற்றலால் ஏற்படும் பயன்களை ஏனையோருக்கு தொடர்ந்து தெளிவுபடுத்துங்கள். இதன் பொருட்டு சிறந்த உதாரணங்கள் உங்களுக்கு உதவி புரியும்.
- சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கு இடையில் பங்காளித்துவத்தை கட்டியெழுப்புவதற்கு சமூகத்தின் பெரியவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களுடன் இணைந்து செயற்படுங்கள். சிறுவர்கள் உரிமைகளுக்கு ஆதரவு வழங்கி வருபவர்களை அடையாளங் காணுங்கள். சிறுவர்கள் உரிமைகள் குறித்த முதன்மையான முக்கியத்துவத்தை ஏனையவருக்கு விளங்கச் செய்யுங்கள்.
- தொடர்ச்சியான பிரதிபலிப்பு, வலுவூட்டல் மற்றும் கொண்டாட்டம், மற்றும் உங்கள் பரப்புரை பணியின் விளைவு மற்றும் செயன்முறையை கண்காணித்து, மதிப்பீடு செய்யக் கூடிய பொறியமைப்பை உருவாக்குங்கள்.
- நன்னடத்தை பயிற்சி, உள்ளடக்கல் மற்றும் பாரபட்சமின்மை, நம்பகத்தன்மை மற்றும் பின்தொடரல் தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

# *சிறுவர்களை பங்குபெறச் செய்வதற்கு இப்போதும் கால தாமதமாகிவிடவில்லை.........*



Children in a school in South Sudan run by Save the Children.

## உடற்சார் தண்டனைக்கு எதிராக இந்திய பர்டசாலை சிறுவர்கள் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட பிரசாரம்

**பின்புலம்**
2001 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறுவர்கள் தொடர்பான ஐ.நாவின் விசேட அமர்வுக்குப் பின்னர், யுனிசெப் மற்றும் வேறு அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து இந்திய மாநிலமான ஒரிசாவின் சிறுவர்கள் குறித்து சேவ் த சில்ரன் ஆலோசனை செய்தது. இந்த ஆலோசனையின் போது உடலியல் ரீதியான மற்றும் அவமானப்படுத்தும் தண்டனைகளே சிறுவர்களுக்கு எதிரான வன்முறையின் வழக்கிலுள்ள அமைப்பாக உள்ளமை அடையாளங் காணப்பட்டது. இந்தியாவுக்கான சேவ் த சில்ரன் நிகழ்ச்சி திட்டங்களில், உடற்சார் தண்டனைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பிரதான இடமளிக்கப்பட்டது.

**நடைமுறை**
பரப்புரை மூலோபாயத்தை தயாரிப்பதற்கு சிறிய அளவில் நாம் சிறுவர்களை பயன்படுத்தினோம். அவர்கள் மாற்றத்துக்கான சந்தர்ப்பங்களை அடையாளங் காண்பதற்கு தற்போது பயன்பாட்டில் உள்ள கொள்கைகள் மற்றும் முறைகளை பகுப்பாய்வு செய்து, ஒரிசாவில் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் கூட்டமைப்பையும், வலையமைப்பையும் உருவாக்கினர்.

உள்ளூர் அளவில் நாங்கள் பங்காளர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவி வழங்கி, உடல்ரீதியான மற்றும் அவமானப்படுத்தும் தண்டனைகள் எவ்வாறு அவர்களின் வாழ்க்கையை பாதிக்கின்றது என நாம் சிறுவர்களிடம் கேட்டறிந்தோம். சிறந்த ஆசிரியர் வீதங்களுடன், மேம்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் இரட்டைமொழி கற்கையுடன் மாதிரி பாடசாலைகள் அமைக்கப்பட்டன. குறிகாட்டிகளை உருவாக்குவதில் சிறுவர்களும் பங்குபற்றினர். பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் ஊடகங்களின் விழிப்புணர்ச்சியை கட்டுரைகள், கடிதங்கள், நாடகங்கள், கூட்டங்கள் மற்றும் பயிற்சி செயலமர்வுகள் ஊடாக அதிகரித்தோம். உடற்சார் தண்டனைகள் தொடர்பில் திரைப்படம் ஒன்றை தயாரிப்பதற்கு நாங்கள் சிறுவர்கள் குழுவொன்றுக்கு உதவி வழங்கினோம். அது சமூகத்தில் காட்சியிடப்பட்டு பெரியோர் மத்தியில் விவாதத்தை தோற்றுவித்தது.

சட்டவாக்க சபையின் உறுப்பினர்களுடன் தற்போதைய கல்வி முறை தொடர்பில் தேசிய ரீதியிலான கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்வது குறித்து, நேரடியாக பொறுப்பு வாய்ந்தவர்களுடன் உரையாடுவதற்கு சிறுவர்களுக்கு நாங்கள் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தோம். கல்வி தொடர்பான விடயத்தில் சிறுவர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் இவ்வாறான உரையாடல் இடம்பெற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். ஆளும் மற்றும் எதிர்க்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த 35 சட்ட சபை உறுப்பினர்கள், நகர மற்றும் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த 22 சிறுவர்களுடன் (10 சிறுவன்கள், 12 சிறுமிகள்) கலந்துரையாடினர். இதன் போது உடற்சார் தண்டனையை நீக்கல் மற்றும் பரிந்துரைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அதற்குப் பதிலாக பாடசாலைகளிலும், கல்வி நிலையங்களிலும் சாதமான ஒழுக்க முறைகளும் பிரேரிக்கப்பட்டன.

**நாங்கள் அடைந்தது என்ன**
சட்ட சபை உறுப்பினர்கள் ஆரம்பத்தில் இந்த விடயத்தை கலந்துரையாடாது தவிர்க்க முயற்சித்தனர். எனினும், பின்னர் அரச சட்டவாக்கச் சபையில் இந்த விடயம் எழுப்பப்பட்டது. கூட்டங்களில் சிறுவர்கள் மிகவும் வெற்றிகரமாக தமது கருத்துக்களை முன்வைத்தனர். அதன் பின்னர் பொதுமக்கள் கருத்தைப் பெறுவதில் ஊடகங்கள் பிரதான பங்கு வகித்தன. இறுதியாக, 2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், ஒரிசா மாநிலத்தின் முதலமைச்சர் பாடசாலைகளில் உடற்சார் தண்டனைகளை தடைசெய்வதற்கான உத்தரவு பிறப்பித்தார். அரசாங்கத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் சேவ் த சில்ரன் தற்போது செயற்பட்டு வருகின்றது.

**நாங்கள் கற்றுக் கொண்டது**
பாடசாலைகள் மற்றும் சமூகங்களுடன் நேரடியாக செயற்பட்டு, சிறுவர்களை வலுப்படுத்துவது தொடர்பில் அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு செலுத்துவது போன்ற வித்தியாசமான வழிகளில் முன்னெடுக்கும் போது பரப்புரை என்பது பயனுள்ளதாக இருக்கின்றது.

*"வெளியில் உள்ள மரங்களில் இருந்து கிளைகளை ஒடிக்குமாறு ஆசிரியர்கள் நமக்கு கூறினர். பின்னர் அதனால் அவர்கள் நம்மை அடித்தனர். ஏனைய சிறுவர்களை அதனை பயன்படுத்தி அடிக்குமாறு வற்புறுத்தினர். நாங்கள் மெதுவாக அடித்தால், நம் மீது மீண்டும் அடித்து, 'இவ்வாறு அடிக்கவும்" என கூறினர். சிறுவன் பலாத்காரமாக சிறுமியை அடிக்கவும், சிறுமி பலாத்காரமாக சிறுவனை அடிக்கவும் வற்புறுத்தப்பட்டனர்."*

**-ஆந்திரா மாநில மாணவன் ஒருவர்-**

## பரப்புரையின் வேறுபட்ட நிலைகளில் சிறுவர்களை எவ்வாறு பங்கு பெறச் செய்வது என்பது தொடர்பில் திட்டமிடல்

பரப்புரை மூலோபாயத்தின் வேறுபட்ட நிலைகளில் சிறுவர்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் பின்வரும் தளத்தை பயன்படுத்தவும்: திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல். “அறிவிக்கப்பட்ட” என்பதிலிருந்து “பரப்புரைக்கு தலைமை வகிக்கும்” என்ற நிலைமாற்றத்தின் அடிப்படையில் பங்குபற்றதலின் நிலையை இந்த தளம் விளக்குகின்றது. பரப்புரை செயற்பாட்டின் வேறுபட்ட நிலைகளில் பங்குபற்றலின் வேறுபட்ட நிலைகள் பொருத்தமானதாக இருக்கும். சிறுவர்கள் எப்போது பங்குபெற வேண்டும் என்பதனை தீர்மானிப்பதற்கு பிரயோகிப்பதற்கு சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் பயிற்சி தரங்கள் உள்ளன. அவர்களின் நல்லார்வங்களை எப்போதும் கவனத்திற் கொள்வது மிகவும் முக்கியமானது. அத்துடன், விசேடமாக அவர்கள் பொது பரப்புரையில் ஈடுபட்டிருந்தால், அவர்களது பங்குபற்றலுக்கான அனைத்து சாதகமான காரணங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

| | சிறுவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | சிறுவர்களுடன் ஆலோசிக்கப்பட்டுள்ளது | சிறுவர்கள் கருத்துககளை வழங்கியுள்ளனர் | சிறுவர்கள் சமமான பங்காளர்கள் | சிறுவர்கள் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றனர் |
|---|---|---|---|---|---|
| திட்டமிடல் | பரப்புரை திட்டமிடல் தொடர்பில் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது . | அவர்களுடைய எண்ணங்கள் பரப்புரை திட்டமிடலுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது | தகவல் சேகரிப்பதற்கு அவர்கள் உதவியுள்ளனர் | திட்டமிடல் நிலையில் தீர்மானம் எடுத்தலில்ல அவர்களுக்கு குறிப்பிடத்தக்க ஆதிக்கம் உள்ளது. எடுத்துக்காட்டாக, எப்போது, எங்கே, எவ்வாறு பரப்புரை நடவடிக்கைகள் நடைபெற வேண்டும் என தீர்மானித்தல் | பரப்புரை விடயங்களை அவர்கள் தீர்மானிக்கின்றனர். மற்றும் திட்டமிடல் நிலையில் தொடர்ச்சியான செல்வாக்கு உள்ளது. |
| நடைமுறைப்படுத்தல் | நடைமுறைப்படுத்தலின் செயன்முறை தொடர்பில் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது . | அவர்களுடைய எண்ணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, பரப்புரை கற்றல் சாதனங்களில் | அவர்கள் நடைமுறைப்படுத்தலில் பங்குபற்றுகின்றார்கள். உதாரணமாக, அவர்கள் கற்றல் சாதனங்களை தயாரிப்பர், கூட்டங்களில் சமூகமளிப்பர், இன்னபிற | தீர்மானம் எடுத்தல் பொறுப்பு உட்பட பரப்புரையில் அவர்கள் பங்குபற்றல் பாத்திரத்தை வகிப்பர். | பெரியவர்களின் உதவியுடன் பரப்புரை நடவடிக்கைகளுக்கு தலைமை வகிப்பர். |
| கண்காணித்தல் | பரப்புரை எவ்வாறு இடம்பெறும் என்பது தொடர்பில் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது . | பரப்புரை எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பது தொடர்பில் அவர்களுடைய கருத்து கோரப்பட்டுள்ளது. | பரப்புரை செயன்முறையில் தகவல்களை சேகரிப்பதற்கு அவர்கள் உதவி வழங்கியுள்ளனர். | கண்காணித்தல் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பதில் அவர்களது செல்வாக்கு உள்ளது. | அவர்கள் பெரியவர்களின் உதவியுடன் தொடர்ச்சியாக கண்காணித்தல் நடைமுறையை வடிவமைக்கின்றனர். |
| மதிப்பிடல் | பரப்புரையின் விளைவு தொடர்பில் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது . | செயற்றிட்டம் அவர்களுடைய வாழ்க்கையில் எவ்வாறு தாக்கம் புரிந்துள்ளது மற்றும் அது எவ்வாறு மேம்படுத்தப்படலாம் என்பது தொடர்பில் அவர்களுடைய கருத்து அறியப்பட்டுள்ளது. | பரப்புரையின் பயனுறுதித் தன்மை குறித்து தகவல்களை சேகரிப்பதற்கு அவர்கள் உதவியுள்ளனர். | பயனுறுதித் தன்மையின் பகுப்பாய்வுகள் மற்றும் முடிவுகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.. | அவர்கள் தொடர்ச்சியாக முழுமையான மதிப்பிடல் செயன்முறையை வடிவமைக்கின்றனர். |

## மாற்றுத் திறன் உரிமைகளுக்கான பிரகடனம் தொடர்பில் ஐ.நாவின் தனிப்பட்ட ஒன்றிற்கான குழுவில் இளைஞர்கள் பரப்புரை செயகின்றனர்.

மாற்றுத் திறனுடைய பெரியவர்களிலும், மாற்றுத் திறனுடைய சிறுவர்கள் தொடர்பில் எதற்காக அதிக கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் என்பது தொடர்பில் தெளிவான புரிந்துணர்வை குழு பெற்றுள்ளது என்பதை உறுதி செய்வதற்கு சேவ் த சில்ரன் விரும்பியது. அத்துடன், முக்கியமான சிறுவர் விடயங்கள் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமையையும் உறுதி செய்ய விரும்பியது.

மாற்றுத் திறனுடைய, உரையாடுவதில் நாட்டம் கொண்ட சிறுவர்கள் சிலரை சேவ் த சில்ரன் வதிவிட நிகழ்ச்சித் திட்டம் தெரிவு செய்தது. இவர்களுக்கு பிரகடனம் தொடர்பிலும், அதில் அவர்களுடைய பங்கு தொடர்பிலும் தெளிவாக விளக்கமளித்தது. அரங்கம் நிறைவதற்கு முன்னரே வந்திருந்த அவர்கள் 10நிமிட உரையை தயார் செய்து, செயலமர்வை வடிவமைத்தனர். இந்த நடவடிக்கை பரப்புரை நிபுணர்கள் மற்றும் கொள்கை தயாரிக்கும் ஊழியர்களால் இலகுபடுத்தப்பட்டது. தமது அமர்வுக்கு முன்னரே வருகை தந்திருந்த இளைஞர்களும், தாம் உரையாற்றப் போகும் இடத்தை கண்டறிவதற்காக வந்திருந்தனர்.

**சந்தித்த சவால்கள்**
இளைஞர்கள் கூற விளைந்த விடயத்திற்கு அரசாங்க பிரதிநிதி ஒருவர் எதிர்ப்பு தெரிவித்தார். அதனால் நாங்கள் செயலமர்வை சிறிது நேரத்திற்கு தாமதப்படுத்தி, இளைஞர்களின் குரல்கள் தடையின்றி வெளிவருவதனை உறுதி செய்யும் நோக்கில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்.

மொழிபெயர்ப்பு- இங்கு மூன்று வேறுபட்ட மொழியைப் பேசுபவர்கள் வருகை தந்திருந்தனர். எனவே, அனைவருக்கும் கருத்துக்கள் சென்றடைய வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம்.

அனைவரும் பார்க்கக் கூடிய இடத்தில் சிறுவர்கள் உரையாற்றுவதை உறுதி செய்யுமாறு ஐ.நாவிடம் கோரியிருந்தோம். சிறுவர்களின் உரையை பெரியவர்கள் மொழிபெயர்த்தனர். இதனால் உரையாற்றுவது சிறுவர்கள் என்பதனை செவிமடுப்பவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய தேவையிருந்தது.

**நாங்கள் அடைந்தது**
பிரகடனத்தின் முக்கிய விடயமாக சிறுவர்களின் விடயங்கள் உள்ளடக்கப்பட்டன. அத்துடன், சிறுவர்களின் முக்கியமான தேவைகள் தொடர்பில் பிரதிநிதிகள் அறிந்து கொண்டனர். சிறுவர் பங்குபற்றலில் முதன்மையானவராக சேவ் த சில்ரன் மாறியது. ஊடகங்கள் வழியாக இந்த விடயம் பொதுமக்களுக்கு அறியத் தரப்பட்டது. ஐக்கிய இராச்சியத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான அமைச்சருடன் பின்தொடரல் கலந்துரையாடல் நடைபெற்றது. தமது கருத்துக்கள் நன்கு செவிமடுக்கப்பட்டதாகவும், தமக்கு சுதந்திரமாக உரையாற்றுவதற்கான உரிமை உள்ளதாகவும் சிறுவர்கள் உணர்ந்தனர்.

**நாங்கள் கற்றது**
பரந்தளவிலான ஆலோசனை நம்பகத்தன்மையை அதிகரித்துள்ளது: பங்களாதேஷிலிருந்து பங்குபற்றிய ஆறு சிறுவர்கள், பங்குபற்றிய நாட்டின் சிறுவர்களின் கருத்துக்களை அறிந்து கொண்டனர். இதன் மூலம், தாம் ஒரு பரந்த குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளதாக உணர்ந்தனர்.



## சியார்ரா லியோன் : பிராசரகர்களாக சிறுவர்கள்

சியார்ரா லியோனில் நாங்கள் மூன்று வெற்றிகரமான முயற்சிகளை நிறைவு செய்துள்ளோம். "சிறுவர் வறுமை வரலாற்றை தயாரித்தல்", "வாழ்க்கைக்கான பாடம்" மற்றும் "அந்தஸ்து தரங்கள்". அனைத்து மூன்று பிரசாரங்களிலும் சிறுவர்களே முக்கியமான பங்கினை வகித்தனர். நாடகங்கள், பாடல்கள், கலந்துரையாடல்கள் மற்றும் ஓவியப் போட்டிகள் என அவர்களே தமது நடவடிக்கைகளை வடிவமைத்திருந்தனர். பெரியவர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் முன்னிலையில் பேசுவதற்கான சந்தர்ப்பம் சிறுவர்களுக்கு கிடைத்தது. சிறுவர்கள் மற்றும் உள்ளூர் பங்காளர்களினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள், பிரித்தானிய பிரதமர் டோனி பிளயாரின் அலுவலகத்தில் கலந்துரையாடப்பட்டது. அதன் விளைவாக, அனைவரும் முன்னெடுத்த முயற்சியை பாராட்டிய அவர், வறுமையை ஒழிப்பது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள பிரதான நடவடிக்கைகள் சில தொடர்பிலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

சேவ் த சில்ரன் ஆதரவுடன் இரண்டு சிறுவர் கழகங்கள், சர்வதேச சிறுவர் தினத்தன்று இரண்டு வானொலி நிலையங்களில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியிருந்தன. சிறுவர்கள் தாமாகவே கதைகள் நாடகம் ஊடாக பல முக்கியமான விடயங்களை வெளிப்படுத்தி உள்ளடக்கம், வடிவம் மற்றும் குறியிசைகள் போன்றவற்றை இரண்டு மணித்தியால நிகழ்ச்சிக்காக தயார் செய்திருந்தனர்.

### நாங்கள் கற்றது

உலகளாவிய பிரசாரங்களை ஓரிடக்கத்தில் திரட்டி, பாரிய ஆர்வங்களை ஊக்குவிக்கும் சிறுவர்கள் உள்ளடங்கலாக பிரதான பங்குதாரர்கள், அடையாளங் காணப்பட்டு, திட்டமிடல் நிலையிலிருந்து, நடைமுறைப்படுத்தல் நிலை வரை ஈடுபடுத்தப்பட்டனர். இதனை சிறப்பாகச் செய்வதற்கு, நாங்கள் பிரசாரம் தொடர்பில் அறிவுடையவர்களாக மற்றும் உள்ளூர் சமூகத்திற்கு அதன் பொருத்தப்பாட்டை விளக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். சிறுவர்களின் குரல்கள் பல்வேறு வகையான கலசார வெளிப்பாடு மூலம் செவிமடுக்கப்படலாம். அவதானிக்கப்படலாம்- நாடகம், பாடல், கலந்துரையாடல் மற்றும் ஓவியம், உதாரணமாக: பரப்புரையை ஓரிடத்தில் திரட்டுவதன் மூலம், அது மக்களுக்கு யதார்த்தமானதாக மாறுகின்றது. அதன் ஒரு அங்கமாக மக்கள் உணர்வர்.



Blessing, 12 who has been helped by a domestic workers centre in Togo. (Supported by Save the Children)

**சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை பரப்புரையில் ஈடுபடுத்தும் போது செய்யக் கூடியவை:**

- பரப்புரையில் சிறுவர்களின் பங்குபற்றல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதின் முக்கியத்துவம் குறித்து பெரியவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள். தமக்காக குரல் கொடுக்கும், மாற்றத்திற்கான பங்காளர்கள் மற்றும் பிரதிநிதிகளாக சிறுவர்களை பாருங்கள்.
- சிறந்த விளைவை பெறுவதற்கு ஒவ்வொருவரினதும் கருத்தை மதித்தல் மற்றும் ஒன்றாக பணியாற்றுவது தொடர்பில் பங்குபற்றும் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் அனைவரிடம் இருந்து அர்ப்பணிப்பை பெறுங்கள்.
- பங்குபற்றியுள்ள சிறுவர்களின் அபிவிருத்தியின் நிலை மற்றும் பக்குவத்தை அங்கீகரியுங்கள். அவர்களுக்கு சிறந்த பயனைத் தரக்கூடிய முறைகள் மற்றும் அணுகுமுறைகளை பயன்படுத்துங்கள்.
- சிறுவர்கள் வாழும் சூழ்நிலை தொடர்பில் கூருணர்வுடனும், பொறுப்புணர்வுடனும் இருங்கள்.
- சிறுவர்களின் பங்குபற்றலை தூண்டும் நடவடிக்கைகள் மற்றும் கூட்டங்களை ஒழுங்கு செய்யுங்கள்.
- சிறுவர் பாதுகாப்பு தரங்கள் நிறைவேறும் பரப்புரைக்கு பாதுகாப்பான சூழலை உறுதி செய்வதுடன், அதனை மேம்படுத்துங்கள். உதவிகரமான வலையமைப்புக்கள் மற்றும் சூழலை உருவாக்குங்கள்.
- சிறுவர்கள் தலைமையிலான நடவடிக்கைகள், முயற்சிகள் மற்றும் செயற்றிட்டங்களுக்கு தொடர்ச்சியாக ஆதரவு வழங்கி வரும் சிறுவர்கள் தொடர்பில் செயற்பட்டு வரும் நிறுவனங்களுடன் பங்காளித்துவத்தை ஸ்தாபிப்பதுடன், அவற்றை பேணி பராமரிக்க வேண்டும்.
- சிறுவர்களின் நிகழ்ச்சி நிரல் வழிநடத்தும் செயன்முறை தொடர்பில் அவர்களுடைய இயலுமை மற்றும் திறமையை நம்புங்கள். சிறுவர்களின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு ஆதரவு வழங்கும் அதே சந்தர்ப்பத்தில், அவர்களுக்கு உதவுவதற்கு எப்போது, எவ்வாறு இடையீடு செய்ய வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருங்கள்.
- ஒன்றாக இணைந்து பணியாற்றவும், அவர்களது சுயமான தீர்வுடன் முன்வரவும் சிறுவர்களுக்கு போதிய கால அவகாசத்தை வழங்குங்கள்.
- பங்குபற்றுதலுக்கான காரணம் மற்றும் வேறுபட்ட மாற்றுவழிகளினால் ஏற்படக் கூடிய சிக்கல்கள் தொடர்பில் சிறுவர்களுக்கு ஆலோசனை வழங்குங்கள். அவர்கள் விருப்பத்துடன் பங்குபற்றுவதை உறுதி செய்யுங்கள். எவ்வாறு ஈடுபட விரும்புகின்றார்கள் என்பது தொடர்பில் சிறுவர்கள் மற்றம் இளைஞர்களுடன் ஆலோசனை செய்யுங்கள்.
- பரப்புரையை முன்னெடுத்துச் செல்வதற்கான தகவல் மற்றும் தகைமைகளை சிறுவர்களுக்கு வழங்குங்கள். எளிமையான வகையில் அவர்களுக்கு பொருத்தமான தகவல்களை வழங்குங்கள். பரப்புரையின் விடயங்கள் மற்றும் தொழில்நுணுக்கங்களில் அவர்களுடைய இயலுமையை கட்டியெழுப்புங்கள்.

**சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை பரப்புரையில் ஈடுபடுத்தும் போது செய்யக் கூடாதவை:**

- பார்வையாளர்களாக மாத்திரம் சிறுவர் மற்றும் இளைஞர்களை ஈடுபடச் செய்தல்.
- சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் உடன்பாடு இன்றி அவர்கள் தொடர்பில் உரையாற்றல்.
- அவர்களுடைய பங்களிப்பை மாற்றுவதற்கு அல்லது செல்வாக்கு செலுத்துவதற்கு முயற்சித்தல்.

சிறுவர் பங்குபற்றுதலுக்கான சேவ் த சில்ரனின் கொள்கைகள் மற்றும் அப்பியாச தரங்கள்[4]

பரப்புரையில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் பங்குபற்றலை திட்டமிடும் போது மற்றும் ஆதரிக்கும் போது பின்வரும் ஏழு அப்பியாசங்களை வழிகாட்டியாக பயன்படுத்துங்கள்:

**நன்னடத்தை அணுகுமுறை: வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் பொறுப்புடைமை**
பெரியோர்களின் நிறுவனங்களும், ஊழியர்களும் நன்னடத்தை பங்குபற்றல் அப்பியாசம் மற்றும் சிறுவர்களின் நல்லார்வங்களுக்கு முன்னுரிமை வழங்கலில் அர்ப்பணிப்புடன் இருத்தல் வேண்டும்.

**சிறுவர்களின் பங்குபற்றல் பொருத்தமானதாக, தொண்டர் சேவையாக இருத்தல் வேண்டும்.**
தம்மை நேரடியாக அல்லது மறைமுகமாக பாதிக்கும் விடயங்களையும், நடைமுறைகளையும் வெளிப்படுத்துவதற்கே சிறுவர்கள் பங்குபற்றுவர். பங்குபற்றுவதா அல்லது இல்லையா என்பதனை அவர்களே தீர்மானிக்க வேண்டும்.

**சிறுவர் நட்புணர்வு, வசதியளிக்கும் சூழல்**
சிறுவர்கள் தமது பங்குபற்றலுக்கு பாதுகாப்பான, வரவேற்கும் மற்றும் ஊக்கமளிக்கும் சூழலையே விரும்புவர்.

**சந்தர்ப்பத்தில் சமத்துவம்**
சிறுவர்களின் பங்குபற்றல் சவால்கள் பாரபட்சம் மற்றும் வெளியேற்றல் ஆகிய பயன்பாட்டில் உள்ள முறைகளை வலிமைப்படுத்தாது. வழமையாக பாரபட்சத்தை அனுபவிக்கும் மற்றும் பங்குபற்றல் நடைமுறைகளில் வழமையான நடவடிக்கைகளில் இருந்து ஒதுக்கப்பட்டிருக்கும் சிறுவர் குழுக்களை அது ஊக்குவிக்கும்.

**பயனுள்ள மற்றும் உறுதியான ஊழியர்கள்**
சிறுவர்களின் பங்குபற்றுதலுக்கு உதவும், இலகுபடுத்தும் வயது முதிர்ந்த ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கு உயர் தரத்தில் தமது பணிகளை முன்னெடுப்பதற்கு உதவியும் பயிற்சியும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

**பங்குபற்றல் சிறுவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துகின்றது**
சிறுவர்களுடனான பங்குபற்றல் பணியில் சிறுவர் பாதுகாப்பு கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் முக்கியமான பகுதியாகும்.

**பின்தொடரல் மற்றும் மதிப்பீட்டை உறுதி செய்தல்.**
சிறுவர்களின் பங்குபற்றலை கௌரவிப்பதானது, சிறுவர்களின் பங்குபற்றலின் தரம் மற்றும் விளைவு தொடர்பிலான பின்னூட்டம் மற்றும் பின் தொடரல் என்பவற்றை வழங்கல்.

[4] சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின், சிறுவர் பங்குபற்றலுக்கான அப்பியாச தரங்கள் 2005

## ஐக்கிய இராச்சியம்: ஐக்கிய இராச்சிய வறுமை தொடர்பில் சிறுவர்கள் முன்வைத்த கருத்துக்கள் அரசாங்க அமைச்சர்களால் செவிமடுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய இராச்சியம் சேவ் த சில்ரன் தலைமையகமான லண்டனில் 2007 ஆம் ஆண்டு பெப்ரவரி நடைபெற்ற ஐக்கிய இராச்சிய வறுமை தொடர்பான நிகழ்வுக்கு வறுமை குறித்து ஆர்வஞ் செலுத்தி வரும் 150 சிறுவர்கள் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். ஐக்கிய இராச்சியத்தின் வறுமை தொடர்பில் சிறுவர்களினதும் யோசனைகளையும், அக்கறைகளையும் அரசாங்க அமைச்சர்களுக்கும், பொதுமக்களுக்கு அறிவிப்பதே இந்த நிகழ்வின் குறிக்கோளாகும்.

சில சிறுவர்கள் வளவாளர்களாக பயிற்றப்பட்டிருந்தனர். அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் வறுமை நிலை மற்றும் சிறுவர்களுக்கு உதவுவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பார்வையாளர்களுக்கு விளக்கப்படுத்தினர். சில சிறுவர்கள் வறுமையினால் தாம் எவ்வாறு பாதிக்கப்பட்டோம் எனத் தெரிவித்தனர்.

இரண்டு அரசாங்க அமைச்சர்கள், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அத்துடன், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகத்தைச் சேர்ந்தவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

**சந்தித்த சவால்கள்**
அமைச்சர்களில் ஒருவர் ஒரு நாள் நிகழ்வுக்கு சமூகமளிக்கவில்லை. இதனால் சிறுவர்குள் மிகுந்த அயர்ச்சி அடைந்தனர். எனினும், தம்மால் பங்குபற்ற முடியாது என்பது தொடர்பில் அவர் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும், சேவ் த சில்ரன் சிறிய குழுவொன்றினை ஒழுங்கு செய்து பின்னொரு நாளில் அவரை சந்தித்தது.

சிறுவர் பாதுகாப்பு விதிமுறைகள் என்பது ஈடுபட்டுள்ள 150 சிறுவர்களினதும் பாதுகாப்பை நாங்கள் உறுதி செய்யவேண்டும், சவால் மதிப்பீட்டை முன்னெடுக்க வேண்டும். இதில் ஈடுபட்டுள்ள அனைத்து பெரியவர்களும், சிறுவர்களுடன் இணைந்து செயற்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்பதாகும். ஊடகத்தில் பயன்படுத்துவதற்கான புகைப்படங்கள் மற்றும் நேர்காணல்களுக்கான அனுமதி பெற்றோர்களிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

இந்த கலந்துரையாடல்களில் சிறுவர்கள் இலகுபடுத்துனர்களாக கலந்து கொண்டனர். அவர்களை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கு இது உதவியது. அமைச்சர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் குறிப்பிட்ட கால அவகாசம் உரையாடுவதற்கு வழங்கப்பட்டது. இந்த உரைகள் தொடர்பில் தமது விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கு சிறுவர்களுக்கு சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை நிறங்களில் அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன.

**நாங்கள் அடைந்தது.**
இந்த விடயம் தொடர்பில், கல்வி மற்றும் சேவைகளுக்கான பிரவேசத்தை குறிக்கும் சிறுவர் சார்ந்த கொள்கைகள் குறித்து சவால் எழுப்பிய நாட்டின் இராஜாங்கச் செயலாளர் உட்பட பிரதான கட்சிகளின் அரசியல்வாதிகள் அறிந்து கொண்டனர். சிறுவர்கள் இந்த நிகழ்வில் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

**நாங்கள் கற்றது**
எங்கள் அலுவலகத்தினால் சிறுவர்களை பிரதானப்படுத்திய நிகழ்வுகளை முன்னெடுக்க முடியும் என கண்டறிந்தோம். இது, சிறுவர்கள் தொடர்பில் வெகு அரிதான பங்குபற்றலை கொண்ட சேவ் த சில்ரன் ஊழியர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருந்தது.



Ellen discusses child poverty with David Laws MP in the UK Poverty event.

செயன்முறை படிவம்

**2A** சிறுவர் பங்குபற்றலை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கை

| கேள்விகள் | பதில்கள் | எடுக்க வேண்டிய நடவடிக்கை மற்றும், யார் இதற்கு தலைமை வகிக்கப் போகின்றார்கள். |
|---|---|---|
| உங்கள் பரப்புரை திட்டத்தில் சிறுவர்கள் எவ்வாறு செல்வாக்கு செலுத்த முடியும்? | | |
| பரப்புரை வட்டத்தின் அனைத்து கட்டங்களிலும் சிறுவர்களை எவ்வாறு ஈடுபடுத்த முடியும்? | | |
| பரப்புரையில் சிறுவர்கள் பங்குபெற்றல் பாதுகாப்பானது, அர்த்தமுள்ளது மற்றும் நன்னடத்தையானது என்பதனை எவ்வாறு உறுதி செய்வீர்கள்? | | |
| இலக்குக் குழுக்களும் மற்றும் வேறு பங்குதாரர்களும் சிறுவர்கள் பங்குபற்றலின் பெறுமதியை உறுதி செய்வதற்கு எவ்வாறான இயலுமையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்?, | | |
| சிறுவர்கள் தொடர்பு கொள்வதற்கான ஆக்கப்பூர்வமான வழிகளுக்கு எவ்வாறான வளங்கள் வழங்கப்பட வேண்டும்: உதாரணமாக, ஊடகம் அல்லது நாடகத்தை அபிவிருத்திக்காக பயன்படுத்துவது.? | | |

செயன்முறை படிவம்

2 **B** பரப்புரை மூலோபாயத்தின் வேறுபட்ட நிலைகளில் சிறுவர்களை எவ்வாறு ஈடுபடுத்துவது என்பது தொடர்பில் திட்டமிடல்

| | சிறுவர்களுக்கு அறியச் செய்தல் | சிறுவர்களின் ஆலோசனையைப் பெறுதல் | சிறுவர்கள் தகவல்களை வழங்கியுள்ளனர் | சிறுவர்கள் சமமான பங்காளர்களாக | பிரதான பாத்திரத்தை வகிக்கும் சிறுவர்கள் |
|---|---|---|---|---|---|
| திட்டமிடல் | | | | | |
| நடைமுறைப்படுத்தல் | | | | | |
| கண்காணித்தல் | | | | | |
| மதிப்பிடல் | | | | | |

அத்தியாயம் 3

# உங்கள் பரப்புரையில் மூலோபாயத்துடன் இருத்தல்

3.1 பரப்புரை வட்டத்தில் நிலைகள்
3.2 பரப்புரையை ஒரு விடயமாக தெரிதல்
3.3 பரப்புரைக்கு சிறந்த ஆதாரத்தை உருவாக்குவது என்ன?
3.4 பரப்புரை இலக்குகள், குறிக்கோள்களை நிர்ணயித்தல்
3.5 உங்கள் பரப்புரை இயலுமையை மதிப்பிடல்
3.6 பரப்புரை சவால்களை மதிப்பிடல்
3.7 அவசரகாலங்களில் பரப்புரை



## அறிமுகம்

சேவ் த சில்ரன் பரப்புரையில் பல வருடங்களாக ஈடுபட்டுள்ள போதிலும், அது பொதுவாக அவதானமான மூலோபாய திட்டமிடல் இன்றி குறிப்பிட்ட முறையிலேயே இடம்பெற்றுள்ளது. உங்களுடைய பரப்புரை பணியை முறையாக முன்னெடுப்பதற்கான உங்கள் திட்டத்திற்கு உதவவும், உங்களிடம் சாத்தியமான ஆதிக்கம் உள்ளமையை உறுதி செய்யவும் மற்றும் உங்களால் நேரம், சக்தி மற்றும் வளங்களை சிறந்த முயற்சியுடன் வழங்க முடியும் என்பதற்காகவுமே இந்த பயிற்சி வழிகாட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது.


பரப்புரை பணியில் நன்கு கட்டமைக்கப்பட்ட பல படிநிலைகள் காணப்படுகின்றன. இவை நீங்கள் எதற்காக பரப்புரையில் ஈடுபட வேண்டும், உங்கள் பரப்புரை எந்த விடயம் சார்ந்தது, நீங்கள் அடைய முயற்சிப்பது என்ன மற்றும் அதனை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதனை பகுப்பாய்வு செய்வதற்கான வரைபு அமைப்பை இவை வழங்குகின்றன. நீங்கள் எவர் மீது ஆதிக்கம் செலுத்துகின்றீர்கள், அவர்கள் என்ன செய்ய வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள், அவர்களை எவ்வாறு அதனைச் செய்ய வைப்பது என்பன தொடர்பில் இந்த வரைபு அமைப்பு உங்களை சிந்திக்க வைக்கும். வேறுபட்ட தெரிவுகளை சிந்திக்கவும், நீங்கள் பெறத் தேவையான தகவல்களை பிரசாரப்படுத்தவும் அது உங்களுக்கு உதவும். ஒவ்வொரு படிநிலை தொடர்பிலும் மிகவும் ஆழமாக நாங்கள் உங்களுக்கு விளக்கவுள்ளோம்.

ஒரு முறையான அமைப்பில் நீங்கள் இதனை பின்தொடர வேண்டிய தேவையில்லை. ஆனால், நீங்கள் மூலோபாயத்தை திட்டமிடும் போதும், நடைமுறைப்படுத்தும் போது தொடர்ச்சியாக அதனை மீண்டும் வாசித்துப் பார்ப்பது சிறந்தது. உதாரணமாக, இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிர்ணயித்தல், நீங்கள் கொண்டு வருவதற்கு முயற்சிக்கும் மாற்றத்தை தெளிவாக விளக்குதல் என்பனவே திட்டமிடல் செயன்முறையில் மிகவும் கடினமான பகுதியாக உள்ளது. உங்களுடைய பரப்புரை இலக்குகளை, உங்களுடைய செய்திகளை மற்றும் உங்களுடைய திட்ட நடவடிக்கையை பகுப்பாய்வு செய்யும் போது, மீண்டும் மீண்டும் இந்த நிலையை நீங்கள் வாசித்து உணர்ந்து கொள்ள வேண்டும். திட்டமிடல் செயன்முறையில் இருக்கும் போது பரப்புரை சூழலையும் மற்றும் திரட்டப்பட்ட ஆதாரங்களையும் நீங்கள் தொடர்ந்து பகுப்பாய்வு செய்ய வேண்டும். இதன் மூலம் நீங்கள் தொடர்ந்து உங்களுடைய திட்டத்தை திருத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

அத்தியாயம் 2இல் கலந்துரையாடிய விடயத்திற்கு அமைய, சிறுவர்கள் பரப்புரையில் பல்வேறு விதமாக பங்குபற்ற முடியும். சிறுவர்களின் அக்கறைகள் சார்ந்த விடயங்களின் பெரியவர்கள் முன்னெடுக்கும் பரப்புரையில் அவர்கள் கலந்து கொள்ளலாம் (சிறுவர்கள் பிரதானமான). அல்லது அவர்கள் தாமாகவே வழக்குரைஞர்களாகுவதற்கு வலுவூட்டப்படலாம்(சிறுவர்கள் தலைமையிலான). இதன் மூலம் நீங்கள் விளங்கிக் கொள்வது என்னவென்றால், அவர்களை பரப்புரை திட்டமிடல் செயன்முறையில் ஈடுபடுத்த வேண்டும் மற்றும் அதனை எவ்வாறு சிறப்பாக முன்னெக்கலாம் என சிந்திக்க வேண்டும் என்பதாகும்.

## 3.1 பரப்புரை சக்கரத்தின் படிநிலைகள்

பரப்புரை ஒழுங்குபடுத்தப்பட்ட, நேரோடி செயன்முறையாக அரிதாகவே காணப்படுகின்றமையை அனுபவங்கள் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. மிகவும் வெற்றிகரமான பரப்புரை நிறுவனங்கள் சில குழப்பமான சூழலிலேயே செயற்படுகின்றன. அவர்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி செயற்படுகின்றார்கள். சந்தர்ப்பங்களை பற்றிக் கொள்ளும் இயலுமையானது, எவ்வாறாயினும், அவதானமான திட்டமிடலின் முக்கியத்துவத்தினை குறைத்துவிட முடியாது. பரப்புரையை கட்டமைக்கப்பட்ட முறையாக பார்க்கும் போது, அது பயனுறுதி மிக்க பரப்புரை மூலோபாயத்தை திட்டமிடுவதற்கு உதவும். எல்லா சந்தர்ப்பங்களிலும் அது அவ்வாறு இல்லாத போதிலும், பரப்புரை என்பது தெளிவான படிநிலைகள் மற்றும் நடவடிக்கைகளை கொண்ட முறையான செயன்முறையாகும். இந்த படிநிலைகள் எல்லா சந்தர்ப்பங்களில் சரியான ஒரே ஒழுங்கில் இடம்பெறாத போதிலும், பரப்புரை முயற்சியின் சிக்கலான மற்றும் முழுமை வாய்ந்த பகுதியாக ஒவ்வொரு படிநிலை குறித்தும் கவனஞ் செலுத்தி, திட்டமிட வேண்டியது முக்கியமானதாகும். உங்களுடைய பரப்புரை மூலோபாயத்தை திட்டமிடுவதற்கான வரைபு அமைப்பை பின்வரும் பரப்புரை சக்கரம் வழங்குகின்றது. இந்த கையேட்டின் ஏனைய பகுதிகள் பரப்புரை சக்கரத்தின் ஒவ்வொரு படிநிலைகள் தொடர்பிலும் தெளிவான, ஆழமான விளக்கத்தை தரும்.



உங்கள் பரப்புரையை திட்டமிடுவதற்கு பின்வரும் கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்க வேண்டும்.

**தவறாக இடம்பெறுவது என்ன?**

- உறுதியான, தெளிவான ஆதாரங்களை சமர்ப்பிக்கவும்
- எங்களுக்கு தேவையான ஆதாரம் என்ன மற்றும் மேலதிகமாக நாங்கள் கண்டறிய வேண்டியது என்ன?
- சூழ்நிலையை பகுப்பாய்வு செய்யவும்
- சிறுவர்களின் பிரச்சினைகள் மற்றும் உரிமைகள் மீறல் தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.
- மறைந்திருக்கும் காரணிகளை பார்க்கவும்
- இந்த காரணங்களை எவ்வாறு அடையாளப்படுத்துவது என சிந்திக்கவும்
- சிறுவர்களின் உரிமைகளை மதிப்பதற்கு, பூரணப்படுத்துவதற்கு மற்றும் பாதுகாப்பதற்கு பொறுப்பனவர்கள் யார்?
- இந்த முறை எங்கே மாற்றப்படலாம்- மற்றும் அதற்கான தடை எங்கே மாற்றப்பட வேண்டும்?

➢ ***பரப்புரை விடயங்களை அடையாளங் காணல்***

**மாற்றப்பட வேண்டியது என்ன?**

- நிறுத்தப்பட வேண்டியது என்ன, மாற்றப்பட வேண்டியது என்ன அல்லது உள்வாங்கப்பட வேண்டிய மாற்று தீர்வு என்ன, யார் முன்னெடுக்க வேண்டும், மற்றும் எப்போது என்பது தொடர்பில் மிகவும் தெளிவாக இருக்கவும்.

➢ ***தெளிவான பரப்புரை இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிர்ணயிக்கவும்.***

**மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அதிகாரம் யாரிடம் உள்ளது?**

- உண்மையாகவே அவர்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்பது தொடர்பில் தெளிவாக இருக்கவும். அவர்களது இயலுமை என்ன?
- அவர்களிடம் முறைசார் அல்லது முறைசாரா அதிகாரம் உள்ளதா?

➢ ***பரப்புரை இலக்குகள் மற்றும் செல்வாக்குகளை அடையாளங் காணல்.***

**எங்கள் நண்பர்கள் யார், எதிரிகள் யார்?**

- நாங்கள் பணியாற்ற வேண்டியவர்கள் யார் மற்றும் நாங்கள் நம்ப வைக்க வேண்டியவர்கள் யார் என்பது தொடர்பில் தெளிவாக இருக்கவும்.
- யார் நடுநிலைமையானவர் அல்லது தீர்மானிக்க இயலாதவர்? அவர்கள் எவ்வாறு ஆதரவாளர்களாக முடியும்?
- எங்களுக்கு உதவுவதற்கு மக்களை ஒன்று திரட்ட வேண்டுமா?
- தனியார் துறையுடன் நாங்கள் பணியாற்ற முடியுமா?

➢ ***மேலதிக வலுவை கட்டியெழுப்பல்***

**நாங்கள் எவ்வாறு வெற்றி பெறப் போகின்றோம்?**

- அந்த இலக்குகள் மீது செல்வாக்கு செலுத்துவதற்கு நாங்கள் கையாளக் கூடிய உத்திகள் மற்றும் அணுகுமுறைகள் எவை?
- அவர்கள் அறிந்து கொள்ள விரும்புவது என்ன, மற்றும் யார் ஊடாக அதனை அறிந்து கொள்ள விரும்புகின்றனர்?
- அவர்கள் உங்கள் செய்தியை பெற்றுக் கொண்டார்கள் மற்றும் அதன் அடிப்படையில் செயற்படுகின்றார்கள் என்பதனை எவ்வாறு உறுதி செய்வீர்கள்?
- நடவடிக்கையின் தெளிவான மற்றும் பயனுள்ள திட்டத்தை சமர்ப்பிக்கவும்

➢ ***செய்திகளை வடிவமைக்கவும், திட்ட நடவடிக்கையை வடிவமைத்து நடைமுறைப்படுத்தவும்.***

**மாற்றம் இடம்பெற்றுள்ளமையை நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்வீர்கள்?**

- திட்டம் எவ்வாறு செயற்படுகின்றது மற்றும் எதனை முன்னெடுக்கலாம் எனத் தீர்மானிப்பது, மற்றும் மாற்றப்பட வேண்டியது என்ன அல்லது பயன்படுத்தலில் நிறுத்த வேண்டியது என்ன.

➢ ***கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல்***

**போதியளவு திட்டமிடல் இன்றி எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் தொடர்பில் பரப்புரை செய்தல்**

*இந்த சம்பவம் அனுபவம் வாய்ந்த வழக்குரைஞரால் வழங்கப்பட்டது. பொதுவான சூழ்நிலையொன்று இதில் விளக்கப்பட்டுள்ளது.*

தமது எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் மூலோபாயத்தில் நிர்க்கத்தியானவர்கள் மற்றும் வேறு பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தேவைகளை தீவிரமாக உள்ளடக்குமாறு ஐக்கிய இராச்சிய அரசாங்கத்துக்கு2005ஆம் ஆண்டு சேவ் த சில்ரன் வெற்றிகரமாக பரப்புரை செய்தது. இந்த வெற்றியைத் தொடர்ந்து, ஐரோப்பிய ஆணைக்குழுவையும் அதே வகையான நோக்கத்துடன் செல்வாக்கு செலுத்துவதற்கு அணுகினோம். ஐக்கிய இராச்சியத்தில் வெற்றிகரமாகுவதற்கு எழுப்பப்பட்ட பிரதான "கேள்விகளை" கவனத்திற் கொண்டு நாங்கள் பிரசல்ஸ் நோக்கிச் சென்றோம். மிகவும் முக்கியமான தீர்மானம் எடுப்பவராகவுள்ள அபிவிருத்திக்கான பணிப்பாளர் நாயகமான, மனித மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவின் தலைவரை எங்களுடைய பிரதான இலக்காக நாங்கள் தீர்மானித்தோம். அவரது குழுவில் உள்ள உறுப்பினர்களும் செல்வாக்கானவர்கள் என்பதனை நாம் அறிந்து கொண்டோம். ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றத்திற்குள் இந்த விடயம் தொடர்பில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்க ஆற்றல் மிகு சந்தர்ப்பங்கள் உள்ளமையை நாம் கண்டறிந்தோம். நேரத்துக்கு முன்னுரிமை கொடுத்து எங்களுடைய பிரதான தீர்மானம் எடுப்பவர்களை சமூகமளிக்கச் செய்வதற்கு திட்டமிட்டோம். செல்வாக்கானவர்களை நாங்கள் சந்தித்தோம். அவர் நமக்கு உதவி வழங்கக் கூடியவராகவும், எங்களை சட்ட மன்றத்தின் தீர்மானம் எடுப்பவரை சந்திக்க செய்வதாகவும் உறுதியளித்தார். எவ்வாறாயினும், அவர் தொடர்ச்சியாக செல்வாக்கானவராக இருந்தார். இதனை மென்மேலும் பொதுமக்கள் மன்றங்களில் கொண்டு செல்வதற்கு எமது ஊக்கப்படுத்தலான செல்வாக்கின் ஊடாக நாங்கள் அவரை தெரிந்தெடுத்தோம். இறுதியாக, பிரதான இலக்கு நபர்களுடனான எங்களுடைய உறவு சமரசமானதாக இருந்ததோடு, அது புதுப்பிக்கப்பட பல மாதங்கள் எடுத்தது. இருப்பினும், நாங்கள் முன்னேறிச் சென்றோம், எங்கள் பரப்புரை குறிக்கோள்களை எம்மால் அடைய முடியுவில்லை.

நாங்கள் கற்றது

**சிறந்த திட்டமிடல் சிக்கலானது**

எங்களுடைய இலக்குகள் மற்றும் அதில் செலுத்தப்படும் செல்வாக்கு தொடர்பில் போதிய தகவல்களை பெற்றுக் கொள்ளாது எமது நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்தோம். அவர்களுடைய பதவி நிலையை கருத்திற் கொண்டு செல்வாக்கின் அளவை நாம் அண்ணளவாக கணிப்பிட்டோம். ஆனால், அவர்களது தனி ஆளுமையை கவனத்திற் கொள்ளவில்லை.

**கொள்கை மாற்றத்திற்குள் அடையக் கூடியது எது என்பது குறித்த புரிந்துணர்வு**

நாடளாவிய ரீதியில் பணியாற்றிய அதே இலக்குகளை பின்பற்றினோம். ஆனால், இவை ஐரோப்பிய ஆணைக்குழுவுக்கு போதியதல்ல என்பதை உணர்த்தின. கொள்கை நடைமுறையை அறிந்து கொள்வதில் நாங்கள் போதிய அளவு நேரத்தை செலவிடவில்லை. இதனால், நாங்கள் அடையக் கூடியது என்னவென்பதை கண்டறிய முடியவில்லை.

**இலக்குக்கு பொருத்தமான உத்திகளை தெரிவு செய்தல்**

பொதுமக்கள் அழுத்தம் எமது இலக்கில் செல்வாக்கு செலுத்தாது, ஆனால், அது அவரது பதவிநிலையை வெளிப்படுத்தியது. அத்துடன் அவர் செல்வாக்கானவர் அல்ல.

**அரசியல் சூழ்நிலை அறிந்து கொள்வதற்கு போதிய கால அவகாசத்தை எடுத்துக் கொள்ளல்.**

எங்கள் இலக்குக்கும் யுனிசெப்புக்கும் இடையில் குழப்பம் காணப்பட்டது. இதன் காரணமாக சிறுவர் விடயங்களை எழுப்பும் அனைவருக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

## நோர்வேயில் ஒவ்வொரு படிநிலையாக பரப்புரையை திட்டமிடல்

பின்புலம்
நோர்வேயில் பாலியல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட காலமாகவே சேவ் த சில்ரன் அறிந்திருந்தது. துஷ்பிரயோகத்திற்கு இலக்கான சிறுவர்கள், இதன் பொருட்டு அதிகாரிகளின் உதவியை நாடிச் செல்லும் போதும், துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர். சிறுவர்களின் உரிமைகள் தொடர்பிலான ஐ.நாவின் பிரகடனத்திற்கு அமைய, அனைத்து வகையான பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் எதிரான பாதுகாப்பை பெறுவதற்கான உரிமையும், பொருத்தமான உதவி மற்றும் சிகிச்சைப் பெறுவதற்கான உரிமையும் சிறுவர்களுக்கு உண்டு. 2002ஆம் ஆண்டளவில் சிறுவர்களுக்கு அவ்வாறான உதவிகள் கிடைப்பது சற்று எளியதாக இருந்தது. இந்த நிலையை மேலும் மேம்படுத்துவதற்கு நாம் தீர்மானித்தோம்.

மாற்றம் தொடர்பிலான குறிக்கோள்.
பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்திற்கு இலக்கான சிறுவர்கள் தொடர்பில் செயற்படும் சட்ட மற்றும் சமூக அதிகாரிகளுக்கான சிறுவர்கள் இல்லங்களை அமைத்துக் கொடுப்பதும், சிறுவர் நட்புறவு அணுகுமுறைகளை மேலும் ஊக்குவிப்பதுமே எங்கள் குறிக்கோளாகும்.

மூலோபாயம்
- பிரச்சினை தொடர்பான ஆதாரங்களை சேகரித்தல். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளை சட்ட முறைமை எவ்வாறு கையாளுகின்றது என்பது குறித்த புரிந்துணர்வை மேம்படுத்திக் கொள்வதற்காக நாங்கள் நீதிமன்ற வழக்குகளை பின்தொடர்ந்தோம்.
- சாத்தியமான தீர்வினை கண்டறிதல். நோர்வேயில் நாங்கள் அமைப்பதற்கு உத்தேசித்திருந்த சிறுவ இல்லத்திற்கான மாதிரியான சிறுவர் இல்லத்தினை ஐஸ்லாந்தில் நாம் அடையாளங் கண்டோம். எனவே, 2003ஆம் ஆண்டு ஐஸ்லாந்தின் சிறுவர் இல்லத்திற்கு விஜயம் செய்த நாங்கள், நோர்வேயில் இதேபோன்ற கட்டமைப்பை உருவாக்கும் எண்ணத்தில், அது எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது, வளப் பகிர்வுகள் மற்றும் அதன் பெறுபேறுகள் தொடர்பில் கற்றோம். அதன் பின்னர், பரப்புரை நடைமுறையின் போது நாங்கள் பிரதான பங்காளர்களையும், தீர்மானம் எடுப்பவர்களையும் சிறுவர் இல்லம் தொடர்பில் கற்பதற்காக ஐஸ்லாந்துக்கு அழைத்துச் சென்றோம்.
- பரப்புரைக்கான பங்காளர்களை அடையாளங் காணல். எங்கள் திட்டம் தொடர்பில் வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள், நிபுணர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உட்பட எங்களிடம் தற்போதுள்ள நண்பர்களுக்கு இது தொடர்பில் அறியப்படுத்தினோம். 2004ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை கிடைக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சிறுவர் இல்ல விடயம் தொடர்பிலும், அதனை நன்கு அறியச் செய்வதற்கும் முயற்சித்தோம். இந்த நடைமுறையில் எங்கள் வலையமைப்பை நன்கு விஸ்தரித்தோம்.
- பரப்புரை இலக்குகள் மற்றும் செல்வாக்குகளை அடையாளங் காணுதல். அரசியல்வாதிகள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்கள் உள்ளிட்ட நபர்களுடன் நாங்கள் பல்வேறு கூட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளோம்.
- அனைத்து சூழ்நிலைகளிலும் ஊடகத்தின் ஊடாக பொதுமக்கள் மத்தியிலும் மற்றும் நோர்வே சேவ் த சில்ரனிற்கு உள்ளேயும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல். செய்திதாள்கள், நிபுணத்துவ சஞ்சிகைகள் போன்வற்றுக்கு ஆக்கங்களை எழுதுதல், தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்களுக்கு நேர்காணல்களை வழங்குதல் என்பவற்றின் ஊடாக நாங்கள் ஊடகங்களுடன் இணைந்து செயற்பட்டோம். எங்கள் உறுப்பினர்களுக்கான கற்றல் சாதனங்களை நாம் வடிவமைத்தோம். எனவே, இதன் உதவியுடன் அவர்கள் பரப்புரை உள்ளூரில் முன்னெடுக்க முடியும்.
- அனைத்து நடவடிக்கையினதும் நடைமுறையை பதிவு புத்தக்கத்தில் அறிக்கையிடவும்.

நாங்கள் அடைந்தது.
பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்திற்கு இலக்கான சிறுவர்களை பாதுகாப்பதற்காகவும், விசாரணைகளுக்காகவும் புதிய வழிகாட்டிகள் அவசரமான தேவையாகவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் 2004ஆம் மே மாதம் பாராளுமன்றத்தில் தெரிவித்தனர். அவர்கள் முன்வைத்த விடயம் சிறுவர் இல்லம் போன்றதொரு தேவையையே குறித்தது. இதன் பொருட்டு நீதி அமைச்சு செயற்பாட்டு குழுவொன்றையும், வெளியக கருத்து வழங்கும் குழுவொன்றையும் நியமித்தது. வெளியக கருத்து குழுவில் கலந்து கொள்ளுமாறு எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. 2007ஆம் ஆண்டு ஜூன் முதல் சிறுவர் இல்லம் அமைக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையுடன், 2006ஆம் ஆண்டு வசந்த காலத்தில் செயற்பாட்டுக் குழு தமது அறிக்கையை சமர்ப்பித்தது. தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் இதன் பொருட்டு நிதியும் ஒதுக்கப்பட்டது.

நாங்கள் கற்றது
- தெளிவான மாற்றத்திற்கான குறிக்கோள் எம்மிடம் இருந்தது.
- எங்களுடைய திட்டங்கள் நீண்ட காலத்திற்கானதாக இருந்த போதிலும், நிறைவேற்றக் கூடியதாக இருந்தன.
- மூலோபாய பங்காளித்துவங்கள் நெருக்கடியானதாக இருந்தன.
- பதிவு புத்தகங்களை எழுதுவது பயனுள்ளதாக இருந்தது.
- நிதி மற்றும் ஊழியர் வளங்களை ஒதுக்குவது மிகவும் அவசியமானதாக கண்டறியப்பட்டது.

செயன்முறைப் படிவம்

## 3.1 A பரப்புரை திட்டமிடலின் படிநிலைகள் (பரப்புரைச் சக்கரம்)


| கோட்பாடு | இதன் எந்தப் பகுதிகளை நீங்கள் நிறைவு செய்துள்ளீர்கள்? | செய்யப்படாமல் இருப்பது என்ன? | எப்போது அதனை செய்வீர்கள்? | அதற்கு பொறுப்பானவர் யார்? |
|---|---|---|---|---|
| சூழ்நிலையை பகுப்பாய்வு செய்யுங்கள். | | | | |
| பரப்புரை விடயங்களை அடையாளங் காணுங்கள். | | | | |
| இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிர்ணயிக்கவும். | | | | |
| கொள்கை மற்றும் அதிகாரத்தை பகுப்பாய்வு செய்தல். | | | | |
| இலக்குகள் மற்றும் செல்வாக்குகளை அடையாளங் காணல். | | | | |
| செய்திகளை வடிவமைத்தல் | | | | |
| மேலதிக வலுவை கட்டியெழுப்பல். | | | | |
| நடவடிக்கை திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் | | | | |
| வளங்களை திரட்டி ஒருங்கிணைத்தல் | | | | |
| ஆதாரங்களை சேகரித்தல் | | | | |
| கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் | | | | |
| சிறுவர்களை ஈடுபடுத்தல் | | | | |

## 3.2 பரப்புரை விடயத்தை தெரிவு செய்தல்.


கொள்கை மாற்றத்தை மேம்படுத்துவதற்கு உதவுவதற்கு நிறுவனம் ஒன்று முன்வரும் நிலையில் விடயம் அல்லது பிரச்சினையுடனேயே பரப்புரை ஆரம்பிக்கின்றது. இந்த விடயமானது மேலே குறிப்பிட்ட அலகுகளுக்கு உட்பட்டதாகவும், முழுமையான செயற்பாட்டுக்கும் உதவுவதாகவும் இருத்தல் வேண்டும். முந்தைய பகுதியில் நாம் குறிப்பிட்டதைப் போன்று பரப்புரையானது ஆதாரத்திலிருந்து மற்றும் உங்கள் நிகழ்ச்சிப் பணியின் திரட்டப்பட்டதன் அடிப்படையில் இருக்க வேண்டும். எந்தவொரு நிகழ்ச்சிக்கும் அல்லது பரப்புரை திட்டத்திற்குமான அத்திவாரத்தை சூழ்நிலை பகுப்பாய்வு உருவாக்குகின்றது. நீங்கள் அடையாளப் படுத்த விரும்பும் பிரச்சினையின் பகுப்பாய்வு அது உங்களுக்கு வழங்குகின்றது. அத்துடன், பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படல் வேண்டும் என்பது தொடர்பிலான வழிகளையும் தருகின்றது. சூழ்நிலை பகுப்பாய்வினை முன்னெடுப்பதற்கு பல்வேறு வழிகள் உள்ளன. ஆனால், பல சேவ் த சில்ரன் நிறுவனங்கள் சிறுவர் உரிமைகளை வரைபு அமைப்பாக பயன்படுத்துகின்றது.

**சிறுவர் உரிமைகள் சூழ்நிலை பகுப்பாய்வு**

- பின்வரும் விடயங்களை பின்பற்றுவதன் ஊடாக உங்கள் நிகழ்ச்சிகள் மற்றும் பரப்புரையில் நீங்கள் முன்னுரிமை வழங்க வேண்டிய பகுதிகளை அடையாளங் காணுவதற்கு சிறுவர் உரிமைகள் சூழ்நிலை பகுப்பாய்வு உதவி புரிகின்றது:
- எந்த உரிமைகள், எந்த சிறுவர்களுக்கு நிறைவேற்றப்படவில்லை என்பதனை அடையாளங் காணல் (ஆய்வு செய்தல், வரைபடமாக்கல், வெளிப்படையாக்குதல்)
- ஏன் அவை நிறைவேற்றப்படவில்லை என அடையாளங் காணல்- உடனடி மற்றும் மூல காரணங்கள்.
- யார்.:.எந்த நிறுவனம் பொறுப்பானது என அடையாளங் காணல். அவர்களும், வேறு செயற்பாட்டாளர்களும் தற்போது என்ன செய்கின்றார்கள்? விசேட அதிகாரிகள் மற்றும் அவர்களிடம் உள்ள அதிகாரங்களை அடையாளங் காணல்.
- பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் காணப்படும் தடைகள் மற்றும் இன்னங்களை அடையாளங் காணல் (இயலுமை, சட்டமுறை, வளங்கள், உளப்பாங்கு?). சிறுவர்கள் உரிமைகளை மேலும் மேம்படுத்துவதற்கு உதவக் கூடியது அல்லது தூண்டக் கூடியது எது?
- மாற்றத்திற்கு எவ்வாறு உகந்தது என அடையாளங் காணல்.- எவ்வகையான வலுக்கள் வலியுறுத்தப்படல் வேண்டும். மேலும் செய்யப்பட வேண்டியது என்ன, அல்லது வித்தியாசமாக செய்யப்பட வேண்டியது, மற்றும் யாருடன்?



கீழுள்ள வரைபடம், பொறுப்புக்களுக்கான சக்கரத்தின் மத்தியப் பகுதியில் சிறுவர்கள் இருப்பதனை காட்டுகின்றது. மிகவும் நெருக்கமான சக்கரத்தில் குடும்பம், சமூகம் மற்றும் என்பவற்றைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வட்டத்திற்கும் சிறுவர்கள் மற்றும் அவர்களது நலன்கள் தொடர்பில் கடமைகளும், பொறுப்புக்களும் உள்ளன. சிறுவர் உரிமை பதப்பிரயோகத்தில், இந்த குழுக்கள் அனைத்து கடமை வகிப்பவர்களை உள்ளடக்கியது. மற்றும் சிறுவர் உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல் மற்றும் நிறைவேற்றலே அவர்களது கடமைகளாகும். பொறுப்புடைமை வாய்ந்த வேறுபட்ட நிலைகளில் பிரதான தீர்மானம் எடுப்பவர்களை அடையாளங் காண்பதற்கு இந்த பகுப்பாய்வு உங்களுக்கு உதவி புரியும். சிறுவர்களின் வாழ்க்கையில் உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பரப்புரையின் படிநிலைகளை தெளிவாக புரிந்து கொள்வதற்கு அது உதவி புரியும்.




நேரடி இடையீடுகள் மற்றும் சேவை வழங்கல், முறைமைகள் மற்றும் சிறந்த சேவையை வழங்குவதற்கான பொறியமைப்பை வலுவாக்கல், மற்றும் கொள்கை மற்றும் பிரயோகத்தை மாற்றுவதற்கான பரப்புரை என்பன உள்ளடங்கலாக உங்களுடைய சிறுவர் உரிமைகள் தொடர்பான சூழ்நிலை பகுப்பாய்வின் ஊடாக உங்களுடைய நாட்டின் முழுமையான திட்டத்தையும் வடிவமைக்க முடியும்.

பயிற்சி 3.2 A

**பரப்புரை விடயத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய கேள்விகளின் பரிசோதனை பட்டியல்**

பரப்புரையின் ஊடாக நீங்கள் கண்டறிய வேண்டிய விடயங்களை சில சந்தர்ப்பங்களில் உங்கள் சூழ்நிலை பகுப்பாய்வு அடையாளங் காணும். அல்லது உங்களுடைய நேரடி இடையீட்டினால் ஏற்படக் கூடிய பரப்புரை பிரச்சினைகளை நீங்கள் அடையாளங் காண முடியும். எனவே, நீங்கள் உங்கள் அவதானத்தை குறுகியதாக்கல் வேண்டும். கீழே உள்ள கேள்விகள்[5] விடயங்களை முன்னுரிமைப்படுத்தல் தொடர்பில் அவதானஞ் செலுத்துவதற்கு உதவும்.

- உங்களுடைய நிறுவனத்தின் நோக்கம் மற்றும் மூலோபயங்களுடன் தொடர்புடைய விடயங்கள் எவை?
- உங்களுடைய நிகழ்ச்சிப் பணியுடன் அதன் பொருத்தப்பாடு என்ன?
- ஆவணப்படுத்தல் மற்றும் ஆய்வு பிரயோகத்தில் உள்ளதா? இந்த பிரச்சினை தொடர்பில் உங்களிடம் ஆதாரம் உள்ளதா அல்லது உங்களுடைய நேரடி இடையீட்டினால் ஏற்பட்டுள்ள சாதகமான தீர்வுகள்?
- தெளிவான நிலை மற்றும் சாதகமான மாற்றுவழி அல்லது தெளிவான கொள்கை தீர்வு உங்களிடம் உள்ளதா?
- சிறுவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வெற்றிக்கான சந்தர்ப்பம் உள்ளதா?
- சிறுவர்களுக்கான ஒப்புநோக்கத்தக்க முக்கியத்துவம் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பிரதான குழுக்களின் ஆற்றல் சார்ந்த விளைவு என்ன?
- இந்த விடயத்துடன் தொடர்புடைய சவால்கள் மற்றும் கூருணர்வு தொடர்பில் உங்களுடைய மதிப்பீடு என்ன?
- சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் வேறு உறுப்பினர்கள் உள்ளடங்கலாக மூலோபாய கூட்டுறவின் சாதகத் தன்மை என்ன?
- இந்த விடயத்தை அடையாளப்படுத்துவதற்கு எவ்வகையான மூலோபாய சந்தர்ப்பங்கள் உள்ளன?
- உங்களிடம் போதியளவிலான வளங்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளனவா?
- சிவில் சமூகத்தில் சிறுவர்களின் பாத்திரத்தை அதிகரிப்பதன் ஊடாக நீங்கள் எதிர்பார்க்கும் ஆற்றல் என்ன?

---

[5] சேவ் த சில்ரன் டென்மார்க், சிறுவர் உரிமைகளிலிருந்து உள்வாங்கப்பட்டது.
*பரப்புரை, செயற்பாட்டு வழிகாட்டிகள், சேவ் த சில்ரன், 2006*

செயன்முறைப் படிவம்

## 3.2 பரப்புரை விடயங்கள் பரிசோதனைப் பட்டியலை தெரிவு செய்தல்

| விடய/பிரச்சினை பகுதி | குறிப்பு | அலகுகளை அது பூர்த்தி செய்கின்றதா (ஆம்/இல்லை) |
|---|---|---|
| சேவ் த சில்ரன் நோக்கம் மற்றும் மூலோபாயங்களுக்கு எவ்வளவு தூரம் அது பொருத்தமானதாக உள்ளது? | | |
| உங்கள் நிகழ்ச்சி பணிக்கு எவ்வளவு தூரம் அது பொருத்தமானதாக உள்ளது? | | |
| ஆவணப்படுத்தலும், ஆய்வும் கிடைக்கக் கூடியனவாக உள்ளதா? (உங்களுடைய நேரடி இடையீட்டின் மூலமான ஆதாரம் உங்களிடம்உள்ளதா) | | |
| உங்களிடம் தெளிவான மற்றும் சாதகமான மாற்றுவழி உள்ளதா? | | |
| வெற்றிக்கான வாய்ப்பு உள்ளதா? | | |
| சிறுவர்களுக்கு தீர்வு எவ்வளவு முக்கியத்துவமானது? | | |
| இந்த தீர்வின் மூலம் எத்தனை சிறுவர்கள் பயனடைவர்? | | |
| சிறுவர்களின் எந்த குழுவினர் பாதிக்கப்படுவர்? | | |
| மக்களுக்கும் மற்றும்/அல்லது உங்களுடைய நிகழ்ச்சிக்கும் உள்ள சவாலான விடயங்கள் எவை? | | |
| சேவ் த சில்ரனின் வேறு உறுப்பினர்கள் உள்ளடங்கலாக உங்களால் மூலோபாய கூட்டமைப்பை கட்டியெழுப்ப முடியுமா? | | |
| செல்வாக்கு செலுத்துவதற்கு எவ்வகையான மூலோபாயங்கள் உள்ளன? | | |
| உங்களிடம் போதியளவு வளம் மற்றும் ஊழியர் பலம் உள்ளதா? | | |
| சிவில் சமூகத்தில் சிறுவர்களின் பாத்திரத்தை அதிகரிப்பதற்கு எவ்வாறான ஆற்றல் உள்ளது? | | |

பயிற்சி 3.2 **B**

## முரண்பாட்டு மரம் பகுப்பாய்வு


உங்கள் விடயம் மற்றும் பிரச்சினை தொடர்பில் முழுமையான புரிந்துணர்வை உருவாக்குவதற்கும், ஒளிவடிவிலான பிரதநிதித்துவத்தை வழங்குவதற்கும் அதன் மூல காரணிகள் மற்றும் விளைவுகளை அறிந்து கொள்வதற்கு முரண்பாட்டு மரம் பயன்படுகின்றது.

**I.** பிரச்சினையின் காரணங்களும் மற்றும் விளைவுகளை வெளிப்படுத்தும் வகையில் முரண்பாட்டு மரம் ஒன்றை கீறவும்.

- பிரதான பிரச்சினையை அடையாளங் காணல் - உதாரணமாக பாடசாலைகளில் மாணவர்களுக்கு விதிக்கப்படும் உடற்சார் மற்றும் அவமானப்படுத்தும் தண்டனைகள் (PHP).
- அதன் விளைவுகள் மற்றும் காரணங்களை முன்வைப்பது தொடர்பில் சிந்திக்கவும். பிரச்சினைகள் மற்றும் காரணங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை கண்டறிவதில் மக்கள் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். தொடர்பினை ஏற்படுத்துவதற்கான வழிகளில் ஒன்று "ஏன்" என்று தொடர்ச்சியாக கேள்வி கேட்பதாகும். உதாரணமாக: "உடற்சார் தண்டனை என்பது சிறுவர்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாகும்". ஏன்? "ஏனெனில், வகுப்பறையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு வழமையாக ஆசிரியர்கள் அதனை பயன்படுத்துகின்றனர்". ஏன்? "ஏனெனில், வகுப்பறையை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பில் அவர்களுக்கு வேறு வழி தெரியாது". ஏன்?...இன்னபிற....
- முக்கியத்துவத்தின் அடிப்படையில் காரணங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பிலான பட்டியலை தரப்படுத்துங்கள்.
- பிரச்சினைக்கான மிகவும் நேரடியான காரணத்தை அடையாளங் காணுங்கள். அடுத்த பக்கத்தில் உதாரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தும் தண்டனைகளின் ஒரு நேரடியான காரணம் ஒன்று ஆசிரியர்களிடத்தில் காணப்படும் பொதுவான வழக்கமாக கண்டறியப்பட்டுள்ளது. அதன் பின்னர் இந்த காரணத்திற்கு வழி சமைக்கக் கூடிய விடயங்கள் எவை என அடையாளங் காணுங்கள்.
- காரணங்கள் என்பதனை வேராகவும், விளைவுகள் என்பதனை கிளைகளாகவும் காரணங்கள் மற்றும் விளைவுகளை முரண்பாட்டு மரத்தில் ஒழுங்குபடுத்துங்கள், அவற்றிற்கு இடையிலான தொடர்பை கலந்துரையாடுங்கள். சில பொதுவான தொடர்புகள் தெளிவாக இருக்கும். அத்துடன். அவை ஒரு நேரான பாதையில் பயணிக்கலாம். ஆனால், மற்றவை அவ்வாறிருக்காது.
- எந்த காரணங்கள் சிறுவர்களுடனான மற்றும் சிறுவர் பராமரிப்பாளர்களுடனான நேரடியான பணியின் போது அடையாளங் காணப்படக் கூடியன மற்றும் எவை பரப்புரையின் மூலம் அடையாளங் காணப்படக் கூடியன என்பது உங்களுக்கு எளிமையாக புரியும்.


**உங்களுடைய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிர்ணயிப்பதற்கு முரண்பாட்டு மரத்தின் உதவியை பயன்படுத்துங்கள்.**
ஒவ்வொரு பிரச்சினையையும் விடயமாக மாற்றி அடையாளங் கண்டு அதனை மாற்றுவதன் கூலம் முரண்பாட்டு மரத்தை, தீர்வு மரமாக மாற்றவும். உதாரணமாக, "உடற்சார் தண்டனைகளின் காயம் ஏற்படுத்தக் கூடிய விளைவுகள் குறித்த பரந்தளவிலான புறக்கணிப்பு" என்பது காரணமாக இருந்தால், தீர்வு பெட்டியில் "உடற்சார் தண்டனைகளின் காயம் ஏற்படுத்தக் கூடிய விளைவுகள் தொடர்பில் புரிந்துணர்வை பரவலாக்கல்" என்ற விடயம் குறிப்பிடப்படல் வேண்டும். இதே நடைமுறையை விளைவுகள் பகுதியிலும் பின்பற்றுங்கள். உதாரணமாக, "பாடசாலையிலிருந்து சிறுவர்கள் இடைவிலகல்" என்பது "பாடசாலை இடைவிலகல் வீதத்தை குறைத்தல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். அனைத்து குறிக்கோள்களும் செயற்றிட்டத்துடன் பொருத்தமாக இல்லாத போதிலும், உங்கள் குறிக்கோள்களையும், குறிகாட்டிகளை அடையாளங் காண்பதற்கு இது உதவி புரியும்.

பாடசாலைகளில் உடற்சார் மற்றும் அவமானப்படுத்தும் தண்டனைகள் தொடர்பிலான மாதிரி முரண்பாட்டு மரம்.




*குறிப்பு: இது ஒரு உதாரணம் மாத்திரமே. வேறு தெளிவான உதாரணங்களும், விளைவுகள் மற்றும் காரணங்களுக்கு இடையிலான மேலதிக தொடர்புகள் இதில் அடக்கப்படலாம்.*

பாடசாலைகளில் உடற்சார் மற்றும் அவமானப்படுத்தும் தண்டனைகள் தொடர்பிலான மாதிரி தீர்வு மரம்.




*குறிப்பு: தடித்த கோட்டினால் அமைந்த சதுரங்கள் பரப்புரை குறிக்கோள்களாக வடிவமைக்கப்படலாம் (3.4ஜ பார்க்கவும்).*

## 3.3 பரப்புரைக்கான சிறந்த ஆதாரத்தை உருவாக்கக் கூடியது எது

பரப்புரை என்பது நீங்கள் அடையாளப்படுத்தும் பிரச்சினையின் காரணங்கள் மற்றும் உங்களால் உத்தேசிக்கப்பட்ட தீர்வு எட்டப்படுவதற்கான சாத்தியங்கள் என்பவற்றின் ஆதாரத்திலேயே தங்கியுள்ளது.

சிறந்த ஆய்வுக்கான. சந்தர்ப்பமும் சட்ட உரிமை நிலையை வழங்குவதற்கு முக்கியமானதாகும். எனவே, கொள்கை வகுப்பவர்கள் நீங்கள் கூற விரும்பும் விடயத்தை தீவிரமானதாக எடுத்துக் கொள்வர். ஆனாலும், ஆதாரம் என்பது எப்போதும் போதிய ஒன்றாக கருதப்படுவதில்லை. அது எப்போதும் அரசியல் பகுப்பாய்வுகள் மற்றும் உறவுநிலைகளில் பூரணப்படுத்தப்படல் வேண்டும். நீங்கள் ஆதாரத்தின் ஊடாக புரியக் கூடியது அதனைத் தான்.

**ஆதாரங்களை சேகரித்தல்: முன்னெடுக்கப்படும் நடவடிக்கை:**

பரப்புரை சக்கரத்தில் நாங்கள் பார்த்ததைப் போல், தரவு மற்றும் ஆதாரங்களை சேகரித்தல் என்பது பரப்புரை நடைமுறையின் பல நிலைகளில் உதவி புரிகின்றது. பிரச்சினையை அடையாளங் காண்பதற்காக மாத்திரமல்ல. விடயங்களை தெரிவு செய்து குறிக்கோள்களை வடிவமைப்பதற்காகவும் நடைமுறையின் முழுமையிலும் நாங்கள் தொடர்ச்சியாக தரவு மற்றும் ஆதாரங்களை சேகரிக்க வேண்டும். அத்துடன், செய்திகளை வனையவும், உதவியை விஸ்தரிக்கவும், செயற்பாட்டை கண்காணித்து, மதிப்பீடு செய்வதற்கும் தரவு மற்றும் ஆதாரம் சேகரிக்கப்படல் வேண்டும். பரப்புரைக்கான ஆதாரத்தின் தலைப்புக்களை நாம் இங்கு அறிமுகப்படுத்துகின்றோம். ஆனால், எங்கள் பரப்புரை சக்கரத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தரவு மற்றும் மற்றும் ஆதாரம் சேகரிக்கப்படுவது தொடரப்படல் வேண்டும்.

**பரப்புரைக்கு உதவுவதற்கு உங்களிடம் போதியளவு ஆதாரம் உள்ளதா?**

பரப்புரைக்கான ஆற்றல் மிகு விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தும் போது, கேளுங்கள்:

- இந்த விடயம் உங்கள் அனுபவம் அல்லது பங்காளரின் அனுபவத்தின் மூலம் பெறப்பட்டதா? எங்களிடம் போதியளவு அனுபவம்/தகவல் உள்ளதா?
- ஆதாரத்தின் தன்மை என்ன? அது நம்பமானதா?
- மேலதிக ஆதாரங்களை வழங்குவதற்கு, மேலதிக ஆய்வு தேவையா?

**சேவ் த சில்ரன் அல்லது எங்கள் பங்காளர்கள் நம்பிக்கையான ஆய்வுகளை முன்னெடுத்துள்ளனரா:**

- பிரச்சினைகள், விடயத்தின் தன்மை மற்றும் அளவு அடையாளங் காணப்படல் மற்றும் பிரச்சினை தொடர்பான வேறுபட்ட எண்ணக்கருக்கள், விசேடமாக சிறுவர்களின் எண்ணக்கருக்கள்?
- பிரதான கொள்கை வகுப்பாளர்களில் செல்வாக்கு செலுத்தக் கூடிய வகையில் விடயத்தை தொடர்புபடுத்தல்?
- உங்கள் இடையீட்டின் பயனுறுதித் தன்மையை வெளிப்படுத்தக் கூடிய அத்திவாரத்தை கட்டமைத்தல்?

**உங்களுடைய நிகழ்ச்சி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா:**

- அடையாளங் காணப்பட்ட பிரச்சினைகளுக்கான ஆற்றல் மிகு தீர்வுகளை அடையாளங் காணல், அதன் பெறுமதி மற்றும் பயனுதித் தன்மையை வெளிப்படுத்தல்?
- பிரதான தீர்மானம் எடுப்பவர்களுக்கு பொருந்தக் கூடிய நிகழ்ச்சி அனுபவங்களில் கற்ற பாடங்களை பகுப்பாய்வு செய்தல்?

ஆய்வு மற்றும் செல்வாக்கு கொள்கைக்கான[6] சரிபார்த்தல் பட்டியல்.

- கடுமையானதாக, உயர் தரமுடையதாக இருத்தல் வேண்டும் (பொருத்தமாயின் சமநிலையிலுள்ள குழு.்.நிபுணத்துவ நிறுவனம் ஆகியவற்றுடன் சரிபார்க்கவும்)
- கண்டுபிடித்தல்களும், முடிவுகளும் பிரதான பங்குதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும் (எடுத்துக்காட்டாக, வேறுபட்ட பங்காளர்களுடன் எங்கு முன்னெடுக்கப்பட்டன).
- தற்போதைய எதிர்வுகூறலை சவாலுக்கு உட்படுத்தி, புதிய எண்ணக்கருவை வழங்குவதாக இருத்தல் வேண்டும்.
- நடவடிக்கைக்கான ஊகக்குறிப்பு தெளிவாக இருத்தல் வேண்டும்.
- அதன் பார்வையாளர்களுக்கு பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.
- நேரத்திற்கானதாக இருத்தல் வேண்டும்.
- தெளிவாக விளக்கப்பட்டதாக, நன்கு பிரசாரப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- அவர்களுக்கான குரல் கொடுக்கும் ஆய்வுகள் தொடர்பான விடயங்களும் உள்ளடக்கப்படலாம்.
- ஆய்வு செயன்முறையானது கொள்கை வகுப்பாளர்களுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.
- ஆய்வும், ஆதாரமும் சுயமதாக ஏற்கச் செய்யப்படதாக இருப்பது தொடர்பிலும் நினைவு கொள்ளுங்கள்.



6 From S Laws, *Research for Development: A practical guide*, Save the Children/Sage, 2003.

## சீனாவில் சிறுபான்மையினரின் அடிப்படைக் கல்விக்கான பரப்புரைக்காக ஆதாரத்தை பயன்படுத்தல்

சிறுபான்மை இனக் குழுக்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு தரம் மற்றும் பிரவேசம் ஆகிய இரண்டு வழிகளின் அடிப்படையிலும் அரச கல்வியின் விநியோகத்தை மேம்படுத்துவதே யுனானில் எங்கள் கல்விப் பணியின் நோக்கமாக இருக்கின்றது. யுனான் சிறுபான்மை அடிப்படை கல்வி செயற்றிட்டத்தினை சேவ் த சில்ரன் ஆரம்பித்து. பிராந்திய கல்வித் திணைக்களத்துடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்டு வந்தது. ஒன்றரை வருடங்களின் பின்னர் அவர்கள் செயற்றிட்ட பிரேரணை ஒன்றை தயாரித்தனர். செயற்றிட்டத்திற்கு உதவும் வகையில் நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்தினர். அதனைத் தொடர்ந்து செயற்றிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆரம்பித்தனர்.

செயற்றிட்ட பிரேரணையை தயாரித்தல், பரீட்சார்த்த செயற்றிட்டங்களை முன்னெடுத்தல், வெற்றிகளை மதிப்பீடு செய்தல் மற்றும் வேறு மாவட்டங்களுக்கு அதனை பரவச் செய்தல் போன்ற செயற்றிட்டத்தின் அனைத்து நிலைகளிலும், உள்ளூர் கல்வி அதிகாரிகளுடன் நாங்கள் நெருக்கமாக செயற்பட்டு வந்தோம். செயற்றிட்டத்தின் உள்ளூர் அரசாங்க பங்காளிகளின் உரிமம் மற்றும் அவர்களின் பணியின் உயர்ந்த தரம் என்பன செயற்றிட்டத்தை விஸ்தரிப்பதற்கான தீர்மானத்திற்கு வழிவகுத்தன. செயற்றிட்டத்தின் ஊடாக வடிவமைக்கப்பட்ட புதிய கல்வி அணுகுமுறைகளின் பயன்களை கல்வி அதிகாரிகள் கண்டறிந்தனர். இதன் காரணமாக அவர்கள் தமது அப்பியாசத்தை மாற்றுவதன் அவசியத்தை உணர்ந்தனர். அவர்கள் தமது அனுபவத்தை கல்வி அமைச்சின் ஏனையோருடனும் பகிர்ந்து கொண்டனர். தற்போது இந்த அணுகுமுறை வேறு ஏழு மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்றிட்ட நடவடிக்கைகளின் முன்னோடித் திட்டம் மூன்று பிராந்தியங்களில் ஆரம்பிக்கப்பட்டது. இவை உள்ளூர் அரசாங்க பங்காளர்களால் சேவ் த சில்ரன் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவர்கள் அரசாங்க பங்காளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டனர்.வெற்றியின் ஆதாரத்தின் அடிப்படையில் அவர்கள் தமது செயற்றிட்டத்தை யுனானில் முதலில் ஏனைய நகரங்களுக்கும், அதன் பின்னர் மேலும் 50 பிராந்தியங்களுக்கும் தொடர்ந்து விஸ்தரித்தனர். சீனாவின் மத்திய கல்வி அமைச்சின், சிறுபான்மை இனத்தின் கல்வி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், இந்த செயற்றிட்டம் தொடர்பில் உள்ளக அலைவரிசைகள் ஊடாக அறிந்து, அதன் வெற்றி மற்றும் கல்வி பெறுபேறுகளின் வளர்ச்சியனால் கவரப்பட்டார். இந்த பாடங்களை மேலும் பரவலாக அமுல்படுத்துவதற்கு அவர் விரும்பியமையினால், இந்த செயற்றிட்டத்தை பெருமளவிலான சிறுபான்மை மக்கள் வசிக்கும் மேலும் ஏழு மாநிலங்களுக்கு பரவலாக்குவதற்கு சேவ் த சில்ரன் தற்போது அமைச்சுடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றது.

### நாங்கள் அடைந்தது

அளவான மொத்த வரவுசெலவுத்திட்டத்துடன் செயற்றிட்டம் குறிப்பிடத்தக்க மாற்றத்தை எட்டியுள்ளது. யுனானில் சிறுபான்மை மக்கள் வசிக்கும் பகுதிகளில் சிறுபான்மை இன சிறுவர்களுக்கு பாடசாலை கற்பித்தல் வழங்கப்பட்டு வருகின்றது. அதற்கான பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த பாடசாலைகள் சமூகங்கள் தொடர்புபட்டவையாக இருக்கின்றன. அத்துடன், இவை சிறந்த பெறுபேறுகளை வழங்குகின்றன. தற்போது இந்த செயற்றிட்ட வெற்றியின் காரணமாக சீனாவின் ஏனைய பகுதிகளுக்கும் இந்த செயற்றிட்டம் பரவலாக்கப்பட்டுள்ளது. செயற்றிட்டத்தின் அனைத்து வெற்றிகளும் நடவடிக்கையின் தரத்தை உயர்த்தியுள்ளதுடன், செயற்றிட்டத்தில் உள்ளூர் அரசாங்கத்தின் உரிமத்தையும் மேம்படுத்தியுள்ளது.

### நாங்கள் கற்றது

பரப்புரை என்பது முழுமையாக செயற்றிட்ட நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைந்ததாக இருத்தல் வேண்டும். சீனாவில் நாங்கள் மூன்று விடயங்களை புரிய வேண்டிய தேவையுள்ளது: எங்கள் விழுமியங்களை பிரதிபலிக்கக் கூடிய உயர் தரமான செய்றிட்டத்தை வடிவமைப்பதற்கு அரசாங்க பங்காளர்களுடன் இணைந்து செயற்படல்: உயர் தரமான செயற்றிட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பங்காளர்களுக்கு தேவையான தொழில்நுணுக்க உதவிகளை வழங்குதல்: செயற்றிட்ட நிதியானது தவறாக பயன்படுத்தப்படாமையை உறுதி செய்வது.

அரசாங்க அதிகாரிகள் தமது வெற்றிகரமான அனுபவங்களை தமது நாளாந்த பணிகளில் பிரயோகிக்கச் செய்வதற்கு வெற்றிக்கான ஆதாரங்கள் சிறந்த வழியாகும். அரசாங்கத்தின் கொள்கைகளிலும், பயிற்சிகளிலும் வெற்றிகரமான அனுபவங்களை எவ்வாறு இணைத்துக் கொள்வது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். எனவே, பிரதான மூலோபாயங்கள் முதலில் தமது செயற்றிட்ட நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்க பங்காளர்களுக்கானதாக இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, உயர் தரமான நடவடிக்கைகளை கொண்டவர்களுக்காக இருத்தல் வேண்டும்.

**நேபாளத்தில் வெற்றிகரமான இடையீட்டை மேலும் பெரிதாக்கல்.**

1997ஆம் ஆண்டு நேபாளின் மூன்று மாவட்டங்களில் ஆரம்ப சிறு பராய அபிவிருத்திக்கான சமூக அடிப்படையிலான அணுகுமுறைகளை சேவ் த சில்ரன் பரீட்சித்துப் பார்த்தது. அரசாங்கம் இதனை தேசிய கொள்கையாக உள்வாங்கும்பட்சத்தில் எங்கள் வெற்றிகரமான அனுபவம் தேசிய ரீதியாக பரவும் என்பதனை நாங்கள் கண்டறிந்தோம். 2000ஆம் ஆண்டில் ஆரம்பித்து கல்வி அமைச்சின் பங்காளித்துவத்துடன் ஆரம்ப சிறு பராய அபிவிருத்தி தொடர்பில் தேசிய மற்றும் பிராந்திய பயிற்சி செயலமர்வுகள் பலவற்றை நாம் ஒழுங்கு செய்தோம். இதன் மூலம் பிரதான பங்குதாரர்கள் சவால்கள், கொள்கை இடைவெளிகள் மற்றும் நல்லாட்சி என்பன தொடர்பில் ஒன்றிணைந்து கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் முடிவில் அவர்கள் அமைச்சுக்கு பரிந்துரைகளை முன்வைத்தனர்.

நாங்கள் அடைந்தது
இந்த பரிந்துரைகளின் அடிப்படையில் 2001ஆம் ஆண்டு கல்வி அமைச்சு தேசிய கொள்கை, தேசிய ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி பேரவை, மற்றும் ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி மூலோபாயம் என்பவற்றை தயாரிப்பதற்கான நடவடிக்கை திட்டம் ஒன்றை உருவாக்கியது. தேசிய பேரவையின் ஒரு கட்டமாக தேசிய ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி கொள்கை (தற்போது இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது), தேசிய நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தல் வழிகாட்டிகள் (2005ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது) மற்றும் உயர் இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கான ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி சுற்றுநிரூபம் ஆகியவற்றை உருவாக்குவதற்கு சேவ் த சில்ரன் உதவி புரிந்தது. ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி கொள்கையானது அனைவருக்கும் கல்வி தேசிய கொள்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன், அனைவருக்கும் கல்வி தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு சேவ் த சில்ரன் நிதியுதவி வழங்கியுள்ளது.

**ஆதாரம் மாத்திரமே தனித்து போதியதாக இருக்காது: பங்களாதேஷில் ஊட்டச்சத்து கொள்கையை செல்வாக்காக்கல்.**

2003ஆம் ஆண்டு சேவ் த சில்ரன் கற்கையொன்றை மேற்கொண்டது. *Thin on the Ground* என்ற பெயரில் நடைபெற்ற இந்த கற்கையில் பங்களாதேஷின் தேசிய ஊட்டச்சத்து நிகழ்ச்சியில் வழங்கப்படும் உபப்பொருட்களின் பயனுறுதித் தன்மை குறித்து ஆராயப்பட்டது. ஏனைய ஆதாரங்களுடன், இந்த அறிக்கை கொள்கை வகுப்பாளர்களுக்கான தனித்து ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்குவது மாத்திரம் பயன்படாது என்ற செய்தியை தயாரிப்பதற்கு எம்மால் பயன்படுத்தப்பட்டது. பங்களாதேஷின் தேசிய ஊட்டச்சத்து நிகழ்ச்சி வடிவமைக்கப்படுவதற்கு ஆதாரமாக இருந்த பொதுப்படையான பகுப்பாய்விற்கு எதிரானதாக எமது ஆதாரம் அமைந்திருந்தது. பெரும்பாலான சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நிதியுதவியாளர்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊட்டச்சத்து கொள்கையையும் அது சவாலுக்கு உட்படுத்தியது. இது மிகவும் சிக்கலுக்குரிய வழிமுறையாக இருந்ததுடன், எங்கள் ஆதாரமும் கூர்மையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

நாங்கள் அடைந்தது
எங்கள் பரப்புரை வெற்றி பெற்றதுடன், ஊட்டச்சத்துள்ள பொருட்களின் விநியோகம் தற்போது கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. திட்டமிடுபவர்களும், கொள்கை வகுப்பவர்களும் தற்போது ஊட்டச்சத்து நிகழ்ச்சியை மீள்வடிவமைப்பது தொடர்பில் ஆலோசித்து வருகின்றனர். தற்போது தீர்மானம் எடுப்பவர்களின் போஷாக்கின்மை தொடர்பிலான உரைகள் மற்றும் கலந்துரையாடல்களில் உணவு பாதுகாப்பு மற்றும் அடிப்படை சேவைகள் ஆகியன முக்கியமான இடம் பிடித்துள்ளன.

நாங்கள் கற்றது
ஊட்டச்சத்து நிகழ்ச்சி தொடர்பிலான பரப்புரை குறித்த எங்கள் அனுபவம், மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஆதாரம் மாத்திரம் போதியது அல்ல என்ற விடயத்தை எமக்கு தெளிவுபடுத்தியது. பிரதான தீர்மானம் எடுப்பவர்கள் மற்றும் கூட்டமைப்பினருடனான உறவு மிகவும் முக்கியமானது, ஏனெனில், புதிதாக எவரும் பொறுப்பிற்கு வந்தால், நீங்கள் மீண்டும் ஆரம்பிக்க நேரும். பரப்புரையில் ஈடுபடுபவருக்கு விடயம் தொடர்பில் சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். அப்போதுதான், தெளிவாக விடயத்தை வாதிட முடியும். விசேடமாக, நீங்கள் சிக்கல் மிகுந்த செய்தியொன்றை சொல்வதற்கு முயற்சிக்கும் போது செய்திகளை மாத்திரம் வாசிப்பது போதியதாக இருக்காது. ஒருவரால் நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறையை நீங்கள் சவாலுக்கு உட்படுத்துவதானால், சிறந்த ஆதாரங்களின் அடிப்படையில் சாதகமான மாற்றுவழியை நீங்கள் முன்வைக்க வேண்டும். நீங்கள் நன்கு தயாராகியிருக்க வேண்டும். உங்களுடைய குரலை பொதுமக்களுக்கு கொண்டு செல்வதற்கு முன்னர், ஏற்படப் போகும் எதிர்மறையான வினாக்களுக்கு பதிலளிக்கக் கூடியதாக முன்பயிற்சி செய்து கொள்ள வேண்டும். இந்த முயற்சியை இடைவிடாது முன்னெடுப்பதற்கான இயலுமை உங்களிடம் இருத்தல் வேண்டும். இந்த நடைமுறையை ஆவணப்படுத்தி தீர்மானம் எடுப்பவர்களின் மத்தியில் இந்த பாடங்களை பகிர்வது சிறந்தது.

**தமது வாழ்க்கையில் உள்ள பிரச்சினைகளுக்கு ஆதாரங்களை சமர்ப்பிக்கும் எத்தியோப்பிய சிறுவர்கள்**

சேவ் த சில்ரன் உதவியுடன் முன்னெடுக்கப்படும் இளம் வாழ்க்கை செயற்றிட்டத்திலுள்ள (Young Lives project) வறிய சிறுவர்கள் குழுவுக்கு புகைப்படக் கருவிகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு புகைப்படத்திற்கும் வர்ணனை வழங்கி, தமது வாழ்க்கையின் முக்கியமான கூறுகளை அவர்கள் படம் பிடித்தனர். அந்த படங்கள் எடுக்கப்பட்டதற்கான காரணங்களை அவர்கள் விளக்கினர். அதனை அவர்கள் எவ்வாறு பார்க்கின்றனர் என்பதனை அவர்கள் கூறினர். உதாரணமாக, தமது வீடுகள், தமது பாடசாலைகள், தமது வயல்வெளிகள், தாம் பணிபுரியும் இடங்கள், தாம் விளையாடும் இடங்களை அவர்கள் படம் பிடித்திருந்தனர். வறுமையும், கல்வி அறிவின்மையும், சுகாதார பராமரிப்பு இன்மையும் எவ்வாறு தமது வாழ்க்கையை பாதித்துள்ளன என அவர்கள் விளக்கினர். இந்த புகைப்படங்களில் சில அடிஸ் அபாபாவில் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த புகைப்படக் கண்காட்சிக்கு அரசியல்வாதிகள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்கள் உள்ளடங்கலாக பொதுமக்கள் அழைக்கப்பட்டிருந்தனர். சிறுவர்கள் பிடித்திருந்த படங்களின் தரத்தினாலும், அவர்களுடைய வாழ்க்கை குறித்த ஆய்வினாலும் பார்வையாளர்கள் ஆச்சரியமடைந்தனர்.

**நாங்கள் கற்றது**

இந்த விடயத்தில், புகைப்படங்கள் விசேடமாக பரப்புரைக்கு பயன்படுத்தப்படவில்லை. ஆனால் பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் விழிப்புணர்ச்சியை அது அதிகரித்தது. தெளிவான பரப்புரை இலக்குடன் அது பரப்புரை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டால் இந்த அணுகுமுறையும் மிகவும் பயனுறுதியுள்ளதாகும்.



Photograph taken by child participant, Young Lives, Ethiopia 2005.

செயன்முறைப் படிவம்

3.3 ஆதார அடிப்படை

உங்களுடைய ஒவ்வொரு குறிக்கோள்களுக்குமான உங்கள் இலக்குகளில் செல்வாக்கைச் செலுத்தும், நீங்கள் கட்டியெழுப்புவதற்கு அவசியமானது என நினைக்கும் திடமான வழக்கின் ஆதாரங்களை விளக்குங்கள்.

| குறிக்கோள் | | | |
|---|---|---|---|
| யாரிடமிருந்து ஆதாரம் தேவை | கிடைக்கக் கூடிய ஆதாரம் | அடையாளங் காணப்பட வேண்டிய இடைவெளிகள் | இதனை முன்னெடுத்துச் செல்வதற்கு பொறுப்பானவர் யார் |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## 3.4 பரப்புரை இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிர்ணயித்தல்

நான் மாற்ற வேண்டியது என்ன?
பரப்புரை திட்டமிடலில் நீங்கள் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும்.

நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை **பரப்புரை இலக்குகள்** விளக்கும். அது உங்களுடைய பரப்புரை முயற்சி மற்றும் உங்கள் மாற்றத்திற்கான நோக்கம் ஆகியவற்றின் நீண்ட கால விளைவாகும். பரப்புரை இலக்குகள் பொதுவானவையாக இருக்கும்.

**உதாரணமாக:** எத்தியோப்பியாவில் உள்ள அனைத்து சிறுவர்களும் தரமான ஆரம்ப கல்விக்கான தமது உரிமையை உணர்ந்து கொண்டனர்.

**பரப்புரை குறிக்கோள்** என்பது உங்களுடைய இலக்கை அடைவதற்கு உதவக் கூடிய விசேடமான மாற்றமாகும். அது விசேடமானதாகவும், அளவிடக் கூடியதாகவும், நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டியது என்ன, எங்கே, எப்போது மற்றும் யாருடன் என்பதனை விளக்கக் கூடியதாகவும் இருக்கும். பொதுவாக பரப்புரை குறிக்கோளுக்கான நேர அமைப்பு 1-3வருடங்களாகும். ஸ்தாபனம் ஒன்றினால் முன்னெடுக்கப்படக் கூடிய விசேடமான நடவடிக்கைகள் தொடர்பில் குறிக்கோள் கவனஞ் செலுத்த வேண்டும்.

பரப்புரை மூலோபாயங்கள் பொதுவாக இலக்கு மற்றும் முழுமையான நோக்கத்தை அடைவதற்கு உதவக் கூடிய பல வேறுபட்ட குறிக்கோள்களை கொண்டிருக்கும்.

**உதாரணமாக:** ஆரம்ப கல்வியில் இணைக்கப்பட்டுள்ள சிறுவர் ஒருவருக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 12 எத்தியோப்பியன் பிர்ரிலிருந்து, தரமான கல்வியை வழங்குவதற்கு போதியளவான 20 எத்தியோப்பியன் பிர்ராக 2009ஆம் ஆண்டு அதிகரிக்கப்பட்டது.

இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நீங்கள் நிர்ணயிக்கும் போது, பின்வரும் கேள்விகளை சிந்திக்கவும்:

- நாங்கள் அடைய முயற்சிப்பது என்ன?
- எங்களை நிறுத்துவது எது?
- அது தொடர்பில் நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்?

**SMART குறிக்கோள்கள்**
உங்களுடைய குறிக்கோள்கள் SMART ஆனவையாக இருத்தல் வேண்டும். விசேடமான (S-Specific), அளவிடக் கூடிய (M- Measurable), அடையக் கூடிய (A-Achievable_), யதார்த்தமான (R-Realistic), மற்றும் வளமளிக்கப்பட்ட (R-Resourced) மற்றும் கால வரம்புள்ளதாக (T-Time-bound) இருக்க வேண்டும். அவை நடவடிக்கை சார்ந்ததாக இல்லாது மாற்றஞ் சார்ந்ததாக இருத்தல் வேண்டும். நீங்கள் செய்வதற்கு முயற்சிப்பது அல்லாது நீங்கள் கொண்டு வருவதற்கு முயற்சிக்கும் மாற்றத்தை அவை விளக்க வேண்டும். மாற்றமானது அளவிடப்படல் வேண்டும். அத்துடன், யார் இதனைச் செய்வார்கள், எப்போது செய்யப்படல் வேண்டும் என்பன குறிக்கோளில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**உதாரணமாக:** இந்த இரண்டு குறிக்கோள்களுக்கும் இடையிலான வேறுபாட்டை அவதானிக்கவும்.

**உண்மையான குறிக்கோள்:**
சிறுவர் இறப்பு வீதத்தை குறைப்பதற்கு பின்தங்கிய பகுதிகளில் சுகாதார சேவைகளை மேம்படுத்தல்.

**SMART குறிக்கோள்**
2011 ஆம் ஆண்டளவில் நாட்டின் ஐந்து பகுதிகளில் உள்ள 50மூ ஆன சிறுவர்களுக்கு உயர்தரமான அத்தியாவசிய சுகாதார சேவைகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும் (அத்தியாவசிய சுகாதார சேவைகளின் ஆக்கக் கூறுகள் விளக்கப்பட்டுள்ளன, மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மட்டக்குறி தொடர்ச்சியாக பேணப்படுகின்றது).

**SMART** ஆக இருக்கும் அதே சந்தர்ப்பத்தில், மாற்றஞ் சார்ந்ததாக, சிறுவர் மீது கவனஞ் செலுத்தியதாக இருப்பதற்கான உதவி குறிப்புக்கள்

விசேடமானவை

- சலசலப்பு அல்லது பதட்டம் தொடர்பில் அவதானமாக இருக்கவும். "கூருணர்வாக்கல்" மற்றும் "வலுவாக்கல்" போன்ற சொற்கள் தெளிவில்லாதவை. நீங்கள் கூற விரும்பும் விடயத்தை எளிமையானதாக, தெளிவான பதங்களின் மூலம் வெளிப்படுத்துங்கள்.
- வேறுபட்ட வழிகளில் விளக்கப்படும் சொற்கள் தொடர்பில் அவதானமாக இருக்கவும். உதாரணமாக: இனப்பெருக்கச் சுகாதாரம், பொறுப்புடைமை, வெளிப்படைத் தன்மை, இன்னபிற. நீங்கள் அவற்றை பயன்படுத்துவதாயின் நீங்கள் கூற விரும்பும் விடயத்தை தெளிவுபடுத்துங்கள்.

அளவிடக் கூடியவை

- யார், என்ன, எங்கே, எப்போது மற்றும் எவ்வாறு என்பது தொடர்பில் உறுதியாக இருக்கவும். உதாரணமாக: குறிக்கோளில் "சிறுவர்களுக்கு தமது உரிமைகளை தொடர்பில் கற்பியுங்கள்" என குறிக்கோளில் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், இயலுமான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவுகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை, இதன் பெறுபேறாக சிறுவர்களால் இயலக் கூடியது என்ன மற்றும் உங்களுடைய முயற்சியின் புவியியல்ரீதியான முயற்சி என்பன தொடர்பில் கணிப்பீடு செய்தல்.
- எண்ணிக்கை அடிப்படையிலான அதிகமான பயனாளிகள் இருக்கும் பட்சத்தில், (உதாரணமாக, 50மில்லியன் சிறுவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்). பாடசாலை, மாகாணம் அல்லது அதிகார எல்லை போன்ற உங்களால் முகாமைத்துவம் செய்யக் கூடிய இலக்கத்தை பயன்படுத்துங்கள். இதன் மூலம் பரப்புரை செய்பவர்குள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்கள் தமது நடவடிக்கையை முன்னெடுப்பது இலகுபடுத்தப்படும். இதன் மூலம் செயற்பாடு யதார்த்தப் பூர்வமானதாகும்.
- "வலுப்படுத்தல்" போன்ற, எண்ணம் மற்றும் செயன்முறை என்ற நிலையை குறிப்பிடும் குறிக்கோள்கள் எப்போதும் விடயஞ் சார்ந்ததாக இருப்பதனால், அவற்றை அளவிடுவது கடினமாகும். எவ்வாறாயினும், செயன்முறை குறிக்கோள்கள் விசேடமாக எதிர்பார்க்கப்படும் விளைவாக செயன்முறைஇருக்கும் சந்தர்ப்பங்களில் பரப்புரைக்கு பொருத்தமானதாக இருக்கும். உதாரணமாக: "அடிமட்ட பெண்கள் அனைவரையும் அவர்களது அக்கறைகளை வெளிப்படுத்துவதற்கு சிறு குழுக்களாக திரட்டுதல் மற்றும் அவர்களது பொதுவான முன்னுரிமைகளை விளக்கல்". பல இடங்களில் இது ஒரு பாரிய சாதனையாக இருக்கின்றது. "வலுவாக்கல்" போன்ற பதங்களின் செயன்முறைக்கு "குழு உருவாக்கம்" அல்லது "வலுப்படுத்தல்" போன்றன சிறந்த குறிகாட்டிகளாக இருக்கும். எண்ணத்தின் நிலையை வெளிப்படுத்து சொற்களை பயன்படுத்துவதற்கு முன்னர் நீங்கள் சுயமாக பின்வரும் கேள்விகளை உள்ளுக்குள் பரீட்சித்துப் பாருங்கள். "வலுவாக்கப்பட்ட நபரால் என்ன செய்ய முடியும்?", "எதற்காக கூருணர்வாக்க வேண்டும்?". இதற்கு கிடைக்கம் விடைகளை உங்கள் குறிக்கோளை மேலும் தெளிவாக வடிவமைப்பதற்கு பயன்படுத்துங்கள்.

அடையக் கூடியவை

- யார், என்ன, எங்கே, எப்போது மற்றும் எவ்வாறு என்பது தொடர்பில் நீங்கள் எத்தனை அளவு தெளிவாக இருக்கின்றீர்களோ, உங்கள் குறிக்கோளை அடையும் அளவும் அதிலே தங்கியுள்ளது. வலுவாக்கல் மற்றும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல் போன்ற செயன்முறை இலக்குகள் நீண்ட கால மற்றும் நழுவித் தப்பிச் செல்பவையாக இருக்கும். வலுவாக்கப்பட்ட அல்லது விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்ட நபர்களால் புரியக் கூடியது எவை என்பது தொடர்பிலான மைற்கற்களை சிந்தித்து, அவற்றை உங்கள் குறிக்கோள்களாக மாற்றுங்கள்.

யதார்த்தமான மற்றும் வளமளிக்கப்பட்டவை

- உளப்பாங்குகள் மற்றும் நடத்தையை மாற்றுவது என்பது நீண்ட கால பெரு முயற்சியாகும். நீங்கள் செல்வாக்கு செலுத்துவதற்கு நீங்கள் திட்டமிடும் மக்களின் எண்ணிக்கையை தீர்மானிக்கும் போது யதார்த்தமானவர்களாக இருக்கவும்.

- யதார்த்தப்பூர்வமான குறிக்கோள்கள் அடையக் கூடியதாக இருத்தல் வேண்டும். திட்டமிடப்பட்ட நேர வரைபிற்குட்பட்டதாகவும், உங்களுடைய நிதி மற்றும் ஊழியர்களை பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

கால வரம்புடையவை

- தெளிவான குறிக்கோளில், மாற்றம் அடையப்படக் கூடிய தெளிவான கால வரைபு உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும் (2-3வருடங்களுக்குள், அல்லது குறிக்கோளானது கருத்துரைப்பதாயின் நீண்ட காலமானவை). கால வரைபு யதார்த்தமானதாக இருத்தல் வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

மாற்றஞ் சார்ந்தது

நீங்கள் செய்வதற்கு முயற்சிக்கும் விடயமாக இல்லாது, நீங்கள் அடைவதற்கு எதிர்பார்க்கும் மாற்றம் குறித்ததாக உங்களுடைய குறிக்கோள் சொற்களில் விளக்கப்படல் வேண்டும். எவ்வகையான மாற்றத்தை கொண்டு வருவதற்கு நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதில் கவனஞ் செலுத்தவும்.

உதாரணமாக: “சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கான ஆரம்பக் கல்விக்கான நிதியை அதிகரிப்பதன் ஊடாக சிறுவர்கள் உரிமைகளை அமுல்படுத்தல் தொடர்பிலான தமது விழிப்புணர்ச்சியை தீர்மானம் எடுப்பவர்களான X, Y மற்றும் Z ஆகியோர் தெளிவாக வெளிப்படுத்துவர்” என்பது மாற்றம் சார்ந்ததாகும். அதேவேளை, “சிறுவர்கள் உரிமைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பவர்களில் விழிப்புணர்ச்சியை வளர்த்தல்” என்பது நடவடிக்கை சார்ந்ததாகும்.

சிறுவர்கள் இலக்கு வைக்கப்பட்டவை

உங்களுடைய குறிக்கோள் சிறுவர்களை இலக்காகக் கொண்டவை என்பதனை இயலுமான சந்தர்ப்பங்களில் தெளிவாக குறிப்பிடவும்.

## 3.5 உங்களுடைய பரப்புரை இயலுமையை மதிப்பிடல்

நிகழ்ச்சியின் கருவிப்பொட்டியில் ஒரு கருவியாக மாத்திரம் பரப்புரையை கருத முடியாது. உங்களுடைய பணியில் அதற்கு மேலதிகமான பரிணாமம் உள்ளது. அதில் உள்ளார்ந்த குறிப்புக்கள் உள்ளன, தனிப்பட்ட ரீதியில் மற்றும் நிறுவன ரீதியில் அதற்கு வேறுபட்ட இயலுமைகளை அவசியமாக இருக்கின்றது.

பரப்புரையில் ஈடுபடுதலில் வேறுபட்ட நிலையில் உங்கள் நிறுவனத்திற்கு பல உள்ளார்ந்த குறிப்புக்கள் உள்ளன.

- உங்கள் நிறுவனத்தின் நோக்கம், இலட்சியத்துடன் பரப்புரை ஒன்றிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- அதற்கு உயர் மட்ட முகாமைத்துவ உதவி அவசியம்.
- தனிப்பட்ட சில நபர்களின் பொறுப்பாக இல்லாது, அது உங்கள் நிறுவனத்தில் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும்.
- அறிவு, மனித மற்றும் நிதி வளங்களின் அடிப்படையில் போதிய இயலுமைகள் இருத்தல் வேண்டும்.
- தனிப்பட்ட மற்றும் நிறுவன உறவை கட்டியெழுப்பி, வலையமைப்புக்கள் மற்றும் கூட்டமைப்புக்களுடன் பணி புரிவதற்கான இயலுமை அதற்கு அவசியமாகும்.
- அங்கே சவால்கள் தொடர்பான சந்தர்ப்பங்களும், விழிப்புணர்ச்சி இருக்கும்.

முழுமையான பரப்புரை பணியை முன்னெடுப்பதற்காக உங்கள் நிறுவனத்தின் தனிநபர் மற்றும் நிறுவனத்திற்கு தேவையான இயலுமைகளின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. இந்த பட்டியலை பயன்படுத்தி உங்களுடைய இயலுமையை 1 இலிருந்து 4 வரை புள்ளியிட முடியும் (அதிக கூடிய புள்ளிகள் 4 ஆகும், குறித்த சூழ்நிலையை கருத்திற் கொண்டதாக). அடுத்த பக்கத்தில் உள்ள சிலந்தி வடிவிலான வரைபடத்தை பார்க்கவும். தற்போது பரப்புரைக்கு உங்களிடம் உள்ள இயலுமையின் அளவு மற்றும் நீங்கள் வலுப்படுத்த வேண்டிய விடயம் என்ன என்பதனை இது விபரிக்கும். அதன் பின்னர் இலக்கு வைக்கப்பட்ட நிலைகளை, நிர்ணயிக்கும் கால வரம்பிற்குள் உங்கள் இயலுமையை கட்டியெழுப்புவது தொடர்பில் நீங்கள் திட்டமிட முடியும்.

**தனிநபர் இயலுமைகள்**


- கொள்கை பகுப்பாய்வு மற்றும் ஆய்வினை முன்னெடுக்கக் கூடிய தகைமை.
- மாற்றத்திற்கான நீண்ட கால மூலோபாய நோக்கத்தை வடிவமைக்கும் தகைமை.
- தகவல்களை பரிமாற்றும் மற்றும் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தும் தகைமை.
- வலையமைப்புக்களையும், பங்காளித்துவத்தையும் உருவாக்கும் மற்றும் ஆதரவளிக்கும் தகைமை.
- பரப்புரை கண்காணிப்பதற்கும், மதிப்பீடு செய்வதற்குமான தகைமை.

**நிறுவன இயலுமைகள்**

- நிலையான பரப்புரை பணியை உறுதி செய்யும் தகைமை.
- பரப்புரையை திட்டமிடும் மற்றும் முகாமைத்துவம் செய்யும் தகைமை.
- கொள்கை சார்ந்த சுற்றுச் சூழலை மாற்றுவதற்கு உதவும் தகைமை.
- பரப்புரையின் அனைத்து நிலைகளிலும் பங்குதாரர்களை ஈடுபடுத்தும் தகைமை.
- பொதுமக்கள் உறுப்பினர்களை ஒன்று திரட்டும் தகைமை.

# ஐக்கிய இராச்சியம் சேவ் த சில்ரனில், பரப்புரை இயலுமை மதிப்பீடு

2006ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2007ஆம் ஆண்டு ஜூன் வரையான காலப்பகுதியில், மேலே குறிப்பிட்ட இயலுமை பகுதிகளை பயன்படுத்தி தமது பரப்புரை இயலுமையை ஐக்கிய இராச்சிய சேவ் த சில்ரன் நாட்டுக்கான ஆறு நிகழ்ச்சிகள் மதிப்பீடு செய்தன. அவர்களுடைய புள்ளிகள் 0-4 என்ற அளவின் அடிப்படையில் சிலந்தி வலை போன்ற வரைபடத்தில் உள்வாங்கப்பட்டன. தனிநபர்களின் இயலுமையில் சிறந்த சக்திகள் கண்டறியப்பட்டன. இதிலிருந்து முந்தைய ஊழியர்களுக்கான பயிற்சிகளின் பிரதிபலன்களை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. மறுபுறத்தில், நிறுவனத்திற்கான மூலோபாயங்களை தயாரிக்கும் போது தனிப்பட்ட நபர்களின் தகைமைகள் எப்போதும் கவனத்திற் கொள்ளப்படவில்லை என்பதனை மதிப்பீட்டு முடிவுகள் வெளிப்படுத்தின. இதன் விளைவாக, பரப்புரையை நிலையானதாக வைத்திருத்தல் மற்றும் அதனை நிகழ்ச்சிப் பணியின் அனைத்து கட்டங்களிலும் ஒன்று திரட்டல் என்பன குறைந்தளவிலான பெறுபேற்றையே தந்தன. வெளியகஞ் சார்ந்த இயலுமைகள் என்ற அடிப்படையில் பார்க்கும் போது, சில நாடுகளின் நிகழ்ச்சிகள் வலைமைப்பு மற்றும் தொடர்பாடலுக்கு உயர்ந்த தரமானதாக நிலைப்படுத்தப்பட்டிருந்தன. அதேவேளை, மிகக் குறைந்த தரநிலையில், பொதுமக்களை ஒன்று திரட்டலும், பங்குதாரர்களை ஈடுபடச் செய்தலும் காணப்பட்டன. பரப்புரையை நிலையானதாக வைத்திருத்தல் மற்றும் மக்களை ஒன்று திரட்டல் என்பதன் அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ள நாட்டு நிகழ்ச்சிகளுக்கான சிலந்தி வலையைப் போன்ற வரைபடம் பலவீனமான தன்மையை வெளிப்படுத்துகின்றது. அதேவேளை, அதன் இயலுமை பங்குதாரர்கள் மற்றும் தொடர்பாடல் ஈடுபடும் பகுதிகளில் வலியமையானதாக காணப்படுகின்றது. பலவீனமான பகுதிகளை எவ்வாறு வலிமையானதாக்குவது குறித்து பரப்புரை இயலுமையை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பில் இந்த மதிப்பீடு நிகழ்ச்சியில் பயன்படுத்தப்பட்டுள்ளது.



# சிறுவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகளை மேம்படுத்துவதற்கான பரப்புரை தலைமைத்துவம்

*டேவிட் கொஹெனிடமிருந்து சில சிந்தனைகள், பல வருட அனுபவங்களின் அடிப்படையில்:*

பரப்புரை தலைமைத்துவம் என்பது தலைமைத்துவம் சார்ந்தது. அது தலைவர்கள் சார்ந்தது அல்ல. தலைமைத்துவத்தின் செயன்முறையானது பயனுள்ள மற்றும் ஸ்திரமான பரப்புரையை கட்டியெழுப்புவதற்கானது என்பதை புரிந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

நடைமுறை நிலையை சவாலுக்கு உட்படுத்தல், மாற்றத்தை ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்ற அல்லது சிறுவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தயங்குகின்ற நபர்களை சவாலுக்கு உட்படுத்தல் என்பதனை மத்தியப்படுத்தியதாகவே பரப்புரை தலைமைத்துவம் காணப்படுகின்றது.

பரப்புரை தலைமைத்துவம் என்பது செயன்முறையாகும். தமது திறமைகளை வெளிக்கொணரும் அடிப்படையில் மற்றையவர்களுடன் ஒருங்கிணைதல் மற்றும் ஒத்துழைத்தல் என்பவற்றின் ஊடாக தலைமைத்துவத்தை மக்கள் அப்பியாசம் செய்கின்றார்கள். எந்தவொரு நபராலும் எல்லாவற்றையும் செய்து விட முடியாது. அல்லது பெரும்பாலான நடவடிக்கைகளை உணர்வுபூர்வமாகவும், நிபுணத்துவத்துடனும் செயற்படுத்த முடியாது. ஆனால், அதன் பொருட்டு மாற்றத்தை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கும் மக்கள் மற்றும் ஒன்று அல்லது இரண்டு முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் கௌரவிக்கப்பட வேண்டியனவாகும்.

உயர்ந்த அளவிலான பங்குபற்றலின் ஊடாக மக்கள் பரப்புரைக்கான தலைமைத்துவத்தை முன்னெடுக்கின்றனர். அவை சிறுவர்கள் மத்தியப்படுத்தியதாகவும், மக்களை மத்தியப்படுத்தியதாகவும் அமைந்துள்ளன. பகிரல் மற்றும் ஒத்துழைத்தல் என்பன உயர்ந்த அளவிலான வெளிப்படைத்தன்மைக்கு எளிமையானவை என்பதனை அவர்கள் மதிக்கின்றனர். தாம் எல்லா சந்தர்ப்பங்களிலும் பொது மக்களாக இல்லாத போதிலும், பரப்புரையானது தம்மை பொது மக்கள் என்ற பாத்திரமாக கருதுவதாக அவர்கள் உணர்கின்றார்கள்.

அவர்கள் ஒன்று சேர்கின்றார்கள் மற்றும் உதவுகின்றார்கள்: அவர்கள் பல்வேறு வகைப்பட்ட தனிநபர்கள் மற்றும் குழுக்களை அணுகுகின்றார்கள்: வேற்றுமைகளுக்கு அவர்கள் பாலம் அமைக்கின்றார்கள்.

அவர்கள் சிந்தனைகளை உருவாக்குகின்றனர். அதனிலும் பார்க்க அவர்கள் மற்றவர்கள் கூறுவதனை செவிமடுக்கின்றனர். அவர்கள் ஒன்று சேரும் நடவடிக்கையில் பின்சென்று, மற்ற நபர்கள் முன்செல்ல வழிவிடுகின்றனர். அவர்கள் மற்றையவர்களுக்கு நேர்மையானவர்களாக, நம்பிக்கையானவர்களாக இருக்கின்றனர்.

அவர்கள் நம்பிக்கையை கட்டியெழுப்பும், நன்றாக தொடர்பு கொள்ளக் கூடிய மக்களை கண்டறியும் பிரச்சினைகளைத் தீர்ப்பவர்கள். அவர்கள் ஆதர்சனமான, தூர நோக்குடைய, வரலாற்று நினைவுகளை கொண்டிருக்கக் கூடிய, தாம் பணியாற்றும் கலாசாரத்தினை (கவிதை, பாடல், நடனம், ஓவியம், கதைகள்) உணர்ந்து கொள்ளக் கூடியவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

ஏனையோருக்கு வேறுபட்ட சுற்றுச்சூழல்கள் தொடர்பில் விளக்கப்படுத்துவதன் மூலம் செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு தமது உதவியை அவர்கள் வழங்குகின்றனர். அதன் மூலம் ஏனையோருக்கு அவர்கள் மரியாதை அளிக்கின்றனர். இந்த வேறுபட்ட உலகங்களை அவர்கள் இணைப்பதுடன், தமது சொந்தமான உலகம் ஒன்றிணைவதற்கு அவர்கள் உதவுகின்றனர்.

அவர்கள் மிகவும் ஆழமான நம்பிக்கைகளுடன் வருகின்றனர். ஆனால், முயற்சிகளை மேம்படுத்துவதன் மூலம் விளைவுகளை பெறுவதனையே இலக்காகக் கொண்டுள்ளனர். மற்றையவர்களுக்கு பொறுப்புக்களை சுமத்துபவர்களாக இல்லாது கட்டளை மற்றும் கட்டுப்பாட்டில் அவர்களே எதிரானவர்களாக இருக்கின்றனர். அவர்களது உதாரணத்துக்கு அமைய ஏனையோரை தலைமைத்துவத்திற்கு வரச் செய்து. தாம் எதிர்பார்த்ததிலும் நிறைய பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

எந்தவொரு நபருக்கும் இந்த அத்தியாவசியமான தகைமைகள் அனைத்தும் இருக்காது. மக்களிடம் இந்த தகைமைகளில் பெரும்பான்மையானவை இருக்காது. அதனால் தான் தலைமைத்துவ நடைமுறையில் ஒவ்வொருவரினதும் இணக்கத்துடன் குழுக்களை கட்டியெழுப்புவது முதன்மை பெறுகின்றது. அது ஒருங்கிணைந்த உறவுமுறைக்கு மதிப்பளிக்கின்றது.

இதுவே பரப்புரை தலைமைத்துவம் என்பதாகும்.

செயன்முறைப் படிவம்

## 3.4 உங்கள் பரப்புரை இயலுமையை மதிப்பிடல்

| இயலுமை | கருத்து | நிலை (1-4) |
|---|---|---|
| 1. கொள்கை மதிப்பீடு மற்றும் ஆய்வினை முன்னெடுக்கவும். | | |
| 2. மாற்றத்திற்கான நீண்ட கால மூலோபாய நோக்கை வடிவமைத்தல். | | |
| 3. செய்திகளை பரிமாறிக் கொண்டு, கொள்கைகளில் ஆதிக்கம் செலுத்துங்கள். | | |
| 4. வலையமைப்புக்கள் மற்றும் பங்காளித்துவத்தை உருவாக்கி, உதவி வழங்குங்கள். | | |
| 5.முன்னெடுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் பரப்புரை | | |
| 6. ஸ்திரமான பரப்புரைப் பணியை உறுதி செய்யுங்கள் (மனித வளம்) | | |
| 7. பரப்புரையை திட்டமிட்டு முகாமைத்துவம் செய்தல் | | |
| 8. கொள்கை சுற்றாடலை மாற்றுவதற்கு பிரதிபலித்தல். | | |
| 9. பரப்புரையின் அனைத்து நிலைகளிலும் பங்குதாரர்களை ஈடுபடுத்தல் | | |
| 10. பொதுமக்களை ஒன்று திரட்டல் | | |

## 3.5 பரப்புரை சவால்களை மதிப்பிடல்

நீங்கள் மக்களுடன் இணைந்து செயற்படும் போது அவர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைளில் செல்வாக்கு செலுத்துவதற்கு பரப்புரையை பயன்படுத்துவதன் மூலம் சவால்கள் இன்றி முன்னெடுக்கலாம். சில வேளைகளில், உறுதியான நிலைப்பாடொன்றை எடுப்பதற்கு இதில் சில சவால்களும் உள்ளடங்கியிருக்கலாம். தீவிரமாக குரல் எழுப்புவதுடன் சவால்கள் சிறைப்படுத்தப்பட்டு அல்லது நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு அல்லது அமைதியாக இருப்பதுடன் சட்ட நிலைமையை இழந்து உங்கள் உறுப்பினர்களுக்கும், மூலக்கூறுகளுக்கு அமைவாக இல்லாமையா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை தீர்மானிப்பது மிகவும் கடினமான விடயமாகும். இந்த தீர்மானங்கள் உறுப்பினர்கள் மற்றும் மூலக்கூறுகள் உள்ளடக்கப்பட்ட ஒத்துழைப்புடன் எடுக்கப்படல் வேண்டும். நாங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடும் போது, எங்களுடைய பங்குதாரர்கள் எவருக்கும், எவ்விதமான தேவையற்ற சவால்களும் ஏற்படாதவாறு திட்டமிடுவது தொடர்பில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

சவால்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள்:

**உத்திகளின் தெரிவு:**
விசேடமாக பொதுமக்களை உள்ளடக்கும் பிரசார உத்திகள் (நடவடிக்கைகள், நிகழ்வுகள்) என்பன பின்வருவனவற்றுக்கு காரணமாகும்:

- பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு
- உறவு நிலையில் பாதிப்பு (பங்குதாரர்களுடன், பங்காளிகளுடன் அல்லது அரசாங்கத்துடன்)
- நிறுவனத்தின் சட்ட நிலைமையை குறைத்து மதிப்பிடல்.
- உடலியல் பாதிப்பு/சேதம்
- இதனால் ஏற்படக் கூடிய நிதி இழப்புக்கள் (காப்புறுதி, வழக்காடல்)

**சிறுவர்களை பரப்புரை/பிரசாரத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்:**

- பாதுகாப்பு விடயங்கள்.
- கையாளும் தோற்றம்
- சமூக அடையாள தோற்றம்

**ஒத்துழைப்பு/பங்காளித்துவடன் செயற்படுவதனால் ஏற்படக் கூடியது:**

- சிறப்புடைய அடையாளம் இல்லாமை
- தர நிர்ணயம்
- உயர் சவால் மிக்க பங்காளர்கள் (எடுத்துக்காட்டாக: கூட்டுறவு அல்லது அரசாங்கம் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனம் அல்லது ஸ்தாபனம்)
- கட்சி அரசியல் சேர்ப்பு, இன்னபிற

கூருணர்வுமிக்க/அரசியல்ரீதியான விடயங்களில் குரல் எழுப்புவதற்கு அல்லது குரல் எழுப்பாதிருப்பதற்கு தீர்மானித்தல். பின்வரும் விளைவை ஏற்படுத்தலாம்:

- பிரதிநிதித்துவம்/நம்பகத்தன்மை
- நாட்டில் செயற்படுவதற்கான தகைமை
- உறவு (பங்குதாரர்களுடன், பங்காளிகளுடன், அரசாங்கத்துடன், இன்னபிற)
- தனிப்பட்ட நபர்களுக்கு உடலியல் ரீதியான சவால்கள் ஏற்படல் (பங்காளர்கள், சிறுவர்கள், இன்னபிற)

இந்த பட்டியல் விளக்கப்படக் கூடியது அல்ல. இங்கே அரசியல் மற்றும் சமூக சூழ்நிலைகளை கருத்திற் கொண்டதாக வேறு பல சவால்களும் உள்ளன.

**சவாலின் அளவை நீங்கள் மதிப்பிடக் கூடிய வழிகள் பின்வருமாறு:**

- உத்தேசிக்கப்பட்ட செயற்பாட்டின் மூலம் ஏற்படக் கூடிய(அல்லது செயற்பாடு இன்மையால் ஏற்படக் கூடிய) சவால்களை அடையாளங் காணுதல்
- உத்தேசிக்கப்பட்ட செயற்பாட்டின் சாத்தியமுள்ள பயன்களை மதிப்பீடு செய்தல்.
- எவரெல்லாம் பாதிக்கப்படலாம் என்பதனை அடையாளங் காணுதல்.
- சவாலின் அளவை மதிப்பீடு செய்தல்.
- சவாலை தணிப்பதற்கு நீங்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் கவனஞ் செலுத்துங்கள்.
- பயனானது சவாலை இல்லாது செய்யுமா என்பது குறித்து தீர்மானியுங்கள்.

சவால் மதிப்பீட்டுத் தொகுதி (செயன்முறைப் படிவம் 3.6ஐ பார்வையிடவும்) சவால்களை பகுப்பாய்வு செய்வதற்கு உதவும் வகையில் உங்களுடைய விசேடமான காரணங்களுக்கு உள்வாங்கப்படலாம்.

***சவால்களுக்கான காரணங்கள் தொடர்பான குறிப்பு:*** *தொகுதியொன்று சவால்கள் தொடர்பில் தெளிவான, உறுதியான பதில்களை ஒருபோதும் வழங்காது. சார்ந்த அனைத்து விடயங்களையும் சமாளிப்பதற்கான நிதானமான தீர்மானத்தை எடுப்பதற்கு சிறந்த தலைமைத்துவம் மற்றும் ஒத்துழைப்பு ஆகியன அத்தியாவசியமானவையாகும்.*

## சவால் மதிப்பீட்டுத் தொகுதி

கீழ்வரும் வரைபு அமைப்பானது சவால்கள் மற்றும் அதனை எவ்வாறு தணிப்பது என்பதற்கான சில உதாரணங்களை உள்ளடக்கியுள்ளது.

| சவால்கள்: | சவாலின் தன்மை (உதாரணமாக) | தற்செயல் நிகழ்வு திட்டம் (உதாரணமாக) |
|---|---|---|
| தனிநபர்கள் மற்றும் பங்காளர்கள் | குரல் எழுப்புவதன் காரணமாக வன்முறைக்கு இலக்காகலாம் அல்லது இலக்கு வைக்கப்பட்டலாம். | பாதுகாப்பு/பராமரிப்பு செயலேற்பாடுகளை முன்னெடுத்தல். |
| சேவ் த சில்ரன் நிகழ்ச்சிகள் | தடுக்கப்படலாம் அல்லது நிறுத்தப்படலாம். | நிகழ்ச்சி ஊழியர்களும், பங்காளர்களும் பரப்புரைக்கான காரணங்கள் மற்றும் பொருத்தமான தீர்மானங்கள்/செய்திகள் என்பவற்றில் ஆலோசிக்கப்படுவதை தொடர்பில் தெரிந்து வைத்திருப்பதனை உறுதி செய்யவும். |
| அரசாங்கத்துடனான உறவு | சோர்வடையச் செய்யலாம். முறிக்கப்படலாம். அடையாளத்தை இழப்பதற்கான சாத்தியங்கள் ஏற்படலாம். | பதிவிடல் மற்றும் பேச்சுவார்த்தையை முதன்மையாக பயன்படுத்தவும். இந்த நடவடிக்கை எடுப்பதற்கான காரணத்தை இலக்காளிகள் அறிந்திருப்பதனை உறுதி செய்யவும். அதிகார பகுப்பாய்வு நேர்த்தியாக இருப்பதனை உறுதி செய்யவும். |
| ஏனையோருடனான உறவு, உதாரணம்: வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள், நிபுணத்துவ அங்கங்கள் | பரப்புரையானது ஏனைய நிறுவனங்களின் பணிகளை விமர்சனம் செய்வதற்கு முயற்சிக்குமானால் கூட்டுறவில் பாதிப்பு ஏற்படும்.<br><br>ஏனையோருடனான ஆய்வு ஆலோசனையின்றி பிரசுரிக்கப்படுமாயின் கூட்டமைப்பினருடன் பகை ஏற்படலாம். | ஆய்வின் ஆதாரம் மற்றும் தரம் சிறந்திருப்பதை உறுதி செய்யவும். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் மற்றும் ஏன் செய்கின்றீர்கள் மற்றும் பரப்புரை செய்திகளை வடிவமைப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பில் கூட்டமைப்பினர் அறிந்து கொண்டுள்ளமையை உறுதி செய்யுங்கள். |
| பரப்புரையில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள் | தொடர்ச்சியாக ஒரே விடம் தொடர்பில் குரல் எழுப்பிக் கொண்டிருந்தால் துஷ்பிரயோகத்திற்கு இலக்காகலாம். | உண்மையான பெயர்களை பயன்படுத்த வேண்டாம். தொடர்ச்சியான ஆதரவை வழங்குங்கள். சிறுவர்களின் நல்லார்வம் பிரதானப்படுத்தப்பட்டுள்ளமையை உறுதி செய்யுங்கள். சவால்கள் மிகுந்துள்ள சந்தர்ப்பங்களில் பரப்புரையில் சிறுவர்களை ஈடுபடுத்த வேண்டாம். |
| சேவ் த சில்ரனின் பிரதிநிதித்துவம் | ஆய்வு உறுதியானதாக இல்லையாயின் நிபுணத்துவ பிரதிநிதித்துவம் இன்னலுக்கு உள்ளாகலாம்.<br><br>குறிப்பிட்ட பங்காளர்களுடனான உறவு, ஏனையோருடனான உறவில் பாதிப்பு ஏற்படுவதற்கு காரணமாக அமையலாம்.<br><br>குறிப்பிட்ட வளங்களில் இருந்து நீங்கள் பணத்தை எடுக்க முயற்சித்தால் சட்ட நிலைமை குறைத்து மதிப்பிடப்படலாம். | சிறந்த தரமான ஆய்வினை உறுதி செய்யவும். கூட்டமைப்பினர் மற்றும்/அல்லது கூட்டுறவு உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்தை சோதிக்கவும். பணம் கிடைப்பதற்கான வழிகளை ஆராய்ந்து பார்க்கவும். |

## கொலம்பியாவில் சிறுவர்களை பாதுகாப்பதற்காக பரப்புரைக்கான ஆதாரங்களை சேகரிப்பதில் உருவாகிய சவால்கள்

அவர்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்துவதற்கான பல முயற்சிகளின் மத்தியில், கொலம்பியாவின் ஆயுத முரண்பாடு காணப்படும் பகுதிகளில் வசிக்கும் சிறுவர்கள் தற்போதும் வன்முறையின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் நூற்றுக்கணக்கானோர் இறந்துள்ளனர். பாதுகாப்பான செயலேற்பாடுகளின் அடிப்படையில் திரட்டப்பட்ட தரவுகளின் நம்பத்தன்மையின்மை மற்றும் உறுதி செய்யப்படாமை என்பனவே பரப்புரை பணி தோல்வியடைவதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும். இவ்வாறான தரவுகளை உள்வாங்குவது மிகவும் சவாலுக்கு உரியது.

இந்த தரவுகளின் போதாமையை அடையாளங் காண்பதற்காக சிறுவர்கள் மற்றும் ஆயுத முரண்பாட்டு தொடர்பிலான கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் பொறிமுறையின் ஐ.நா பாதுகாப்பு பேரவையின் தீர்வு 1612 அண்மையில் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்வு முன்மொழிகின்றது. “சர்வதேச சட்டம் பிரயோகிக்கப்படக் கூடிய ஆறு வன்முறைகள் தொடர்பில் நேரத்திற்கான, குறிக்கோள், நேர்த்தியான மற்றும் நம்பகமான தகவல்கள்” ஆகியவற்றின் சேகரித்தல் மற்றும் உபபிரிவுகளை இந்த தீர்வு முன்மொழிகின்றது. அவற்றில் “சிறுவர்களை கொலை செய்தல் மற்றும் காயப்படுத்தல்” என்பதும் உள்ளடங்குகின்றது.

2003ஆம் ஆண்டில், கொலம்பியாவில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்றிட்டத்தை சேவ் த சில்ரன் ஆரம்பித்தது. ஆயுத முரண்பாட்டிற்கு உட்பட்ட கொலம்பியாவின் பகுதிகளில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பாதுகாப்பு சவால்கள் தொடர்பில் நம்பகத்தன்மையான மற்றும் உறுதிசெய்யக்கூடிய முதனிலை தரவுகளை சேகரிப்பதே இந்த செயற்றிட்டத்தின் பிரதான ஆய்வு இலக்காக இருந்தது.

வன்முறை தொடர்பிலான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு உள்ளூர் பங்காளிகள் மற்றும் பிரதான தகவல்களை வழங்கும் இளைஞர்கள் ஆகியோருடன் செயற்படுவதன் ஊடாக புதிய வகையான பங்குபற்றுதல் முறைமையொன்றை நாங்கள் வடிவமைத்து பரீட்சித்துப் பார்த்தோம். சிறுவர்கள் கொல்லப்படுகின்றமை தொடர்பில் உத்தியோகப்பூர்வ அறிக்கைகளுடன் ஒத்துழைப்பதற்கு இதன் விளைவுகள் மூலம் நாம் தூண்டப்பட்டோம். எவ்வாறாயினும், ஆயுத முரண்பாட்டுச் சூழ்நிலைகளில் சிறுவர்களின் உரிமைகளை துஷ்பிரயோகஞ் செய்யும் மக்கள், தமது துஷ்பிரயோகம் தொடர்பிலான அனைத்து தகவல்களையும் துரிதமாகவும், நிரந்தரமாகவும் இயன்றளவில் அழித்து விடுவதற்கு முயற்சி செய்கின்றமையை நாம் விரைவில் கற்றுக் கொண்டோம். இதன் காரணமாக முரண்பாட்டு வலயங்களில் தரவுகளை சேகரிப்பது மிகுந்த அபாயகரமானது மற்றும் மேலும் உயிர் அச்சுறுத்தல் மிக்கதாகும். அதில் ஒரு பிரச்சினை உள்ளது: வன்முறைகளுக்கான காரணமாக அரசாங்கத்தை குற்றஞ் சாட்டுவதற்கு தகவல்களை சேகரிப்பதற்கு தகவல்களைத் தரும் இளைஞர்களுக்கு பாதுகாப்பு மற்றும் அவர்களது அந்தரங்கத்தன்மையை நாம் உத்தரவாதப்படுத்தல் வேண்டும். மறுபுறத்தில், பரிசீலிக்கப்படாத பட்சத்தில் தரவுகளை உறுதி செய்யக் கூடியவையாக கருத முடியாது.

இந்த பிரச்சினையில் இருந்து வெளிவருவதற்கு, மறை வெளியீட்ற மற்றும் அந்தரங்கத் தன்மை தொடர்பிலான உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு எமது பங்காளர்களிடம் கோரினோம். அத்துடன், அந்தரங்கத் தன்மை பாதுகாக்கப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே இந்த ஆவணம் பகிரப்படும் என்ற நிபந்தனையையும் அரசாங்கத்திற்கு நாம் தெரிவித்தோம். 2006 ஆம் ஆண்டு கற்கையில் கண்டறிந்த விடயங்களை நாங்கள் அறிக்கைப்படுத்தினோம். ஆனால், யுனிசெப் உள்ளடங்கலாக அறிக்கைக்கான சாத்தியமான இலக்குகளை நாம் பட்டியலிடுவதற்கு முயற்சித்த சந்தர்ப்பத்தில், அந்தரங்கத் தன்மை மற்றும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவது சிக்கலானதாக அமைந்தது. அத்துடன், பங்காளர்கள், தாம் கைச்சாத்திட்ட அந்தரங்கத் தன்மை சார்ந்த உடன்படிக்கைகளை தீவிரமாக பின்பற்றாமல் இருப்பதனையும் நாம் கண்டறிந்தோம்.

**நாங்கள் அடைந்தது**

ஆயுத முரண்பாடு நிலவும் கொலம்பியாவின் பகுதிகளில் சிறுவர்கள் எதிர்நோக்கிய சில வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நம்பககரமான மற்றும் உறுதி செய்யக் கூடிய தகவல்களை நாங்கள் சேகரித்தோம். எவ்வாறாயினும், மறைவெளியீடான சவால்களின் காரணமாக எம்மால் பொது திரளத்தில் செயற்படுவது குறித்த பதிவிடலுக்கான தகவல்களை

பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. மேலதிகமாக, முயற்சிக்கப்பட்ட சில இலக்குகளுக்கு தகவல் கிடைத்தது. அவற்றை உடனடியான அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாது.


**அனுபவங்களை நாம் எவ்வாறு பயன்படுத்தினோம்.**
முரண்பாட்டு வலயத்தில் வசிக்கும் சிறுவர்களின் வன்முறைகள் தொடர்பில் ஆதாரங்களை சேகரிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையிலும் மற்றும் அறிக்கைப்படுத்தும் நிறுவனங்களிற்கான சட்ட ரீதியான சிக்கல்களை கண்டறிவதற்கும் ஐ.நா தீர்வு 1612இல் தெளிவான வழிகாட்டிகள் மற்றும் ஒழுக்கக் கோவையை உள்ளடக்கும் வகையிலான மாற்றங்கள் தொடர்பிலான கருத்துக்களை நாம் முன் வைத்துள்ளோம்.

வேறு நாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் சிறிய ரக ஆயுதங்களாலேயே பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் கொல்லப்படுகின்ற நிலையில், ஆயுத வன்முறையை ஒழிப்பதற்காக சட்ட விரோத ஆயுத குழுக்களுக்கு சிறிய ரக ஆயுதங்களை விற்பனை செய்வதனை தடைசெய்யும் சாசனத்தில் இந்த தீர்வும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

சிறுவர்களை பாதுகாப்பது தொடர்பிலான அரசாங்கத்தின் பொறுப்பு தொடர்பில் எவ்வாறு அவர்களை ஈடுபடச் செய்வது என்பது குறித்த எம்மிடம் சிறந்த புரிந்துணர்வு உள்ளது. உறுதிப்படுத்தக் கூடிய மற்றும் நம்பகத் தன்மையான தகவல்களை சேகரிப்பதற்கான எங்கள் அனுபவம், சிறுவர்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சாசனங்களில் மாற்றங்களை உள்ளடக்குவதற்கு குரல் எழுப்புவதற்கு உதவியது.

கொலம்பியாவில் மாத்திரமல்லாது, ஹெய்ட்டியிலும் முரண்பாட்டு வலயத்தில் வசிக்கும் சிறுவர்களை பாதுகாப்பதனை இலக்கு வைத்து வடிவமைக்கப்பட்ட பல செயற்றிட்டங்களில் கற்கையின் மூலம் பெற்ற விடயங்களையும் நாம் பயன்படுத்தினோம்.

**நாங்கள் கற்றுக் கொண்டது**
தரவுகளை சேகரிப்பது என்பது அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். நீங்கள் பணியாற்றும் பகுதியில் உள்ள பங்காளர்கள் மற்றும் பொது மக்கள் இந்த விளைவுகளை அறியச் செய்து அதற்கான தீர்வுகளை கண்டறிவதற்கு உங்களுக்கு உதவலாம்.



A youth worker in Colombia being trained by Save the Children to help young people avoid recruitment into illegal armed groups.

செயன்முறைப் படிவம்

## 3.6 சவால் மதிப்பீட்டு தொகுதி

| சவால்: | உதாரணங்கள் | சவாலின் அளவு<br>உயர்வானது/நடுத்தரமானது/குறைவானது | சாத்தியமுள்ள பயன்கள்<br>உயர்வானது/நடுத்தரமானது/குறைவானது | தணிக்கும் செயலேற்பாடுகள் | எஞ்சியுள்ள சவால்<br>உயர்வானது/நடுத்தரமானது/குறைவானது |
|---|---|---|---|---|---|
| நிறுவனம் | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| தனிநபர்கள் | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## 3.7 அவசர காலங்களில் பரப்புரை

பரப்புரை என்பது வேறு சூழ்நிலைகளில் எத்தனை அளவு அத்தியாவசியமானதோ, அதே அளவில் அவசர காலங்களிலும் அத்தியாவசியமாகும். இந்த பகுதியில் விசேடமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய சில முக்கியமான விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அவசர காலங்களில் சிறுவர்களுக்காக சேவ் த சில்ரன் எப்போதும் குரல் கொடுத்து வருகின்றது. வழங்கப்படுகின்ற உதவிகள் சிறுவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகளுக்கு பொருத்தமானவையாக உள்ளமை மற்றும் அவர்கள் மனித நேய கொள்கைகளை மதிப்பதை உறுதி செய்வதற்காக செயற்படல்[7].

அவசர காலங்களில், சிறுவர்களை சர்வதேச நிகழ்ச்சி நிரலில் முன்னிலைப்படுத்துவதற்காக தேசிய அரசாங்கம் ஊடாக இரட்டை நிலை நிதியுதவியாளர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு நாம் பரப்புரை செய்கின்றோம். இதன் மூலம் வழங்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதாகவும், நேர்த்தியாக வழங்கப்படுவதாகவும் இருக்கும்.

அவசர காலங்களில் பரப்புரையின் முழுமையான நோக்கங்கள்:

- முரண்பாட்டு மற்றும் அனர்த்த சூழ்நிலைகளில் உள்ள சிறுவர்களின் பாதுகாப்பினை கருத்திற் கொண்டதாக அரசாங்கத்தின் நிகழ்ச்சி சார்ந்த மற்றும் நிதியிடல் ஆதரவை அதிகரித்தல். முரண்பாட்டுக்கு பிந்திய முன்னுரிமைகள் மற்றும் மீள் ஒருமைப்பாட்டையும் கருத்திற் கொண்டதாக அவசர கால சந்தர்ப்பங்களில் நிதியுதவியாளர்கள் நீண்ட காலத்திற்கான நிதியை வழங்குவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
- சிறுவர்களுக்கு தேவையான மனிதநேய பிரவேசத்தை உறுதி செய்தல்.
- சர்வதேச சமூகத்தின் ஒவ்வொரு மனித நேய பிரதிபலிப்பிலும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கல்வியை உள்ளடக்கல்.
- மனித நேய சீர்திருத்த செயன்முறைகளில் ஈடுபடல். இதன் மூலம் சிறுவர்களுக்கு சிறந்த பயன் கிடைக்கும் (ஐ.நா நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் எதிர்வுகூறல் தன்மை, தரம், நம்பகத்தை தன்மை என்பவற்றை மேம்படுத்தல் மற்றும் மனித நேய உதவியின் சுதந்திரத் தன்மையை உறுதி செய்தல்).
- சிறுவர்களின் குரல்களும், வெளிப்பாடுகளும் மனித நேய பிரதிபலிப்பை உள்ளடக்குவதை உறுதி செய்தல்.
- அவசர காலங்களில் ருஊஏசுஊ, மற்றும் ஐ.நா பாதுகாப்பு பேரவையின் தீர்மானங்கள் மற்றும் சர்வதேச மனித நேயச் சட்டம் மற்றும் அகதிகளுக்கான சட்டம் போன்ற வேறு கருவித்தொகுதிகளின் கீழ் அரசாங்கங்கள் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.

நீங்கள் அவசர கால நிலையில் செயற்பட்டாலும், அவசர கால நிலையல்லாத சந்தர்ப்பங்களில் செயற்பட்டாலும் பரப்புரை மூலோபாயத்தை தயாரிப்பதற்கான பிரதான கொள்கைகள் ஒன்றாகவே இருக்கும். ஆனால், அவற்றிற்கு இடையில் கவனிக்கத்தக்க சில விசேடமான விடயங்கள் உள்ளன.

**1. பிரச்சினையை பகுப்பாய்வு செய்தல் மற்றும் புரிந்து கொள்ளுதல்.**

குறித்த பிரச்சினை துரிதமான களத்தினுடைய அவசர கால நிலையா அல்லது நீண்ட நாட்கள் நீடிக்கின்றதா என்பதன் அடிப்படையில் முழுமையான சூழ்நிலை பகுப்பாய்வை முன்னெடுப்பதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காது போகலாம். நீங்கள் தேடிக் கொண்டிருக்கின்ற, உங்களுக்குத் தேவையான சில தகவல்களை அவசல கால நிலை மதிப்பீடு, முன் எச்சரிக்கை பகுப்பாய்வு மற்றும் அவ்வப்போது நிகழும் திட்டமிடல்கள் ஆகியவற்றில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலான அடிப்படை காரணங்கள், அடிப்படையான விடயங்களை அடையாளங் காண்பதற்கு வேறுபட்ட செயற்பாட்டாளர்களின் (உள்ளூர், தேசிய, சர்வதேச) பாத்திரங்கள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்வதன் பொருட்டு நீங்கள் உங்களுடைய ஊழியர் நேரம் மற்றும் வளங்களை செலவிட நேரிடும்.

---

[7] சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு, *அவசர கால பதிலளிப்பு கருவித் தொகுதி*, சேவ் த சில்ரன், முதனிலை ஆவணம், 2007

**2. நீங்கள் மாற்ற வேண்டிய விடயங்களை அடையாளங் காணல்**
நீண்ட கால பரப்புரை பணிக்கும் நீங்கள் முன்னெடுத்த அதே வழி முறையை அவசர கால நிலையிலும் பயன்படுத்தி பரப்புரைக்கான விடயங்களை அடையாளங் காணவும். அவசர கால நிலையில் பரப்புரை விடயங்கள் தொடர்பான இரண்டு உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

*மனித நேய உதவிகள் சிறுவர்களை சென்றடைவதில்லை.* ஏனெனில், X என்ற அரசாங்கம் புதிய மற்றும் கடினமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. சேவ் த சில்ரனிடம் பயனுள்ள அரசியல் உறவு காணப்படுமாயின், அரசாங்கத்தை கவனத்திற் கொண்டதாக பரப்புரை முன்னெடுக்கப்பட வேண்டும். ஐ.நாவின் மனித நேய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் அல்லது ஐ.நாவின் வழிமுறைகளுக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும்/அல்லது மனித நேயத்திற்கான இடம் மற்றும் பிரவேசத்திற்காக அரசாங்கம் மீது அழுத்தம் வழங்கக் கூடிய மனித நேய ஒருங்கிணைப்பாளர், அல்லது இந்த செயலேற்பாடுகளை தளர்த்துவது தொடர்பில் அரசாங்கம் மீது அழுத்தம் வழங்கக் கூடிய பரப்புரையை முன்னெடுக்கும் முக்கியமான நிதியுதவி வழங்கும் அரசாங்கங்கள் ஆகியவற்றுக்கு நீங்கள் இந்த கருத்தை முன்வைக்கலாம்.

Y என்ற நாட்டில் உள்ள அகதிகளான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இந்த பிரச்சினைக்கான அடிப்படை காரணங்களை பரப்புரை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். பாடசாலைக்கு பதிவு செய்வதற்கு சட்ட ரீதியான தடையேதேனும் உள்ளதா? சிறுவர்களிடம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாமையினாலா? குறித்த பாடசாலைக்கு போதிய நிதி இன்மையினாலா? வறிய சமூகத்தைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் அகதிச் சிறுவர்களுக்கு கல்வி வழங்கும் உள்ளூர் பாடசாலைகளுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் உங்களுடைய பரப்புரை கவனஞ் செலுத்தல் வேண்டும்: அல்லது நீங்கள் சட்ட பாதுகாப்பு மற்றும் பதிவு தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டும்: அல்லது பாடசாலையை விட்டு விலகியச் சிறுவர்கள் உதாரணமாக விபச்சாரம் போன்ற தொழில்களுக்கு செல்லாது காப்பதற்காக, கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுமாறு நிதியுதவியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

**3. உங்கள் குறிக்கோள்களை நிர்ணயித்தல்**
ஏனைய வகையான பரப்புரைகளைப் போன்ற சம அளவிலான கொள்கைகளை பின்பற்றுங்கள் (3.4ஐ பார்க்கவும்).

**உங்களுடைய இயலுமை மற்றும் ஏற்படக் கூடிய சவால்களை மதிப்பிடல்**
முரண்பாட்டுச் சூழ்நிலைகளின் போது, பாதுகாப்பு அல்லது அரசியல் விடயங்கள் மனித நேய பிரதிபலிப்புக்களுடன் அடிப்படையாக இணைந்துள்ளமையால், உங்களுடைய பரப்புரை நிலைகள் மிகுந்த அளவிலான கூருணர்வை கொண்டதாக இருத்தல் வேண்டும். மனித நேய கோட்பாடுகளின் அடிப்படையில் சாத்தியமான சவால்களை நீங்கள் மிகவும் அவதானமாக கவனித்தல் வேண்டும். இதன் காரணமாகவே பரப்புரையானது சிறுவர்களுடனும் மற்றும் அவர்களது சமூகத்துடனும் நேரடியாக பணியாற்றும் மற்றும் சூழ்நிலையின் சிக்கல் தன்மையை நன்கு புரிந்து கொண்டுள்ளவர்களால் வழி நடத்தப்படல் வேண்டும்.

**5. கொள்கை மற்றும் அதிகாரத்தை வரைதல் மற்றும் புரிந்து கொள்ளல், இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை தேடி அறிதல்.**
கொள்கை மற்றும் அதிகார பகுப்பாய்வின் கோட்பாடுகள், அவசர கால நிலையற்ற பரப்புரைக்கு சமமானதாகவே இருக்கின்றன. அவசர கால நிலைகளில் கொள்கை மாற்றத்தில் இணைவதற்கான சந்தர்ப்பத்தில், உதாரணமாக நிதியுதவியாளர் மாநாடுகள், வருடாந்த நிகழ்வுகள், சமாதான பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகளை மீறும் ஐ.நாவின் மாநாடுகள், ஊடக சந்தர்ப்பங்கள், நிறுவனத்திற்கு இடையிலான திட்டமிடல் மற்றும் மேன்முறையீட்டு செயன்முறை, மனித நேய ஒருங்கிணைப்பு மற்றும் துறைசார்ந்த அல்லது தொகுதியான பணிக் குழுக்கள் என்பன உள்ளடக்கப்படலாம்.

**6. அவசர கால சூழ்நிலைகளில் பரப்புரை இலக்குகளில் பின்வருவன உள்ளடக்கப்படும்**

- பாதிக்கப்பட்ட நாடுகளில் தேசிய அரசாங்கங்கள் அல்லது நடப்பு அதிகார சபைகள். இவை தெளிவாக விளக்கப்படுதல் அவசியமாகும். எடுத்துக்காட்டாக, தேசிய அல்லது உள்ளூர், எந்த திணைக்களம், இன்னபிற
- சர்வதேச இரு பக்க நிதியுதவியாளர்கள்.
- ஐ.நா நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் (யுனிசெப், ருரேஊசு, தொகுதிகள், இன்னபிற) களத்தில் மற்றும் சர்வதேச அளவில் மற்றும் அவர்களது ஒருங்கிணைத்தல் பொறியமைப்பு, விசேடமாக தொகுதி தலைமைத்துவம் (ஐ.நா நிறுவனங்களோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ), ஸ்தாபிக்கப்படுமாயின், ஐ.நா நாட்டுக்கான அணி மற்றும் மனித நேய ஒருங்கிணைப்பாளர் (சமூகமளிப்பின்),
- ஐ.நா பாதுகாப்பு பேரவையில் அரசாங்கம் சமூகமளித்தல்.
- பிராந்திய அரசாங்கங்கள் அல்லது குழுக்கள் (ஐரோப்பிய ஒன்றியம் (EU), ஆபிரிக்க ஒன்றியம் (AU), தெற்கு ஆபிரிக்க அபிவிருத்தி சமூகம் (SADC)).
- அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு அலுவலகங்கள்.

**7. உங்கள் செய்தியை வடிவமைத்தல்.**

கேள்விக்கு பதிலளிப்பதாக இந்த செய்தி இருத்தல் வேண்டும். விசேடமாக அவசர கால நிலையில் சிறுவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர் மற்றும் அவர்களது உரிமைகள் மதிக்கப்படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன?

அவசர கால நிலையில் வேறுபட்ட பல நிலைகள் உள்ளன. எனவே, சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு செய்திகளை உள்வாங்கிக் கொள்ளக் கூடியவர்களாக நாம் இருத்தல் வேண்டும்.

**பிரதான பரப்புரை செய்திகள்**

சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கான அடிப்படை காரணங்கள் தொடர்பிலான உங்களுடைய பகுப்பாய்வின் அடிப்படையில் மற்றும் வேறுபட்ட செயற்பாட்டாளர்களின் (உள்ளூர், தேசிய, சர்வதேச) பாத்திரங்களின் அடிப்படையில் இந்த விடயங்களை அடையாளங் காண்பதற்கு பின்வரும் செய்திகளை உங்களுடைய ஆரம்ப புள்ளியாக எடுத்துக் கொண்டு, அவற்றைக் கொண்டு உங்களுடைய தேவைகளை நிறைவேற்ற முயற்சியுங்கள்.

*மாதிரி செய்திகள்*

- எந்தவொரு மனித நேய பிரச்சினையின் போது எதிர்மறையான விளைவுகளை சந்திப்பவர்களாக சிறுவர்கள் உள்ளனர். மனித நேய உதவிகள் சிறுவர்களின் தேவைகளை மதிப்பீடு செய்து, அவற்றை நிறைவு செய்வனவாக இருத்தல் வேண்டும். **ஒவ்வொரு அவசர கால நிலையிலும் சிறுவர்களின் பாதுகாப்பு** தொடர்பில் சர்வதேச சமூகம் கட்டாயம் கவனஞ் செலுத்தல் வேண்டும்.
- சிறுவர்களை பாதுகாப்பதற்கும் மற்றும் பொருளாதார வாழ்வியலை தக்க வைத்துக் கொள்வதற்கான மூலோபாயமாக கட்டடங்கள் அமைப்பதற்கான கற்களை வழங்குதல் போன்றதாக **ஒவ்வொரு அவசர கால நிலை பிரதிபலிப்பிலும் கல்வி என்பது கட்டாயமான பகுதியாக** இருத்தல் வேண்டும்.
- அனைத்து முரண்பாடுகள் மற்றும் அவசர கால நிலைகளில் **சர்வதேச மனித நேயச் சட்டம்** மற்றும் மனித உரிமைகள் சட்டம் என்பன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். யுத்தம், வன்முறை, கையறுநிலை மற்றும் இடம்பெயர்வின் போது பொது மக்கள், விசேடமாக சிறுவர்கள் பாதுகாக்கப்படுவதை அனைத்து தரப்பினரும் உறுதி செய்தல் வேண்டும்.
- அனைத்து சிறுவர்களுக்கு மனித நேய உதவியைப் பெறுவதற்கான உரிமை உள்ளது. சர்வதேச சமூகமும் மற்றும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினரும் சிறுவர்களுக்கு **மனித நேய உதவி** கிடைப்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
- சிறுவர்களின் வாழ்வியலை தக்க வைக்கும் மற்றும் பாதுகாப்பு, சுகாதாரம், தேகாரோக்கியம் மற்றும் கல்வி போன்ற அபிவிருத்திக்கான **பிரதான துறைகளுக்கான நிதி வழங்கலை நிதியுதவியாளர்கள் அதிகரிக்க வேண்டும்.**

**8. அவசர கால நிலைகளில் பரப்புரையின் உத்தேசிக்கப்பட்ட விளைவுகள் தொடர்பில் கவனஞ் செலுத்தல்**

மனித நேய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகவே அவசர காலப் பணிகள் இருத்தல் வேண்டும். எனவே நீங்கள் மிகவும் அவதானமாக பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ள வேண்டும்:

- **நீங்கள் உதவி செய்வதற்கு முயற்சிக்கும் மக்களுக்கு எதிர்மறையான விளைவுகளை உங்களுடைய பரப்புரை பணி ஏற்படுத்தக் கூடுமா?** நாங்கள் உதவி செய்யும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அல்லது முழு சமூகத்தினையும் சேர்ந்த மக்களுக்கு பரப்புரையானது அதிகளவிலான பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது ('பாதகம் செய்யாமை' கோட்பாடு).
- **தேவையுடன் உள்ளவர்களை நீங்கள் அடைவதற்கு உங்களுடைய பரப்புரை பணி தாக்கத்தை ஏற்படுத்துமா?** மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியுடன் சவாலுக்கு எதிராக குரல் எழுப்புவதற்கான பயன்களை அதிகரிக்கச் செய்தல் அல்லது நிகழ்ச்சியை நிறைவு செய்வதற்கு கட்டாயப்படுத்தப்படல் (மனித நேய பிரவேசம்).
- சிக்கலில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து குழுக்கள், அரசாங்கம், போராளி குழுக்கள், நிதியுதவியாளர்கள் அல்லது அதிகாரத்துடன் கூடிய வேறு குழுக்கள் தொடர்பில் **சுதந்திரமாக செயற்படுவதற்கான உங்களுடைய இயலுமையை உங்களுடைய பரப்புரை எந்த விதத்திலாவது விட்டுக் கொடுக்கச் செய்யுமா?**
- **உங்களுடைய பரப்புரை பணி நடுநிலைமை என்ற கொள்கையை மதிக்கின்றதா** (எடுத்துக்காட்டாக, ஏனைய பகுதியை விட ஒரு பகுதிக்கு அதிகமாக ஆதரவு வழங்காது இருத்தல்)?
- **உங்களுடைய பரப்புரை பணி, ஏற்கனவே உள்ள உங்களுடைய சுதந்திரம் மற்றும் நடுநிலைத்தன்மையை பாதிக்குமா** (எடுத்துக்காட்டாக, நீங்கள் சுதந்திரமாக அல்லது நடுநிலைமையாக செயற்படுவதில்லை என மற்றையவர்கள் கூறுவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கும்)?

அத்தியாயம் 4

# கொள்கைச் சூழலை புரிந்துகொள்ளல்

4.1 கொள்கைகள் மற்றும் அதிகாரங்களை பகுப்பாய்தல்

4.2 பரப்புரைக்கான சந்தர்ப்பங்களை அடையாளங் காணல்



அத்தியாயம் 4

# அறிமுகம்

பரப்புரையின் மூலோபாய வடிவத்தை கொண்டு வருவது என்பது, எவை மாற்றப்பட வேண்டும் என மேலும் சிந்திப்பது மற்றும் மாற்றத்தை கொண்டு வருவதற்கான அதிகாரம் உடையவர்கள் மீது எவ்வாறு செல்வாக்கு செலுத்துவது என்பதாகும்.

இதனை முன்னெடுப்பதற்கு, கொள்கை தொடர்பான தீர்மானங்கள் எவ்வாறு எடுக்கப்பட்டன மற்றும் அந்த தீர்மானங்கள் மீது யாருக்கு அதிகாரம் உள்ளது என்பன குறித்து நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். கொள்கை தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துவதற்கான சந்தர்ப்பங்களை நீங்கள் அடையாளங் காணல் வேண்டும். இயலுமான அளவில் பயனுள்ளதாக செல்வாக்கு செலுத்துவதற்கு சிவில் சமூகத்திற்கு உதவி வழங்கல்: அத்துடன், மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் அமுல்படுத்தப்பட்டமையை உறுதி செய்தல்.

கொள்கை நடைமுறைகள் மற்றும் அதிகாரம் சம்பந்தப்பட்டவற்றை எவ்வாறு பகுப்பாய்வு செய்வது என்பதினை இந்த அத்தியாயம் விளக்குகின்றது. சிக்கலான மற்றும் பல வடிவங்களைக் கொண்ட இந்த சுற்றாடலில் வேறுபட்ட வகையிலான அதிகாரங்கள் செயற்படுகின்றமையை கண்டறிதல். பரப்புரையில் உங்கள் பணியை நீண்ட காலச் செயற்பாடாக முன்னெடுப்பதற்கும், எங்கே மற்றும் எப்போது உங்களுடைய தலையீடு இடம்பெற வேண்டும் என்பது தொடர்பில் அடையாளங் காண்பதற்கும் இந்த வகையிலான அதிகாரங்கள் மீதான பகுப்பாய்வு உங்களுக்கு உதவி புரியும்.

இந்த கற்றல் சாதனத்தின் இரண்டாவது பகுதி வேறுபட்ட வகையிலான பரப்புரை சந்தர்ப்பங்கள், மற்றும் குறிப்பாக உங்களுடைய நிலையை வலுப்படுத்தல், கூட்டமைப்பை உருவாக்கல், விழிப்புணர்ச்சியை அதிகரித்தல், அல்லது உங்களுடைய செய்தியை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தும் நிகழ்வுகள் என்பன தொடர்பில் ஆராய்கின்றது. தீர்மானம் எடுத்தல் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட சாத்தியமான பரப்புரை சந்தர்ப்பங்களை வரைபடமாக்கல் என்பது உங்களுடைய முழுமையான பரப்புரை மூலோபாயத்தை வடிவமைப்பதற்கு உதவி புரியும்.

## 4.1 கொள்கைகள் மற்றும் அதிகாரங்களை பகுப்பாய்தல்

அரசியல் பகுப்பாய்வு, கொள்கை பகுப்பாய்வு மற்றும் அதிகாரப் பகுப்பாய்வு
உங்களது பரப்புரை விடயத்தைச் சூழவுள்ள அரசியல் யதார்த்தங்களை நன்கு புரிந்து கொண்டு நீங்கள் ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு முன்னெடுக்கும் போது இன்னும் அனேக விடயங்களை கற்றறிந்து கொண்டு நீங்கள் முன்னேறிச் செல்ல முடியும். பல விதத்திலான வலை என்ற அடிப்படையில் வலுக்களை ஒருங்கு திரட்டுவதாக தீர்மானம் எடுத்தல் என்பது அமையும். அரசியல், கொள்கை மற்றும் அதிகார பல்வகைத் தன்மை என்பன பொதுவாகவே விளக்குவதற்கு கடினமான விடயங்களாகும். பரப்புரை நிகழ்வதற்கு சாதகமான சந்தர்ப்பங்கள் உள்ளன. எனவே, எதிர்மறையான ஆச்சரியங்களை வழங்குங்கள்.

பொருத்தமான பரப்புரை மூலோபாயங்களை வடிவமைப்பதற்கு உதவுவதற்கு குறித்த கொள்கை தீர்மானங்களை பாதிக்கக் கூடிய வேறுபட்ட விடயங்களை நீங்கள் அடையாளங் காணல் வேண்டும்.

கொள்கை பகுப்பாய்வின் பிரதான அம்சங்கள்:

**கொள்கை விடயங்கள்:** கொள்கை விடயங்களில் கொள்கையின் பயன்பாடின்மை, போதியது அல்லாத கொள்கை அல்லது கொள்கையின் முறையற்ற அமுல்படுத்தல் என்பன உள்ளடங்கலாம்.

**பிரதான செயற்பாட்டாளர்கள்:** பொறுப்பான நபர் அல்லது பிரதான நிறுவனம் யார்? இந்த விடயம் வேறு எந்த நபருக்கு செல்வாக்கு உள்ளது? கொள்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பிரதான செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்களை அடையாளங் காணவும்: அவர்கள் அரசியல்வாதிகளாக இருக்கலாம், நிர்வாக அதிகாரிகளாக இருக்கலாம். பாடசாலை சங்கங்களாக இருக்கலாம். மதத் தலைவர்களாக இருக்கலாம். கொள்கை வகுப்பவர்கள் மீது செல்வாக்கு செலுத்தக் கூடியவர்களை அடையாளங் காணவும்.

**கொள்கை சுற்றாடல்:** அதிகாரத்தில் உள்ள நபர்களால் உங்களுடைய விடயம் எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளது? அது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பகுதியா அல்லது நிராகரிக்கப்பட வேண்டிய பகுதியா? இந்த விடயம் தொடர்பில் பரந்தளவிலான மற்றும் பொதுமக்கள் கலந்துரையாடல் இடம்பெறுகின்றதா அல்லது சமூக விடயங்கள் சேர்க்கப்பட்டதாக அது உள்ளதா? முறை சார் மற்றும் முறை சாரா கொள்கை வகுத்தல், மற்றும் சமூக, அரசியல் சூழ்நிலைகள் ஆகியவற்றின் செயன்முறைகளை புரிந்து கொள்ளுங்கள்.

**உள் நுழைவதற்கான சந்தர்ப்பம் மற்றும் கொள்கை மாற்றத்திற்கான தெரிவுகளை அடையாளங் காணல்:** அரசியல் முறைமை (முறை சார் மற்றும் முறை சாரா), கொள்கை வகுக்கும் செயன்முறை மற்றும் அதன் உள்ளக அதிகார பல்வகைத் தன்மை என்பவற்றை நீங்கள் பகுப்பாய்வு செய்ய வேண்டிய தேவையுள்ளது. பிரதான நிகழ்ச்சிகள், குறியீட்டு கொண்டாட்டங்கள், அல்லது மூலோபாய கூட்டணிகள் போன்ற உங்களுடைய செல்வாக்கு மற்றும் அதிகாரத்தை மேம்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏதேனும் அண்மையில் இடம்பெறவுள்ளனவா? இந்த நிகழச்சிகளில் ஏதேனும் ஒன்று உங்களுடைய நிகழ்ச்சி நிரலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றதா?

**வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வு:** அரசாங்கத்தால் தயாரிக்கப்படும் மிகவும் பலனுள்ள கொள்கையாக இது காணப்படுகின்றது. அவை உண்மையான முன்னுரிமைகளை வெளிப்படுத்துகின்றன. உள்ளூர் மட்டம் உள்ளடங்கலாக வள ஒதுக்கீட்டில் காணப்படும் ஊழல் மற்றும் சமத்துவமின்மையை வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வு சவாலுக்கு உட்படுத்த முடியும். கொள்கை மற்றும் வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வு தொடர்பிலான தகைமையை மேம்படுத்துவதில் தற்போது பல அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனஞ் செலுத்தியுள்ளன[8].

---

[8] பார்வையிடவும், *அரசாங்க கொள்கைகளை கண்காணித்தல்: ஆபிரிக்காவில் பணிபுரியும் சிவில் சமூக நிறுவனங்களுக்கான கருவித் தொகுதி*,Trocaire, CAFOD and Christian Aid, 2007

## பரப்புரை மற்றும் அதிகாரம்

பரப்புரையின் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியாக அதிகாரத்தை விளக்குதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல். போதியது அல்லாத அதிகார பகுப்பாய்வுகள் தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள், பலவீனமான மூலோபாய தெரிவுகள் அல்லது சவால்களை நோக்கி எம்மை வழி நடத்தும். நீங்கள் உட்பட பல செயற்பாட்டாளர்கள் தொடர்ச்சியாக அதிகாரம் மற்றும் இடத்திற்காக போட்டியிட்டு வருகின்ற நிலையில், அதிகாரம் என்பது பல்வகைத் தன்மை வாய்ந்த மாற்றமடையும் ஒன்றாகும்.

நினைவு கொள்ளுங்கள் - அரசியல் அதிகாரம் என்பது எப்போதும் வெளிப்படையானதாக செயற்பட முடியாது[9].

| | |
|---|---|
| வெளிப்படையான அதிகாரம் | முறைசார் விதிகள், கட்டமைப்புக்கள், அதிகாரிகள், நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள்.<br>உதாரணம்: தேர்தல்கள், சட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்கள் |
| மறைமுகமான அதிகாரம் | குறிப்பிட்டளவு அதிகாரம் நிறைந்த மக்கள் நிகழ்ச்சி நிரலை கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இதில் அதிகாரம் குறைந்த மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். |
| வெளிப்படையில்லாத அதிகாரம் | இந்த அதிகார நிலை மட்டம் விழுமியங்கள் மற்றும் விதிமுறைகளை வடிவமைக்கின்றது. அத்துடன், மக்களின் நம்பிக்கைகள் மற்றும் நடத்தைகள் ஆகியனவும் வடிவமைக்கப்படுகின்றது. அவ்வாறான அதிகாரங்கள் செல்வாக்கு மற்றும் கீழ்நிலையான முறைகளை இடையறாது வெளிப்படுத்துகின்றன. செயற்படுவதற்கு மிகவும் கடினமான நிலையாக இது காணப்படுகின்றது. ஏனெனில், சமூக விழுமியங்கள் கூருணர்வு மிக்கவையாகவும் தனிநபர் சார்ந்ததாகவும் இருப்பதனாலேயே இந்த நிலையாகும். |

இந்த வேறுபட்ட வகையிலான அதிகாரங்கள் பொதுவாக சமாந்தரமாகவே செயற்படுகின்றன. அத்துடன், வேறுபட்ட வகையிலான அதிகாரங்களை முடக்குவதற்கு வேறுபட்ட மூலோபாயங்களும் தேவையாக இருக்கின்றன

*உதாரணம்:*

**எத்தியோப்பியாவின் கிராமப் பகுதிகளில் சிறுவயது திருமணங்கள்**

| அதிகாரம் | சூழ்நிலை |
|---|---|
| வெளிப்படையான அதிகாரம் | சட்ட முறைமை அமுலில் உள்ளது – ஆனால் சமூக அதிகாரிகளுக்கு இடையில் போதியளவு இயலுமை இன்மையினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. |
| மறைமுகமான அதிகாரம் | அரசாங்கத்தின் அதிகாரப் பிரவினரிடம் சமூக விவகாரங்களுக்கு குறைந்தளவிலான முன்னுரிமையே வழங்கப்படுகின்றது. |
| வெளிப்படையில்லாத அதிகாரம் | சமூக விதிமுறைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் கலசாரத்தை பின்பற்றுவதற்கு பெற்றோரை தூண்டுகின்றன. |

## சேவ் த சில்ரனின் அதிகார அடிப்படை

அதிகார உறவுகள் எப்போதும் சமமற்றதாகவே உள்ளன. ஆனால், குறைந்த அதிகாரமுடையவர்கள் எல்லாவற்றையும் கடந்து வரும் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. பொதுவாக சேவ் த சில்ரனின் அதிகாரம் கிடைப்பது:

- நோக்கம், அர்ப்பணிப்பு மற்றும் விழுமியங்கள்
- சிறுவர்களுடன் மற்றும் அவர்களுடைய சமுதாயத்தினருடனும் பணியாற்றியதன் விளைவாக பெற்ற பல வருட அனுபவங்களில் இருந்து பிரதிநிதித்துவம் மற்றும் ஆதாரம்
- சிறுவர்கள் சம்பந்தப்படுவதன் அடிப்படையில் சட்ட நிலைமை மற்றும் நம்பகத்தன்மை
- உரிமை சார்ந்த அணுகுமுறை
- எங்கள் ஊழியர்களின் அனுபவங்கள் மற்றும் அறிவு
- ஆதரவாளர்களின் பாரிய அளவிலான ஆக்கக் கூறுகள்
- கொள்கை வகுப்பாளருடனான பிரதான உறவுகள்

---

9 Adapted from Save the Children Denmark, *Child Rights Advocacy, Operational Guidelines*, 2006. See also L Veneklasen and J Miller, *A New Wave of Power, People and Politics*, 2002

## கொள்கை நடைமுறை மற்றும் தீர்மானம் எடுத்தலை புரிந்து கொள்ளல்

கொள்கை செயன்முறையில் செல்வாக்கு செலுத்தும் வகையில் தற்போதுள்ள புரிந்துணர்வு ஊடான சந்தர்ப்பங்களே எந்தவொரு பரப்புரை முயற்சியினதும் வெற்றிக்கான சிக்கல் நிறைந்த அம்சமாக காணப்படுகின்றன. நிறுவன கொள்கை பரப்புரை நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதற்கு எவ்வாறு கொள்கை தீர்மானங்கள் தயாரிக்கப்பட்டன மற்றும் அது இடம்பெறும் அரசியல் சூழ்நிலை தொடர்பிலும் புரிந்து கொள்வது முக்கியமாகும்.

### தீர்மானம் எடுப்பதற்கான படிநிலைகள்

கொள்கை செயற்பாடுகளின் தீர்மானம் எடுத்தலில் ஐந்து அடிப்படை படிநிலைகள் உள்ளன. ஸ்தாபனங்களின் அடிப்படையில் இறுதியான முறைகள், நடைமுறைகள் மற்றும் உத்திகள் வேறுபடும். ஆனால், இந்த படிநிலைகள் அனைத்து தீர்மானம் எடுத்தல் செயன்முறைகளில் ஏதோவொரு வடிவத்தில் பயன்படுத்தப்படும்.

1. நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்
2. கொள்கை வடிவமைப்பு
3. கொள்கை சட்டம் இயற்றல்.
4. நடைமுறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல்.
5. கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

முறை சார், முறை சாரா மற்றும் அல்லது மாற்றுவழி செயன்முறைகள் ஊடாக கொள்கை சார்ந்த தீர்மானம் எடுத்தல் இடம்பெறலாம்[10].

### முறை சார் செயன்முறை


சட்டம் அல்லது நிறுவனமய கொள்கைகளில் ஆவணப்படுத்தபட்டமைக்கு அமைவாக முறை சார் தீர்மானம் எடுத்தல் செயன்முறையே உத்தியோகப்பூர்வ நடைமுறையாக காணப்படுகின்றது. உதாரணமாக, சில நிறுவனங்களில், கொள்கை மாற்றங்கள் பணிப்பாளர் குழுச் சபையினால் வாக்களிக்கப்பட வேண்டும் அல்லது உத்தியோகப்பூர்வமாக தலைவரால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

### முறை சாரா செயன்முறை

தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் உடன்நிகழ்வாக முறைசார் செயன்முறை காணப்படுகின்றது. ஆனால், அது சட்டம் அல்லது நிறுவன கொள்கையில் குறிப்பிடப்பட்ட விடயமல்ல. உதாரணமாக, நிறுவனத்தின் தலைவர், கொள்கை மாற்றங்களை வாக்களிப்பிற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் முறை சாரா வகையில் பணிப்பாளர் குழுச் சபை உறுப்பினர்களுடன் தனிப்பட்ட ரீதியில் கொள்கை மாற்றங்கள் குறித்து கலந்துரையாடுவார்.

### மாற்றுவழி செயன்முறை

தீர்மானம் எடுத்தலில் செல்வாக்கு செலுத்தும் செயன்முறை முழுமையாக உத்தியோகப்பூர்வ செயன்முறைக்கு அப்பாற் பட்டதாகவே உள்ளது. உதாரணமாக, சிறிய அளவிலான கொள்கை மாற்றத்திற்கு பணிப்பாளர் குழுச் சபையின் அங்கீகாரம் தேவை இல்லை என நிறுவனம் ஒன்றின் தலைவர் தீர்மானிக்கும் பட்சத்தில், குறித்த மாற்றங்கள் தொடர்பில் அவர் ஊழியர்களுடன் கலந்துரையாடி, தீர்மானம் ஒன்றினை எடுத்து உத்தியோகப்பூர்வ நடவடிக்கை இன்றி அந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்தலாம்.




---

10 ஆர். ஷர்மாவின் *பரப்புரை பயிற்சி வழிகாட்டிக்கான அறிமுகம்* AED, SARA செயற்றிட்டம்,1995இலிருந்து உள்வாங்கப்பட்டது.

பயிற்சி 4.1


**தீர்மானம் எடுத்தல் செயன்முறையை இரண்டு நிலைகளில் வரைபடமாக்கல்**

கொள்கை செயன்முறையை புரிந்து கொள்வதற்கு படிநிலைகளை விளக்கப்படுத்தி மற்றும் கண் பார்வைக்கு தெரியக் கூடிய வரைபடம் ஒன்றை தயாரித்து உங்கள் நாட்டில் தீர்மானம் எடுத்தல் நடைமுறை எவ்வாறு நடைபெறுகின்றது என விபரிப்பது முதலாவது நிலையாகும்.

1. செயன்முறையை பகுப்பாய்வு செய்தல்

- நீங்கள் செல்வாக்கு செலுத்த விரும்பும் விடயத்தில் எந்த நிறுவனம் அல்லது கொள்கை வகுக்கும் அமைப்பு தீர்மானத்தை எடுக்கும்?
- இந்த ஸ்தாபனத்தின் முறை சார் தீர்மானம் எடுக்கும் செயன்முறை என்ன? முறை சார் சென்முறையின் படிநிலைகள் எவை? ஒவ்வொரு படி நிலையும் எப்போது முன்னெடுக்கப்படும்? (நாங்கள் மேலே குறிப்பிட்ட ஐந்து படிநிலைகளைப் போன்றது அல்லது இங்கே நாம் சுட்டிக்காட்டியிருப்பது).

வரைபடமாக இதனை தயாரிக்கவும். உதாரணம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.




- தீர்மானம் எடுத்தல் செயன்முறைக்கான முறை சாரா பணிகள் அல்லது நடவடிக்கைக்கு பின்னால் இடம்பெறும் விடயங்கள் எவை?

*உங்களுடைய வரைபடத்தில் இதனை வேறு நிறத்தில் குறிப்பிடவும்.*

- ஒவ்வொரு நிலையிலும் யார் பிரதான தீர்மானம் எடுப்பவர்கள்? தனிப்பட்ட நபர்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தவும். மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய விடயம் தொடர்பில் இறுதியான தீர்மானத்தை எடுக்கக் கூடிய அதிகாரம் உண்மையில் யாரிடம் உள்ளது? அவர் சம்பந்தப்பட்ட விடயத்திற்கான அமைச்சரா? அல்லது திணைக்களத்தில் உள்ள சிரேஷ்ட அதிகாரியா? அல்லது இந்த விடயம் தொடர்பில் அதிகாரம் உள்ள ஜனாதிபதி அல்லது வேறு சில அமைச்சர்களா?

*அதிகாரத்தில் உள்ள குறித்த நபர்களின் பெயர்களை ஒட்டும் தாளில் எழுதவும், வரைபடத்தில் அவர்களுக்கு அதிகாரம் உள்ள நிலையில் அவர்களின் பெயர்களை ஒட்டவும். ஒவ்வொரு நபர்களிடம் உள்ள முறை சார் அல்லது மறைமுகமான அதிகாரத்தின் தன்மையை வெளிப்படுத்துவதற்கு வேறுபட்ட நிறங்களை பயன்படுத்தவும். வெளிப்படையற்ற விதிமுறைகள் மற்றும் நடத்தைகள் எந்தப் பகுதியில் அதிகளவு செல்வாக்கை கொண்டுள்ளன என்பதை குறியிட்டு காட்டவும். வேறுபட்ட நிலையிலான தீர்மானம் எடுத்தலில், எந்த நபருக்கு அதிகாரம் அதிகம் உள்ளது என்பதனை காட்டுவதற்கு வெவ்வேறு நிறங்களை நீங்கள் பயன்படுத்த முடியும்: உதாரணமாக, தேசிய அல்லது உள்ளூர் அளவில் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.*

- இந்த செயன்முறையில் எந்த படிநிலைகளில் சேவ் த சில்ரன் தமது செல்வாக்கை காட்டலாம்? இந்த படிநிலைகளில் நீங்கள் எவ்வாறு செல்வாக்கு செலுத்த முடியும்?

*செயன்முறையில் நீங்கள் தலையீடு செய்யக் கூடிய படிநிலைகளை சுட்டிக்காட்டவும்.*

ஒவ்வொரு தீர்மானம் எடுத்தல் படிநிலையிலும் நீங்கள் உதவியை மேலதிகமாக இணைக்க வேண்டும் என்பதனை நினைவில் கொள்ளுங்கள். எதிர்ப்புக்கள் அல்லது தடைகளை கடந்து வருவதற்கான வழிகளை கண்டறிவதனை அது உள்ளடக்கியுள்ளது.

2. செயன்முறையில் உங்கள் இடையீட்டை திட்டமிடுங்கள்.

உங்களுடைய பரப்புரை நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு உங்களுடைய பகுப்பாய்வின் மூலம் நீங்கள் சேகரித்த தகவல்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை கீழ் வரும் அட்டவணை விளக்குகின்றது. இந்த உதாரணமானது தீர்மானம் எடுத்தல் செயன்முறையின் முதலாவது படிநிலையில் இருந்து பெறப்பட்டுள்ளது. நீங்கள் பகுப்பாய்வின் ஊடாக அடையாளங் கண்டு கொண்டுள்ள ஏனைய படிநிலைகளுக்கும் இதனைப் போன்ற அட்டவணையை நீங்கள் பயன்படுத்த முடியும்[11].

*உதாரணம்:*

| படிநிலை 1: நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்<br>ஸ்தாபனம் அல்லது நிறுவனம்: சுகாதார அமைச்சு | |
|---|---|
| முறை சார் செயன்முறை | சுகாதார அமைச்சில் உள்ள போஷாக்கு மற்றும் சிறுவர் உடல் நலன் அலுவலகங்கள் தேசிய உப்பு வலுவூட்டல் நிகழ்ச்சிக்கான பிரேரணை ஒன்றினை தயாரிக்கும். இந்த பிரேரணையை முழுமையாக தயாரிப்பதற்கான பொறுப்பிற்கு குறித்த அலுவலகங்களைச் சேர்ந்த ஒன்று அல்லது இரண்டு நபர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள். |
| முறை சாரா செயன்முறை | சிறுவர் உடல் நலன் அலுவலகம், போஷாக்கு அலுவலகம், உணவு மற்றும் விவசாயத்திற்கான அமைச்சு, உப்பு உற்பத்தியாளர்கள், சிறுவர்கள் தொடர்பில் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் உடல் நலள் சார்ந்த நிறுவனங்கள் இந்த முறை சாரா கலந்துரையாடலில் கலந்து கொள்ளும். கொள்கையின் அடிப்படை அம்சங்கள் பிரேரிக்கப்பட்டு, கலந்துரையாடப்படும். |
| தீர்மானம் எடுப்பவர்கள் உள்ளடக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் | சுகாதார அமைச்சில் உள்ள போஷாக்கு மற்றும் சிறுவர் உடல் நலன் அலுவலகங்களின் பணிப்பாளர்கள். |
| நடவடிக்கைக்கான அண்மைளவான தினம் | ஜனவரி மற்றும் பெப்ரவரி. நிதியாண்டின் ஆரம்பத்தில் சுகாதார அமைச்சில் உள்ள அலுவலகங்களுக்கு பெரும்பாலும் புதிய சிந்தனைகளுடன் முன்வருவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். |
| இந்த படிநிலையில் செயன்முறையில் எவ்வாறு செல்வாக்கு செலுத்த முடியும்? | ▪ சிறுவர் உடல் நலன் மற்றும் போஷாக்கு அலுவலகங்களின் அதிகாரிகளைச் சந்தித்து, அவர்களுக்கு எங்களுடைய பிரேரணை தொடர்பில் அறிமுகப்படுத்தி, அது குறித்த அவர்களது ஆர்வம், உதவி மற்றும் அக்கறையை அதிகரிக்கச் செய்தல்.<br>▪ பொருத்தமான சந்தர்ப்பங்களில் அவர்கள் செயற்பட்டு வரும் வேறு விடயங்கள் தொடர்பில், அவர்களுக்கு உதவிகளை வழங்குதல். பிரதான தீர்மானம் எடுப்பவர்கள் ஆர்வம் செலுத்தும் விடயங்கள் தொடர்பில் அறிந்து வைத்திருத்தல்.<br>▪ உப்பு உற்பத்தியாளர்கள், சிறுவர் உடல் நலன் மற்றும் சுகாதார நிறுவனங்கள் போன்ற குறித்த நிகழ்ச்சிக்கு உதவி வழங்கக் கூடிய நிறுவனங்களை சந்தித்து அவர்களுடைய உதவி வழங்கப்படும் விதத்தை பட்டியலிடல்.<br>▪ பிரேரணை தயாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள நபர்கள் அல்லது குழுவுடன் மிகுந்த நெருக்கமாக செயற்படல். உதவி வழங்கி, நிகழ்ச்சி தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டு கருத்து கூறவும். |

[11] மேலதிக தகவல்களுக்கு ஆர். ஷர்மாவின் *பரப்புரை பயிற்சி வழிகாட்டிக்கான அறிமுகம்* AED, SARA செயற்றிட்டம்,1995 பார்க்கவும்.

## வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வு

வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வானது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக பயனுள்ள பரப்புரை கருவித் தொகுதியாக மாறி வருகின்றது. செலவீனங்களுக்கான முன்னுரிமைகள மற்றும் காலத்திற்கு காலம் நிலவும் முறைமை தொடர்பிலான ஆதாரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் வெளியிடப்படும் வரவு செலவுத் திட்டத்தின் தகவல்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன.

முதலாவதா நீங்கள் குறித்த வரவு செலவுத் திட்ட தகவல் அல்லது ஆவணம் மற்றும் சனத்தொகை அளவு என்பவற்றை பெற வேண்டியது அவசியமாகும். அதன் பின்னர் உங்களுடைய பகுப்பாய்வுக்கான அளவுகளைத் தரக் கூடிய சில கணிப்பீடுகளை நீங்கள் முன்னெடுக்க முடியும். நீங்கள் கண்காணிப்பு செய்யும் பகுதி (உதாரணமாக, கல்விக்கான சிறுவர்களின் உரிமைகள்) போதிய அளவு வளங்களுடன் வழங்கப்பட்டுள்ளமை மற்றும் அல்லது வேறு பகுதிகளுடனான ஒப்பிடலின் போது முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை என்பன தொடர்பில் பகுப்பாய்வின் மூலம் நீங்கள் அறிந்து கொள்ள முடியும். அத்துடன், வளமானது சரியான வகையில் ஒதுக்கப்பட்டுள்ளதா, சரியான முறையில் செலவிடப்பட்டுள்ளதாக மற்றும் சரியான தேவைகளுக்கு செலவிடப்பட்டுள்ளதா போன்ற விடயங்களையும் நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

வரவு செலவுத் திட்டத்தின் பின்னால் உள்ள உண்மையான அளவுகளை நீங்கள் புரிந்துகொள்வதற்கான சில அடிப்படையான சூத்திரங்களை கீழே தருகின்றோம்.

**அ). முன்னுரிமை**
ஒவ்வொரு வருடமும் நீங்கள் கவனஞ் செலுத்தும் பகுதியில் அரசாங்கத்தின் செலவீனங்களின் பங்கை அறிந்து கொள்வதற்கு பின்வரும் கணிப்பீட்டு முறையை பயன்படுத்துங்கள் (எடுத்துக்காட்டாக கல்வி).

*கல்விக்கான செலவீனம் x 100*
______________________________
*மொத்த செலவீனம்*

**ஆ). உண்மையான செலவுகள்**
நீங்கள் கவனஞ் செலுத்தும் பகுதியில் செலவிடப்பட்ட உண்மையான அளவை கண்டறிந்து கொள்வதற்கு கீழ்வரும் கணிப்பீட்டு முறையை பயன்படுத்துங்கள்.

*கல்விக்கான பெயரளவிலான செலவீனம்*
______________________________
*விலைச்சரிவு*

**இ). உண்மையான செலவீனத்தில் வளர்ச்சி**
நீங்கள் கவனஞ் செலுத்தும் பகுதியில் செலவீனத்தின் உண்மையான வளர்ச்சியை கண்டறிந்து கொள்வதற்கு கீழ்வரும் கணிப்பீட்டு முறையை பயன்படுத்துங்கள்.

*இரண்டாவது வருடத்தின் தொகை – முதலாவது வருடத்தின் தொகை x 100*
______________________________
*முதலாவது வருடத்தின் தொகை*

**ஈ). ஒப்புரவு**
புவியியல் ரீதியாக நகரங்கள் அல்லது மாகாணங்கள் அல்லது பிராந்தியங்கள் என்பவற்றில் நீங்கள் கவனஞ் செலுத்தும் பகுதியில் (எடுத்துக்காட்டாக கல்வி) தலா நபர் ஒருவருக்கான செலவீனத்தை கண்டறிந்து கொள்வதற்கு கீழ்வரும் கணிப்பீட்டு முறையை பயன்படுத்துங்கள்.

*நகரத்தின்/மாகாணத்தின்/பிராந்தியத்தின் கல்விக்கான செலவீனம்*
______________________________
*நகரத்தின்/மாகாணத்தின்/பிராந்தியத்தின் மொத்த சனத்தொகை*

4.1 கொள்கை செயன்முறை வரைபடமாக்கல்

| கட்டங்கள் | ஈடுபட்டுள்ள தீர்மானம் எடுப்பவர்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்கள் | முறை சார் தீர்மானம் எடுத்தல் செயன்முறை | முறை சாரா தீர்மானம் எடுத்தல் செயன்முறை | நடவடிக்கைக்கான அண்ணளவான தினம் | இந்த கட்டத்தில் செயன்முறையில் நாங்கள் செல்வாக்கு செலுத்த முடியும். |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சி நிரல் தயாரித்தல் | | | | | |
| வடிவமைத்தல் மற்றும் சட்டம் இயற்றல் | | | | | |
| நடைமுறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் | | | | | |
| கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் | | | | | |

## 4.2 பரப்புரைக்கான சந்தர்ப்பங்களை அடையாளங் காணல்

தீர்மானம் எடுத்தல் காலத்தின் போது பரப்புரை சந்தர்ப்பமாக நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்கு நீங்கள் எந்தவொரு சமூக அல்லது அரசியல் நிகழ்வையும் பயன்படுத்தலாம்.

பரப்புரை சந்தர்ப்பங்களில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படலாம்:

- தீர்மானம் எடுப்பவரை சந்தித்து ஆலோசனை செய்தல்.
- மாநாடுகள்
- செயலமர்வுகள் .
- உலக எய்ட்ஸ் தின நிகழ்வுகள், சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள்
- பாரிய கொள்கை மீளாய்வுகளில் ஆலோசனைகள் - உதாரணமாக, வறுமை ஒழிப்பு மூலோபாய ஆவணம் (PRSP)
- விசேட பிரமுகரின் விஜயம்
- UNCRC அறிக்கையிடல் செயன்முறை – உதாரணமாக, மாற்று வழி அறிக்கைகளை தயாரித்தல்.

நிகழ்வுகளில் சமூகமளிப்பதற்கு நேரம் மற்றும் வளங்கள் தேவை. எனவே, நிகழ்வின் ஊடாக நாம் பெறப் போகின்ற விடயங்களின் அடிப்படையில் நிகழ்வுகளை மிகுந்த அவதானத்துடன் தெரிவு செய்வது அவசியமாகும்.

**மாற்றத்திற்கான சாத்தியம்:** எந்த வகையிலாவது விளைவுகளில் செல்வாக்கு செலுத்தக் கூடியதாக தீர்மானம் எடுத்தல் செயன்முறையின் படிநிலையொன்றாக அது இருத்தல் வேண்டும்.

**தீர்மானம் எடுப்பவர்கள் மீது செல்வாக்கு செலுத்துவதற்கான சாத்தியம்:** தீர்மானம் எடுப்பவர்கள் அங்கு இருக்கலாம் அல்லது, நிகழ்வின் விளைவு தொடர்பில் பரந்த எதிர்பார்ப்பு உடையவர்களாக இருக்கலாம்.

**வலையமைப்புக்கான சாத்தியம்:** உங்களுடைய செய்தியை மக்களிடம் கொண்டு செல்வதற்காக ஊடகவியலாளர்களுடன் சாத்தியமாகும் கூட்டுறவின் ஊடாக உறவை ஏற்படுத்தலாம் அல்லது வலுப்படுத்தலாம்.

**தீர்மானம் எடுப்பவர்கள் அல்லது செல்வாக்கு மிகுந்த மக்களை சந்திப்பதற்கான சந்தர்ப்பம்:** உறவை உருவாக்குவதற்கு அல்லது உங்கள் செய்தியை விநியோகிப்பதற்கு

**ஊடக அவதானம்:** இதன் மூலம் நீங்கள் தெரிவிக்கும் விடயம் தொடர்பில் மக்களின் விழிப்புணர்ச்சியை அதிகரிக்க முடியும். அத்துடன், சேவ் த சில்ரனின் அறிமுகத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடியும்.

**சிறுவர்கள் மீதான பார்வை:** சிறுவர்கள் பொருத்தமாயிருக்கும் பட்சத்தில் அவர்களையும் பங்குபெற்றச் செய்வதற்கான சந்தர்ப்பம்.

**மிகுந்த அளவில் சனத்திரள் அற்ற நிகழ்ச்சி நிரல்:** இதன் மூலம் விடயமானது அக்கறைகள் ஊடாக அதிகம் நிரப்பப்பட்டதாக இருக்காது.

நிகழ்வில் கலந்து கொள்ளல் மற்றும் ஏற்பாடு செய்தல் மூலமாக நீங்கள் அடைவதற்கு உத்தேசித்துள்ள விடயம் தொடர்பில் தெளிவான சிந்தனை மற்றும் உங்களுடைய பரப்புரை குறிக்கோளை அடைவதற்கு அது எவ்வாறு உங்களுக்கு உதவ முடியும்.

திட்டமிடுவதற்கு பொருத்தமான நேரம், கிடைக்கக் கூடிய வளங்கள் தொடர்பில் சிறந்த பயனைப் பெறுதல்.

தெளிவான பரப்புரை செய்தி

செய்திகளை பயனுள்ள வகையில் வழங்குவதற்கு சரியான ஆதரவு அளிக்கக் கூடிய சாதனங்கள்: முக்கியமான சாரம்சத்துடன் கூடிய அறிக்கைகள், சுவரொட்டிகள், இன்னபிற

## சர்வதேச கருவிகள் மற்றும் அறிக்கையிடும் செயன்முறைகள்

இவை மிகவும் பயனுள்ள பரப்புரை சந்தர்ப்பங்களாகும். உதாரணமாக, சிறுவர்கள் உரிமைகளுக்கான குழுவிற்கான பருவ கால அறிக்கை செயன்முறையின் மூலம் ஆவணங்களில் உள்ள அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கும், நடைமுறைப்படுத்தப்படும் வாக்குறுதிகளுக்கும் இடையில் காணப்படும் சமத்துவமின்மையை சுட்டிக்காட்டுகின்றது. தேசிய கொள்கை மற்றும் பயிற்சிகளை பகுப்பாய்வு செய்தல், தொடர்புகளை ஏற்படுத்தல், விழிப்புணர்ச்சியை அதிகரித்தல், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான இயலுமையை கட்டியெழுப்பல், சிறுவர் பங்குபற்றலுக்கு இலகுபடுத்தல், மற்றும் பலவற்றுக்கான வரைபு அமைப்பொன்றையும் அது நமக்கு வழங்குகின்றது.

இவ்வகையான பணிகள் பயனுறுதி மிக்கதாகும். ஆனால், அதற்கு அதிகளவிலான வளங்கள் மற்றும் தயார்ப்படுத்தல் தேவையாகவுள்ளது. அத்துடன், அவற்றுக்கு நேரமும் செலவிடப்படல் வேண்டும். பங்காளித்துவத்துடன் அல்லது ஒத்துழைப்பின் ஊடாகவே அதனை நிறைவேற்ற முடியும்[12].

பயிற்சி 4.2

**பரப்புரைக்கான சந்தர்ப்பங்களை அடையாளங் காணல்**

- செயல்வழித் தாள்கள் (Flip chart paper) இரண்டை ஒன்றாக இணைக்கவும், அதில் தற்போது முதல் ஆரம்பித்து, உங்களுடைய குறிக்கோள் நிறைவடையும் வரையான கால அட்டவணை அல்லது நாட்காட்டியை எழுதவும்.
- தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் பிரதான படிநிலைகளை வரைபுபடுத்தவும் (நீங்கள் ஏற்கனவே முன்னெடுத்த கொள்கை வரைபடமாக்கல் பயிற்சிகளில் இருந்து), அத்துடன், கால அட்டவணையில் குறிக்கவும். செயன்முறையில் பங்குகொள்வதற்கு சிவில் சமூகத்திற்கான சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்டவும். தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் சிவில் சமூகத்திற்கான சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்டியுள்ளது.
- தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சமூக அல்லது அரசியல் நிகழ்வுகள் குறித்து கலந்துரையாடவும். உங்களுடைய கால அட்டவணையில் இந்த நிகழ்வுகள் வெவ்வேறான நிறங்களில் குறிப்பிடவும். உங்களுடைய பரப்புரை வெளிப்படக் கூடிய வெளியக சுற்றுச் சூழலை அறிந்து கொள்வதற்கான எளிமையான வடிவத்தை இது நமக்கு வழங்கும்.
- கால அட்டவணையின் வெவ்வேறுபட்ட நிலைகளில் எந்த பிரதான தீர்மானம் எடுப்பவர் நமக்கு மிகவும் முக்கியமானவராக இருக்கின்றார் என்பதனை அடையாளங் காணல். இந்த கால அட்டவணையில் பரப்புரை இலக்குகள் மற்றும் செல்வாக்குகள், மற்றும் அவற்றை அணுகுவதற்கான சிறந்த அணுகுமுறைகள் மேலதிகமாக சில விடயங்களை நாம் சேர்க்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- இந்த பயிற்சியின் விளைவுகளின் சுருக்கத்தை செயன்முறைப் படிவம் 4.2 இல் விளக்கவும்.

[12] அத்தியாயம் 1ஐயும் பார்வையிடவும், பக் 8, மற்றும் சேவ் த சில்ரன் ஐக்கிய இராச்சியம், *சிறுவர்களின் உரிமை தொடர்பிலான ஐ.நா குழுவின் அறிக்கையிடல்: வதிவிட நிகழ்ச்சிகளுக்கான ஆரம்பத் தொகுதி, சேவ் த சில்ரன், 2007*

## சேவ் த சில்ரன் மற்றும் பங்காளர்கள் பிராந்திய அமைச்சக முயற்சிகளை மியான்மாரில் பயன்படுத்தினர்

சிறுவர்களின் குரல்கள் என்ற சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்துடனான ஒருங்கிணைந்த பரப்புரை முயற்சியின் ஒரு பகுதியாக, நாங்கள் மியன்மார் தேசிய சிறுவர்கள் மன்றத்தை ஒழுங்கு செய்தோம். பிராந்திய எல்லைக்கு குறுக்கான ஆட்கடத்தலுக்கு எதிரான செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகும். ஆட்கடத்தல் தொடர்பில் நேரடியான அனுபவங்களை உடைய சிறுவர்கள் அனைவருக்கும் ஆட்கடத்தல் பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் தமது அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதே இந்த மன்றம் ஒழுங்கு செய்யப்பட்டமைக்கான நோக்கமாகும். அத்துடன், இந்த கருத்துக்களை ஆட்கடத்தலுக்கு எதிரான COMMIT என்று அழைக்கப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட மீகொங் (Mekong) அமைச்சக முயற்சிகளுக்கு வழங்குவதும் இந்த மன்றத்தின் நோக்கங்களில் ஒன்றாக உள்ளது.

நாடகம், ஓவியம் மற்றும் பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் போன்ற பங்குபற்றல் நடவடிக்கைகள் ஊடாக நாங்கள் சிறுவர்களுக்கு ஆட்கடத்தல் தொடர்பில் தமது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் அதற்கு எதிராக போராடுவதற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றை தயாரிப்பதற்கும் ஊக்குவிப்பை வழங்கினோம். சிறுவர்களுடனான கலந்துரையாடல் அமர்வுக்கு அரசாங்க அமைப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ( ஐ.நா நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்) மன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தன.

மியன்மாரில் சிறுவர்கள் நேரடியாக பரப்புரையில் ஈடுபட்ட முதலாவது அனுபவமாக இந்த மன்றம் இருக்கின்றது. நடவடிக்கைக்கான தமது அக்கறைகள் மற்றும் பரிந்துரைகளை குரலாக முன்வைப்பதற்கான சிறந்த வெளிப்படையான சந்தர்ப்பத்தை சிறுவர்களுக்கு இந்த மன்றம் வழங்கியது. மியன்மாரில் முன்னெடுக்கப்பட்ட அமைச்சக ஆலோசனையின் ஊடான COMMIT செயன்முறையின் காரணமாகவும், பிராந்தியத்தில் இடம்பெறும் ஆட்கடத்தலுக்கு எதிரான முயற்சியில் அரசாங்கம் வெளிப்படுத்திய ஆர்வத்தின் காரணமாகவும் அது சாத்தியமானது.

ஒவ்வொரு தேசிய மன்றமும் தமது பிராந்திய மன்றங்களுக்கு மனித ஆட்கடத்தல் தொடர்பில் சிறுவர் பிரதிநிதிகளை அனுப்பி வைப்பதற்கு கோரப்பட்டன. பலவந்தமான தொழிலாளர்கள் தொடர்பில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திற்கும் (ILO) அரசாங்கத்திற்கும் இடையில் பலவீனமான உறவு காணப்பட்டமையினால் இதன் போது மியன்மாரால் தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்க முடியாத நிலை காணப்பட்டது. எவ்வாறாயினும், மியன்மார் சிறுவர்கள் தமது பரிந்துரைகளை கடித வடிவில் வேறு தேசிய மன்றங்களின் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைத்தனர். சிறுவர் பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் இவை சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், சேவ் த சில்ரனால் குறித்த ஆவணம் அமைச்சக ஆலோசனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மியன்மார் உள்ளிட்ட நாடுகளில் பிராந்திய அரசாங்கங்கள் ஆட்கடத்தலில் இருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடனான செயற்பாடுகளை ஆரம்பித்திருப்பதனை உறுதி செய்வதற்கு சிறுவர்களுக்கான குரல்கள் என்ற பரப்புரை முயற்சி தற்போது செயன்முறையை பின்பற்றல் வேண்டும்.

**நாங்கள் கற்றது**

- தனிப்பட்ட அரசாங்கங்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படாது மீகொங் அரசாங்கங்களுக்கு பொதுவானதாக இந்த பரப்புரை முன்னெடுக்கப்பட்டமையினால் அரசாங்கங்கள் பரப்புரைக்கு இயைந்து செயற்பட்டன. விடயம் தொடர்பிலான கூருணர்வை தணிப்பதற்கு இந்த செயற்பாடு நமக்கு உதவியது.
- நாங்களும் மற்றும் எமது பங்காளர்களும் COMMIT ஐ ஒரு சந்தர்ப்பமாக அடையாளங் கண்டு எங்கள் பரப்புரையில் இருந்து சாதக விளைவுகளை பெற்றுக் கொள்ள திட்டமிட்டோம்.
- சந்தர்ப்பங்களுக்கான ஜன்னல்கள் திறந்திருக்குமாயின், தடைகள் மற்றும் இன்னல்களுக்கு மத்தியிலும் மியன்மார் போன்ற கூருணர்வான அரசியல் நிலைமை காணப்படும் நாடுகளிலும் பரப்புரையை முன்னெடுப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன.



Sandar Aung, reunited with her family in Myanmar after returning from work in Thailand.

செயன்முறைப் படிவம்

4.2 சந்தர்ப்பங்களை திட்டமிடல்

| திகதி | செல்வாக்குக்கான நிகழ்வு/சந்தர்ப்பம் | இலக்கு | சாத்தியமான பரப்புரை நடவடிக்கை | தலைமை தாங்கி முன்செல்பவர் யார் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | +1. | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

அத்தியாயம் 5

# பரப்புரை இலக்குகள்

5.1 பிரதான இலக்குகள் மற்றும் ஆதிக்கங்களை அடையாளங் காணல்

5.2 உங்கள் இலக்குகள் தொடர்பில் ஆதிக்கம் செலுத்தல்



அத்தியாயம் 5

# அறிமுகம்

முந்தைய கற்றல் சாதனத்தில் நீங்கள் தீர்மானம் எடுத்தல் செயன்முறை மற்றும் செயன்முறையின் வேறுபட்ட நிலைகளில் யாருக்கு அதிக அதிகாரம் உள்ளது என்பன தொடர்பில் கவனஞ் செலுத்தக் கூடியதாக இருந்தது. தற்போது உங்களுடைய பரப்புரை முயற்சிகள் அவதானஞ் செலுத்த வேண்டிய பகுதிகள் குறித்து நீங்கள் தீர்மானிக்க வேண்டிய மற்றும் நீங்கள் விரும்பும் மாற்றங்களை கொண்டு வருவதற்கு தீர்மானத்தை எடுக்கக் கூடிய மக்கள் ஆகிய இலக்குகளை அடையாளங் காண வேண்டிய தேவை உள்ளது. மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் அவர்கள் எத்தனை தூரம் ஆர்வத்துடன் இருக்கின்றார்கள் என்றும் மற்றும் அவர்கள் மீது செல்வாக்கு செலுத்தக் கூடிய சிறந்த வகை குறித்தும் நீங்கள் கண்டறிய வேண்டும். இதில் பொதுவாக தீர்மானம் எடுப்பவர்கள் மீது செல்வாக்கு செலுத்தும் மக்கள் அல்லது ஸ்தாபனங்களது "செல்வாக்கை" அடையாளங் காண்பது அடங்கியுள்ளது.

உண்மையான அதிகாரம் மற்றும் செல்வாக்கு எதில் தங்கியுள்ளது என்பதனை நீங்கள் கண்டறிய வேண்டும். இவற்றில் சில வெளிப்படையானதாக இருக்கலாம். ஆனால் இவற்றில் சில மறைமுகமானதாக இருக்கலாம். உதாரணமாக, நபரொருவரின் தொழிலுக்கான விளக்கத்தில் குறிப்பிட்ட கொள்கை தீர்மானங்கள் அவர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருக்கலாம். ஆனால், இந்த தீர்மானங்கள் தொடர்பிலான உண்மையான அதிகாரம் நிதி அமைச்சு போன்ற வேறு எங்காவது தங்கியிருக்கும். நீங்கள் விரும்பும் மாற்றத்தை கொண்டு வருவதற்கான உங்களுடைய இலக்கின் இயலுமையும், அவர்களது அரசியல் ஆதரவு மற்றும் அவர்களது வளங்களிலேயே தங்கியுள்ளது.

அத்துடன் நீங்கள் ஏற்படுத்த விரும்பும் மாற்றம் தொடர்பில் குறித்த மக்களின் விருப்பத்தையும் நீங்கள் கண்டறிய வேண்டிய கட்டாயம் உள்ளது. உங்களுடைய பரப்புரை விடயம் தொடர்பில் அவர்கள் அறிந்து வைத்துள்ள அளவு மற்றும் அது தொடர்பில் அவர்கள் நம்புவது என்ன என்பன உட்பட தொகையான வேறுபட்ட விடயங்களின் அடிப்படையிலேயே இது தங்கியுள்ளது. அத்துடன், இந்த விடயம் தொடர்பில் அவர்களது ஆர்வம் சார்ந்ததாகவும் அது உள்ளது. அது தனிப்பட்டதாகவோ அல்லது அரசியல் சார்ந்ததாகவோ இருக்கலாம். உதாரணமாக, உடல் நலன் பராமரிப்புக்கு பணம் வழங்க இயலாமையினால் ஏற்படும் விளைவுகள், அவர்கள் தனிப்பட்ட ரீதியில் பெற்ற அனுபவமாக இருக்கின்றது. அல்லது அடுத்த தேர்தலில் தமது நிலையை தக்க வைத்துக் கொள்வதற்கு வாக்காளர்களுடன் அவர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என அதனை எளிமையாக பிரதான விடயமாக அடையாளங் காணலாம்.

மாற்றங்கள் தொடர்பில் உங்களுடைய இலக்குகளின் விருப்பங்கள் மற்றும் இயலுமைகள் குறித்து நீங்கள் அறிந்து வைத்திருப்பின், அவர்களை எவ்வாறு அணுக முடியும் என நீங்கள் தீர்மானிக்க முடியும். நீங்கள் அவர்களுடன் ஒருங்கிணைந்த வழியில் செயற்பட முடியும். நீங்கள் அவர்களை ஏற்கச் செய்யலாம் அல்லது அவர்களை பகிரங்கமாக சவாலுக்கு உட்படுத்தலாம்.

உங்களுடைய பரப்புரையில் நீங்கள் யாரை இலக்கு வைக்க வேண்டும் மற்றும் அதனை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் பணியாற்றுவதற்கான வழிகளை நீங்கள் கண்டறிவதற்கான கேள்விகளை இந்த அத்தியாயம் உங்களுக்கு விளக்குகின்றது.

## 5.1 பிரதான இலக்குகள் மற்றும் ஆதிக்கங்களை அடையாளங் காணல்

இலக்குகள்:

**நீங்கள் விரும்பும் மாற்றத்தை கொண்டு வரக் கூடிய நிலையில் உள்ள பிரதான தனி நபர்கள்.**

சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்யும் பொறுப்பினை வழங்கும் மற்றும் சிறுவர்களுக்கான சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் கொண்ட அமைப்புக்கள் அல்லது தனிநபர்கள் ஸ்தாபன அதிகாரத்தை பிரதிநிதித்துவம் செய்யும் மேலே குறிப்பிட்ட கடமை வகிப்பவர்களே பரப்புரையின் பிரதான இலக்காளர்களாக உள்ளனர். இலக்கு என்பது உங்களுடைய நிபந்தனைக்கு பதிலளிக்கக் கூடிய மற்றும் உங்களுடைய விடயம் சார்ந்ததாக அரசியல் செயன்முறையை நகர்த்தக் கூடிய நபர் (அல்லது மக்கள் குழு) ஆகும்.

சிறுவர்களின் உரிமை தொடர்பான ஐ.நா சாசனத்திற்கு (UNCRC) அமைவாக சிறுவர்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கான முதன்மை பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது. அத்துடன், தேசிய மற்றும் உள்ளூர் மட்டத்தில் அரசியல் மற்றும் நிர்வாக முறை உட்பட அரசாங்க கடமை வகிப்பவர்களின் செல்வாக்கும் உள்ளது. நீங்கள் செல்வாக்கு செலுத்துவதற்கு முயற்சிக்கும் திணைக்களம் எது மற்றும் அரசாங்கத்தின் எந்த நிலை என்பதனை நீங்கள் குறிப்பிடல் வேண்டும்.

சர்வதேச அமைப்புக்கள், நிதியுதவியாளர்கள், தனியார் வர்த்தகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமுதாய நிறுவனங்கள், இன்னபிற உள்ளிட்ட சமூகத்தில் ஏனைய வேறு குழுக்களும் கடமை வகிப்பவர்களாகும், கடமை வகிப்பவர்கள் முறை சார் ஸ்தாபனங்களாகவும் (உள்ளூர் சபைகள் அல்லது பாடசாலை சங்கங்கள் போன்றன) மற்றும் முறை சாரா ஸ்தாபனங்களாகவும் (மதத் தலைவர்கள் அல்லது சமூகஞ் சார்ந்த குழுக்கள் போன்றன) இருப்பர்.

பரப்புரை அக்கறை செலுத்தும் *கொள்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்* பொதுவாக அரசாங்க அமைப்புக்கள் மற்றும் நிர்வாக அமைப்புக்கள் தொடர்பிலேயே கவனஞ் செலுத்தும். சிறுவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் (எடுத்துக்காட்டாக பெண்பால் விருத்த சேதனம் அல்லது சிறு வயது திருமணங்கள்) பரப்புரை அக்கறை செலுத்தும் பயிற்சிகள் பொதுவாக முறை சாரா தலைவர்களால் (எடுத்துக்காட்டாக, மதத் தலைவர்கள், பாடசாலை சங்கங்கள்) வழிநடத்தப்படுகின்றன. தனிப்பட்ட பெற்றோர்கள் வழமையாக பரப்புரை அவதானத்தில் கவனஞ் செலுத்துவதில்லை. எவ்வாறாயினும், பெற்றோர்களின் குழுக்கள், எடுத்துக்காட்டாக பாடசாலை சங்கம், பரப்புரை நடவடிக்கை தொடர்பில் கவனஞ் செலுத்தும்

செல்வாக்குகள்:

**உங்களின் இலக்கு தொடர்பில் சில செல்வாக்கு உடைய நபர்கள், இந்த செல்வாக்கை உங்கள் வழக்குக்காக அல்லது அதற்கு எதிராக பயன்படுத்தக் கூடியவர்கள்**

இந்த இலக்கு குழுக்கள் தம் மீது, தமது சக ஊழியர்கள் மீது மற்றும் அலுவலகத்தில் உள்ள உயர் அதிகாரிகள் மீது செல்வாக்கை வெளிப்படுத்தக் கூடிய மக்கள் கூட்டத்தினால் சூழப்பட்டிருப்பர். ஊடகம் அல்லது நிதியுதவியாளர்கள் என்ற அவர்களுடைய சமூக அல்லது பொருளாதார அதிகாரத்தின் காரணமாக மற்றும் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் மிகவும் நெருக்கமான மக்களின் காரணமாக ஏனைய நபர்களும் அவர்கள் மீது செல்வாக்கு செலுத்த முடியும். அவர்கள் இந்த செல்வாக்கை உங்கள் வழக்குக்கு ஆதரவாக அல்லது எதிராக பயன்படுத்த முடியும். அத்துடன், உங்களுடைய பரப்புரையில் முக்கியமான அம்சமாக மாறிவிடுவார்கள்: அவர்கள் உங்கள் பக்கத்தில் இருப்பார்களாயின் உங்கள் வழக்குக்கு அவர்கள் மேலும் உதவி வழங்குவர். அவர்கள் உங்களுடைய காரணங்களை பகிர்ந்து கொள்ளவில்லையாயின் அவர்களை எவ்வாறு வெற்றி கொள்வது அல்லது அவர்களுடைய செல்வாக்கை எவ்வாறு மத்தியப்படுத்துவது என்பது தொடர்பில் நீங்கள் கவனஞ் செலுத்த வேண்டிய தேவை உள்ளது.

பங்குதாரர்கள்:

**நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தினால் பாதிக்கப்படும் அல்லது பாதிக்கப்பட்ட அனைவரும்**


நீங்கள் பரப்புரை செய்யும் விடயத்திற்காக, பிரதான இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்குகளைத் தவிர விடயம் தொடர்பில் பாதிப்பை எதிர்நோக்கிய அல்லது நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தால் பாதிப்பை எதிர்நோக்கவுள்ள வேறு பல மக்களும் உள்ளனர்: பிரதான பங்குதாரர்களில் சிறுவர்கள் மற்றும் பங்காளர் நிறுவனங்கள் உள்ளடங்குகின்றன.

நீங்கள் எதிர்நோக்கும் மாற்றம் குறித்த அவர்களுடைய நடத்தையின் அடிப்படையில் உங்களுடைய இலக்குக் குழுக்கள் மற்றும் அவர்கள் மீது செல்வாக்கு செலுத்துவர்கள், அத்துடன் வேறு பங்குதாரர்களை நீங்கள் **நண்பர்கள்** அல்லது **எதிரிகள்** என பிரித்து அறிந்து கொள்ள முடியும்.

## பயிற்சி 5.1
## பங்குதாரர்களை வரைபடமாற்றும் பயிற்சி

அனைத்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்களையும் மற்றும் தொடர்புகள், அதிகார பல்வகைத் தன்மை மற்றும் அவர்களுக்கு இடையிலான உறவுகள் தொடர்பில் பயிற்சி செய்வதற்கு உங்கள் வரைபடம் உதவி புரியும். உங்களுடைய இலக்குக் குழுக்களுடன் ஆரம்பித்து பின்னர் வேறு பங்குதாரர்களை உள்ளடக்குங்கள் (நண்பர்கள் மற்றும் எதிரிகள் என இருதரப்பினரையும்).

- செயல்வழி தாளில் கீழே காட்டப்பட்டவாறு இரண்டு அம்புக்குறிகளை நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்திற்கும் மற்றும் அவர்களது அதிகாரம் தொடர்பிலும் ஆதரவு/எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் குறுக்காக வரையுங்கள்.
- குழு அளவிலான மூளைச் சலவையின் ஊடாக சாத்தியமான பரப்புரை இலக்குக் குழுக்கள் மற்றும் இடங்களின் ஒவ்வொரு பெயரையும் அட்டை ஒன்றில் எழுதவும் (ஒவ்வொரு மாற்ற குறிக்கோளும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படல் வேண்டும்).
- உங்களுடைய பரப்புரை குறிக்கோள்கள் மற்றும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அவர்களின் அதிகாரம் என்பவற்றின் அடிப்படையில் அவர்களது ஆதரவு அல்லது எதிர்ப்பு குறித்த உங்களது எண்ணங்களின் அடிப்படையில் உங்களுடைய இலக்குக் குழுக்களை நிர்ணயுங்கள்.
- அதிக அதிகாரத்துடன் உடையவர்களே பிரதான இலக்குக் குழுவாகவும் மற்றும் உங்களால் முன்னிலைப்படுத்தப்படுபவராகவும் இருத்தல் வேண்டும்.
- செல்வாக்கு செலுத்துவதற்கு மிகவும் கடினமான இலக்குக் குழுவானது மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அதிக அதிகாரம் உடையதாக இருக்கும்.
- மீண்டும் அதனையே செய்யுங்கள். ஆனால் சாதகமான செல்வாக்குகள் மற்றும் கூட்டணிகளை (உங்களுடைய பரப்புரை குறிக்கோள்களுக்கு ஆதரவு தருபவர்கள்) மற்றும் உங்களுடைய எதிரிகளை அடையாளங் கண்டு கொள்வதற்கு வேறுபட்ட நிறங்களை பயன்படுத்துங்கள்.




*சில யோசனைகள்*

- நீங்கள் ஏற்கனவே முன்னெடுத்த விடயங்களை மீண்டும் அலசி பார்க்கவும்.
- அதிகாரம் என்பது உண்மையிலேயே எங்கு தங்கியுள்ளது என சிந்திக்கவும்.
- இயலுமானவரையில் சுட்டிக்காட்டுங்கள் (அனைத்து அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் சிந்திப்பதிலும் பார்க்க தனிப்பட்ட நபர்கள் மற்றும் திணைக்களங்கள் தொடர்பில் சிந்திக்கவும்)

செயன்முறைப் படிவம்

## 5.1 இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்குகள்

| ஒவ்வொரு குறிக்கோளுக்கும் | | | | |
|---|---|---|---|---|
| இலக்குக் குழு<br>பிரதான தீர்மானம் எடுப்பவர்கள், தனிப்பட்ட நபர்கள், நிறுவனங்கள் அல்ல | செல்வாக்குகள்<br>தமது செல்வாக்கின் ஊடாக தீர்மானம் எடுப்பவர்கள் மீது செல்வாக்கு செலுத்தக் கூடியவர்கள். | இலக்குக்கான அதிகாரம்<br>மாற்றத்தை கொண்டு வருவதற்கு<br>உயர்ந்த/மத்திய தர/குறைந்த | இலக்குக்கான ஆர்வம்<br>மாற்றம் ஏற்படுவதனை நிறைவேற்றல்<br>தீவிரமாக/மத்திய தரமாக/பலவீனமாக | பரப்புரை மற்றும் மாற்றங்களை கொண்டு வருவதற்கு அவர்களிடம் இருந்து நீங்கள் எதனை எதிர்பார்க்கின்றீர்கள் தொடர்பி இலக்குக் குழுவின் ஆர்வம். |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## 5.2 உங்கள் இலக்குகள் மீது செல்வாக்கு செலுத்தல்

உங்களுடைய இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்குகளை அடையாளங் கண்ட பின்னர் அவை மீது எவ்வாறு செல்வாக்கு செலுத்துவது என்பது தொடர்பில் நீங்கள் தீர்மானிக்க வேண்டியது தேவையாகும். அந்த வகையில் அவர்களுடைய நம்பிக்கைகள், நடத்தைகள் மற்றும் ஆர்வங்கள் உங்களுடையதுக்கு சமமானதாகும். அவர்கள் மீது செல்வாக்கு செலுத்துவது இலகுவானதாக இருக்கலாம். ஆனால், உங்களுடையவற்றுக்கு அவை மிகவும் கடினமானதாக அல்லது எதிர்க்கப்பட்டதாக இருக்கலாம். ஆகவே, அவ்வாறான சந்தர்ப்பங்களில் உங்களால் அவை மீது செல்வாக்கு செலுத்துவது கடினமாகும். உங்களுக்கு கிடைக்கக் கூடிய மூலங்கள் அனைத்திலும் இருந்து இலக்குக் குழுக்களின் நடத்தைகள் மற்றும் ஆர்வங்களை கண்டறிந்து கொள்வது மிகவும் முக்கியமான ஒரு செயன்முறையாகும்.


- தனிப்பட்ட அனுபவம்
- வேறு நபர்கள் மற்றும் சக ஊழியர்களின் அனுபவம்
- Google போன்ற இணையத்தள மற்றும் இணைய தேடல் பொறிகள்
- பத்திரிகைகள் மற்றும் வேறு ஏனைய ஊடகங்கள்

குறிப்பிட்ட இலக்குக் குழுவின் செல்வாக்கு செலுத்தக் கூடிய மிகவும் பயனுள்ள வழிகளை தெரிவு செய்வதே அடுத்த கட்டமாகும். கடந்த காலத்தில் சிறப்பாக இடம்பெற்றது எது என்பதன் அடிப்படையில் பின்வரும் வடிவங்களில் உள்வாங்கப்பட வேண்டிய வடிவம் எது என்பதனை நீங்கள் தீர்மானிக்க முடியும்.

**கூட்டுறவு (உள்ளக ரீதியாக) –** உதாரணமாக, தீர்வுகளை கண்டறிவதற்கு அரசாங்கத்துடன் இணைந்து செயற்படல். உங்களுடைய இலக்குக் குழுக்களுடன் உறவை வளர்ப்பதற்கு இந்த அணுகுமுறை உங்களுக்கு உதவும். அத்துடன், அவர்களது நம்பிக்கையைப் பெறுவதுடன் நேரடியாக அணுகுவதற்கான சந்தர்ப்பம் ஆகியவற்றை வழங்குகின்றது. அத்துடன், உங்களுடைய இலக்குக் குழுக்கள் ஈடுபட்டுள்ள செயன்முறைகளின் நிலைகள் மற்றும் புரிந்துணர்வுகளை பெற்றுக் கொள்ளவும் உதவி வழங்கும். எவ்வாறாயினும், நீங்கள் பிரதான பங்குதாரர்களை வெளியேற்றுதல் மற்றும் உங்கள் இலக்குக் குழுக்களுக்கான சவால் நிறைந்த சட்ட நிலைமை மற்றும் தவறாக பிரதிநிதித்துவப்படுத்தல் என்பன காரணமான உங்களுடைய விழுமியங்களை விட்டுக் கொடுக்க நேரிடும்.

**எதிர்ப்புத் தன்மை (முற்று முழுதாக வெளிநபராக) –**பாரிய அளவிலான ஒன்று திரட்டல், ஊடக பிராசரங்கள் மற்றும் இன்னபிற ஊடாக விடயம் ஒன்றை நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளடக்கல். இந்த அணுகுமுறையானது உங்களுக்கு உயர்ந்த அளவிலான விபரம் மற்றும் நடவடிக்கைக்கான பாரிய சுதந்திரத்தையும் வழங்கும். மறுபுறத்தில், அது உற்பத்திக்கு எதிர்த்தன்மையானதாக இருக்கும். உங்களுடைய இலக்குக் குழுவானது, தாம் ஏதோவொரு மூலையை நோக்கி இட்டுச் செல்லப்படுகின்றோம் என கருதினால், உங்களுடைய எதிர்கால உறவினை நீங்கள் சேதப்படுத்திக் கொள்ள நேரிடும். அத்துடன் நிதி வழங்கலையும் இழக்க நேரிடும். சவால்களும் அதிகரித்து, முழுமையாக அழிவடையும் நிலை தோன்றும். இந்த அணுகுமுறையை பயன்படுத்தும் போது மிகுந்த அவதானத்துடன் நீங்கள் கையாள வேண்டும்.

**நம்ப வைக்கும் தன்மை (சிக்கல் நிறைந்த உள்நபராக)-** உங்களுடைய கருத்துக்களின் முக்கியத்துவத்தை உங்களுடைய இலக்குக் குழு ஏற்றுக் கொள்வதற்கான எதிர்பார்ப்புடன் ஆதாரங்களை சமர்ப்பித்தல். முன்னர் குறிப்பிட்ட இரண்டு முறைகளில் உள்ள படுகுழிகள் சிலவற்றை தவிர்ப்பதன் மூலம், இந்த அணுகுமுறையானது ஏனையோருடன் பணிபுரிவதற்கான மேலும் சில சந்தர்ப்பங்களை வழங்கும். அத்துடன், அது பொதுவாக மேலும் பகிரங்கமானதாகவும், திறந்த மனதுடையதாகவும் மற்றும் கடுமையாக போட்டியிடும் தன்மை குறைந்ததாகவும் இருக்கும். எவ்வாறாயினும், நீங்கள் உறுதியில்லாதிருப்பது போலவே உணர்வீர்கள்.




பயிற்சி 5.2

அவர்கள் அறிந்து வைத்திருப்பது மற்றும் அக்கறை கொள்வது எவற்றை பற்றி?

- மாற்ற குறிக்கோள்களில் ஒன்றை தெரிவு செய்யுங்கள்.
- உங்களுடைய செல்வாக்குகள் மற்றும் இலக்குக் குழுக்களை பட்டியலிடுங்கள்.
- அவர்கள் தொடர்பில் உங்களுக்கு தெரிந்த அனைத்தையும் அட்டவணைப்படுத்துங்கள். உங்களுடைய விடயம் தொடர்பில் அவர்களுடைய ஆதரவை செல்வாக்கிக் கொள்ளும் செயன்முறையுடன் இணைந்ததாக அது இருக்கலாம். பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தவும்:
  - அவர்களுடைய ஆர்வங்கள் எவை – தொழிற்சார்ந்த மற்றும் தனிப்பட்ட?
  - அதிகார உறவுமுறைகள் எவ்வாறு மாற்றமடைகின்றன?
  - ஆர்வங்கள் மற்றும் உறவுமுறைகளில் உள்ள நுட்பங்கள் எவை?

*உதாரணம்:*

**மாற்ற குறிக்கோள்:** தேசிய கல்வி கொள்கையை மாற்றுவதற்கு, இதன் மூலம் தேசிய விபரங்களை வடிவமைக்கும் அதிகாரிகள் சிறுவர்களின் எண்ணங்களை கவனத்திற் கொள்வதற்கு நேரிடும்.

| இலக்குக் குழுக்களும் செல்வாக்குகளும் | இந்த விடயம் தொடர்பில் பார்வையாளர்கள் அறிந்து வைத்திருப்பது என்ன? | பார்வையளார்கள் நம்புவது எதனை? அவன் அல்லது அவளின் நடத்தை என்ன? | பார்வையாளர்கள் அக்கறை கொள்ளும் விடயங்கள் எவை? (அது குறித்த விடயம் சார்ந்ததாக இல்லாத போதிலும்) |
|---|---|---|---|
| கல்வி அமைச்சர் | சிறுவர்களை பாதிக்கும் தீர்மானம் எடுத்தலில் சிறுவர்களின் பங்குபற்றுதல் தொடர்பில் நிறைய விடயங்கள் கேள்விப்பட்டதில்லை. | மிகவும் முக்கியமான விடயம் அல்ல. தீர்மானம் எடுப்பது என்பது பெரியவர்களின் பாத்திரம். மிகவும் முக்கியமான தெரிவுகளை தீர்மானிப்பதற்கு தகுதி சிறுவர்களிடம் இல்லை. | மீண்டும் தேர்தல். உலக வங்கி உதவி. |
| ஊடகம் | மேலே குறிப்பிட்டதைப் போன்றே | நிகழ்ச்சி நிரலில் இல்லை. | விநியோகமாகும் விகிதம்- உதாரணமாக: அதிகம் விற்பனையாகும் செய்திகள். உயர் அக்கறையுள்ள விசேட செய்திகளை வழங்கல். |
| ஆசிரியர் தொழிற் சங்கங்கள் | அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தீர்மானம் எடுத்தலில் சிறுவர்களின் பங்குபற்றல் தொடர்பிலான ஆவணங்களை வைத்துள்ளார்கள். | அவர்களுக்கு இடையிலான நிலைகளில் உள்ள பிரிவின் காரணமாக, விபரங்கள் தொடர்பில் சிறுவர்கள் ஆலோசிக்கப்பட வேண்டும் என சிந்திக்கின்றார்கள். ஆனால் அவை நிறைவேற்றப்படுவதில்லை. | இந்த விபரங்களின் பேறாக அவர்களுக்கு அதிக வேலைப்பளுவை வழங்குகின்றது மற்றும் அதிக அழுத்தத்தை வழங்குகின்றது. சிறுவர்களின் கல்வி தொடர்பில் எதிர்பார்க்கப்படும் நிலையானது பலவீனமாகும். |

## நேபாளத்தில் வேறுபட்ட இலக்குக் குழுக்களுக்கு, வேறுபட்ட உத்திகளை பயன்படுத்தல்.

2002 முதல், சேவ் த சில்ரன் அமைப்பானது நேபாளத்தில் உள்ள பாடசாலைகளில் உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தும் தண்டனைகளை தடை செய்வதற்கு பல்வேறு வகையான அணுகுமுறைகளை கையாண்டுள்ளது.

**சேவை விநியோகம்: சிறந்த பயிற்சி**
நேபாளில் தமது நிகழ்ச்சி முன்னெடுக்கப்படும் பகுதிகளில் சிறுவர் நட்புறவு பாடசாலைகள் சூழலை உருவாக்குவதற்காக சேவ் த சில்ரன் அமைப்பானது கல்வி அமைச்சு மற்றும் 20 உள்ளூர் பங்காளிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. வலுவூட்டலானது பௌதீக சுற்றுச் சூழலை மேம்படுத்தல் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி முறைகள், மற்றும் ஒழுக்காற்றின் வன்முறையற்ற வடிவத்தை மேம்படுத்தல் என்பன மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. 2006ஆம் ஆண்டளவில், இந்த நிகழ்ச்சியின் கீழ் 1500 சிறுவர் நட்புறவு பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

**பிரயோக வழிகாட்டிகள்**
தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் "வன்முறையற்ற கற்பித்தல்" ஆசிரியர் கற்பித்தல் கையேட்டை வடிவமைத்தல் என்பவற்றிற்கு சேவ் த சில்ரன் அமைப்பு உதவி வழங்கி வருகின்றது. அமைச்சு, பங்காளர்கள் மற்றும் ஆசிரியர்களால்இவை பரப்புரை கருவியாக பயன்படுத்தப்படுகின்றது.

**விழிப்புணர்ச்சியை வளர்த்தல்.**
ஊடகத்தின் உணர்ச்சிப் பூர்வமான பரப்புரையுடன் இணைந்து மாவட்ட மற்றும் தேசிய அளவிலான செயலமர்வுகளின் ஊடாகஇந்த விடயமானது வெற்றிகரமாக அரசாங்கத்திடம் கொண்டு செல்லப்பட்டது. கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அரசாங்கத்தின் வேறு உயர் மட்ட அதிகாரிகளும் இந்த செயலமர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இரக்கமற்ற தொடர்ச்சியான ஆதரவு தேடி கருத்து முன்வைத்தமையைத் தொடர்ந்து, பாடசாலைகளில் உடற்சார் தண்டனைகளை தடை செய்வதற்கான உறுதிமொழியை அமைச்சு வழங்கியது. இந்த தடைக்கு ஆதரவு வழங்கும் வகையில் கல்வி வழிகாட்டியொன்றை வடிவமைப்பதற்கு சேவ் த சில்ரன் அமைப்பு தற்போது அமைச்சுக்கு உதவி வழங்கி வருகின்றது.

**சிறுவர்களின் பங்குபற்றல்**
சேவ் த சில்ரனின் ஆதரவுடன் சிறுவர் கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலை சுயமதிப்பீட்டு கருவி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் தமது பாடசாலைகளை மீளாய்வு செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்றது. அனைத்து மீளாய்வுகளிலும், உடற் சார் மற்றும் அவமானப்படுத்தக் கூடிய தண்டனைகளையே மிகவும் முக்கியமான விடயமாக சிறுவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர். ஆசிரியர்கள் மற்றும் கிராம மட்டத்திலான கல்வி குழுக்கள் ஆகியவற்றை இலக்கு வைத்து சிறுவர்கள் உடற்சார் தண்டனைகளை பாடசாலைகளில் இருந்து நீக்குவதற்கான கருத்துக்களை தடை செய்தனர். இதன் விளைவாக, இன்று சுமார் 100 பாடசாலைகள் பிரம்புகளற்ற பாடசாலைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

**நண்பர்களுடன் இணைந்து செயற்படல்**
உள்ளூர் பங்காளர் நிறுவனமான சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான நிலையம் (Center for Victims of Torture) பரப்புரை செயற்பாடுகளில் மிகவும் முக்கியமான பாத்திரத்தை வகித்தது. அவர்கள் மன நல விடயங்களில் பணியாற்றுகின்றனர். அத்துடன் பெற்றோர்கள் மற்றும் சிறுவர்களுக்கு உளச்சமூகமவியல் ஆதரவையும் வழங்குகின்றனர். அவர்களுடைய பணி அனுபவங்கள் சம்பவ கற்கைகளாக பதிவு செய்யப்படுகின்றன. அவற்றிலிருந்து, உடற்சார் தண்டனைகள் ஆட்கடத்தல், சிறுவர் தொழிலாளர்களாக மாறுதல் மற்றும் சிறுவர்களின் மன நலம் பாதித்தல் என்பன அதிகரிப்பதற்கு காரணமாக அமைவது கண்டறியப்பட்டது. இந்த ஆதாரத்தின் அடிப்படையில், உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதேவேளை, நேபாள அரசியலமைப்புச் சட்டத்தில் நியாயப்படுத்தப்பட்டுள்ள உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனை தொடர்பான உறுப்புரையை நீக்குமாறும் நீதிபதிகள் மற்றும் வேறு நீதி சார்ந்த அதிகாரிகளுக்கு கோரிக்கை ஒன்றையும் முன்வைத்தனர். இந்த செயற்பாடு முழுவதிலும் சேவ் த சில்ரன் மற்றும் வேறு நிறுவனங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தன.

**நாங்கள் அடைந்தது**
இந்த முயற்சிகளின் பயனாக, 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 1992ஆம் ஆண்டு சிறுவர் சட்டத்தின் கீழ் எந்தவொரு சிறுவரும் பெற்றோரால், வேறு குடும்ப உறுப்பினர்களால் மற்றும் ஆசிரியர்களால் "minor beating"க்கு உட்படுத்தப்படலாகாது என்ற தீர்ப்பை உயர் நீதிமன்றம் வெளியிட்டது. நீதிமன்றம் நேரடியாக பிரதமரின் அலுவலகம் மற்றும் அமைச்சர்களின் பேரவை போன்றவற்றிற்கு நேரடியாக "உடற்சார் தண்டனைகளை தடுப்பதற்கு, அத்துடன், கொடூரமான, மனிதத் தன்மையற்ற அல்லது தாழ்த்தப்படும் வகையில் நடத்தப்படல் அல்லது தண்டனை அல்லது துஷ்பிரயோகத்திற்கு இலக்கான அல்லது உண்டாக்கப்பட்ட அல்லது சிறுவர் மீது விதிக்கப்படும் அல்லது உண்டாக்கப்படும் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கும் பொருத்தமான மற்றும் பயனுள்ள ஏற்பாடுகளை முன்னெடுக்கவும்". என்ற உத்தரவை பிறப்பித்து,

செயன்முறைப் படிவம்

5.2 அவர்கள் அறிந்து வைத்திருப்பது மற்றும் அக்கறை கொள்வது எவற்றை பற்றி?

| பார்வையாளர்கள், எடுத்துக்காட்டாக இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்கள் | இந்த விடயம் தொடர்பில் பார்வையாளர்கள் அறிந்து வைத்திருப்பது என்ன? | பார்வையாளர்கள் நம்புவது எதனை? அவன் அல்லது அவளின் நடத்தை என்ன? | பார்வையாளர்கள் அக்கறை கொள்ளும் விடயங்கள் எவை? (அது குறித்த விடயம் சார்ந்ததாக இல்லாத போதிலும்) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

# சம்பவத்தை தயாரித்தல்

6.1 பரப்புரைக்கான செய்தியை வடிவமைத்தல்
6.2 ஆதரவு திரட்டல்
6.3 ஊடகங்களுடன் செயற்படல்



அத்தியாயம் 4

# அறிமுகம்

இந்த நிலையில் நீங்கள், உங்களுடைய கொள்கை சூழல் தொடர்பிலம் தெளிவான எண்ணம் ஒன்றினை பெற்றிருக்க வேண்டும். அத்துடன் நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றம் எவ்வாறிருக்க வேண்டும் மற்றும் அந்த மாற்றங்களை எவரால் கொண்டு வர முடியும் என்பன பற்றியும் நீங்கள் அறிந்திருந்தல் வேண்டும். உங்களுடைய பரப்புரைக்கு ஆதரவு வழங்கக் கூடிய எவ்வகையான ஆதாரங்கள் உங்களிடம் உள்ளன மற்றும் நீங்கள் சேகரிக்க வேண்டிய மேலதிக தகவல்கள் எவை என்பன தொடர்பில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். சம்பந்தப்பட்ட தீர்மானங்களை எடுக்கக் கூடிய நபர்களை அணுகும் முறை மற்றும் செல்வாக்கு செலுத்தும் முறை என்பன தொடர்பில் நீங்கள் சிந்தித்திருக்கக் கூடும். உங்களுடைய இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்களை செயற்படச் செய்வதற்காக தூண்டுவதற்கு உங்களுடைய சம்பவத்தை எவ்வாறு அவர்களுக்கு கொண்டு செல்ல முடியும் என்பது தொடர்பிலும் நீங்கள் தற்போது அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.


முதலாவதாக, உங்களுடைய பரப்புரை விடயம் தொடர்பில் உண்மையில் நீங்கள் வெளிப்படுத்தவுள்ளதனை உங்களுடைய பிரதான செய்தியை நீங்கள் வடிவமைக்க வேண்டும். எவ்வாறு இயலுமான வரையில் இந்த விடயத்தை தெளிவாக மற்றும் நம்பக் கூடிய வகையில் கொண்டு செல்லப் போகின்றீர்கள் என்பதனை தற்போது நீங்கள் தீர்மானிக்க வேண்டிய தேவையுள்ளது. அடுத்த நிலை நீங்கள் செய்தியை வழங்குவதாகும். பரப்புரையில் நீங்கள் உங்களுடைய செய்தியை நேடிரயாக தீர்மானம் எடுப்பவரிடம் அல்லது பிரதான செல்வாக்கு உடைய நபரிடம் சமர்ப்பிக்கும் போது சட்ட மன்ற உறுப்பினரின் உதவியை பெறுதலானது பொதுவாக இடம்பெறுவதாகும். சட்ட மன்ற உறுப்பினரின் உதவியை பெறுதலானது உங்களுடைய செய்தியை வெளிப்படுத்துவதற்கான மிகவும் பயனுள்ள வழிமுறையாகும். ஆனால், சந்தர்ப்பத்தை உச்சகட்ட அளவில் பயன்படுத்துவது தொடர்பில் நன்கு சிந்தித்து செயல்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

பரந்த அளவிலான மக்கள் கூட்டத்திற்கு செய்தியை கொண்டு செல்வதற்கு ஊடகங்களை பயன்படுத்தலும் பரப்புரையில் பொதுவாக உள்ளடக்கப்படும் விடயமாகும். இந்த அத்தியாயத்தின் இறுதிப் பகுதி, உங்களுடைய செய்தியை கொண்டு செல்வதற்கு ஊடகத்தை பயனுள்ள வகையில் எவ்வாறு பயன்படுத்துவது, ஊடகத்தை அணுகுவதற்கான முயற்சியை எடுத்தல் மற்றும் உங்களுடைய குறிக்கோள்களை முன்னிலைப்படுத்துவதற்கு ஊடக சாத்தியங்களை பயன்படுத்தல் என்பன தொடர்பில் ஆராய்கின்றது.

## 6.1 பரப்புரைக்கான செய்தியை வடிவமைத்தல்

நீங்கள் தெளிவான, முரணற்ற மற்றும் பயனுள்ள செய்திகளை வடிவமைக்க வேண்டியது அவசியமாகும். இதனை புரிவதற்கு நீங்கள் கூறவேண்டியது **என்ன** மற்றும் அதனை **எவ்வாறு** கூற வேண்டும் என்பன தொடர்பில் நீங்கள் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

பரப்புரை தொடர்பாடலானது **தகவல் தெரிவித்தல், பின்தொடரச் செய்தல்** மற்றும் **மக்களை நடவடிக்கை எடுப்பதற்காக நகரச் செய்தல்** என்பவற்றை நாடிச் செல்லல் வேண்டும். மிகவும் முக்கியமாக, பரப்புரை செய்திகள் பெறுமதியான தரவு மற்றும் தர்க்கவியல் ஊடாக மாத்திரம் பின்தொடரப்படக் கூடாது. ஆனால், பார்வையாளர்கள் எடுப்பதற்கு தூண்டப்பட்டுள்ள நடவடிக்கை குறித்தும் விளக்க வேண்டிய தேவையுள்ளது. நீங்கள் புரிவதற்கு முயற்சிப்பது என்ன என்பது தொடர்பிலும் பார்வையாளர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.




## செய்தி அபிவிருத்தியின் தனிமங்கள்

1. **உள்ளடக்கம்**

**நிலைக் குறிப்பு**
1 தொடக்கம் 2 பக்கங்களில் அடங்கக் கூடியதாக நிலைக் குறிப்பை தயாரிப்பது சிறந்த எண்ணமாக இருக்கும். நீங்கள் அவதானஞ் செலுத்துவதற்கு தீர்மானித்துள்ள விடயம், உங்களுடைய குறிக்கோள்கள் மற்றும் இலக்குக் குழுக்கள் ஆகியன தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களையும் இது முன் வைக்க வேண்டும். இந்த ஆவணம் பின்புலம், பிரச்சினை தொடர்பான தெளிவான குறிப்ப, உங்களுடைய ஆதாரத்தை ஆவணப்படுத்தல் (உதாரணங்களுடன்), மற்றும் நீங்கள் பிரேரிக்கும் சாத்தியமான நேர்நிலையான தீர்வுகளை முன்வைத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இந்த ஆவணத்தை இறுதியனாதாக தீர்மானிப்பதற்கு முன்னர், உங்களுடைய பங்காளர்கள் மற்றும் சக ஊழியர்களுக்கு விநியோகித்து அவர்களுடைய கருத்துக்களையும் உள்வாங்கிக் கொள்ளவும்.

**பிரதான செய்தி**
உங்களுடைய நிலைமைத் தொடர்பில் தெளிவான விளக்கத்தை வடிவமைத்துக் கொள்வதற்கான அடிப்படையாக இந்த நிலைக் குறிப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு முடியும். இந்த பிரதான செய்தியானது நீங்கள் பயன்படுத்தப் போகின்ற பரப்புரை பணிக்கான குறிக்கோள் வாசகங்கள், ஒலிப்பதிவுகள் அல்லது சம்பவங்கள் ஆகியவற்றை அடைவதற்கும் உங்களுக்கு வழியேற்படுத்தும். மிகவும் பயனுள்ள செய்திகளை வடிவமைப்பதற்கு உங்களுடைய பார்வையாளர்கள், மற்றும் உங்கள் நிலையை புரிந்துகொள்ளல் ஆகியவற்றை அடையாளங் கண்டு கொள்வதற்கு ஆராய்ச்சி உதவி புரியும்.

பிரதான செய்தியில் பின்வருவன உள்ளடக்கப்படும்:

- பிரச்சினை தொடர்பான உங்கள் பகுப்பாய்வு
- உங்களுடைய பகுப்பாய்வின் அடிப்படை தொடர்பான ஆதாரம்
- பிரச்சினைக்கான காரணங்கள்
- இதனை தீர்ப்பதற்கு பொறுப்பானவர்களாக நீங்கள் யாரை கருதுகின்றீர்கள்
- எதற்காக மாற்றம் அவசியமாகின்றது
- நீங்கள் பிரேரிக்கும் தீர்வு
- இந்த மாற்றத்தை கொண்டு வருவதற்கு ஏனையோரிடம் (செய்தியை பெறுபவர்கள்) நீங்கள் கோரும் நடவடிக்கை

**உள்வாங்கப்பட்ட செய்திகள்**
உங்களுடைய பிரதான செய்தி இதன் பின்னர் வேறுபட்ட பார்வையாளர்களிடம் கொண்டு செல்லப்பட்ட மிகவும் முக்கியமான, உள்வாங்கப்பட்ட செய்திகளை வடிவமைப்பதற்கு வழிகாட்டும். விசேடமான பார்வையாளர்களுக்கு உங்களுடைய பிரதான செய்திகளை உள்வாங்கச் செய்வதற்கு நீங்கள் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்:

- பார்வையாளர்களை மிகவும் தூண்டக் கூடியவை எவை?
- பார்வையாளர்கள் செவிமடுப்பதற்கு ஆர்வமாயுள்ள தகவல்கள் எவை?
- பார்வையாளர்கள் முன்னெடுக்க வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் (வேறுபட்ட பார்வையாளர்களிடம் மாற்றத்தை கொண்டு வருவதற்கான வேறுபட்ட இயலுமைகள் இருக்கலாம்)?
- அவர்களுடைய அரசியல் ஆர்வங்கள் எவை? விடயம் தொடர்பில் அவர்களுடைய சுய விருப்பங்கள் எவை? அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் குழு எது?
- அவர்களுக்கு ஏற்கனவே ஏதேனும் கருத்து உள்ளதா, அது என்ன, எவ்வளவு வலுவாக அது உள்ளது? அவர்களுக்கு பொதுமக்கள் பதவி நிலையொன்று உள்ளதா?
- அவர்களின் எதிர் கருத்துக்கள் என்ன? அவர்கள் இழக்கக் கூடியது என்ன? நீங்கள் சந்திக்கக் கூடிய தவறான கருத்துக்கள் அல்லது விவாதங்கள் எவை?
- அவர்களிடம் உள்ள தனிப்பட்ட ஆர்வங்கள் என்ன? என்ன பொழுதுபோக்குக்கள் மற்றும் உணர்வுகள்?
- அவர்களுடைய பின்புலம் (தனிப்பட்ட, கல்விசார், தொழிற்சார்) பக்கச்சார்பானதா? அவர்கள் ஆதரவு வழங்குவார்கள் என்று நீங்கள் அறிந்த ஒரு விடயத்துடன் உங்களுடைய விடயத்தை உங்களால் இணைக்க முடியுமா?

**ஒரு நிமிட செய்தி**
திடீரென ஏற்படும் சந்திப்புக்கள் (மின் உயர்த்தியில் {elevator} பில் கேட்ஸை சந்திப்பது போன்ற சந்தர்ப்பங்கள்) , தொலைக்காட்சி நேர்காணல்கள், இன்னபிற சந்தர்ப்பங்களில் உங்களிற்கு கிடைக்கும் குறுகிய நேரத்தில் உங்களுடைய பரப்புரை செய்திகளை 3 தொடக்கம் 4 உறுதியான வசனங்களால் சுருக்கமாக விளக்கக் கூடியவர்களாக நீங்கள் இருத்தல் வேண்டும்.

ஒரு நிமிட செய்தி என்பது

குறிப்பு + ஆதாரம் + உதாரணம் + எதிர்பார்க்கும் நடவடிக்கை
என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

குறிப்பே செய்தியின் பிரதான எண்ணமாக இருக்கும்.
சம்பவங்கள் மற்றும் அளவுகளின் ஊடாக ஆதாரமானது குறிப்புக்கு உதவி புரியும்.
உதாரணம் என்பது செய்திக்கு மனித பங்கை உள்ளடக்கும்.
எதிர்பார்க்கும் நடவடிக்கை என்பது உங்களுடைய இலக்குக் குழுக்கள் எதனை புரியும் வேண்டும் என்ற உங்கள் எதிர்பார்ப்பை குறிப்பிடும்.

*உதாரணம்:*

எதிர்காலத்தை மீள எழுதுவதற்கான ஒரு நிமிட செய்தி

- **குறிப்பு:** நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சிறுவர்கள் தமது எதிர்காலத்தை மீள எழுதியமைக்கவும் மற்றும் தாம் வாழும் சமூகத்தை நிலைமாற்றுவதற்கும் கல்வியானது சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.
- **ஆதாரம்:** ஆயுத முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட 50மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கல்வி இல்லாத எதிர்காலத்தை, நம்பிக்கையின்மையுடன் எதிர்கொள்ளவுள்ளனர். இவற்றில் எங்கள் நாட்டில் உள்ள 200,000 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.
- **உதாரணம்:** உங்களுடைய சொந்த கதை (இயலுமாயின் உள்ளூரில் இடம்பெற்றது).
- **நடவடிக்கைக்கான அழைப்பு:** எங்கள் நாட்டிலுள்ள 200,000 சிறுவர்கள் உள்ளடங்கலாக உலகெங்கிலும் உள்ள 50மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்களின் எதிர்காலத்தை மீள எழுதுவதற்கு அவர்களுடைய கல்வி தேவையை நிறைவு செய்வதன் மூலம் நாங்கள் உதவி வழங்க முடியும்.
- **எங்களுடைய விசேடமான பாத்திரம்:** சிறுவர்கள் தமது எதிர்காலத்தை மீள எழுதுவதற்கு உதவுவதற்கான ஆழமான மற்றும் தீவிரமான அர்ப்பணிப்பை சேவ் த சில்ரன் கொண்டுள்ளது.

**செய்திகளை வடிவமைப்பதில் பொதுவான வழிகாட்டல்கள்:**

- செய்தியை தெளிவானதாக, நிறைவானதாக மற்றும் இணைக்கப்பட்டதாக தயாரிக்கவும்.
- புரியாத வார்த்தைகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும்
- உங்களுடைய விடயத்துக்கு உட்பட்டதாக வரைபை வைத்துக் கொள்ளவும் உங்களுடைய எதிர்பார்ப்புக்களை சுட்டிக்காட்டவும்.
- ஆக்கப்பூர்வமானதாக தெளிவான சம்பவங்கள் மற்றும் எண்ணிக்கைகளை பயன்படுத்தவும்.
- இயலுமாயின் மக்களுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கவும்.
- பார்வையாளர்கள் தமது சுயமான முடிவுக்கு வருவதற்கு வாய்ப்பளிக்கவும்.
- இயலுமாயின் தீர்வினை முன் வைக்கவும்.
- சுருக்கமான மற்றும் முரணற்ற செய்திகள் எப்போதும் பரப்புரைக்கு நெருக்கடியானவை என்பதனை நினைவில் கொள்ளவும்.

உள்ளடக்கம் என்பது செய்தியின் ஒரு பகுதி மாத்திரமே. யார் செய்தியை வழங்குகின்றார்கள், கூட்டமானது எங்கு நடைபெறுகின்றது அல்லது செய்தி வழங்கப்படும் நேரம் போன்ற ஏனைய விடயங்கள் உள்ளடக்கம் இல்லாமலேயே மிகவும் முக்கியமானதாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்ட விடயங்களிலும், சொல்லப்படாத விடயங்களே அதிகம் பயனுடையதாக இருக்கும். நீங்கள் தெரிவிப்பதற்கு விரும்பும் செய்தி என்ன? உங்களுடைய பார்வையாளர்களை தூண்டி விடுவதற்கு நீங்கள் எந்த விவாதங்களை பயன்படுத்துவீர்கள்?

2. மொழி
உங்களுடைய செய்தியை தெளிவாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் கொண்டு செல்வதற்கு நீங்கள் தெரிவு செய்யும் சொற்கள் எவை?
எவ்வகையான சொற்களும், வசனங்களும் மக்களுக்கு உற்சாகத்தை வழங்கி வலுவூட்டும், எவ்வகையான சொற்கள் மக்களை சோர்வடையச் செய்யும்?
நீங்கள் பயன்படுத்த வேண்டிய அல்லது பயன்படுத்தக் கூடாத சொற்கள் உள்ளனவா? தீர்மானம் எடுப்பவர்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்களுக்கு உற்பத்தி திறனற்றதாக அமையக் கூடிய மொழி எது? நிச்சயமாக, இளைஞர் குழுவை தொடர்பு கொள்வதற்கு நீங்கள் பயன்படுத்தும் மொழியிலும் வேறுபட்ட மொழியையே கொள்கை வகுப்பவர்களை தொடர்பு கொள்ளும் போது நீங்கள் பயன்படுத்துவீர்கள்.

3. வளம்/தகவல் வழங்குநர்:
யாருக்கு பார்வையாளர்கள் பதிலளிப்பார்கள் மற்றும் யாரை நம்பகமானவர்களாக கருதுவார்கள்?

4. வடிவம்:
ஆகக் கூடிய விளைவை பெறுவதற்கு எந்த வகை(களில்)யில் நீங்கள் செய்தியை வெளிப்படுத்துவீர்கள்? உதாரணமாக கூட்டம், கடிதம், துண்டு பிரசுரம் அல்லது வானொலி விளம்பரம்? குறிப்பிட்ட இலக்குக் குழுக்களுக்கு மிகவும் பொருத்தமான உத்தி என்னவென்பதை அடையாளங் காணவும்.

5. நேரம் மற்றும் இடம்:
செய்தியை வெளிப்படுத்துவதற்கு சிறந்த சந்தர்ப்பம் எது? உங்களுடைய செய்தியை வெளிப்படுத்துவதற்கு செய்தியின் நம்பகத்தன்மையை பரவச் செய்யும் அல்லது மேலதிக அரசியல் விளைவை தரும் இடம் ஏதேனும் உள்ளதா?

*உதாரணம்:*

சூடானின் கல்வி அமைச்சருக்கான சிறுவர்களின் செய்திகள்
சேவ் த சில்ரன் ஊழியர்கள், சிறுவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரச சார்பற்ற நிறுவன பங்காளர்கள், நிதியுதவியாளர்கள், மற்றும் ஊடகம் என 250க்கும் அதிகமான மக்கள் கார்ட்டும் நட்புறவு மண்டபத்தில் 2006ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 12ஆம் திகதி ஒன்று கூடி, சேவ் த சில்ரனின் உலகளாவிய சவாலான எதிர்காலத்தை மீள எழுதுதல் மற்றும் முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு தரமான கல்வியை வழங்குதல் தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டனர்.



கல்வி அமைச்சருக்கானதாக கருத்தை முன்வைத்து, அகதிகள் முகாம்களில் உள்ள சிறுவர்கள், தமது வாழ்க்கையின் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் உரையாற்றினர்.
*"குண்டு என்று அடையாளமிடப்பட்ட பொருள் ஒன்றை நீங்கள் கண்டெடுத்து, அதில் எழுதியுள்ள விடயம் என்னவென்று உங்களால் வாசிக்க முடியுமாயின், அந்த ஆபத்தை நீங்கள் தவிர்க்க முடியும், இல்லையெனில் அந்த குண்டு வெடிப்பிற்கு இலக்காகக் கூடும்."* அபுக் ஜாக்கோப் மபிள்ன் – ஒஸ்கோபியா பீ பாடசாலை (Abuk Jacob Mabiln (13), Osqofiya B School). மேலே உள்ள படத்தைப் பார்க்கவும்.

*"கல்வி கற்ற நபரொருவருக்கு அரபு மொழியை எவ்வாறு கதைக்க வேண்டும் மற்றும் அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என தெரியும்."* மோசெஸ் லால் மவ், ஒஸ்கோபியா பீ பாடசாலை (Moses Lal Mau (16), Osqofiya B School).

*"அனைத்து சிறுவர், சிறுமியரையும் கற்பிக்குமாறு நான் அனைத்து தந்தையர், தாய்மார் மற்றும் சகோதரர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். ஏனெனில், அது மிகவும் முக்கியமானது".* பியாசல் ஆதம் ஹாமெட், இடெஹட் மாயோ (Fiasal Adam Hamed (17) – Itehad Mayo).

*"சூடானை கட்டியெழுப்புவதற்கு கல்வியே மிகவும் அழகான மற்றும் மிகவும் முக்கியமான விடயமாகும்"* மேஸன் முஸ்தபா அஹ்மட், இடெஹட் மாயோ (Mayson Mustafa Ahmed (12) – Itehad Mayo).

## தெளிவாக இருத்தல்

உங்களுடைய பரப்புரையின் இலக்குக் குழுக்கள், நீங்கள் அவர்களிடம் புரியுமாறு கூறும் விடயம் தொடர்பில் புரிந்துணர்வை பெற்றுக் கொண்டால் செய்தியானது பயனுள்ளதாக இருக்கும். உங்களுடைய செய்தியின் உள்ளடக்கத்தை நீங்கள் வடிவமைத்த பின்னர், அதன் தெளிவு தொடர்பில் பரிசோதிக்கவும்.

***தெளிவான செய்தியென்பது*** *இலகுவான மொழியை பயன்படுத்தியதாக மற்றும் இலக்குக் குழுக்கான பார்வையாளர்களுக்கு நடவடிக்கைக்கான அடியை எடுத்து வைப்பதற்கு ஆலோசனைகளை முன்வைப்பதாகும்.*

*உ_தாரணம்*

| தெளிவற்ற செய்தி | | தெளிவான செய்தி | |
|---|---|---|---|
| தெளிவற்ற பிரேரணையின் பயன்கள்.......<br><br>தெளிவற்ற பதங்கள் உள்ளடக்கியது...<br><br>நடவடிக்கை தொடர்பில் பார்வையாளர்களிடம் இருந்து தெளிவான கோரிக்கை இல்லை...<br><br>மிகவும் நீளமானவை! | சிறுமிகளின் கல்வி ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்வதே நெருக்கடியான விடயமாகும். அத்துடன் எங்களுடைய கல்வி TPPயின் ஒரு கட்டமாக அது தொடர்பில் நாம் செயற்பட்டு வருகின்றோம். இதில் சொந்தமான பயன்கள் மாத்திரம் இல்லை, ஆனால் பொருளாதார மற்றும் அபிவிருத்தி பயன்களையும் இதன் மூலம் அடைய முடியும். சிறுமிகளின் கல்வி சந்தர்ப்பங்களை பரவச் செய்வதற்கு பல நீண்ட கால வெளியீடுகளை நாம் காண்கின்றோம். விசேடமாக, 12 வயதுக்கு குறைந்தவர்கள். உங்களுக்கு ஆர்வமிருப்பின் நாடு முழுவதிலும் 4 பின்தங்கிய கிராமங்களிலம், 3 நகரப் பகுதிகளிலும் நாம் நடைமுறைப்படுத்தி வரும் எங்களுடைய நிகழ்ச்சி தொடர்பில் மேலதிக விபரங்களை நாம் வழங்குவோம். நீங்களும், உங்களுடைய சக ஊழியர்களும் சிறுமிகளின் கல்வியை இந்த வருடத்திற்கான கல்வி கொள்கைக்கான தேசிய மூலோபாயங்கள் தொடர்பில் விவாதத்தை முன்னெடுக்கும் போது பிரதான முன்னுரிமையாகக் கவனத்திற் கொண்டு செயற்படுவீர்கள் என நாம் நம்புகின்றோம். | விசேட கோரிக்கைகளை உருவாக்கும்...<br><br>ஒரு உறுதியான ஆதரவளிக்கக் கூடிய கருத்தை உருவாக்கும்...<br><br>ஆவணங்கள் பயன்கள்.....<br>சுருக்கமானவை...... | தேசிய கொள்கைக்கு ஆதரவு வழங்குவதை எண்ணிப் பார்க்கவும். மேலும், சிறுமிகள் பாடசாலைக்கு சமூகமளிப்பதற்கு அது ஊக்குவிக்கும். பெண்களுக்கு கல்வி அறிவை வழங்குவதென்பது பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுத்து அனைத்து சிறுவர்களுக்கு பயனுடையதாக மாறுவதாக சர்வதேச ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தயவு செய்து இந்த அறிக்கையை வாசிக்கவும். தேசிய அளவில் ஏழு பகுதிகளில் பெண்களின் கல்வி எட்டியுள்ள சாதகமான பெறுபேறுகளை அவை விளக்குகின்றன. |

## ஆப்கானிஸ்தானில் உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனை தொடர்பில் செய்திகளை உள்வாங்கல்.

ஆப்கானிஸ்தான் அமைச்சுக்களும் மற்றும் நிறுவனங்களும் உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனைகளை சிறுவர் உரிமைகளின் மோசமான மீறலாக பார்ப்பதற்கு சேவ் த சில்ரன் அமைப்பு பரப்புரை மூலோபாயம் ஒன்றை தயாரித்தது.

தீவிரமான சமூக பிரச்சினைகளுக்கான பிரதான காரணங்களில் ஒன்றாக உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனைகளை முன் வைத்தமையின் மூலம், தமது பார்வையாளர்களுக்கு அவர்கள் செய்திகளை வழங்கினர். ஒரு முறை இது ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், சிறுவர் உரிமைகள் தொடர்பான விடயங்கள், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி எண்ணக்கருக்கள் ஆகியன சேர்த்துக் கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டாக, இளம்பராயத்தினர் நீதி அதிகாரிகளுடனான சந்திப்பில், உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனைகள் சிறுவர்களின் குற்றவியல் நடத்தைக்கான பிரதான காரணமாக அடையாளங் காணப்பட்டது. சிறுவர்கள் பாடசாலைகளுக்கு சமூகமளிக்காமை மற்றும் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு இலக்காகின்றமை ஆகிய விடயங்களில் இது பொதுவானதாக இருக்கின்றது. இந்த சூழ்நிலைகள் சட்டத்துடனான சிறுவர்களின் முரண்பாடு அதிகரிப்பதற்கு காரணமாக மாறி விடுகின்றது. உடற் சார் தண்டனைகளை தடை செய்வதன் ஊடாக சிறுவர்களினால் முன்னெடுக்கப்படும் குற்றச் செயல்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதுடன், இளம்பராய குற்றச் செயல்களையும் தடுக்க முடியும் என்ற கருத்தை நாம் முன்வைத்தோம். இந்த அணுகுமுறை வெற்றியளித்ததுடன், உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனையை தடை செய்வது தொடர்பில் பல அமைச்சு அதிகாரிகளும் இணங்குவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தன.



Mirwais, 14, helps support other children who are facing violence at home or school in Kabul. A Save the Children report exposed violence against children as a widespread problem in Afghanistan.

## கொலம்பியா முழுவதும் செய்தியை கொண்டுச் செல்வதற்கு சரியான மொழியை பயன்படுத்தல்

பாலினம் என்பது இளைஞர்கள் மத்தியில் மிகவும் முக்கியமான விடயமாக உள்ளது. துரதிருஷ்டவசமாக கலாசார தீண்டாமை மற்றும் அறிவு குறைபாடு என்பன பெற்றோருக்கும், பாலினம் தொடர்பான செய்திகளை அறிந்து கொள்வதற்கு வானொலியை நாடும் இளைஞர்களுக்கும் இடையில் இடைவெளியை உருவாக்கி விடுகின்றன. இளைஞர்கள் பயன்படுத்தும் மொழியை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும், வானொலி அறிவிப்பாளர்கள் தமது இளம் ரசிகர்கள் திறந்த மனதுடன் கதைப்பதற்கு சந்தர்ப்பம் அளித்து அவர்களின் முன் மாதிரிகளாக மாறிவிடுகின்றனர்.

கொலம்பியாவின் பிரதான வானொலி வலையமைப்பான (182 வானொலி சேவைகளைக் கொண்டது) கரக்கோலுடன் இணைந்து சேவ் த சில்ரன் பணியாற்றியது. பின்வரும் இலக்குகளைக் கொண்டதாக நாம் செயலமர்வுகளை நடத்தினோம்: வானொலி நிலையங்களின் மூலம் வழங்கப்படும் பாலியல் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஒழுக்கஞ் சார்ந்த அணுகுமுறையை கையாளுவதற்கான அலகொன்றை வடிவமைத்தல்: இளம் ரசிகர்கள் மத்தியில் சுய நம்பிக்கை மற்றும் சுய மதிப்பை ஊக்குவிக்கும் நடத்தைகளை வலுப்படுத்தல்: ஆண் மற்றும் பெண்களுக்கான சுகாதாரமான பாலியல் வாழ்க்கைக்கான மனிதநேயமிக்க மற்றும் ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்தல். பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் இளைஞர்கள் சார்ந்த உரிமைகள் தொடர்பில் தமது சுயமான தொடர்பாடலை மதிப்பீடு செய்யக் கூடிய வானொலி அறிவிப்பாளர்கள் பயன்படுத்தக் கூடிய அலகுகளையும் நாம் வடிவமைத்தோம்.

தேவையுள்ள மக்கள் பிரிவினரை இலக்கு வைத்ததாக விசேடமாக வடிவமைக்கப்பட்ட நல்ல பயிற்சி தொடர்பான கையேடு இந்த செயலமர்வின் தயாரிப்புக்களில் ஒன்றாக உள்ளது. இந்த கையேடு பின்னர், வானொலி நிலையங்களின் ஊழியர்களுக்கான ஒழுக்கக் கோவையுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. இரண்டாவது தயாரிப்பு முகாமையாளர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களை இலக்கு வைத்ததாக உருவாக்கப்பட்டது. இளைஞர்களின் பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகளை மதிப்பது என்பது ஏன் நல்ல சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு பிரதான தனிமமாக இருக்கின்றது என்பதனையும், இவை அனைத்திற்கும் நாம் எவ்வாறு பொறுப்பானவர்களாக இருக்கின்றோம் என்பதனை வெளிக்கொணருவது எங்களுக்கு தேவையாக இருந்தது. செயலமர்வுக்குப் பின்னர், செயலமர்வில் இணங்கிய அலககளுக்கு ஏற்ப வானொலி செய்திகள் கண்காணிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. முதலாவது செயலமர்வின் பின்னர் பின்தொடரலுக்கான ஆதரவு மற்றும் மேலதிக பயிற்சியை வழங்குவதற்கு சேவ் த சில்ரன் உதவியது. வானொலி அறிவிப்பாளர்கள் தமது சுயமான பிரசாரங்களை மேம்படுத்தினர். அத்துடன், அவற்றில் ஒன்றாக சுகாதாரமான பாலியல் நடத்தையை முன்னிலைப்படுத்தல் கரோக்கலால் தெரிவு செய்யப்பட்ட நாடு முழுவதும் ஒரு மாதத்திற்கு ஒலிபரப்பு செய்யப்பட்டது.

வானொலி நிலையம் இந்த விடயத்தை உதவி வழங்கியமையால், இந்த முயற்சி வெற்றியடைந்தது. இந்த செயலமர்வு நன்கு திட்டமிடப்பட்டு இருந்தமையினால், வானொலி அறிவிப்பாளர்கள் தாம் கற்பதனை உணர்ந்து கொண்டதுடன், விடயங்களும் மிகவும் இலகுவானதாக (ஆனால் நிபுணத்துவ வழியில்) அணுகப்பட்டன.

**நாங்கள் கற்றது**

மொழி என்பது மிகவும் முக்கியமானது. இளம் நபர்கள் பயன்படுத்தும் மொழியை பயன்படுத்தியமை அவர்கள் இணைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளித்தது. அவர்கள் செயற்றிறனுடன் செவிமடுக்கவும், பங்குபற்றவும் கூடியவர்களாக இருந்தனர். எதிர்பாராத வகையில் நீங்கள் நண்பர்களை கண்டறியலாம். அவர்கள் உங்களுடைய செல்வாக்கு அதிகரிக்க உதவி புரிவார்கள் என்பதே இரண்டாவதாக உணர்ந்து கொண்ட விடயமாகும்.


Radio Caracol DJs

செயன்முறைப் படிவம்

## 6.1 A செய்தி அபிவிருத்தி

| | |
|---|---|
| இலக்குக் குழுக்கள் | |
| செய்தி உள்ளடக்கம் | |
| கூற்று<br>(செய்தியின் பிரதான கரு: பிரச்சினை, உங்கள் தீர்வு மற்றும் ஏன் மாற்றம் அவசியம் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்) | |
| ஆதாரம்<br>(கூற்றுக்கு உதவும் வகையில், சம்பவங்கள் மற்றும் அளவுகளை உள்ளடக்கியதாக இருக்கலாம்) | |
| உதாரணம்<br>(பொதுவாக உங்கள் கூற்றுக்கு வலு சேர்க்கக் கூடிய மனிதர்களின் விடயம் உள்ளடக்கப்படும்) | |
| எதிர்பார்க்கப்படும் நடவடிக்கை<br>(உங்களுடைய இலக்குக் குழுக்கள் என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள்) | |
| செய்தி வழங்கல்<br>(உங்களுடைய இலக்குக் குழுக்களை அடையக் கூடிய வடிவம்(கள்)) | |
| செய்தி வழங்குபவர்கள்<br>(இலக்குக் குழுக்கள் யாருக்கு பதிலளிக்கும், யாரை நம்பும்?) | |
| செய்தி வழங்கப்படும் நேரம் மற்றும் இடம் | |

செயன்முறைப் படிவம்

## 6.1 B பரப்புரை இலக்குக் குழுவினர் ஒவ்வொருவரினதும் பிரதான அக்கறைகளின் சுருக்கம்

| இலக்குக் குழு | விடத்துடன் சம்பந்தப்பட்டதாக குழுவின் அக்கறை | செய்தி உள்ளடக்கம் | இலக்குக் குழுவுக்கு பொருத்தமான மொழி மற்றும் நெறிமுறை தொடர்பான குறிப்பு | வளம்.'.செய்தி வழங்குபவர் இலக்குக் குழுவால் முழுமையாக நம்பப்படுகின்றார் | இலக்குக் குழுவை அடைவதற்குரிய வடிவம் |
|---|---|---|---|---|---|
| தீர்மானம் எடுப்பவர்கள்<br>தேசிய<br>பிராந்திய<br>மாவட்ட | | | | | |
| நிதியுதவியாளர்கள்<br>இரண்டுக்கு மேற்பட்ட தரப்பு நிறுவனங்கள்<br>இரட்டை வழி நிறுவனங்கள் | | | | | |
| ஊடகவியலாளர்<br>செய்தியாளர்கள்<br>ஆசிரியர்கள்<br>பொருளாதார அறிக்கையாளர்கள் | | | | | |
| சிவில் சமூக குழுக்கள்<br>சிவில் சமூக நிறுவனங்கள்<br>தொழிற் சங்கங்கள்<br>அடிமட்ட குழுக்கள் இன்னபிற.. | | | | | |
| விடயம் சம்பந்தப்பட்ட பயிற்றுநர்கள்<br>தனிப்பட்ட நிபுணர்கள்<br>தொழில் கூட்டமைப்புக்கள்<br>இன்னபிற.. | | | | | |
| பொது மக்கள் | | | | | |
| கருத்துத் தலைவர்கள்<br>மதத் தலைவர்கள்<br>பாரம்பரிய உள்ளூர் தலைவர்கள் | | | | | |

## 6.2 ஆதரவு திரட்டல்

ஆதரவு திரட்டல் என்பது தீர்மானம் எடுப்பவர்கள் மற்றும் அவர்கள் மீது செல்வாக்கு உள்ள வேறு நபர்களை நேரடியாக தொடர்பு கொள்வது சார்ந்ததாகும். ஆதரவு திரட்டல் என்பது உங்களுடைய நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவு வழங்குவதற்கும் மற்றும் அதனை மேம்படுத்துவதற்கும் அவர்களுக்கு அறிவூட்டுவதும், ஏற்றுக் கொள்ளச் செய்வதும் ஆகும். உங்களுடைய விடயம் தொடர்பில் கொள்கை மாற்றத்தில் செல்வாக்கு செலுத்துக் கூடிய அதிகாரம் கொண்ட மக்களே ஆதரவு திரட்டலில் முதல் நிலை இலக்காக இருப்பர்.

'ஆதரவு திரட்டல்' என்ற சொல் 'முகப்பறை' என்ற நுழையும் பகுதி அல்லது கூட்டம் நடைபெறும் இடத்தை குறிக்கும் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். பரப்புரை என்பதன் அடிப்படையில் பார்க்கும் போது, அது கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் மக்கள் ஒன்று திரள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களை தூண்டிவிடச் செய்வதற்கு முயற்சிக்கும் விடயமாக இருக்கின்றது.

**"ஆதரவு திரட்டல் (lobbying)" என்ற சொல்லின் மூலம்**

வொஷிங்டன் டீசியில் அமைந்துள்ள, 14ஆவது ஒழுங்கையின், பென்சில்வேனியா வீதியின் ஒரு மூலையில் அமைந்துள்ள வில்லியார்ட் ஹோட்டல் (Willard Hotel) பல பிரபலமான தேசிய மற்றும் உள்ளூர் வரலாற்று நிகழ்வுகளுக்கு சான்றாக இருக்கின்றது. 1869ஆம் ஆண்டு, பிரபலமான அமெரிக்க எழுத்தாளரான நதனியல் ஹோவ்த்ரோன் () இந்த ஹோட்டலை "தலைநகரம் அல்லது வெள்ளைமாளிகை அல்லது அரச திணைக்களம் என்றெல்லாம் கூறுவதிலும் பார்க்க வொஷிங்டனின் மத்தியில் அமைந்துள்ளது என மிகவும் இலகுவாக கூறிவிடலாம்" என்கின்றார்.

1818ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த ஹோட்டலின் ஒரு மூலையில் காணப்படும் அறையிலேயே முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் வெள்ளை மாளிகைக்குச் செல்வதற்கு முன்னர் தனது மனைவியுடன் வசித்திருந்தார். அவர்களுடைய கட்டணச் சீட்டு தற்போதும் ஹோட்டல் முன் அறையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. சிவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் இறுதி நிமிடத்தில் 1861ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட இடமும் அதுதான். இந்த ஹோட்டலின் விருந்தினராக இருந்த சந்தர்ப்பத்தில் தான் ஜூலியா வோட் ஹவ் (Julia Ward Howe) "குடியரசின் போராட்ட பாசுரம் (Battle Hymn of the Republic)" லிங்கனுக்கான சமர்ப்பணம் என்பதனை எழுதினார்.

"ஆதரவு நாடுபவர் (lobbyist)" என்ற பதம் இங்கேதான் உருப்பெற்றது, இந்த பதம் முதன்முறையாக எஸ். கிரான்ட்டினால் அரசியல் நடத்துநர்கள் தொடர்ச்சியாக இந்த ஹோட்டலின் முகப்பறையில் (lobby) ஒன்று கூடியமையினால் பயன்படுத்தப்பட்டது. ஜனாதிபதி கிரான்ட்டும் அவ்வப்போது இங்கு வந்திருந்து ஓய்வெடுத்துச் செல்கின்றமை கண்டறியப்பட்டது.

ஆதரவை நாடுதலானது முறை சார்ந்து, விஜயங்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்கள் மற்றும் ஏனையோரின் விளக்கங்கள் ஊடாக அல்லது முறை சாராது, கூடங்கள், விடுதிகள், வாகன தரிப்பிடங்கள், கோல்ப் மைதானங்கள், இன்னபிறவற்றில் இடம்பெறும் கலந்துரையாடல்கள் ஊடாக நிகழலாம்.

உங்களுடைய ஆதரவு நாடும் செயலை தீவிரமான பேச்சுவாத்தையாக மாற்றுவதற்கு நான்கு படிநிலைகள் உள்ளன.

**1. அதிகாரத்தின் இடைப்பகுதிகளுக்கு பழகிக் கொள்ளுதல்**
முறை, நடைமுறைகள், கால அட்டவணைகள் மற்றும் பிரதான தலைவர்கள் மற்றும் வீரர்கள் தொடர்பில் கற்றல்.

**2. விளையாட்டு வீரர்களை வகைப்படுத்தல்**
உங்களுடைய விடயம் தொடர்பில் அவர்கள் எந்த நிலையில் உள்ளார்கள் (தீவிரமான ஆதரவாளர்கள், முனைப்பற்ற ஆதரவாளர்கள், நடுநிலையானவர்கள், முனைப்பற்ற எதிர்ப்பாளர்கள், முழுமையான எதிர்ப்பாளர்கள்) என்பதனையும் மற்றும் அவர்களுக்கு உள்ள செல்வாக்கையும் கண்டறிதல்.

**3. உறவுமுறைகளை கட்டியெழுப்பல்**
விஜயங்கள் மற்றும் சுருக்கமான விளக்கங்கள் ஊடாக உங்களுடைய இலக்குக் குழுக்கள் மற்றும் அல்லது செல்வாக்கு செலுத்துபவர்கள் விடயத்தை புரிந்து கொள்ளச் செய்தல். தரமான பகுப்பாய்வுக்கான நம்பகமான வளம் மற்றும் பொதுமக்களின் குரலுக்கான பிரதிநிதி என்கின்ற வகையில் அவர்களுடைய நம்பிக்கையை உங்களில் வளருங்கள்.

வெற்றி வீரர் ஒருவரை தெரிவு செய்யுங்கள். அவர்களுக்கு விசேட பிரச்சினைகள் குறித்த பரிந்துரைகளை வழங்குங்கள். உங்களிடம் உள்ள நபர்களை தொடர்ந்தும் தொடர்பில் வைத்திருங்கள். அவர்களினால் சிறப்பான செயல் முன்னெடுக்கும் போது, பாராட்டுக்களை தெரிவியுங்கள்.

**4. அவதானத்துடன் இருந்து உங்களுடைய சக்தியை வெளிப்படுத்துங்கள்**
தீர்மானம் எடுப்பவர்கள் உங்களுடைய பிரேரணைகளில் மறைந்திருக்கும் ஆதரவு தொடர்பில் நன்கு அறிந்து வைத்துள்ளமை உறுதி செய்து கொள்ளுங்கள்.

## ஆதரவு திரட்டும் விஜயங்களுக்கான ஆலோசனைகள்

விஜயத்திற்கு முன்னர்:

- கூட்டத்திற்கான குறிக்கோள்களை நிர்ணயிக்கவும்
- நன்றாக சிந்தித்து, உங்களுடைய இலக்குக் குழுவுக்கு தேவையான செல்வாக்குகளை புரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் முன்வைக்கும் கருதில் ஏற்படக் கூடிய பலவீனங்களை உத்தேசியுங்கள்.
- சிக்கலான கேள்விகள் மற்றும் பதில்களை முன் பரீட்சித்து பார்த்துக் கொள்ளுங்கள்.
- கதைப்பதற்கான குறிப்புக்கள் அல்லது வேறு தேவையானவற்றை தயாரித்துக் கொள்ளுங்கள். (கீழே குறிப்பிட்டுள்ளவற்றை பாருங்கள்)

விஜயத்தின் போது

- உங்களை அறிமுகப்படுத்துங்கள்.
- மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள்
- தகவல் மற்றும் ஆதரவில் உதவி செய்வதற்கு தயாராக உள்ளமையை அவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்.
- கலந்துரையாடலுக்கு தயாராக இருங்கள்.
- நீங்கள் சந்திக்கும் நபர் கூறும் விடயங்களை அமைதியாக செவிமடுங்கள்.
- நீங்கள் விடயம் ஒன்றை கூறும் போது இடைவெளிகளை வழங்கி, அவர்கள் கேள்விகள் கேட்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- சிக்கலுக்குரிய தலைப்புக்களை தவிர்க்க வேண்டும். ஆனாலும் பொறுமையாக இருத்தல் வேண்டும்.
- இயலுமான சந்தர்ப்பங்களில் சம்பவங்கள் மற்றும் தனிப்பட்ட அனுபவங்களின் ஊடாக உங்களுடைய நிலையை வெளிப்படுத்துங்கள்.
- சில முக்கியமான நடவடிக்கையை எடுக்குமாறு கொள்கை வகுப்பவர்கள் அல்லது ஊழியர்களை கோருங்கள்.
- தீர்மானம் எடுப்பவரிடம் இருந்து உறுதிமொழியைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சியுங்கள்.
- கூட்டம் உங்களை எந்த திசை நோக்கி இழுத்துச் செல்கின்றது என பாருங்கள்.
- உங்களுடைய நிலையை தொடர்ந்து மதிப்பீடு செய்து கொண்டு இருங்கள்: நாங்கள் எங்கு இருக்கின்றோம்? இது பயனளிக்கின்றதா? இல்லையாயின், ஏன்?
- உங்களுடைய தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் மற்றும் உங்களுடைய முயற்சி தொடர்பான தகவல்களை வழங்குங்கள்.

விஜயத்தின் பின்னர்

- குறிப்புக்களை தயாரித்து உங்களுடைய விஜயம் தொடர்பில் சக ஊழியர்களுடன் இணைந்து மதிப்பீடு செய்யுங்கள்.
- நன்றி குறிப்பு மற்றும் கோரப்பட்ட மேலதிக குறிப்புக்களை அனுப்பி வையுங்கள்.
- தொலைபேசி அழைப்பு அல்லது கடிதம் மூலம் அவர்களது கருத்தை பெறுங்கள். அவர்களுக்கு மேலதிக தகவல் அல்லது சந்திப்பு ஒன்று அவசியமாக இருப்பின், அதற்கும் நடவடிக்கை எடுக்கவும்.

மாற்றத்திற்கான எந்தவொரு அறிகுறியும் இல்லாது இருப்பின்

- ஒருபோதும் முயற்சியை விட்டு விடாதீர்கள்.
- வேறுபட்ட அணுகுமுறைகளை பயன்படுத்தி தொடர்ந்து முயற்சியுங்கள்.
- உங்களுடைய வேறு தொடர்புகள் மூலம் முயற்சிக்கவும்.
- அவர்களுடைய நிலையை முன்னேற்றுவதில் உங்களுடைய உதவியின் தேவை குறித்த தகவல்களை அவர்களுக்கு வழங்குங்கள்.
- சிறுவர்களில் மாற்றங்களை கொண்டு வருவதற்கான அவர்களது பொறுப்பை உணரச் செய்யுங்கள்.

ஆதரவைத் திரட்டுவதற்கு தயராகுவதற்கும் மற்றும் வேறு வகைகளில் கொள்கை வகுப்பாளர்களை இணைத்துக் கொள்வதற்குமான மூலப்பொருட்கள்:

**கதைப்பதற்கான குறிப்புக்கள்**
நீங்கள் முன்னரே தயாரித்த பிரதான செய்தியின் அடிப்படையில் முக்கியமான குறிப்புக்களின் சுருக்கம்.

**சம்பவ ஆவணங்கள்**
உங்களுடைய கொள்கை ஆவணத்திற்கு அமைவானதாக பிரதான சம்பவங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட புள்ளிவிபரத் தகவல்கள் அடங்கிய சுருக்கம் (2 பக்கங்களுக்கு மேற்படாத வகையில்).

**சுருக்கமான குறிப்புக்கள்**
கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆட்சித் துறை பணிக் குழுவினர்கள் அல்லது அவர்களது ஊழியர்களுக்கு பருவகால சுருக்கக் குறிப்புக்களை வழங்குவதே உங்களுடைய விடயம் தொடர்பில் அவர்களுக்கு கற்பிப்பதற்கான சிறந்த வழியாக அமையும். உங்களுடைய விடயம் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் நிபுணர்களின் கருத்துக்களை உள்ளடக்கியதாக சுருக்கமான குறிப்புக்கள் அமைந்துள்ளன.

*நீங்கள் கொண்டு செல்லும் அல்லது வைத்திருக்கும் அனைத்து மூலப்பொருட்களிலும். உங்களுடைய தொடர்பு விபரங்கள் மற்றும் உங்களுடைய தொழில் தொடர்பான சுருக்கமான குறிப்பு உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.*

**எச். ஐ. வி மற்றும் எய்ட்ஸ் தொடர்பில் சர்வதேச மூலோபாயம் ஒன்றை வடிவமைப்பதற்கு சிறுவர்களை ஈடுபடுத்துவது குறித்து ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தின் ஆதரவை நாடுதல்.**

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராச்சிய திணைக்களமானது. அதன் எச். ஐ. வி மற்றும் எய்ட்ஸ் மூலோபாயத்தை மீளாய்வு செய்கின்றது. அதன் மூலோபாயத்தின் வரைபு அமைப்பை 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ஆம் திகதி உலக எய்டஸ் தினத்தன்று அது வெளியிட்டது. இந்த வரைபு அமைப்பு ஆவணத்தின் சிறுவர்களின் பங்குபற்றல் தொடர்பில் எவ்விதமான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களால் முன்வைக்கப்பட்டிருந்த பிரதான பரப்புரை குறிப்புக்களை நன்கு வாசித்து அறிந்து கொண்ட நாங்கள், நாம் எதிர்பார்க்கும் மாற்றங்களை உள்ளடக்கியதாக மூலோபாயத்தை மாற்றியமைத்தோம். 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெறவுள்ள சர்வதேச எய்ட்ஸ் மாநாட்டில் மூலோபாயத்தை வெளியிடுவதே எமது எதிர்பார்ப்பாக இருந்தது. துரிதமான நடமாட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்ட இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்களை நாம் அடையாளங் கண்டோம். கேள்விகளை சுட்டிக்காட்டியதாக நிலைக் குறித்த ஆவணத்தை தயாரித்தோம். அத்துடன், பரப்புரையின் வேறுபட்ட அம்சங்களை உள்ளடக்கியதாக கொள்கை ஆவணங்களை வடிவமைத்தோம்.

**குறிக்கோள்.**
சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராச்சிய நிறுவனத்தின் எய்ட்ஸ் மூலோபாயத்தின் பிரதான மூன்று குறிப்புக்களை உள்ளடக்கல்.

1. எச். ஐ. வி மற்றும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டு உலகில் வசிக்கும் நிர்க்கதியானவர்கள் மற்றும் பலவீனமான சிறுவர்களுக்கு பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் உதவியை வழங்குதல் தொடர்பிலான வரைபு அமைப்பை" நடைமுறைப்படுத்துவதனை இலகுவாக்கும் குறிப்பிட்டு ஒதுக்கப்பட்ட வளங்கள் உள்ளடங்கிய முக்கியமான, கால அவகாசமிக்க மற்றும் அளவிடக் கூடிய உறுதிமொழிகளை தயாரிக்கவும்.
2. எச். ஐ. வி மற்றும் எய்ட்ஸ் காரணமாக நிர்க்கதியாகியுள்ள மற்றும் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பான சரியான கண்ணோட்டங்களை முன்னிலைப்படுத்தும் வகையில் கல்வி, இனப்பெருக்கச் சுகாதாரம், ஆட்சி முறைமை, வாழ்வாதாரம் ஆகியன உள்ளடங்கலாக நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுவதில் உறுதியுடன் இருக்கவும்.
3. நிர்க்கதியான மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான மூலோபாயங்கள் உரிய நேரத்திற்கு அமைவான நடவடிக்கை திட்டங்களை உள்ளடக்கியதாக பூரணப்படுத்துவதற்கு உதவியை வழங்குவதற்கு பரப்புரை செய்யவும்.

**அணுகுமுறை**
எங்களுடைய செய்தியை இயன்றளவில் பல மன்றங்களின் ஊடாக வெளிக்கொணருவதே மிகவும் பயனுள்ள உத்தியென நாம் தீர்மானித்தோம். ஐக்கிய இராச்சியத்தின் அரச கொள்கைகள் எதிலும் சிறுவர்கள் உள்ளடக்கப்படவில்லை. எனவே, இலக்குக் குழுக்கள் மீதான செல்வாக்கு தொடர்பிலான முயற்சிகள், எதிர்கால பரப்புரை நடவடிக்கைகளில் விழிப்புணர்ச்சியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படல்.** நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து இந்த விடயம் தொடர்பில் சுருக்கக் குறிப்புக்களை வழங்கினோம். அதன் பின்னர் பாராளுமன்றத்தில் கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு நாம் அவர்களிடம் கோரினோம். அதனை தயாரிப்பதற்கும் நாம் உதவி புரிந்தோம். இந்த கேள்விகள் நிரந்தர பொதுமக்கள் அறிக்கையில் இணைத்துக் கொள்ளப்பட்டன. அத்துடன், அவை சம்பந்தப்பட்ட அரசாங்க திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டு முக்கியமானவை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டன. அத்துடன், பிரதம அமைச்சர் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான இராஜாங்கச் செயலாளருக்கு தனிப்பட்ட ரீதியில் கடிதம் ஒன்றை தயாரித்து அனுப்புவதற்கு நாம் ஆர்வமுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவி புரிந்தோம். தனிப்பட்ட ரீதியில் அனுப்பப்பட்ட கடிதங்கள் மிகவும் பயனுள்ளதாக, செல்வாக்கு நிறைந்ததாக இருந்தன.

**நேரடியான ஆதரவு நாடல்.** அரச சார்பற்ற நிறுவனங்களின் சமூகம் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட செல்வாக்கு செலுத்துபவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்கள் உள்ளடங்கலாக எங்கள் பிரதான நிபந்தனைகளுடன் அரசாங்கத்தின் ஆதரவை நேரடியாக பெறுவதில் கவனஞ் செலுத்தியது.

**ஆலோசனை செயன்முறைக்கான உள்ளீடு.** இந்த மூலோபாயத்தில் தனிப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஒன்றிணைந்த நிறுவனங்கள் என்ற இரண்டு முறையிலும் செல்வாக்கு செலுத்துவதற்கு பெரும் எண்ணிக்கையிலான சந்தர்ப்பங்கள் உள்ளன. நாங்கள் எமது பெரும்பாலானா ஆதரவு தேடும் நடவடிக்கைகளை முறைசாரா அரச சார்பற்ற நிறுவன குழுவான நிர்க்கதியான மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான செயற்பாட்டு குழுவின் ஊடாகவே முன்னெடுத்தோம். நாம் துரிதமாக முன்னேறி மற்றும் அனைத்து வகையான தொடர்பாடல்களிலும் தொடர்ச்சியான தகவல் வழங்கலை உறுதிசெய்யும் இந்த செயன்முறைக்கு முன்பதாக பிரதான விடயங்களை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம் மற்றும் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்பதனை உறுதி செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

**பொதுமக்கள் அழுத்தம்.** சேவ் த சில்ரன் அமைப்பின் வலிமையான உதவி வழங்கும் தளத்தின் உதவியை பயன்படுத்தி இறுதியான முயற்சியை முன்னெடுத்தோம். எங்களுடைய செய்தியின் இலக்குக் குழுவாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராச்சியத்தின் நிறுவனத்தின் செயலாளரை தீர்மானித்தோம். ஏனையோரினால் அவர் மீதான அவதானம் குறைவாக இருப்பதன் காரணமாகவே நாம் இவ்வாறு தீர்மானிக்க நேர்ந்தது. இருப்பினும், எங்களுடைய நடவடிக்கை அதிகூடிய பலனைத் தரும் என்ற உறுதியையும் நாம் வழங்கினோம். சிறுவர்களுக்கான உதவியை கோரி நேரடியாக ஆதரவாளர்கள் அவருக்கு மின்னஞ்சல் தகவல்களை வழங்கினர்.

நாங்கள் அடைந்தது
இறுதியாக, எமது குறிக்கோள்கள் அனைத்தையும் நாம் அடைந்தோம். மூலோபாயத்தில் சிறுவர்களுக்கான இடம் ஒன்றை நாம் பெற்றோம். மிகவும் பலமான ஆதரவை நாடும் கருவியாக நிர்க்கதியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பணிக்குழுவை நாம் ஸ்தாபித்தோம்.

பயிற்சி 6.2

**ஆதரவை நாடல் நாடகம்**

பிரதான இலக்குக் குழுக்களின் ஆதரவை நாடலுக்கு உங்களுடைய சுயமான செய்தியை நாடகம் ஒன்றை தயாரிப்பதற்கு பயன்படுத்தவும். உங்களிடம் செய்திகளும் எதுவும் இல்லையெனின், பின்வரும் மூலப்பொருட்களை பயன்படுத்தவும்.

**ஆதரவை நாடுபவர்:**

**சுருக்கக் குறிப்பு**

சுகாதார பராமரிப்புக்கு கட்டணம் அறவிடும் நடப்பு கொள்கையின் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதனை எனது கருத்து வெளிப்படுத்துகின்றது. ஆபிரக்காவில் சுகாதார பராமரிப்புக்கான கட்டணத்தை இல்லாது செய்வதன் மூலம் வருடாந்தம் சுமார் 285,000 சிறுவர்களின் வாழ்க்கையை நாம் காப்பாற்ற முடியும். சியார்ரா லியோனில் மலேரியா நோய்க்கான சிகிச்சைக்கு 18,000 லியோன் அறவிடப்படுகின்றது. அந்நாட்டு பிரஜையின் 14நாட்களுக்கான வருமானமாக இது காணப்படுகின்றது. மருத்துவ நிலையங்களில் மகப்பேற்றுக்கு 55,000 லியோன் வரை அறவிடப்படுகின்றது. இது அந்நாட்டு பிரஜை ஒருவரின் 70நாட்களுக்கான வருமானம் ஆகும். இதன் காரணமாக வறியவர்கள் சுகாதார சேவையை நாடிப் போக முடியாத நிலை உருவாகுகின்றது. சுகாதார சேவைக்கான கட்டணம் அறவிடப்பட்ட நாடுகள் அனைத்திலும், சுகாதார சேவைகளின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது. பொதுவாக 40-50 வீதமான வறிய குடும்பங்கள் இதன் காரணமாக பாதிக்கப்படுகின்றன.

**ஆதாரம்**

ஒவ்வொரு வருடமும் நியூமோனியா, மலேரியா, டயரியா அல்லது தட்டம்மை போன்ற காப்பாற்றக் கூடிய நோய்களினால் ஒவ்வொரு வருடமும் சுமார் 11 மில்லியன் சிறுவர்கள் உயிர் இறக்கின்றனர். ஒவ்வொரு மூன்று செக்கன்களுக்கும் ஒரு சிறுவரின் உயிரிழப்பு பதிவாகின்றது. தாய்க்கு சிறந்த சுகாதார பராமரிப்பு சேவைகள் வழங்கப்படாமையினால் சுமார் நான்கு மில்லியன் சிறுவர்கள் பிறந்த ஒரு மாதத்திலும், நான்கு மில்லியன் சிறுவர்கள் பிறக்கும் போதும் உயிரிழக்கின்றனர். ஆபிரிக்கா போன்ற நாடுகளில் சுகாதார பராமரிப்புக்கான கட்டணங்களை அறவிடுவதன் மூலம் 5 வீதமான வருமானத்தையே பெற முடிகின்றது. நிர்வாகச் செலவுகளுக்காகவே ஆபிரிக்க நாடுகளில் அதிகம் செலவிடப்படுகின்றது.

**உதாரணம்**

கைளுன் (முயடைரெ) மாவட்டத்தின் அம்னாட்டாவுக்கு (யுஅயெவய) ஏழு குழந்தைகள் இருந்தனர். எனினும் தற்போது ஒரு குழந்தை மாத்திரமே உயிருடன் உள்ளது. குழந்தைகளை வைத்திய நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான பணம் இன்மையே இந்த குழந்தைகள் உயிரிழப்பதற்கு காரணமாக அமைந்தன. தற்போது அவரிடம் உயிருடன் உள்ள குழந்தையின் வயது ஏழு மாதங்களாகும். இஷாட்டா (ஐளயவய) என்ற இந்த குழந்தையும் தற்போது மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளது. அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு மூன்று வாரங்கள் அம்னாட்டா காத்திருக்க வேண்டியுள்ளது. *"என்னுடைய கணவரிடம் பணம் இல்லை, குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு என்னிடம் பணம் இல்லை.", "எனது கணவருக்கு பணம் கிடைத்தவுடன் தான் குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு வந்தோம்"* என அவர் தெரிவித்தார்.

**எதிர்பார்க்கப்படும் நடவடிக்கை**

சிறுவர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. எனவே, நீங்கள் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். கட்டணம் அறவிடுவதனை நீக்க வேண்டும். இலவசமான பொதுமக்கள் சுகாதார சேவையை வழங்குவதற்கு நிதியுதவி வழங்குமாறு நீங்கள் நிதி வழங்கும் நிறுவனங்களிடம் கோர வேண்டும்.

அமைச்சர்:

அமைச்சரின் சில ஆர்வங்களிலும் மற்றும் அக்கறைகளிலும் உள்ளடங்குவது:

- இதற்கான பணத்தை நான் எங்கிருந்து பெறுவேன்? பணத்தை பெறுவதற்கு நான் எங்கு சேமிப்பு செய்ய முடியும்?
- இந்த கொள்கை முயற்சிக்கு நான் உதவி வழங்குவதன் மூலம் ஊடகம் என்னைப் பற்றி என்ன நினைக்கும்?
- உலக வங்கி இது குறித்து என்ன நினைக்கும்?
- எங்கள் நாட்டில் வறுமை என்பது பாரிய பிரச்சினையாக இருக்கின்றது. இந்த கொள்கை மாற்றமானது எவ்வாறு நாட்டின் சனத்தொகை முழுவதிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்? இந்த மாற்றம் எவ்வாறு வறியவர்களின் நிலையில் முன்னேற்றத்தை கொண்டு வரும் என்பதனை நீங்கள் நிரூபிப்பீர்கள்?
- எனக்கு இப்போது தான் இந்த பதவி கிடைத்தது. எனக்கு நிதி அமைச்சராக இருப்பதில்தான் விருப்பம்.
- அமைச்சரவையில் எனக்கு அதிக நண்பர்கள் இல்லை. பாராளுமன்றத்தில் எனக்கு பெரும் அளவிலான ஆதரவு இல்லை.
- இன்னும் மூன்று மணித்தியாலங்களில் பிரதம அமைச்சருடன் எனக்கு சந்திப்பு ஒன்று உள்ளது. என்னுடைய பதவியில் நான் சிறப்பாக செயற்படுகின்றேன் என்பதை வெளிப்படுத்துவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

## 6.3 ஊடகங்களுடன் செயற்படல்

**ஏன் ஊடகங்களுடன் செயற்படல் வேண்டும்?**
பிரதான தீர்மானம் எடுப்பவர்களில் செல்வாக்கு செலுத்துபவர்களாக நீங்கள் பொதுமக்களை அடையாளங் கண்டதன் பின்னர் ஊடகங்களுடன் செயற்படல் என்பது அத்தியாவசியமானதாக ஆகிவிடுகின்றது. ஊடகத்துடனான தொடர்பில், அவர்கள் உங்களை தொடர்பு கொண்டால் **எதிர்வினையானதாக** இருக்கும், நீங்கள் அவர்களை பயன்படுத்தி தகவல்களை பரவச் செய்வதற்கு முயற்சி செய்தால் **செயல்வினையானதாக** இருக்கும்[13].

**1. ஊடகங்களுக்கு பதிலளித்தல்**
**ஊடக அறிக்கைகளுக்கு தூண்டக் கூடிய வகையில் பதிலளிக்க வேண்டும்.**
ஊடகத்தில் இருந்து உறுப்பினர் ஒருவர் உங்களுக்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டாராயின், கால எல்லை எதுவென விசாரியுங்கள். சிறிது நேரத்தில் குறித்த விடயம் தொடர்பில் நபரொருவர் செய்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பு கொள்வார் என்பதற்கு உறுதி வழங்குங்கள். அதன் பின்னர் சம்பந்தப்பட்ட சேவ் த சில்ரன் அமைப்புடன் தொடர்பு வைத்துள்ள ஊடகங்களை அணுகுங்கள்.

தனிப்பட்ட சேவ் த சில்ரன் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு ஊடகங்களுக்கு பதில் அளிப்பது தொடர்பில் நெறிமுறைகள் உள்ளன. ஊடகம் ஒன்றின் உறுப்பினர் உங்களை தொடர்பு கொள்ளும் போது, சேவ் த சில்ரன் ஊடக தொடர்பினை அணுகுங்கள். குறித்த கால அவகாசத்துக்குள் எவ்வாறு தகவல்களை வழங்குவது என்பது தொடர்பில், அவர்கள் உங்களுக்கு உதவி வழங்க முடியும். அத்துடன், நேர்காணலுக்கான சிறந்த நபர் எவர், வெளிப்படுத்த வேண்டியது எதனை மற்றும் எவ்வாறு தயாராகுவது என்பது தொடர்பிலும் அவர்கள் உங்களுக்கு ஆலோசனை வழங்க முடியும்.

**2. வெற்றிகரமான நேர்காணலை முன்னெடுத்தல்**
**செய்தியாளர் உங்களை தொடர்பு கொள்ளும் போது**
உங்களுடைய விடயம் தொடர்பில் நன்கு அறிந்து வைத்திருத்தலும் மற்றும் கேட்கப்படக் கூடிய கேள்விகள் தொடர்பில் தயாராகுவதும் சிறந்த நேர்காணல் ஒன்றை வழங்குவதற்கு பிரதான அம்சங்களாகும். செய்தியாளர்கள் எப்போதும் கால அவகாசத்துடனேயே செயற்படுவர். ஆனால், உங்களுடைய தகவல் தொடர்பில் போதிய தரவுகளை சேகரித்தல் மற்றும் தொடர்பாடல் நிபுணரின் ஆலோசனையைப் பெற்ற பின்னரே நீங்கள் ஊடகங்களுக்கான நேர்காணலை வழங்குவது சிறப்பாக இருக்கும். இதனை மேலும் நேர்த்தியானதாக ஒழுங்கமைப்பதற்கு, அவர்களிற்கு உள்ள கால அவகாசம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டு, அதன் அடிப்படையில் செயற்படவும்.

**நேர்காணலுக்கு தயாராதல்**
**நேர்காணல் தொடர்பில் கேட்கப்படும் கேள்விகள்:**
- உங்களுடைய நேர்காணல் வெளியாகப் போகும் ஊடகம் (செய்திதாள், தொலைக்காட்சி, வானொலி)?
- உங்களுடைய தொடர்பு விபரங்கள் எவை?
- உங்களுக்கான கால அவகாசம் என்ன?
- எப்போது மற்றும் எங்கே நேர்காணல் இடம்பெற போகின்றது, அதன் கால அளவு என்ன?
- வேறு யார் நேர்காணலில் கலந்து கொள்ளப் போகின்றனர் (வேறு எவரும் கலந்து கொள்வதாயின்), நான் பிரதானமான பாத்திரமா அல்லது உதவி பாத்திரமா?
- உங்களுடைய செய்தியின் கோணம் என்ன? வேறு செய்தியுடன் இந்த நேர்காணல் தொடர்புபடுத்தப்படுமா?
- ஏன் நீங்கள் இந்த விடயத்தை தெரிவு செய்து, நேர்காணலுக்கு என்னை தொடர்பு கொண்டீர்கள்?

---

13 சர்வதேச எச்.ஐ.வி/எய்ட்ஸ் கூட்டமைப்பின், *நடவடிக்கைக்கான பரப்புரை, எச்.ஐ.வி/எய்ட்ஸ்க்கு பதிலளிக்கும் வகையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூகஞ் சார்ந்த நிறுவனங்களுக்கு உதவி வழங்கும் கருவித் தொகுதி, 2002*
*A toolkit to support NGOs and CBOs responding to HIV/AIDS*, 2002.

- எங்களுடைய நிறுவனம் அல்லது சிறுவர்கள் தொடர்பான விடயங்களை இதற்கு முன்னர் நீங்கள் வெளிப்படுத்தியுள்ளீர்களா?
- இந்த செய்தியை எப்போது வெளியிடுவதற்கு திட்டமிட்டுள்ளீர்கள்? இந்த நேர்காணலானது நேரடியாக ஒளி/ஒலிபரப்பு செய்யப்படவுள்ளதா?
- செய்திதாளிற்கான நேர்காணலாயின், என்னுடைய புகைப்படம் தேவைப்படுமா?
- ஒளி/ஒலிபரப்பு செய்வதற்கு பேச்சாளரை நீங்கள் முன்னரே நேர்காணல் செய்ய வேண்டுமா?

**உங்களை நேர்காணல் செய்யப் போகும் ஊடகவியலாளர் குறித்து அறிந்து கொள்ளுங்கள்:**

- அவர்களது பார்வையாளர்கள் தொடர்பில் விசாரணை செய்யுங்கள் - அவர்களுடைய இலக்கு பார்வையாளர்கள் யார், அவர்களிடம் நீங்கள் கொண்டு செல்லப் போகும் செய்தி என்ன?
- ஊடகவியலாளரை தொடர்பு கொண்டு கலந்துரையாடப்படவுள்ள விடயம் தொடர்பில் இணக்கத்தை தெரிவியுங்கள். ஊடகவியலாளருடன் நீங்கள் கதைக்க ஆரம்பிப்பதிலிருந்து, நேர்காணல் ஆரம்பமாகின்றது என்பதனை நினைவில் கொள்ளுங்கள். "பதிவிற்கு வெளியே" என்ற எந்தவொரு விடயமும் அங்கு இல்லை. விடயங்களை தெளிவாக விளக்குங்கள். எவ்வகையான கேள்விகளை அவர்கள் கேட்பார்கள் என்பது தொடர்பில் ஊடகவியலாளரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள். அவை விவாதம் செய்யக் கூடியனவா என்கு தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
- பொருத்தமான தகவல்களை முன் ஆயத்தம் செய்து கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, புள்ளியியல் தகவல்கள், சம்பவங்கள் மற்றும் தனிப்பட்ட அனுபவங்கள்.
- நீங்கள் கொண்டு செல்ல வேண்டிய பிரதான செய்திகளை பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். அவை ஒவ்வொன்றிற்கும் மூன்று அல்லது நான்கு பிரதான குறிப்புக்களளை தயாரித்துக் கொள்ளுங்கள்.
- உங்களுடைய செய்தியை சுருக்கமாக விளக்கக் கூடிய கவரக் கூடிய வார்த்தைகளை பயன்படுத்தவும்.
- நீங்கள் வெளிப்படுத்தப் போகும் விடயம் தொடர்பில் புதிய தகவல்களையும் தேடிப் பாருஞ்கள்.
- உத்தேசிக்கப்படும் கேள்விகள் தொடர்பில் ஆவணம் ஒன்றை தயாரித்துக் கொள்வதற்கு சக ஊழியர்களுடன் இணைந்து செயற்படவும். அதற்கான பதில்களை தயார் செய்து கொள்ளுங்கள். அவற்றை எவ்வாறு சமர்ப்பிப்பது என்பது தொடர்பில் பயிற்சி செய்து கொள்ளுங்கள்.

ஊடகவியலாளர்கள் பொதுவாக நேர்காணலின் போது ஐந்து பிரதான விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துவர். அது ஐந்து Wக்கள் என அழைக்கப்படும்.
யார் (Who) செய்கின்றார்? என்ன (What), எங்கே (Where), எப்போது (When), ஏன் (Why).

கேட்கப்படும் பிரதான கேள்விகளில் பின்வருவனவும் உள்ளடக்கப்படலாம். **எத்தனை மோசமானது அது? அதன் பொருட்டு என்ன செய்யலாம்? அதற்கு எவ்வளவு செலவாகும்? தேவையான மூலப் பொருட்கள் எவை?**

**நேர்காணலின் போது**

- இதயப்பூர்வமாக பதில் அளிக்கவும்.
- அமைதியாக இருப்பதற்கு முயற்சிக்கவும்
- குறித்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளரை விட உங்களுக்கு அதிகம் தெரிந்திருப்பதனை நினைவில் கொள்ளுங்கள்.
- உங்களுடைய பதில்களை சுருக்கமானதாக வைத்துக் கொள்ளுங்கள். எளிமையான மொழியை பயன்படுத்துங்கள். உவமைகள் அல்லது புரியாத பதங்களை பயன்படுத்தாதீர்கள்.
- பதில் ஒன்று தொடர்பில் சிந்திப்பதற்கு உங்களுக்கு நேரம் அவசியமாக இருப்பின், பதில் அளிப்பதற்கு முன்னர் கேள்வியை ஒரு முறை கூறிப்பாருங்கள்.
- உங்களுடைய பிரதான செய்திகளுக்கு பின்னர் ஊடகவியலாளர் பின்தொடர்ந்து வருவதனை உறுதி செய்து கொள்ளுங்கள். குறிப்பிட்ட விடயத்தை மீண்டும், மீண்டும் சொல்வதன் மூலம் அதனை உறுதி செய்து கொள்ள முடியும்.

- ஆக்கப்பூர்வமானவராக வடிவத்தை தயாரித்துக் கொள்ளுங்கள், "அது எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது தொடர்பில் சிந்தித்து வைத்துக் கொள்ளுங்கள்".
- செய்தியாளர் முன்வைக்கும் கேள்வியொன்றுக்கு அவசரத்துடன், சிந்திக்காது ஒரு போது பதிலளிக்க வேண்டாம்.
- உங்களுக்கு குறித்த விடயம் தொடர்பில் தகவல்கள் எதுவும் அறியாதிருப்பின், தெரியவில்லை என்றே கூறுங்கள்.
- விடயத்திற்கு வெளியில் ஒருபோதும் செல்ல வேண்டாம். நீங்கள் தெரிவிக்க வேண்டிய விடயத்தை சிறப்பாக கூறுவதை உறுதி செய்து கொள்ளுங்கள். நீங்கள் எதிர்பார்க்காத கேள்வியொன்றை சந்திக்கும் போது அல்லது எவ்வாறு பதிலளிப்பது என்பது தொடர்பில் உறுதியில்லாத போது, அதனை ஒரு போதும் நிராகரிக்க வேண்டாம். கேள்வி தொடர்பில் மிகவும் சுருக்கமாக விளக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு உங்களுடைய பிரதான குறிப்பை நோக்கிச் செல்லுங்கள்.

உங்களுடைய பதில்களை இணைக்கக் கூடியதாக சில வார்த்தைகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

- ➢ நீங்கள் கேட்கும் விடயம் மிகவும் முக்கியமானது என நான் நினைக்கின்றேன். ஆனால் முக்கியமான விடயம் என்னவென்றால்,
- ➢ உண்மையாகவே அது கவனஞ் செலுத்த வேண்டிய விடயம். ஆனால், நாங்கள் எது குறித்து அக்கறை செலுத்து வேண்டுமாயின்,
- ➢ இங்கு ஏற்பட்டுள்ள உண்மையான நிலை என்னவென்றால்,
- ➢ ஆய்வின் முடிவுகள் எவ்வாறான முடிவை கூறுகின்றனவென்றால்,
- ➢ இந்த விடயத்தை கருத்து என்னவென்றால்,
- ➢ ஆனால்,

உங்களுடைய பிரதான விடயத்தை நோக்கி திசை திருப்புவதே சிக்கலான விடயமாக இருக்கும். இல்லையாயின், ஊடகவியலாளர் தமது நிகழ்ச்சி நிரலுக்கும் மற்றும் செய்திக்கும் ஏற்ப உங்களை கையாளுவதற்கான கட்டுப்பாட்டை நீங்கள் வழங்க நேரிடும்.

**தவிர்க்க வேண்டிய படுகுழிகள்**
உங்களுடைய செய்தியை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக ஒவ்வொரு கேள்விகள் உணரப்படல் வேண்டும். ஆனால், நீங்கள் தவிர்க்க வேண்டிய பல படுகுழிகள் உள்ளன.

- **நீங்கள் கூறுவதைப் போன்று கருத்துக்களை மாற்றல்.** ஊடகவியலாளர் ஒருவர் "இதுவே இடம்பெறக் கூடிய மிகவும் மோசமான சம்பவம் என்று நீங்கள் கருதவில்லையா" என கேட்கும் போது, நீங்கள் அதற்கு இசைந்தால், நீங்களே குறித்த விடயத்தை கூறியதாக ஊடகவியலாளர் மாற்றிவிடுவார்.

- **எதிர்ப்புரை.** நீங்கள் இசையாத ஒரு விடயம் தொடர்பில் கேள்வி ஒன்று எழுப்பப்படுமாயின், நீங்கள் அதனை எதிர்க்க வேண்டும். உதாரணமாக, நேர்காண்பவர் "எனவே, நீங்கள் விளைவுகளை கருத்திற் கொள்ளாமல் இந்த புதிய செயற்றிட்டத்தை முன்னெடுத்தீர்களா?" என உங்களிடம் கேள்வியை எழுப்பினால், மிகவும் அவதானமான எச்சரிக்கையின் பின்னரே நீங்கள் இந்த திட்டத்தை முன்னெடுத்தமையை விளக்க முடியும்.

- **எதிர்விளைவுகள்.** ஒளி/ஒலிபரப்பு நேர்காணலாக இருந்தால், நீங்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கும் கருத்தை மீள, மீள குறிப்பிடுவதனை தவிர்க்கவும். "எனவே, இந்த கருத்து அழிவுகரமானது" என நேர்காண்பவர் கூறுவாராயின், "அது அழிவுகரமானது அல்ல, இந்த சூழ்நிலையில் நாம் எதிர்பார்த்தது அதனைத் தான்" எனக் கூற வேண்டாம். அழிவுகரமானது என்ற எண்ணத்தை மீள வலியுறுத்துவதைப் போன்றதாகும். "இல்லை, நாம் எதிர்பார்த்தது இவ்வாறான விளைவையல்ல" என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

- **ஊகித்தல்.** ஒரு போதும் ஊகத்தின் அடிப்படையில் பதில் அளிக்க வேண்டாம்.

ஊடகங்களுக்கு இடையிலான வேறுபாடு

**அச்சு ஊடகம்:** வானொலி மற்றும் தொலைக்காட்சியை விட இலகுவானது. நேர்காணலின் போது நீங்கள் தவறிழைப்பின், மன்னிப்பு கோரி சரியாக அதற்கான பதிலை கூறலாம்.

**வானொலி:** எங்கு அமர்வது, ஒலிவாங்கியை எவ்வாறு பயன்படுத்துவது, இன்னபிற போன்ற விடயங்களை நன்கு விசாரித்து அறிந்து கொள்ளவும். முதலாவது கேள்வி என்னவென்பது தொடர்பில் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். அது உங்களின் அவதானத்தை அதிகரிப்பதற்கு உதவி செய்யும். குறிப்பெடுத்து வைத்துக் கொள்ளுங்கள். தாள்களை பயன்படுத்துவதை தவிர்க்கவும். சிறிய காகித அட்டைகளில் குறிப்புக்களை வைத்துக் கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். முன்பதிவு செய்யும் நேர்காணலாயின், பதிலளிக்கும் போது தவறிழைத்தால் திருத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பம் உள்ளது. அது நேரடி நேர்காணலாக இருந்தால் "நான் அந்த பதிலை மேலும் விளக்கமா கூற விரும்புகின்றேன்" என்று கூறி தொடரலாம்.

**தொலைக்காட்சி:** வானொலியைப் போன்றதே ஆனால் இங்கு நீங்கள் காட்சிப் படுத்தப்படுவீர்கள். இயன்றளவில் அதிகம் அசையாது இருக்க முயற்சியுங்கள். வானொலி நேர்காணலை விட, தொலைக்காட்சி நேர்காணல் குறுகியதாக இருக்கும்.

## 2. பரப்புரைக்காக ஊடகத்தை முனைப்புடன் பயன்படுத்தல்

செய்ய வேண்டியது என்ன?

- எந்த ஊடகங்கள் உங்களுடைய பரப்புரை இலக்குகளை அடையக் கூடியன என்பதனை அடையாளங் காணல். அதன் அர்த்தம் வெகுசன ஊடகங்களை என்பதனை நீங்கள் அணுகிச் செல்லும் போது உங்களால் இயன்றளவு, அதிக எண்ணிக்கையிலான மக்களை சந்தித்தலாகும். அல்லது அவர்களது எண்ணத்தை மாற்றியமைப்பதற்கான விசேடமான அமைச்சர் ஒருவர் உங்களுக்கு தேவையாக இருக்கும். எனவே, அவர்கள் அதிகம் வாசிக்கும், பார்க்கும் அல்லது செவிமடுக்கும் ஊடகம் எதுவென்பதை முதலில் அடையாளங் காணுங்கள்.
- பொதுமக்கள் விநியோகத்திற்காக உங்களுடைய பிரதான செய்திகளை தயார் செய்து கொள்ளுங்கள்- வடிவமைப்பவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களின் கருத்துக்காக நீங்கள் வெளியிடும் செய்திகளில் இருந்து சிறிதளவு மாறுபட்டதாக இது இருத்தல் வேண்டும். இந்த விடயத்தின் அளவு மட்டம் என்ன? இந்த சூழ்நிலையை தணிப்பதற்கு செய்யத் தேவையாய் இருப்பது என்ன? யார் எதனைச் செய்ய வேண்டும்? எப்போது செய்ய வேண்டும்? இதில் சிறுவர்கள் மீதான தாக்கம் என்ன?
- ஊடகத்தில் உரையாற்றக் கூடிய இயலுமை கொண்ட பிரதான பேச்சாளர் அல்லது பேச்சாளர்களை அடையாளங் காணுங்கள்.
- உங்கள் விடயத்தை வெளிக்கொணருவதற்கு எவ்வாறு ஊடகத்தைப் பயன்படுத்தப் போகின்றீர்கள் என்பது தொடர்பில் ஆக்கப்பூர்வமாக சிந்திக்க வேண்டும்.
  - ➢ நீங்கள் முன்வைக்கும் விடயத்தை ஊடகவியலாளரே நேரடியாக காண்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.
  - ➢ சில புதிய மற்றும் முக்கியமான புள்ளியியல் தகவல்களை உங்களுடைய விடயத்தின் தீவிரமான தன்மையை விளக்குவதற்கு பயன்படுத்தலாம்.
  - ➢ ஊடகம் அறிக்கைப்படுத்த வேண்டிய விடயம் தொடர்பில் வெளிப்படுத்தக் கூடிய புகைப்படங்கள் அடங்கிய காட்சிகளை ஒழுங்கு செய்யலாம் (மனுக்களை உரிய அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கு பதில்).
  - ➢ செய்தித் தன்மையுடைய நிகழ்ச்சியை தயாரிக்கவும். ஆக்கப்பூர்வமாக மற்றும் உங்களுடைய பரப்புரை குறிக்கோளுக்கு இயைந்த வகையில் நகைச்சுவையாக அல்லது தீவிரமானதாக முன்வைக்கவும்.
  - ➢ செய்திதாளில் வெளிக் கொணருவதற்காக கருத்து கூறும் செய்தியொன்றை தயாரிக்கலாம்.
  - ➢ விவாதம், கருத்தரங்கு அல்லது ஊடகவியலாளர் மாநாடொன்றை ஒழுங்கு செய்து, அதற்கு பிரதான பேச்சாளர்களையும் மற்றும் ஊடகங்களையும் அழைக்கலாம்.

- இந்த சூழ்நிலை பொருந்தக் கூடிய சிறுவர் ஒருவரை அடையாளங் கண்டு, அவரை நேர்காண்பதற்கான சந்தர்ப்பத்தை ஊடகவியலாளருக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம் (சேவ் த சில்ரன் அமைப்பின் ஐக்கிய இராச்சிய இணையத் தளத்தில் www.savethechildren.org.uk சிறுவர்களை நேர்காணல் தொடர்பான வழிகாட்டியைப் பாருங்கள்).
- அரசாங்கத்திற்கு நீங்கள் பகிரங்கமான கடிதம் ஒன்றினை எழுதி, அதனை செய்திதாளில் பிரசுரமாக்குவதற்கு முயற்சி செய்யுங்கள்.
- செய்திதாளின் விளம்பரப் பகுதிக்கான கட்டணத்தை நீங்கள் செலுத்த முடியும்.
- நேரடியாக நீங்கள் ஊடகப் பிரதியொன்றை வழங்க முடியும். சில சந்தர்ப்பங்களில் ஊடக அறிக்கையிலும், நன்கு தயாரிக்கப்பட்ட கட்டுரை அல்லது ஆவணம் பரவலாக விநியோகிப்பதற்கு தரமானதாக இருக்கும்.
- செய்தி தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கு சில மூலப்பொருட்களை நீங்கள் ஊடகவியலாளருக்கு தயாரித்து கொடுக்கலாம். உதாரணமாக, விடயம் தொடர்பான பின்புலத்தின் சுருக்கம், சில படங்கள், சில ஒளிப்பதிவுகள் அல்லது சில சம்பவ கற்கைகள்.

பரப்புரை ஊடக அறிக்கையை தயாரிக்கும் போதும், நீங்கள் **செய்தி**யொன்றை வெளியிடுகின்றீர்கள் என்பதனை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய விலைமதிக்கத்தக்க பரிந்துரைகள் மாத்திரம் ஊடகவியலாளர்களின் ஆர்வத்தை பெற்றுக் கொள்வதற்கு போதுமானதாக இருக்காது. குறித்த விடயத்தை வெளிக்கொணருவதற்கான அவசியத்தையும் நீங்கள் அவர்களுக்கு அறியப்படுத்தல் வேண்டும். குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடும் அக்கறை ஏற்படுவதற்கான காரணமாக அமைந்துள்ள பிரதான தினங்கள் மற்றும் நிகழ்வுகளை அவர்களுக்கு அறியப்படுத்தவும். விடயம் தொடர்பிலான ஈர்ப்பை அதிகரிக்கச் செய்யும் கவர்ச்சியான பதங்களை உள்ளடக்குங்கள். நீங்கள் கோருவது என்னவென்பதை தெளிவாக குறிப்பிடுங்கள். இது சம்பந்தப்பட்ட நபருக்கு பயனளிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். புரியாத பதங்களை பயன்படுத்துவதனை தவிர்க்கவும். அபிவிருத்திக்கான மொழி மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான அரும்பதங்கள் சில ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் புரியும்.



Children promoting quality education through art on Ethiopian Television talk show

பயிற்சி 6.3

## ஊடக முன் பயிற்சி நாடகம்

கீழே சில மாதிரி கேள்விகள் வழங்கப்பட்டுள்ளன. நீங்கள் எதிர்கொள்ளவுள்ள நேர்காணலின் விடயத்தின் அடிப்படையில் அதனை தெரிவு செய்யலாம் அல்லது திருத்திக் கொள்ளலாம்.

- திரு/திருமதி/செல்வி/கலாநிதி........... அவர்களே மாலை வணக்கங்கள்
- இந்த பிரச்சினை தொடர்பில் கடந்த சில மாதங்கள் ஊடகங்கள் குறிப்பிடத்தக்க கவனத்தை செலுத்தியுள்ளமையை காணக் கூடியதாகவுள்ளது.
- அந்த வகையில், சேவ் த சில்ரன் அமைப்பு இந்த பிரச்சினை தொடர்பில் எவ்வகையான கருத்தை கொண்டுள்ளது என அறிந்து கொள்ள விரும்புகின்றேன்?
- ஆம் அது நல்லதொரு பதில். ஆனால், வெளிநாட்டு முதலீடு அல்லது வறியவர்கள் மத்தியில் குறைந்தளவிலான ஊக்குவிப்பு அல்லது செல்வந்த நாடுகளின் போதிய நிதி கிடைக்காமை என்பவற்றின் காரணமாகவே இந்த பிரச்சினை உருவாகியுள்ளது என்று கூறுவதில் உண்மை இல்லையா?
- எந்த அடிப்படையில் நீங்கள் இந்த கருத்தை முன்வைக்கின்றீர்கள்?
- இந்த நேர்காணலை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் குறித்த பிரச்சினையானது ............ என்பதன் காரணமாகவே தோன்றியது என நம்புவார்கள் என நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள். அந்த விடயத்தை தெளிவாக பார்த்தால், அது ......... என்பதன் விளைவாகும்.
- இந்த பிரச்சினையை அடையாளப்படுத்துவதற்கு எமது அரசாங்கம் எவ்வகையான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்?
- சேவ் த சில்ரன் போன்ற வெளிநாட்டு அமைப்புக்கள் எமது அரசாங்கம் நடந்து கொள்ள வேண்டிய விதம் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்கு எவ்வகையான உரிமையை கொண்டுள்ளன?
- வேறு ஏதேனும் மேலதிகமாக கூற விரும்புகின்றீர்களா?
- நீங்கள் வழங்கிய நேரத்திற்கும், பதில்களுக்கும் மிக்க நன்றி. வணக்கம்.



Former US Secretary of State, Madeleine Albright at the Save the Children Alliance celebration of World AIDS Day in Ethiopia 2006

## கொலம்பியாவின் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பிலான விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு ஊடகங்களை பயன்படுத்தல்.

பரப்புரையின் நோக்கம்
சிறுவர்கள் உரிமைகள் தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்ச்சியை அதிகரிப்பதே எங்கள் நோக்கமாகும். விசேடமாக, அனைத்து வகையான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை. இந்த விடயங்கள் குறித்து அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்கச் செய்வதற்கு அழுத்தத்தை வழங்குவதே இந்த செயற்பாட்டின் அடிப்படையாகும்.

வெகுசன ஊடகங்கள் ஊடாக பொதுமக்கள் விழிப்புணர்ச்சி
அனைத்து வகையான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் மற்றும் பாலியல் சுரண்டலில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை உட்பட சிறுவர்கள் விடயங்கள் தொடர்பில் தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் வினா-விடை நிகழ்ச்சிகளை நாம் நடத்தி வருகின்றோம். வெவ்வேறுபட்ட பின்புலங்களை கொண்ட சுமார் 10,000க்கும் அதிகமான சிறுவர்கள் இந்த போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சுமார் 3 மில்லியன் சிறுவர்கள் இந்த நிகழ்ச்சியை பார்த்துள்ளமையை எமது ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. சுமார் 100 நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டன. சுமார் 5 மில்லியன் மக்கள் அதன் ஊடாக தகவல்களை பெற்றுள்ளனர்.

பயிற்சி மற்றும் விழிப்புணர்ச்சியை அதிகரிக்கும் நடவடிக்கைகள்
சிறுவர்கள் உரிமைகள் தொடர்பான தகவல்களை பாடசாலை சிறுவர்களுக்கும் மற்றும் சமுதாயத்திற்கும் நாம் விநியோகித்தோம். சிறுவர்கள் உரிமைகள் தொடர்பில் சுமார் 60 ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் பயிற்றப்பட்ட 120 ஆசிரியர்களுக்கும் நாம் பயிற்சி செயலமர்வுகளை நடத்தினோம். சிறுவர்கள் உரிமைகள் பரப்புரை மற்றும் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பில் எங்களுடைய நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள், கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பங்காளர் நிறுவனங்களுக்கு நாம் பயிற்சிகளை வழங்கினோம். சிறுவர்கள் விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் மன்றத்தில் சுமார் 100க்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

எட்டப்பட்ட இலக்கு
செய்திதாள்கள் மற்றும் சஞ்சிகைகள் உள்ளடங்கலாக அச்சு ஊடகங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான அறிக்கைகள் வெளியாகும் அளவு 50 வீதத்தால் அதிகரித்துள்ளமையை கடந்த நான்கு வருடங்களில் நாம் கண்டறிந்துள்ளோம். சிறுவர்கள் விடயங்கள் தொடர்பில் செய்தி வெளியிடும் அறிக்கையிடலை சுமார் 60 ஊடகவியலாளர்கள் மாற்றியமைத்துக் கொண்டுள்ளனர். அத்துடன் 224 அரசாங்க அதிகாரிகளில் நேர்காணப்பட்ட 90 வீதத்தின சிறுவர்கள் உரிமைகள் தொடர்பிலான தகவல்களை பெற்றுள்ளனர். தற்போது இங்கே சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை வெளிக்கொணருதலின் அவசியம் ஆகியன குறித்து சிறந்த நிலையிலான விழிப்புணர்ச்சி காணப்படுகின்றது. பாடசாலை மற்றும் சமுதாய அளவில் மேலதிகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பொறியமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை நமக்கு தற்போதுள்ளது.

நாங்கள் கற்றது
பொதுமக்கள் விழிப்புணர்ச்சியை அதிகரிப்பதானது விடயம் சார்ந்த அக்கறையின் ஊடாக சூழ்நிலையை மாற்றுவதன் மூலம் பரப்புரைக்கு உதவி புரிகின்றது.

# சேர்க்கப்பட்ட வலுவை கட்டியெழுப்பல்

7.1 கூட்டமைப்புக்களுடன் பணியாற்றல்
7.2 மக்களை ஒன்று திரட்டல்
7.3 தனியார் துறையுடன் ஒப்பந்தம் செய்தல்



# அத்தியாயம் 7

## அறிமுகம்

அதிகரித்துச் செல்லும் முயற்சியை ஒருங்கிணைந்து எட்டுவதற்கு உறவுகளின் தொடர்ச்சியான கட்டியெழுப்பல், பேணி பாதுகாத்தல் மற்றும் விஸ்தரித்தல் என்பன பரப்புரைக்கு அவசியமாகும். இதன் மூலமே தீர்வினை நோக்கிச் செல்ல முடியும். நாங்கள் ஏற்கனவே எங்களுடைய உறவை நாங்கள் செல்வாக்கு செலுத்த முயற்சிக்கும் மக்களுடன் ஒப்பிட்டுள்ளோம். மாற்றத்திற்கான ஒருங்கிணைந்த எதிர்பார்ப்பை வலுப்படுத்துவதற்கு எவ்வாறு நாங்கள் ஏனையோருடனான உறவை மேம்படுத்துவது இந்த அத்தியாயம் ஆராய்கின்றது.

பரப்புரை குறிக்கோள்களை அடைவதற்கு நீங்கள் எவ்வாறு சாத்தியமுள்ள நண்பர்களுடன் இணைந்து பணிபுரிய முடியும் என நாங்கள் ஆராய்ந்துள்ளோம். நன்கு திட்டமிடப்பட்டு மற்றும் அவதானத்துடன் முகாமைத்துவம் செய்யப்பட்டு நண்பர்களுடன் இணைந்து செயற்படுவது, உங்களுடைய பரப்புரை எதிர்பார்க்க முடியாத அளவு வலுவடைவதற்கு உதவி புரியும். அத்துடன், சிவில் சமூக நிறுவனங்களுக்கு இடையிலான பரப்புரை இயலுமையை கட்டியெழுப்புவதற்கும் அது உங்களுக்கு துணை புரியும்.

கொள்கை மாற்றத்திற்கான முயற்சிக்கு பொது மக்களின் குரல்களும் அளவிடமுடியாத பலத்தை வழங்கும். மக்களுக்கு தேவையானது என்னவென்பது தொடர்பில் அரசியல்வாதிகள் கூருணர்வு மிக்கவர்களாக இருப்பர், எனவே, மாற்றத்தை உண்மையாக்குவதற்கும் மற்றும் அதனை நிலையானாதாக தக்க வைத்திருப்பதற்கும் பொது மக்களின் ஆதரவு என்பது அவசியமாகும். இந்த அத்தியாயத்தின் இரண்டாவது பகுதி பொதுமக்கள் பிரசாரம் ஒன்றை முன்னெடுப்பதில் உள்ளடங்கியுள்ள விடயங்களை ஆராய்கின்றது.

அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களுடனான தனியார் வர்த்தகங்களும் சிறுவர்கள் உரிமைகளை நிஜமாக்குவதில் மிகவும் முக்கியமான பத்திரத்தை வகிக்கின்றன. இந்த அத்தியாயத்தின் மூன்றாவது பகுதி, உங்களுடைய பரப்புரை மூலோபாயத்திற்கு பலம் சேர்ப்பதற்கு தனியார் துறையுடன் நீங்கள் எவ்வாறு இணைந்து கொள்ளலாம் என்பதனை ஆராய்கின்றது.

## 7.1 கூட்டமைப்புக்களுடன் பணியாற்றல்

**வலையமைப்புக்கள் மற்றும் கூட்டமைப்புக்களில் பணியாற்றல்**

பாரிய கொள்கை விடயங்கள் தொடர்பான வெற்றிகரமான பரப்புரைக்கு ஏனையோருடனான ஒருங்கிணைவு (சில சந்தர்ப்பங்களில் போட்டி) அவசியமாகும். சிறுவர் உரிமைகள் தொடர்பில் பரப்புரை செய்பவர்களும், சிறுவர் உரிமைகள் தொடர்பில் செயற்படுபவர்களுடனும், பரந்தளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களை கொண்டவர்களுடனும் ஒத்துழைக்க வேண்டும்.

ஒத்துழைப்பு என்பது பல வடிவங்களில் அமைந்திருக்கலாம். முறை சார்ந்ததாக மற்றும் முறைசாராததாக, தற்காலிகமானதாக அல்லது நிரந்தரமானதாக இருக்கலாம். இதனை விளக்குவதற்கு கூட்டமைப்புக்கள், கூட்டணிகள், வலையமைப்புக்கள், தளங்கள் என்ற பல பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சிலவற்றின் தனி மதிப்புக்கள் நெகிழ்வுத் தன்மை வாய்ந்தவை. எனவே, வகையாக்கம் மிகுந்த உதவிகரமானதாக இருக்கும்.

| கூட்டமைப்பின் வகை | சிறப்பியல்பு |
|---|---|
| வலையமைப்புக்கள் | வலையமைப்புக்கள் என்பது பொதுவாக முறை சாராததாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பினைக் கொண்டதாக இருக்கும். பெரும்பாலும் தகவல் பரிமாற்றத்தையும் மற்றும் குறைந்தளவிலான ஒருங்கிணைந்த செயற்பாட்டையும் வலியுறுத்துகின்றது. |
| கூட்டணிகள் | பொதுவாக முறை சார்ந்த கட்டமைப்பை கொண்டதாகவும், ஒருங்கிணைந்த செயற்பாட்டை கொண்டதாகவும் இருக்கும். தனிப்பட்ட நிகழ்வு, விடயம் அல்லது பிரசாரம் சார்ந்த பல்வகைத் தன்மை கொண்ட சிவில் சமூகங்களிற்கு இடையிலானதாக இருக்கும். வேறுபட்ட நிறுவனங்கள் செயற்பாடுகளை மிகவும் பொருத்தமான வகையில் பிரித்துக் கொள்ளும். |
| கூட்டமைப்புக்கள் | நம்பிக்கைக் கொண்ட பங்காளர்களுக்கு இடையிலான பொதுவான விடயங்கள் தொடர்பிலான நீண்டகால உடன்படிக்கைகள். மூலோபாயங்கள் மற்றும் திட்டங்கள் ஒன்றாக இணைந்து தயாரிக்கப்படும் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும். |
| பங்காளித்துவங்கள். | முக்கியமான செயற்பாடு தொடர்பில் தனிப்பட்ட நபர்களும் அல்லது நிறுவனங்களும் இணைந்து பணியாற்றும். சவால்கள் மற்றும் பயன்களை பகிர்ந்து கொள்ளும். தொடர்ச்சியாக உறவுமுறையான மீளாய்வு செய்யப்பட்டு, புதுப்பிக்கப்படும். |
| தளங்கள் | மேலே குறிப்பிட்டவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம். முக்கியமான விடயம் ஒன்று தொடர்பில் இணைந்து செயற்படுவதற்கான 'தளம்' ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும். |

குறிப்பிட்ட கூட்டமைப்புக்கள் முக்கியமான விடயத்திற்கென சந்தர்ப்பவசமாக ஒன்றிணைக்கப்படும். இது எதிர்பாராததாக மற்றும் விரும்பத்தகாததாக இருக்கும். இதன் காரணமாக இதறக்கு அரசியல் பலம் அதிகரிக்கப்பட்டிருக்கும். இவ்வாறான கூட்டமைப்புக்களை உருவாக்குவது என்பது, பரப்புரையின் ஆக்கப்பூர்வத் தன்மை மற்றும் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாகும்.

| ஏனையோருடன் செயற்படுவதனால் ஏற்படும் பயன்கள்[14] | ஏனையோருடன் செயற்படுவதால் ஏற்படக் கூடிய சவால்கள் |
|---|---|
| ▪ ஒரு நிலையில் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் மறுநிலையில் உள்ளவர்களில் கட்டியெழுப்பப்படும்.<br>▪ பொதுவான குரலில் உரையாடுவது மிகவும் பலமானது.<br>▪ பரந்தளவிலான மக்களை சென்றடைய முடியும்.<br>▪ தனிப்பட்டு செயற்படக் கூடியவர்களின் ஒருங்கிணைந்த பிரதிநிதித்துவம்.<br>▪ வேறுபட்ட நிறுவனங்கள் வித்தியாசமான துறைகளைச் சேர்ந்த நிபுணர்களையும் மற்றும் வித்தியாசமான ஆக்கக் கூறுகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன.<br>▪ சிவில் சமூகத்தை பலப்படுத்துகின்றது.<br>▪ நிதி மற்றும் வளங்களை பகிர்ந்து கொள்ள முடியும்.<br>▪ ஒற்றுமை, நம்பிக்கையான உதவி மற்றும் கூட்டுப் பொறுப்பை வழங்குகின்றது.<br>▪ ஒருங்கிணைவதன் மூலம் போட்டியும் மற்றும் போலித் தன்மையும் தவிர்க்கப்படுகின்றது. | ▪ ஒருங்கிணைதல் என்பது நேர விரயமானது.<br>▪ தெளிவான இலக்குகள் குறித்து இணங்குவதில் சிக்கல் உள்ளது.<br>▪ விட்டுக் கொடுப்புக்கள் அவசியமாக இருக்கும்.<br>▪ முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும்.<br>▪ தனிப்பட்ட நபர்கள் அல்லது குழுக்கள் ஒருபோதும் தமது உழைப்புக்கு பாராட்டப்பட மாட்டார்கள்.<br>▪ தனிச் சிறப்பு மிக்க அடையாளம் அழிந்து போகும்.<br>▪ நிறுவனங்கள் முரண்பாடான நிகழ்ச்சி நிரலை கொண்டிருக்கலாம்.<br>▪ பங்குபற்றுதல் என்பது வெறுப்புக்கு உரியதாக மற்றும் சிக்கலானதாக இருக்கும்.<br>▪ குழுவொன்று பிரிந்து சென்றால் நம்பகத்தன்மை பாதிக்கப்படும்.<br>▪ வேறுபட்ட கண்ணோட்டங்களின் சாதகத் தன்மையை எதிரிகள் பயன்படுத்திக் கொள்வர்.<br>▪ குழுவின் மீது சில நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தலாம். |

---

[14] பாதுகாப்பான உலகம், *நடவடிக்கைக்கான பயிற்சி, 2005*இலிருந்து உள்வாங்கப்பட்டது.

## வலையமைப்புக்கள் மற்றும் கூட்டணிகளை கட்டியெழுப்புவதற்கான பிரதான பாடங்கள்

எதியோப்பியாவில் நடைபெற்ற சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் செயலமர்வில் இருந்து பெறப்பட்ட விடயங்கள்[15].

**ஒருங்கிணைதலுக்கான கொள்கைகள்**

- நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதனை தீர்மானியுங்கள்.
- பயனுள்ள தலைமைத்துவத்தை பாதுகாக்கவும்
- பங்காளர்களை அடையாளங் காணவும்
- முக்கியமான கொள்கைகள் தொடர்பில் இணக்கத்திற்கு வரவும்
- உறவுநிலையை முறைசார்ந்ததாக்கிக் கொள்ளவும்
- உறவுநிலையை கட்டியெழுப்பவும் மற்றும் பேணி பராமரிக்கவும்.

**வலையமைப்புக்கள் மற்றும் கூட்டணிகளை கட்டியெழுப்புவதில் உள்ள பொதுவான சவால்கள்**

**நம்பிக்கையை கட்டியெழுப்பல்:** இதற்கு அமைதியும், நேரமும் தேவையாக இருக்கின்றது. நம்பிக்கையை கட்டியெழுப்புதல் என்பதில் தலைமைத்துவம் மீதான பற்றுறுதி, முகாமைத்துவ முறை மற்றும் சக உறுப்பினர்கள் ஆகிய அம்சங்கள் உள்ளடங்குகின்றன. பகிரங்க கலந்துரையாடல் மற்றும் கருத்தொற்றுமையின் அடிப்படையில் தீர்மானங்கள் பெறப்பட்டால் மாத்திரமே இந்த நிலையை எட்ட முடியும். - "உங்கள் அட்டைகள் அனைத்தையும் மேசையின் மேல் போடுங்கள்".

**புகழை பகிர்ந்து கொள்வதற்கு கற்றல்:** வலையமைப்பின் விளம்பரமும் மற்றும் கட்புலனாகும் தன்மை அனைவருக்கும் பகிரப்படல் வேண்டும். வெற்றி மற்றும் தோல்வி ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் இதே வகையான நிலையே கடைபிடிக்கப்படல் வேண்டும். புகழ் மற்றும் கண்டனங்களை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

**உங்களுடைய இலக்கு தொடர்பில் உறுதியாக இருங்கள்:** ஒன்று திரட்டப்பட்ட நோக்கத்தின் அடிப்படையில் குறிக்கோள்களை நிர்ணயித்து ஒரே பாதையில் பயணிப்பதை பின்பற்றுங்கள். (உங்கள் வலையமைப்பினை அரசியல் சந்தர்ப்பவாதிகள் பயன்படுத்திக் கொள்வதனை தவிர்ப்பது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது).

**தெளிவான பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்களை நிர்ணயித்தல்:** உறுப்பினர்களுக்கு இடையிலான முரண்பாட்டுக்கான சந்தர்ப்பத்தினை தவிர்ப்பதற்கு அறிக்கையிட வேண்டிய இடங்கள் மற்றும் தலைமைத்துவ கட்டமைப்பு என்பன தெளிவாக இருப்பதனை உறுதி செய்து கொள்ளவும். சிறந்த தலைமைத்துவமே, வெற்றிகரமான கூட்டணிக்கும் மிகவும் அவசியமானதாக இருக்கும்.

**ஊடக மூலோபாயம் மற்றும் வழிகாட்டிகள்:** வலையமைப்புக்காக கதைக்கக் கூடியவர் யார், பணிப்பாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் கதைக்கக் கூடியவர் யார் மற்றும் ஆவணங்கள் எவ்வாறு அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பன தொடர்பில் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

**தொடர்ச்சித் தன்மை மற்றும் தங்கியிருத்தலை பேணுங்கள்:** வலையமைப்பபை உருவாக்கலும் மற்றும் கூட்டணியை ஏற்படுத்தலும் உறவு முறையின் அடிப்படையிலானதாகும். இங்கு தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் மிக்க ஊழியர்களின் தொடர்ச்சியான பிரதிநிதித்துவம் தேவையாக இருக்கின்றது (கனிஷ்ட ஊழியர்கள் அல்லது பயிற்சி பெறுபவர்கள் கூட்டங்களுக்கு அனுப்ப வேண்டாம்).

**தகவல்களை பரிமாறுதல் மற்றும் பயனுறுதி மிக்க வகையில் தொடர்பு கொள்ளல்:** உறுப்பினர்களுக்கு இடையிலான உள்ளக தொடர்பு கொள்ளல்: அரசாங்கம், நிதியுதவியாளர்கள், பொதுமக்கள் மற்றும் கூட்டணியினருக்கு இடையிலான வெளியக தொடர்பு கொள்ளல் ஆகியவற்றை இது உள்ளடக்கியுள்ளது.

கூட்டணி மீது நம்பிக்கை வைக்க வேண்டாம். **அமைதியாக இருங்கள். உறுப்பினர்களுக்கு இடையிலான நம்பிக்கையை மெதுவாகவும், அவதானமாகவும் நீங்கள் கட்டியெழுப்ப வேண்டும்.**

---

[15] சேவ் த சில்ரன் டென்மார்க், *கல்வி, கொள்கை மற்றும் வரவு செலவுத் திட்ட பகுப்பாய் செயலமர்வுக்கான பரப்புரை*, எதியோப்பியாக, ஒக்டோபர் 2006.

வலையமைப்புக்கள் மற்றும் கூட்டணிகளுடன் பரப்புரை மூலோபாயத்தை வடிவமைப்பதற்கான படிநிலைகள்

**படிநிலை ஒன்று: அடையாளத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நோக்கல்.**
வலையமைப்பு அல்லது கூட்டணியின் குறிக்கோள்கள், விதிமுறைகள், விழுமியங்கள் மற்றும் வழிகாட்டும் கொள்கைகளை நிர்ணயிக்கவும். முகாமைத்துவம், தலைமைத்துவம் மற்றும் நம்பகத்தன்மை தொடர்பில் தீர்மானம் எடுக்கவும். வழங்குதல் மற்றும் பதிவு செய்தல் சம்பந்தப்பட்ட விடயங்களை ஒழுங்கு செய்தல். புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை தயாரிக்கவும் (கீழே பார்க்கவும்). ஆனால், அதிக கடுமையானதாக இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவும்.

**படிநிலை இரண்டு: ஒன்று திரட்டல் மற்றும் வரைபடமாக்கல்**
வலையமைப்பில் கிடைக்கக் கூடிய வளங்களை ஒன்று திரட்டி, வரைபடமாக்கவும். செயற்பாட்டாளர்கள், நண்பர்கள், இலக்குக் குழுக்கள் ஆகியவற்றை அடையாளங் காணவும். சாத்தியமான உறுப்பினர்களை அடையாளங் காணவும். உறுப்புரிமைக்கான அலகுகளை தயாரிக்கவும் (உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவும்). நீங்கள் செயற்பட விரும்புகின்ற நிறுவனங்கள் அல்லது ஸ்தாபனங்களை அடையாளங் காணவும். அரசாங்கத்தின் ஈடுபாட்டை பிரதிபலிப்பவர்களாக நீங்கள் இருத்தல் வேண்டும். அவர்களையும் ஈடுபடுத்துதவன் ஊடாக விளைவின் அளவை அதிகரிக்கலாம்.

**படிநிலை மூன்று: பங்குதாரர்களின் சுற்றுச் சூழலை பகுப்பாய்வு செய்தல்.**
முக்கியமான விடயங்கள் தொடர்பில் பிரதான பங்குதாரர்கள் மற்றும் அவர்களினது நிலையை பகுப்பாய்வு செய்யவும். இயலுமை கணக்காய்வை நடத்தவும். சவால்களை மதிப்பீடு செய்யவும். உங்களுக்கு தேவை என கருதுகின்ற கொள்கை தகவல் மற்றும் வேறு தகவல்களை சேகரிக்கவும்.

**படிநிலை நான்கு: பரப்புரை நிகழ்ச்சி நிரலை வடிவமைத்தல் அல்லது அதற்கு உடன்படல்**
முன்னுரிமை வழங்க வேண்டிய பரப்புரை விடயங்கள் தொடர்பில் கருத்தொற்றுமையை அடையவும். ஒவ்வொரு விடயத்தின் பிரதான பிரச்சினையிலிருந்து ஆரம்பிக்கவும். பொதுவான நிலைகள் மற்றும் கொள்கை தெரிவுகளை ஸ்தாபிக்கவும்.

**படிநிலை ஐந்து: மூலோபாயம் மற்றும் நடவடிக்கை திட்டமிடல்**
இந்த இறுதி படிநிலையில், பரப்புரை மூலோபாயம் தொடர்பில் இணங்கவும். யதார்த்தமான மற்றும் செலவாகக் கூடிய திட்டங்களை வடிவமைக்கவும். கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் பொறியமைப்பு ஒன்றினை நிர்ணயிக்கவும். தனிப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் கூட்டணிகளுக்கு இடையில் நிதிகளுக்கு போட்டித் தன்மை போன்ற விடயங்கள் காணப்படலாம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்க வேண்டிய முக்கிய குறிப்புக்கள்

- **உரிமைக் கட்டளை:** கூட்டணி செய்ய வேண்டியது என்ன மற்றும் செய்யக் கூடாதது என்ன என்பதனை தீர்மானிக்கவும்.
- **உறுப்புரிமை:** யாரெல்லாம் இணையலாம்.
- **பங்குபற்றல்:** பங்குபற்றுநர்கள் எவ்வாறு பங்குபற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது? சமமாக அல்லது இயலுமையின் அடிப்படையில்?
- **தலைமைத்துவம்:** எவ்வாறு மற்றும் எப்போது தலைவர்கள் தெரிவு செய்யப்படுவர்?
- **முகாமைத்துவம்:** தீர்மானம் எடுத்தல் மற்றும் முரண்பாட்டு முகாமைத்துவத்திற்கான விதிகளை தீர்மானிக்கவும்.
  - உறுப்பினர்கள் குழுவாக செயற்படும் போது மற்றும் தனி நபராக செயற்படும் போது
  - தொடர்பாடல் மற்றும் தகவல் பகிரல் என்பவற்றிற்கு முறையொன்றை தீர்மானித்தல். செயன்முறையை தொடர்ச்சியாக கண்காணித்தல்.
- **உறவுமுறை:** உறவுமுறையை பேணுவதற்கு, பேணி பராமரிப்பதற்கு மற்றும் வலுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை?

## கூட்டணியை உருவாக்கல்

கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு அல்லது ஒன்றிணைப்பதற்கு நீங்கள் தீர்மானிக்கும் சந்தர்ப்பங்களில் பின்வரும் அட்டவணையை நீங்கள் பயன்படுத்தலாம்[16].

1. பயனுறுதித் தன்மை மற்றும் சேவ் த சில்ரனுடன் பொருந்தும் தன்மை
- இந்த விடயம் நிறுவனத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததா? முன்னிலை குறிக்கோள்கள் மற்றும் வெளியக முன்னுரிமைகளை வெளிக் கொணருவதற்கு இந்த கூட்டணியுடன் இணைவது உதவி புரியுமா?
- சேவ் த சில்ரனால் பெறுமதி சேர்க்க முடியுமா?
- முக்கியமான முன்னுரிமைகளை சூழ்ந்ததாக சிவில் சமூகங்களின் தளத்தை கட்டியெழுப்பல் மற்றும் வலுவாக்கலுக்கு இது உதவுகின்றதா?
- கூட்டணியிடம் போதிய அளவான விளைவு உள்ளதா?
- கூட்டணியுடன் இணைவதால் ஏற்படும் பயன்கள், பாதகத் தன்மைகளை இல்லாது செய்யுமா? இரட்டை நிலை பங்காளித்துவம் அல்லது தனிப்பட்ட பங்காளித்துவம் என்பதில் எதனூடாக பணியாற்றுவது சிறந்தது?
- விதிவிலக்காக: பிரதான முன்னுரிமைகளுக்கு வெளியகமாக இருக்கின்ற போதிலும், உறுப்புரிமைக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் பூரணமாகக் கூடிய விடயம் ஏதேனும் உள்ளதா?

2. விபரங்கள், சட்ட நிலை மற்றும் நிதி சேகரித்தல்
- கூட்டணியில் இருப்பது சுயவிபரத்தில், சட்ட நிலையில் மற்றும் நிதி சேகரித்தலில் பயனுள்ள தாக்கத்தை ஏற்படுத்துமா?

3. பிரயோக ரீதியாக
- இதில் ஈடுபடுவதற்கான பிரயோக ரீதியான இயலுமை சேவ் த சில்ரனிடம் உள்ளதா?
- இணைவதற்கான நிறுவன இயலுமை மற்றும் வளங்கள் எம்மிடம் உள்ளனவா, அல்லது கூட்டணியானது எங்கள் வளங்களை நுகருமா?

4. சவால்கள்
- உறுப்புரிமையின் சவால்களை சமாளிக்க முடியுமா?
- நாங்கள் ஏற்படுத்த வேண்டிய விட்டுக் கொடுத்தல்கள் எவை?

*கூட்டணியில் இணைவதற்கு நீங்கள் தீர்மானிக்கும் பட்சத்தில், பங்குபற்றுவதற்கு தெளிவான குறிக்கோள் ஒன்றை நிர்ணயிக்கவும்.*

| *நினைவு கொள்ளுங்கள்:* |
|---|
| ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் மூலோபாய ரீதியாக சிந்தித்தல் என்பது உங்களுடைய சாதகத் தன்மைக்காக நீங்கள் பயன்படுத்தும் நிறுவனங்களுடனான பிரச்சினையில் இருந்து நகர்வதற்கு உங்களுக்கு உதவி புரியும். |

[16] சேவ் த சில்ரன் ஐக்கி இராச்சியம், *கூட்டணி மூலோபாயம் 2006* இலிருந்து உள்வாங்கப்பட்டது.

## வியாட்நாமில் சிறு கடன்களுக்கான சட்ட ரீதியான வரைபு அமைப்பை தயாரிப்பதற்கு பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றல்.

2002ஆம் ஆண்டு, பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் சேவ் த சில்ரன் அமைப்பு மற்றும் பிளேன் இன்டர்நெஷனலின் (Plan International) தலைமையின் கீழ் ஒன்றாக இணைந்து, வியாட்நாமில் குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் சிறுவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் வழிகளில் ஒன்றாக சிறு கடன்களுக்கான முயற்சிகளுக்கு ஏற்ற சூழல மேலும் ஏற்புடையதாக்குவதற்கு பரப்புரை செய்தன.

கொள்கை வகுப்பாளர்களின் சிறு கடன்கள் துறை குறித்த புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக வியட்நாம் அரச வங்கியுடன் (State Bank of Vietnam) இணைந்து சேவ் த சில்ரன் மிகுந்த செயற்திறனுடன் பணியாற்றியது. தொழில் நுணுக்க செயலமர்வுகள், களப் பயணங்கள், மற்றும் பயிற்றுநர்கள் மற்றும் நிதி உதவியாளர்கள் உள்ளடங்கலாக வேறு பங்குதாரர்களுடனான கூட்டங்கள் என்பவற்றையும் நாம் ஒழுங்கு செய்தோம். வியட்நாம் சிறுகடன்கள் செய்தியேடு சேவ் த சில்ரனால் அறிமுகப்படுத்தப்பட்டு, 2002ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் முதலாவது இதழ் வெளியிடப்பட்டது. இதில் சிறு கடன்கள் நிகழ்ச்சி புள்ளி விபரங்களின் சுருக்கம் மற்றும் வியட்நாம் அரச வங்கி, வியட்நாம் வங்கிகள் ஒன்றியம் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2004ஆம் ஆண்டு சிறுகடன்கள் செயற்பாட்டு குழு (Microfinance Working Group) உத்தியோகப்பூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டது. இந்த குழு துறை சார்ந்த பலமான மன்றமாகவும், ஒருங்கிணைந்த குரலாகவும் உருவானது.

### நாங்கள் அடைந்தது

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில் நுணுக்க உதவியுடன், வியட்நாம் அரச வங்கி சிறு கடன்களுக்கான சட்ட வரைபு அமைப்பொன்றை வடிவமைத்தது. 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த வரைபு அமைப்பு வியட்நாம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வியட்நாம் அரச வங்கியில் சிறு கடன்களுக்கான பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நிலையில் உத்தியோகப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறு கடன்கள் வழங்கும் நிறுவனங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நிதிகளின் ஊடாக தமது நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றன. சேவ் த சில்ரன் மற்றும் சிறு கடன்கள் செயற்பாட்டு குழுவும் இணைந்து சட்ட வரைபு அமைப்பை மேம்படுத்துவதற்கான பரப்புரைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன. வியட்நாம் அரச வங்கி சர்வதேச சட்டத்துடன் மிக நெருக்கமான சில சிக்கலான திருத்தங்களை பிரேரித்துள்ளது.

சட்ட வரைபு அமைப்பை வடிவமைத்தல், பயிற்றுநர்கள் மற்றும் நிதி உதவியாளர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் வியட்நாம் அரச வங்கியுடன் தொழில் நுணுக்க கலந்துரையாடல்களை இலகுபடுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் சேவ் த சில்ரன் அமைப்பானது தலைமைத்துவ பங்கை வகித்தது. கொள்கை வகுப்பவர்களுக்கான பிரதான தொழில் நுணுக்க வள நிறுவனமாகவும் சேவையாற்றிய எமது அமைப்பு, வியட்நாம் அரசாங்கம் மற்றும் சிறு கடன்கள் சமூகத்தினால் வியட்நாமின் முன்னணி அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டது.

### நாங்கள் கற்றுக் கொண்டது

- ஒருங்கிணைந்த குரலை வெளிப்படுத்தல்: நாட்டில் நிதி உதவியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களின் ஒன்றிணைந்த கூட்டணியை நாம் முதலில் கட்டியெழுப்பினோம். இந்த நடவடிக்கையானது சிறு கடன்கள் சமூகத்திற்கான உறுதியான குரலை வழங்கியதுடன், தமது செயற்பாடுகளின் நிறுவனமயப்படுத்தலின் முதற் கட்டமாக சிறு கடன்கள் செயற்பாட்டு குழு ஸ்தாபிக்கப்படுவதற்கும் வழி வகுத்தது.
- விடயங்களை விளக்கி, கேட்பதற்கு முன்னர் உங்களுக்குத் தேவையானது எதுவென தெரிந்து கொள்ளுங்கள்: வியட்நாமில் உள்ள பயிற்றுநர்களுக்கு, தமக்குத் தேவையானது சட்ட வரைப்பு அமைப்பு என்பது தெரியும். ஆனால், சட்டமானது உள்ளடக்கும் விடயங்கள் தொடர்பில் அவர்களிடம் தெளிவான எண்ணம் கிடையாது. நாட்டின் முழுமையான சட்டங்கள் தொடர்பில் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வது சிறிது சிரமமான விடயம். எனவே, எமது விடயஞ் சார்ந்த சட்டங்கள் மற்றும் வங்கிச் சட்டங்கள் தொடர்பான சிறந்த புரிந்துணர்வும் அவசியமாக இருக்கின்றது.

- சரியான தொடர்பாடல் வலையமைப்புக்களை தெரிவு செய்து உறவை கட்டியெழுப்பவும்: இந்த விடயம் தொடர்பில் மன்றம் ஒன்றை வழங்கும் நோக்கில் சேவ் த சில்ரன் அமைப்பு *வியட்நாம் சிறு கடன்கள் செய்தியேடு* என்பதனை அறிமுகப்படுத்தியது. ஆரம்ப முதலே, வியட்நாம் அரச வங்கி மற்றும் வங்கிகள் ஒன்றியத்தின் முக்கிய அதிகாரிகளுக்கு தமது ஆக்கங்களை சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. செய்தியேட்டின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பரந்த அளவில் பரப்புரை பிரசாரத்தை முன்னெடுப்பதற்கும் அவர்களது ஒத்துழைப்பு நமக்கு மிகவும் உதவியாக இருந்தது. உற்பத்தி திறன் மிக்க உறவு முறைகளை கட்டியெழுப்புவதற்கும் மற்றும் வியட்நாம் அரச வங்கியின் ஊழியர்களின் பகிரங்க கலந்துரையாடல் மற்றும் பயனுறுதி மிக்க கற்றலுக்கும் ஏற்ற சூழலை உருவாக்குவதற்கும் முறைசாரா தனிப்பட்ட நபர்களின் கூட்டங்களும் உதவி புரிந்தன.
- நாட்டின் அலுவலக முகாமைத்துவ உதவியை பட்டியலிடல்: பரப்புரை செயற்றிட்டத்தில் இயல்பான சவாலை எடுப்பது என்பது முகாமையாளர்களுக்கு எப்போதும் இலகுவானது அல்ல. செயற்றிட்ட கால எல்லைக்குள் பகிரப்பட்டுள்ள வளங்கள் ஒருபோதும் குறிப்பிடத்தக்க மற்றும் நம்பகத் தன்மையான விளைவுகளை நோக்கி நம்மை இட்டுச் செல்லாது. 2002 ஆம் ஆண்டு முதல் பரப்புரை முயற்சிக்கு பொருளாதார சந்தர்ப்பங்களுக்கு குழுவுக்கு வியட்நாமில் அமைந்துள்ள சேவ் த சில்ரன் அமைப்பின் அலுவலகம் முழுமையான ஆதரவை வழங்கி வந்துள்ளது. சட்ட வரைபு அமைப்பு வடிவமைக்கப்பட்டது. வியட்நாமின் முன்னணி சிறு கடன்கள் நிறுவனமாக சேவ் த சில்ரன் உருப்பெற்றது.
- தற்போது ஆரம்பியுங்கள்: சிறு கடன்கள் தொடர்பில் மத்திய வங்கி ஊழியர்களுக்கு கற்பிப்பதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு இப்போதே ஆரம்பியுங்கள்.

## சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பிலான ஐ.நாவின் பிராந்திய ஆலோசனையில் செல்வாக்கு செலுத்துவதற்கு சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு ஒன்றிணைந்து பணியாற்றுகின்றது.

2000ஆம் ஆண்டு பிரேசிலின் சாவோ போலோ பல்கலைக்கழகத்தின் பங்காளித்துவத்தின் ஊடாக, சுவீடனின் சேவ் த சில்ரன் அமைப்பு லத்தீன் அமெரிக்க சிறுவர்கள் மீதான உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தும் தண்டனைகள் தொடர்பான பரப்புரை பணியை ஆரம்பித்தது. 2005ஆம் ஆண்டு இறுதியில் சேவ் த சில்ரனின் ஏழு உறுப்பினர்களும், வேறு பல பங்காளர் நிறுவனங்களும் பிராந்தியத்தின் 14 வேறுபட்ட நாடுகளில் இந்த பணியைத் தொடருகின்றன. இந்த வலையமைப்பு தொடர்ச்சியாக மேம்பட்டு வருகின்றது.

**அதன் செயற்பாடு**
2003ஆம் ஆண்டு சிறுவர்களுக்கு எதிரான வனமுறை தொடர்பில் 2003ஆம் ஆண்டு ஐ.நா முன்னெடுத்த கற்கையானது, சேவ் த சில்ரனின் உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தும் தண்டனைகளுக்கு எதிரான நடவடிக்கைக்கு விசேடமாக பிராந்திய ஆலோசனைகளின் ஊடாக பாரிய பரப்புரை சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தன (கற்கையில் பிராந்திய கண்ணோட்டங்களும் உள்ளடக்கப்பட்டன). வேறுபட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள் கற்கையின் வேறுபட்ட அம்சங்களில் பணிபுரிந்தனர். உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தும் தண்டனைகள் தொடர்பான தமது பிராந்திய பணியில் கற்கையை முதன்மைப்படுத்துவதில் சுவீடனின் சேவ் த சில்ரன் அமைப்பு கவனஞ் செலுத்தியிருந்தது. பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான உலகளாவிய சமர்ப்பித்தலுக்கு ஐக்கிய இராச்சியத்தின் சேவ் த சில்ரன் அமைப்பு ஒத்துழைப்பு வழங்கியது. நோர்வேயின் சேவ் த சில்ரன் அமைப்பு, சிறுவர்களை பாதிக்கும் வன்முறைகள் தொடர்பில், அவர்களுக்கு ஆலோசனை வழங்கும் நடவடிக்கையை மேம்படுத்துவதில் பிரதான பாத்திரத்தை வகித்தது.

நோர்வே மற்றும் சுவீடன் சேவ் த சில்ரன் அமைப்புக்கள் இரண்டுமே பிராந்திய செயலகத்தின் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான ஐ.நாவின் கற்கையில் யுனிசெப் மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பங்குபற்றின. இந்த மன்றத்தில் பங்குபற்றியதன் மூலம், இந்த கற்கைக்குள் உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனைகளை முன்னுரிமை மிக்கதாக முன்மொழிவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அத்துடன், 2005ஆம் ஆண்டு மே மாதம் பியுனஸ் அயர்ஸில் நடைபெற்ற லத்தீன் அமெரிக்காவுக்கான ஐ.நாவின் பிராந்திய ஆலோசனை தயாரித்தலிலும் செல்வாக்கு செலுத்துவதற்கு சேவ் த சில்ரனுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கான உலகளாவிய சேவ் த சில்ரன் செயற்பாட்டு குழுவும் சர்வதேச அளவில் ஆதரவை நாடி வருகின்றது. ஒருங்கிணைந்த பிராந்திய மற்றும் சர்வதேச முயற்சிகளின் காரணமாக பிராந்திய ஆலோசனையின் முதலாது நாள் நிகழ்வின் ஆரம்ப அமர்வில் உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டது. சுவீடன் சேவ் த சில்ரன் அமைப்பின் நிகழ்ச்சி அதிகாரியே பேச்சாளர்களில் ஒருவராக இருந்தார்.

**நாங்கள் அடைந்தது**
உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனைகள் தொடர்பில் பியுனஸ் அயர்ஸில் உள்ள சேவ் த சில்ரன் மற்றும் பங்காளர்களுக்கு பிராந்திய செயலமர்வு. மூன்று நாட்களுக்கு முன்னர் 10 பங்காள நிறுவனங்களுக்கும் மற்றும் ஆறு சேவ் த சில்ரன் உறுப்பினர்களுக்கு ஐ.நா நிகழ்வில் சந்திப்பதற்கான வாய்ப்பை ஐ.நா பிரந்திய ஆலோசனை வழங்கியது. அனைத்து ஆதரவை நாடும் நடவடிக்கைகளும் உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தும் தண்டனைகளை கற்கையின் அறிக்கையிடல் ஆவணத்தில் அறிமுகப்படுத்துவதை இலக்காகக் கொண்டிருந்தன. இதன் பெறுபேறு சிறந்ததாக அமைந்திருந்தது. பியுனஸ் அயர்ஸ் இறுதி பிரகடனத்தின் ஒவ்வொரு நிலையிலும் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டு, உள்ளடக்கப்பட்டிருந்தது.

சுவீடனின் சேவ் த சில்ரன் அமைப்பும் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான மனித உரிமைகள் பொறியமைப்பை பயன்படுத்தி சிறுவர் உரிமைகளை பரப்புரை செய்பவர்களுக்கு உதவும் வகையில் தமது பிராந்திய பணியை மேம்படுத்துவதற்கு உதவியை வழங்குவதற்கு பிராந்திய ஆலோசனையில் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்தியது. உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனைகளை மனித உரிமை விடயமாக ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான மனித உரிமைகள் முறைமையில் இணைப்பது, சட்டரீதியாக உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனைகளை தடை செய்வதற்கு உதவி புரியும். அத்துடன், பங்காளர்களுடன் தீவிரமாக செயற்பட்டு தனிப்பட்ட நாடுகளின் சட்ட திருத்தத்தில் இதனை உள்ளடக்கும் முயற்சியும் முன்னெடுக்கப்பட்டது. சிறுவர்கள் மீதான அனைத்து உடற்சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனைகளும் மனித உரிமைகள் தொடர்பான அமெரிக்க சாசனத்தின் அடிப்படையில் தெளிவான வன்முறை என்பதனை பிரகடனப்படுத்துமாறு அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான மனித உரிமைகள் நீதிமன்றத்திற்கு பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன், இந்த தண்டனை அமெரிக்க நாடுகளின் உறுப்புரிமை நாடுகள் அனைத்திலும் தடை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதற்கு சில காலம் செல்லலாம். ஆனால் இதனை நோக்கிய செயற்பாடு தொடர்கின்றது.

**நாங்கள் கற்றது**
பிராந்திய பரப்புரை செயன்முறையில் சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் வேறுபட்ட உறுப்பினர்கள் எவ்வாறு இணைந்து செயற்படலாம் என்பதனை வெளிப்படுத்தின. உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பங்காள நிறுவனங்களுடன் எமது உறவை நாம் வலுப்படுத்திக் கொண்டோம். பகிரப்பட்ட பரப்புரை இலக்குகள் மற்றும் தனிப்பட்ட உறுப்புரிமை பெற்ற நிறுவனங்களின் இலக்குகளை நோக்கியதாக பணியாற்றுவதற்காக இந்த தொடர்புகளை நாம் பயன்படுத்திக் கொண்டோம். கூட்டமைப்பு என்ற ரீதியில் செயற்படும் போது சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் எங்களால் சர்வதேச அங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தக் கூடிய இயலுமை உருவானது.

செயன்முறைப் படிவம்

7.1 நண்பர்கள் மற்றும் பங்காளர்கள்

| **நண்பர்/பங்காளர்**<br>உங்களுடைய இலக்கை அடைவதற்கு மிகவும் பயனுறுதியுள்ள நீங்கள் இணைந்து செயற்படக் கூடிய பிரதான (முதல் 1 தொடக்கம் 3) தனிநபர்களை, நிறுவனங்களை அல்லது கூட்டணிகளை அடையாளங் காணல் | ஒருங்கிணைதலின் பெறுமதி<br>அவர்களுடன் இணைந்து செயற்படுவதனால் ஏற்படும் பெறுமதி என்ன? | விடயம் தொடர்பான நிலை<br>பரப்புரை விடயம் தொடர்பில் அவர்களுடைய நிலைப்பாடு என்ன (அதுவும் உங்களுடையதைப் போன்றதா? வேறுபட்டதாயின், எவ்வாறு?)?**Position on issue** | ஒத்துழைப்புக்கான உத்தி<br>ஒவ்வொரு நண்பர் அல்லது பங்காளருடன் நாம் எவ்வாறு வெற்றிகரமாக ஒத்துழைக்க முடியும்? |
|---|---|---|---|
| **1.** | | | |
| **2.** | | | |
| **3.** | | | |

## 7.2 மக்களை ஒன்று திரட்டல்

வேறுபட்ட தேவைகளுக்காக நீங்கள் மக்களின் ஆதரவை ஒன்று திரட்ட வேண்டிய தேவையுள்ளது.

**தீர்மானம் எடுப்பவர்கள் மீது மக்கள் அழுத்தத்தின் மூலம் செல்வாக்கு செலுத்துவதற்கு,**
தீர்மானம் எடுப்பவர்கள் மீது பொதுமக்களின் அதிகாரம் மூலமான செல்வாக்கு நாட்டிற்கு, நாடு வேறுபடும். சில நாடுகளில் தீர்மானம் எடுப்பவர்கள் மீது குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கை செலுத்துவதற்கு ஜனநாயக நடைமுறையின் ஊடாக பிரஜைகள் முயற்சி செய்வர். ஏனைய நாடுகளில், அவர்களுடைய செல்வாக்கு செலுத்தும் அளவு மிகவும் கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். நீங்கள் இலக்கை எட்டுவதற்கு உண்மையாக மக்களால் உதவக் கூடியது என்ன என்பது தொடர்பில் நீங்கள் யதார்த்தமாக சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

**பொது மக்களின் நடத்தைகள், நெறிமுறைகள் மற்றும் பயிற்சிகளில் செல்வாக்கு செலுத்தல்**
சிறுவர்களுக்கு நிரந்தரமான மாற்றத்தை கொண்டு வருவதற்கு பொது மக்களின் நடத்தைகளை பரப்புரை விடயத்தை நோக்கி மாற்ற வேண்டியது எப்போதும் மிகவும் அவசியமானதாகும். உதாரணமாக, புதிய கொள்கைகள், சட்டம் மற்றும் பிரயோகிப்பதற்கான வழிகாட்டிகள் குடும்பங்களினாலும் மற்றும் சமூகத்தினாலும் ஆதரவு வழங்கப்படுவதற்கு உடற் சார் மற்றும் அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனை தொடர்பான பொதுமக்களின் நடத்தையில் மாற்றம் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

நீங்கள் பணியாற்றும் சூழல் மற்றும் பொது மக்கள் என்ன புரிய வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதன் அடிப்படையிலேயே பொது மக்களை ஒன்று திரட்டுவதற்கான வழிமுறை தங்கியுள்ளது. உதாரணமாக, உங்களுடைய செய்தியை கொண்டு செல்வதற்கு நீங்கள் ஊடகத்தை பயன்படுத்த முடியும். தனிப்பட்ட நிகழ்வுகள், கூட்டங்கள் அல்லது செயலமர்வுகளை நீங்கள் ஒழுங்கு செய்ய முடியும். அல்லது பரந்த அளவிலான நடவடிக்கைகளை ஒன்று சேர்க்கும் பாரிய அளவிலான பொது மக்கள் விழிப்புணர்ச்சி பிரசாரத்தை நிங்கள் தயாரிக்க முடியும்.

ஆதரவை நாடுதல், வலையமைப்பை ஏற்படுத்தல், ஊடகம் மற்றும் மக்கள் பங்குபற்றல் போன்ற நடவடிக்கைகளின் ஒன்றுபட்ட தன்மையின் ஊடாக கொள்கை, பயிற்சி அல்லது நடத்தையில் எதிர்பார்க்கும் மாற்றத்திற்காக பொது மக்களின் அழுத்தங்களை உருவாக்கும் மற்றும் ஒன்று திரட்டும் நடைமுறையே **பிரசாரம்** ஆகும். பிரசாரம் என்பதன் எண்ணம் என்னவென்றால், தீர்மானம் எடுப்பவர் மீது ஒவ்வொருவரும் பாரிய சாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்துவதனை கட்டியெழுப்புதல் மற்றும் புதுப்பிப்பதற்கு வேறுபட்ட கூறுகள் அனைத்தும் திட்டமிடப்பட்டுள்ளன, ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன மற்றும் நேரங் கணிக்கப்பட்டுள்ளன என்பதாகும்.

**படிநிலை ஒன்று: சூழ்நிலை பகுப்பாய்வு**
உங்கள் நாட்டில் பிரசாரம் செய்வது சாத்தியமானதா? வேறு எவரும் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனரா? உங்களுடைய நாட்டில் கலசார ரீதியாக மற்றும் அரசியல் ரீதியாக செயற்படக் கூடிய பிரசாரத்தை உங்களால் வடிவமைக்க முடியுமா? உங்களுடைய பரப்புரை இலக்குகளை அடைவதற்கு பிரசாரமானது சாத்தியமிக்கதாக மற்றும் மூலோபாயமிக்கதாக இருப்பின், உங்களுடைய திட்டம் மற்றும் வளத்தில் முறையாக அதனை உள்ளடக்குவது தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

**படிநிலை இரண்டு: தேசிய குரல்களுடன் ஒன்றிணைந்து, தளங்களை கட்டியெழுப்பவும்**
பிரசாரங்கள் முன்னெடுப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதனை நீங்கள் கண்டறிந்து கொள்டால், உங்களுடைய அடுத்த படிநிலை ஒன்றிணைவதாகும். பிரசாரத்தின் உள்ளூர் வடிவத்தில் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி நிரலை உள்ளடக்கவும். பிரசாரம் செய்யும் நிறுவனங்களுடன் ஒன்றிணைவது தொடர்பில் மேலும் அறிந்து கொள்வதற்கு கூட்டமைப்புக்கள் தொடர்பான முந்தையப் பகுதியை வாசிக்கவும்.

**படிநிலை மூன்று: கலாசார ரீதியாக மற்றும் அரசியல் ரீதியாக பொருத்தமான பிரசாரத்தை வடிவமைக்கவும்**
நிகழ்வுகள், நடவடிக்கைகள் மற்றும் ஊடகத்தில் உள்ளடக்கக் கூடிய கலாசார ரீதியான மற்றும் அரசியல் ரீதியான நுணுக்கமான அணுகுமுறையை அடையாளங் காணவும். சிறந்த நிகழ்வுகள் மற்றும் நடவடிக்கைகளை தயாரிக்கக் கூடிய ஊழியர்கள் உங்களிடம் இல்லையெனின், வேறிடத்தில் இருந்து இயலுமையை பெறுங்கள். ஒவ்வொருவரையும் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் புதுப்பிப்பதற்கும் பிரசாரத்தின் வேறுபட்ட அம்சங்கள் திட்டமிடப்பட்டதாக, ஒருங்கிணைக்கப்பட்டதாக மற்றும் நேரங் கணிக்கப்பட்டதாக வேண்டும்.

**முதலாவது படிநிலையிலிருந்து: பொது மக்கள் ஆதரவுக்கு அடிமட்டத்திலிருந்து தயாராதல்.**
தொடர்ச்சியான அடிப்படையில் மக்களை ஒன்று திரட்டுவதற்கு அல்லது விசேடமான பரப்புரை நடவடிக்கைகளில் உதவக் கூடிய ஆதரவாளர்கள் வலையமைப்பு ஒன்றை மெதுவாக கட்டியெழுப்புங்கள். உதாரணமாக, கடிதங்கள் எழுதுதல், கூட்டங்களில் கலந்து கொள்ளல் மற்றும் இன்னபிற.

பொது மக்கள் ஆதரவை பெறுவதற்கான சில கருவிகள்

**மனுக்கள்:** இணையத்தள மனுக்கள்: நடவடிக்கை அட்டைகள்: பாரிய மனுக்கள் (ஒட்டு வேலை): - நிபுணர்களும் அல்லது சமூகத்தில் மிகவும் முக்கியமான நபர்களும் தமது பெயர்களை பகிரங்கமாக அறிவிப்பர்.

**உங்களுக்கான சுயமான தளத்தை உருவாக்கல்:** பொது மக்கள் உரை மற்றும் அடித்தள விவாதங்கள்: இலக்குக் குழுக்கள் அல்லது ஊடகங்களுக்கான கடிதங்கள்: எதிரான அல்லது நிழல் நிகழ்வுகள்: மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்குகள், ஊடகவியலாளர் மாநாடுகள், பேச்சாளர் சுற்றுலாக்கள்.

**குறியீட்டு நடவடிக்கைகள்:** கொடிகளை அசைத்தல், கைப்பட்டிகள் அல்லது டி சேர்ட் அணிதல். விழிப்பு நிலையில் இருத்தல்: பாரிய அல்லது சிறிய கட்புலன் ஆர்வமுள்ள நடவடிக்கையை ஒழுங்கு செய்தல்(வீதி நாடகங்கள்), உதாரணமாக, வெளியக வகுப்பறை.

**பொது மக்கள் ஊர்வலம்:** பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் அல்லது அணிவகுப்புக்கள்.

**முறையை பயன்படுத்தல்:** பாராளுமன்ற நடைமுறைகளை பயன்படுத்தல், சட்ட வழக்குகள் அல்லது நீதி மீளாய்வு: அரசாங்க புள்ளவிபரங்கள் மற்றும் அறிவிப்புக்கள் தொடர்பான ஆக்கப்பூர்வமான பயன்பாடு: மறைவான நடைமுறைகளின் பயன்பாடு: அரசாங்க ஆலோசனைகளில் சாதாரண மக்களும் பங்குபெறச் செய்தல்:

**வெகுசனத் தொடர்பாடல் அல்லது கலை நிகழ்வுகள்:** சுவரொட்டிகள், பதாகைகள், வானொலி, இணையத்தளம் அல்லது தொலைக்காட்சி விளம்பரம்: பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொள்ளும் கலை நிகழ்வுகள், கொண்டாட்டங்கள் அல்லது வேறு நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்: அல்லது பிரபலமான நபர்களுடனான நிகழ்வுகள், ஓவியக் கண்காட்சிகள் அல்லது விற்பனைகள்.


**கடிதம் எழுதுதல்:** பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தீர்மானம் எடுப்பவர்கள் அல்லது வேறு செல்வாக்கு செலுத்துபவர்களுக்கு கடிதங்களை எழுதுகின்றனர்: மாதிரி கடிதங்களை வழங்குவது அல்லது தபால் அட்டைகளை வழங்குவதன் ஊடாக அவர்களுக்கு உதவ முடியும்: ஏற்கனவே எழுதப்பட்ட தபால் அட்டைகளை நீங்கள் வழங்க முடியும்.

**சிறுவர்களுடன் பிரசாரம் செய்தல் (மேலே குறிப்பிட்ட விடயங்களில் இருந்து வேறுபட்டது):** விவாத கழகங்கள் (அரசியல்வாதிகளை அழைத்தல்): இளைஞர் மன்றங்கள்: இளைஞர் பாராளுமன்றங்கள்: பேச்சாளர் சுற்றுலாக்கள்: மேடைகள் அல்லது வீதிகளில் அரங்கேற்றக் கூடிய சிறுவர்கள் பாடகர் குழு: இசைக் குழுக்கள், நாடகக் குழுக்கள்: கட்டுரை அல்லது கவிதை அல்லது ஓவிய அல்லது வரைதல் போட்டிகள்: ஊர்வலங்கள் அல்லது பேரணிகள் குறயீடுகளுடன்: சிறுவர்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அல்லது ஒளிக்காட்சிகளை வெளிப்படுத்தும் கண்காட்சிகள்: சமநிலை கல்வி,

A rally on World AIDS Day, 2004 in Bangladesh, led by the Honorable Minister of Health. This was part of an advocacy and public awareness project on the Prevention of HIV/AIDS among young people in Bangladesh. It was a collaborative project between the Ministry of Health & Family Welfare and Save the Children USA, funded by the Global Fund to Fight AIDS, Tuberculosis and Malaria.



## தேசத்தின் தலைநகரங்களுக்கு கொண்டு செல்லப்பட்ட குறிப்புகள்



வருடாந்தம் தமது வாழ்வின் முதல் 24 மணித்தியாலங்களுக்குள் உயிரிழக்கும் உலகில் உள்ள 2 மில்லியன் குழந்தைகளின் வாழ்க்கையை அதிக செலவு உண்டாகாத, தலையில் தொப்பியொன்றை அணிவித்து உஷ்ணமடையச் செய்வதன் ஊடாக எளிய முறைகளில் காப்பற்றலாம் என 2006ஆம் ஆண்டு அன்னையர் தினத்தை முன்னிட்டு சேவ் த சில்ரன் வெளியிட்ட *உலக அன்னையரின் தேசம்* என்ற அறிக்கை சுட்டிக்காட்டியது.

நிட்டர்ஸ் மற்றும் குரொச்டர்ஸ் (*Knitters and Crocheters*) நிறுவனங்கள் சேவ் த சில்ரனை தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொண்டு, புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு உதவுவதற்கு தம்மால் புரியக் கூடிய உதவி குறித்து கேட்டறிந்தனர். இந்த ஆர்வத்தின் காரணமாக 2006ஆம் ஜூலை மாதம் வோர்ம் அப் அமெரிக்கா நிதியத்துடன் இணைந்து நியூயோர்க்கில் ***புதிதாக பிறந்தவர்களுக்கு நிட்டர்ஸ் மற்றும் குரொச்ட்ர்ஸ்: தலைநகருக்கு தொப்பி*** என்ற திட்டத்தை சேவ் த சில்ரன் ஆரம்பித்தது.

இந்த குழந்தைகளுக்கு தொப்பியிலும் பார்க்கத் தேவையான விடயங்கள் பல இருப்பதில் சேவ் த சில்ரன் அமைப்பு உறுதியுடன் இருந்தது. அவர்களுக்கான குரல்களும் அவசியம். சிக்கலான உடல் நலன் விடயங்களான நோய் எதிர்ப்புச் சக்தி மருந்துகள், மகப்பேற்று தாதியருக்கான பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தாய்மாருக்கும், சிறுவர்களுக்கும் ஏற்பு வலிக்கு எதிரான தடுப்பூசிகள் போன்றவற்றுக்கான நிதியை அதிகரிக்குமாறு ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தை கோரும் ***புதிதாக பிறந்தவர்கள் மற்றும் சிறுவர்களின் வாழ்க்கைக்கான சட்டமூலம்*** என்பதனை அறிமுகப்படுத்தியது.

தொப்பியை தயாரியுங்கள்: ஜனாதிபதிக்கு எழுதுங்கள்: புதிதாக பிறந்தவர்களுக்காக ஒன்றிணையுங்கள் என்ற மூன்று எளிமையான படிநிலைகளின் ஊடாக உலகெங்கிலும் உள்ள புதிதாக பிறந்த குழந்தைகள் மீது தமக்குள்ள அக்கறையை அமெரிக்காவில் உள்ள தலைவர்களுக்கு அறியச் செய்வதற்கு முன்வருமாறு 2007ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி நிட்டர்ஸ் மற்றும் குரொச்டர்ஸ் நிறுவனத்திடம் கோரப்பட்டது.

ஜனவரி மாதத்தின் இறுதியில் வொஷிங்டன் நகரில் நடைபெற்ற முழு நாள் நிகழ்ச்சிகளுடனும் மற்றும் நேரடியான ஆதரவை நாடலுடனும் இந்த செயற்றிட்டம் முடிவடைந்தது. இதன் போது புதிதாக பிறந்த குழந்தைகளுக்காக 280,000 தொப்பிகள் சேகரிக்கப்பட்டன.

நாட்டின் அனைத்து 50 மாநிலங்களிலும் இருந்தும், மெக்மேடோ நிலையம் மற்றும் அன்டார்டிக்காவின் விஞ்ஞான மற்றும் பொறியியல் நிலையம் ஆகியவற்றிலிருந்தும் இந்த செயற்றிட்டத்திற்கான ஆதரவு நிட்டஸ் மற்றும் குரொச்டர்ஸினால் வழங்கப்பட்டது. 3 வயது முதல் 99 வயதான சாரதிகளில் இருந்து வைத்தியர்கள் வரை, நிறுவனத் தலைவர்கள் முதல் நம்பிக்கை சார்ந்த நிறுவனங்களின் தலைவர்கள் வரை, பாடசாலை மாணவர்கள் என அனைவராலும் தொப்பிகளும் மற்றும் கடிதங்களும் சேவ் த சில்ரன் தலைமையகத்தில் குவிந்தன.

மொத்தமாக 20,000 பேர் தொப்பிகளை வழங்கயிருந்தனர். சுமார் 11,000 பேர் ஜனாதிபதி புஷ்ஷுக்கு கடிதம் எழுதியிருந்தனர். இந்த பங்குபற்றுநர்களில் 53 பொதுமக்கள் அடங்கிய குழுவொன்று சேவ் த சில்ரன் மற்றும் வோர்ம் அப் அமெரிக்கா நிதியத்துடன் இணைந்து ஜனவரி 31ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட அரசாங்க அதிகாரிகளுடன், உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான தாய்மார் மற்றும் குழந்தைகள் சார்பில் பரப்புரை செய்வதற்கு முன்வந்தனர். இந்த குழுவில் பல மாநிலங்களையும் சேர்ந்த மாணவர் குழுக்களும் உள்ளடங்கியிருந்தன. பிரதான கொள்கை வகுப்பாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது, பிரதிநிதிகள் தொப்பிகள் மற்றும் தமது கருத்துக்களை பயன்படுத்தி உலகெங்கிலும் புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

## கொங்கோ ஜனநாயக குடியரசில் உள்ள அனைவருக்கும் கல்வி நடவடிக்கைக்காக வெகுசன ஒன்று திரட்டல்

*கல்விக்கான அனைவருக்குமான கல்விக்கான ஆபிரிக்க வலையமைப்பு பிரசாரம் நடவடிக்கையின் (ANCEFA – கல்விக்கான உலக பிரசார நடவடிக்கையின் உறுப்பினர் (a member of Global Campaign for Education - GCE).-) முன்னாள் இயலுமையை கட்டியெழுப்பும் ஒருங்கிணைப்பாளர், அன்டிவோ ஒபன்டோவினால் (Andiwo Obondoh), இந்த வலையமைப்பு மற்றும் பிரசார நடவடிக்கை வழங்கப்பட்டது.*

பாரிய அளவிலான நம்பிக்கை சார்ந்த நிறுவனங்களான கிம்பாகோ தேவாலயம் (Kimbago Church), சல்வேஷன் ஆமி (Salvation Army), கத்தோலிக்க தேவாலயம் (Catholic Church), அங்லிக்கன் தேவாலயம் (Anglican Church) மற்றும் சில ஆசிரியர் நிறுவனங்கள் உள்ளடங்கலாக, அனைவருக்குமான கல்வி என்ற தேசிய கூட்டணியை 45 நிறுவனங்கள் ஒன்றிணைந்து 2003ஆம் ஆண்டு கொங்கோ ஜனநாயக குடியரசில் ஸ்தாபித்தனர். இவ்வகையான ஆதரவு ஆபிரிக்காவில் உள்ள பல கூட்டணிகளில் இல்லாமையினால், இந்த பிரசார நடவடிக்கைகள் மிகவும் பலமுடையதாக இருந்தன. ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படும் தேசிய ஒருங்கிணைப்பு குழுவின் ஊடாக இந்த கூட்டணி முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

**நடவடிக்கைக்கான உலக கல்வி வாரம் காலப் பகுதியில் நாம் செய்தது என்ன?**

முதலாவதாக, கொங்கோ ஜனநாயக குடியரசின் கல்வி வரலாற்றில் மிகவும் பாரிய, இதுவரை இல்லாத பொது மக்கள் கூட்டம் ஒன்றை கின்ஷாசா மைதானத்தில் (Kinshasa stadium) நடத்தியிருந்தோம். இந்த கூட்டத்திற்கு உதவி ஜனாதிபதி, தேசிய அவையின் பேச்சாளர் மற்றும் கல்வி அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்ட அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தின் போது, பாடசாலைகளை புனரமைத்தல், பெண்களுக்கான கல்வியை முன்னிலைப்படுத்தல், வரவு செலவுத் திட்டத்தில் இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் ஒரு பகுதியை கல்விக்கானதாக மாற்றுதல், வரி மற்றும் வரி வீதங்களை குறைத்தல், தங்குமிட கட்டணங்களை குறைத்தல், பாடசாலைகளுக்கான பெற்றோர்களின் பங்களிப்பை நிறுத்தல், அரசாங்கத்தினால் ஆசிரியர்களுக்கான முழுமையான கட்டணமும் வழங்கப்படல் (2005ஆம் ஆண்டு ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தது இந்த விடயம்) போன்ற பல வாக்குறுதிகளை இந்த அரசியல் தலைவர்கள் வழங்கினர். பாடசாலை செல்லும் வயதுடையவர்களில் 50 வீதமானவர்கள் பாடசாலைக்குச் செல்லாதிருப்பதனையும், ஆரம்ப கல்வித் துறைக்கான மாணவர் அனுமதி 40 வீதமானதாக மாத்திரமே இருப்பதனையும் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இரண்டாவதாக, சமுதாய அளவிலான ஒன்று திரட்டல் நடவடிக்கையை இரண்டு வேறுபட்ட பகுதிகளில் (ஒரியன்டல் (Oriental) மற்றும் பகொங்கோ (Bacongo) பிராந்தியங்களில்)நாம் நடத்தினோம். இதற்கு வேறுபட்ட பிராந்தியங்களின் ஆளுநர்கள் தலைமை தாங்கினர். அவர்கள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து நிலைமையை கண்காணித்தனர். பாடசாலை நிலை தொடர்பில் அரசியல் மற்றும் சமுதாய விழிப்புணர்ச்சியையும் அவர்கள் அதிகரித்தனர். அதே சந்தர்ப்பத்தில், குறித்த பிராந்தியங்களில் பாடசாலைகளின் மோசமான நிலையை அவதானித்து அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்த விஜயங்களின் போது அவர்கள் பிரசார மூலப்பொருட்களான டீசேர்ட், துண்டு பிரசுரங்கள் மற்றும் ஸ்டிக்கர்ஸ் போன்றவற்றை பயன்படுத்தினர்.

**இந்த உலக கல்வி வாரம் நமக்கு அவசியமாக இருப்பது ஏன்?**

- விடயம் குறித்து குரல் எழுப்புவதற்கும் மற்றும் அது சார்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு ரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதற்கும் பெற்றோர்கள், சிறுவர்கள், உள்ளூர் சமூகங்கள் மற்றும் வேறு குழுக்களுக்கு சிறந்த சந்தர்ப்பத்தை இந்த நடவடிக்கை ஏற்படுத்திக் கொடுத்தது.
- அனைவருக்கும் கல்வி நடவடிக்கையின் இலக்குகள் குறித்த முக்கியமான விடயங்கள் தொடர்பில் இந்த பிரசார நடவடிக்கை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களுக்கு நேரடியான அரசியல் மற்றும் பொது மக்கள் அவதானத்தை வழங்கியது.
- செயற்பாட்டாளர்கள் மற்றும் அதிகாரம் நிறைந்த அரசாங்கத்திற்கு தமது வாக்குறுதிகள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் சிவில் சமூக நிறுவனங்கள் நினைவுபடுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது.

- அனைவருக்குமான கல்வி நடவடிக்கையின் இலக்குகளை அடைவதற்கான கொள்கையில் செல்வாக்கு செலுத்தக் கூடிய வகையில் கொங்கோ ஜனநாயக குடியரசில் அனைவருக்குமான கல்வி செயன்முறையில் சுயபிரதிபலிப்புக்கு இது பயன்படுத்தப்பட்டது.

**இந்த வார காலப் பகுதியில் நாங்கள் அடைந்தது என்ன?**

சபாநாயகர் ஊடான ஆதரவை தேடல் நடவடிக்கையின் மூலம், கல்வி தொடர்பான கவனத்தை பாராளுமன்றம் அதிகரிக்கும் மற்றும் பாடசாலை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் செலுத்தப்படும் அக்கறை அதிகரிக்கப்படும் என்ற வாக்குறுதிகள் கூட்டணிக்கு கிடைத்தன. அனைவருக்குமான கல்வியின் விபரத்தை நாம் முன்வைத்ததோடு, சில முக்கிய வாக்குறுதிகளை நாம் பாதுகாத்தோம்.

**விடயங்கள் மற்றும் சவால்கள்**

- நடவடிக்கைக்கான உலக கல்வி வாரத்தின் போது அரசியல்வாதிகளால் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் இன்றைய தினம் வரை நிறைவேற்றப்படவில்லை. அந்த விடயம் தொடர்பில் அரசியல் தலைவர்கள் வாய்திறப்பது கூட இல்லை. இந்த மாற்றமானது கூட்டணிக்கு பாரிய சவாலாக மாறியது. எனவே, எதிர்காலத்தில் நாங்கள் நிகழ்வுகளை திட்டமிடும் போது, வழங்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதனை உறுதி செய்வதற்கான பொறி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என் முடிவிற்கு வந்தோம்.
- இவ்வாறான உயர் மட்ட மக்கள் ஒன்று திரட்டலுக்கு நிகழ்ச்சி நிரலை அறிவிக்கவும் மற்றும் தயாரிக்கவும் நாங்கள் எந்தவொரு தீவிரமான பகுப்பாய்வு அல்லது மீளாய்வு நடவடிக்கையையும் நடத்தவில்லை என்பதற்கு அது ஒரு ஆதாரமாகும்.நடவடிக்கைக்கான உலக கல்வி வாரத்தின் செயற்பாடுகள் எங்களுடைய 2004-06ஆம் ஆண்டுகளுக்கான பிரசார திட்டத்துடன் எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டன என்பது தெளிவற்றதாகவே இருக்கின்றன.

## மொங்கோலியாவில் கல்வி திருத்தத்திற்கு பொது மக்களின் ஆதரவை கட்டியெழுப்பல்

மனித உரிமைகள் அல்லது சிறுவர் உரிமைகள் எண்ணக்கருக்களிலிருந்து 2005ஆம் ஆண்டு மொங்கோலியன் கல்வி சட்டத்தில் ஐக்கிய இராச்சியத்தின் சேவ் த சில்ரன் மீளாய்வு செய்தது. அனைத்து சிறுவர்களுக்கு கற்பதற்கான உரிமையை உணரச் செய்யும் வகையில், சிறுவர்கள் தமது உரிமைகள் அனைத்தையும் பெறக் கூடிய சாத்தியமான மற்றும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் மற்றும் கல்வியில் சிறுவர்கள் மற்றும் சமூகத்தின் பங்குபற்றலை பெறுவதற்கும் கல்வி முறையின் செயற்பாடுகளை உறுதி செய்வதன் அடிப்படையில் மொங்கோலியாவில் இருந்த குழுவானது பின்னர், சட்டத்தில் சில சிக்கலான திருத்தங்களை பிரேரித்ததுடன், பரப்புரையும் செய்தது. அத்துடன், அதிகாரிகளும், பிரதான பொறுப்பு வாய்ந்தவர்களும் பொதுமக்களுக்கு வெளிப்படையானவர்களாக இருக்க வேண்டும் என்றும் இந்த குழு பரப்புரை செய்தது.

**நாங்கள் அடைந்தது**

எங்களுடைய பரப்புரை முயற்சியின் விளைவாக, கல்வி சட்டத்தில் ஒட்டு மொத்தமாக 29 விசேட பிரிவுகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டதுடன், புதிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டன. கல்வி கொள்கை மற்றும் சட்ட முறைமையில் மாத்திரம் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. மொங்கோலியாவில் சமூகத்தை மாற்றுவதற்கும், ஜனநாயகத்தையும் மற்றும் மனித உரிமைகளையும் மேம்படுத்துவதற்கும் நாம் ஒத்துழைத்துள்ளோம் என்று நம்புகின்றோம்.

மொங்கோலியாவின் சட்டத்தில் சிவில் சமூக குழுக்கள் ஒன்றிணைந்து மாற்றங்களை ஏற்படுத்திய மூன்றாவது வரலாற்று சந்தர்ப்பமாக இது காணப்படுகின்றது (இதற்கு முன்பதாக உள்நாட்டு வன்முறைகள் மற்றும் ஊட்டச் சத்துக்கள் தொடர்பான சட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்படுவதற்கு சிவில் சமூக குழுக்கள் காரணமாக இருந்துள்ளன). சிறுவர்களையும் உள்ளடக்கி பெரும் எண்ணிக்கையிலான அனைத்து மட்டங்களையும் சார்ந்த பங்குதாரர்களின் ஆதரவுடன்,சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று தீவிரமாக ஈடுபட்டு பரப்புரைக்கு தலைமை வகித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கல்வி சட்டம் மற்றும் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான இந்த விசேட செயற்பாடு மொங்கோலியாவில் உள்ள அனைத்து சிறுவர்களிலும் நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தும் என நாம் நம்புகின்றோம். புதிய திருத்தங்களுடனான சட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது இதனை பிரயோகத்தில் அமுல்படுத்துவதற்கு நாம் ஆதரவு வழங்க வேண்டும்.

**நாங்கள் கற்றது**

நாங்கள் பல வகையான பங்காளர்களுடன் இணைந்து செயற்பட்டோம். எங்களுடைய பரப்புரை பணி வெற்றிகரமாக இயங்குவதற்கு அவர்கள் பெரும் ஒத்துழைப்பு வழங்கினர். குறிப்பாக, கூறவேண்டுமாயின், சிறுவர் உரிமைகள் மற்றும் கல்வி கூட்டமைப்பு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான பாராளுமன்ற ஆதரவு நாடல் குழு, வெகு சன ஊடகம் (எமது இரண்டு பிரசாரங்களிலும் ஈடுபட்டவர்கள்), பொது விவாதங்களில் கலந்து கொண்ட பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், மற்றும் சிறுவர்கள் ஆகியோர் எமது செயற்பாட்டுக்கு விலைமதிப்பற்ற மற்றும் தனித்துவமான பங்களிப்பை வழங்கினர். பொது மக்கள்/தொலைக்காட்சி/வானொலி விவாதங்களில் மற்றும் நேரடி கலந்துரையாடல், ஆக்கங்கள் எழுதல் போன்ற விசேடமான நிகழ்வுகளில் கலந்து கொண்டு அவர்கள் தமது குரல்களை எமது ஆய்வில் வெளிப்படுத்தினர். மொங்கோலியா ஊழியர்கள் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரதும் ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு இல்லாதிருந்தால், இவ்வாறான வெற்றியை நாம் அடைந்திருக்க முடியாது. உயர்தரத்தில் நாம் சிந்தித்தோம் மற்றும் உயர்தரத்தில் நாம் வெற்றியடைந்தோம்.



Children in Dornod province, Mongolia, are playing at a Community-based Centre supported by Save the Children.


## 7.3 தனியார் துறையுடன் இணைதல்

**சிறுவர்கள் தொடர்பில் செயற்பட்ட ஐது தனியார் துறையினரின் செயற்பாட்டின் தாக்கம்**

உங்களுடைய பரப்புரை குறிக்கோள்கள் சார்ந்ததாக தனியார் துறையுடன் இணைந்து செயற்படுவதில் உள்ள சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களை புரிந்து கொள்வதற்கு, சிறுவர்கள் மீது தனியார் துறை செலுத்தக் கூடிய சாதகமான மற்றும் பாதகமான விளைவுகள் உள்ளிட்ட முழுமையான விளைவுகள் குறித்தும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது.

கீழுள்ள வரைபடம் ஒரு முழுமையான வடிவத்தை வெளிக் கொணர முடியாது. ஆனால், கலந்துரையாடல் மற்றும் சிந்தனைகளை வளர்ப்பதற்கு பயன்படுத்தப்படலாம்.

**சிறுவர்கள் மீதான தனியார் துறையின் சாத்தியமான சாதக மற்றும் பாதக விளைவுகள்**



## சிறுவர்களின் வாழ்க்கையில் நிரந்தரமான தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் தனியார் துறையுடன் ஒன்றிணைதல்

தனியார் துறையுடன் பங்காளர்களாக சேவ் த சில்ரனால் செயற்பட முடியும் அல்லது பரப்புரையை பயன்படுத்தி வெளியிலிருந்து அவர்களது கொள்கைகள் மற்றும் பயிற்சிகளில் செல்வாக்கு செலுத்துவதற்கு முடியும். பங்காளர்களாக இணைவதில் இருக்கக் கூடிய சவால்கள் மற்றும் பயன்களை அளவிடுவது மிகவும் முக்கியமானது ஆகும் (தனியார் துறையுடன் இணைவதற்கு உள்ள சந்தர்ப்பம் தொடர்பில் நீங்கள் உங்களுடைய நிறுவனத்தின் வழிகாட்டிகளை வாசித்து அறிந்து கொள்ள வேண்டும்).

**தனியார் துறையுடன் பங்காளர்களாக இணைதல்**

| சந்தர்ப்பங்கள் | சவால்கள் |
|---|---|
| ▪ தீர்மானம் எடுப்பவர்களுடன் தீவிரமான செல்வாக்கு.<br>▪ எங்கள் பணிக்கு மேலதிக வளங்கள் (நிதி மற்றும் மக்கள்).<br>▪ செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் வரவு செலவுத் திட்டம் போன்ற தனியார் துறை நிபுணத்துவ பயன்கள்.<br>▪ சிறந்த பயிற்சியை பகிர்ந்து கொள்ளல். | ▪ சிறுவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகள் தொடர்பில் நம்பகமான பரப்புரை செய்பவராக இருப்பதற்கான நம்பகத்தன்மையை நீங்கள் பெறாதிருப்பதற்கான சாத்தியங்கள்.<br>▪ உங்களுடைய உறவு முறையை மக்கள் தொடர்புக்கு மாத்திரம் பயன்படுத்தும் பங்காளர் ஒருவருடன் இணைதல் மற்றும் உண்மையான மாற்றத்தை உருவாக்காமை. |

**உரிய முயற்சி சிரத்தை**

உரிய முயற்சி சிரத்தை என்ற வார்த்தை பல வேறுபட்ட விளக்கங்களைத் தருகின்றது. இந்த சூழ்நிலையில், குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றுடன் இணைந்து செயற்படுவதில் உள்ள சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களை அடையாளங் காண்பதற்கான ஆழமான ஆய்வு என்று கருதலாம். உரிய முயற்சி சிரத்தை பரீட்சையை முன்னெடுக்கும் போது பின்வரும் கேள்விகள் மற்றும் ஊகக் குறிப்புக்களை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

**சிறுவர்கள் மீதான தாக்கம்:** செயற்படும் முறைகள், மேலதிக வளங்களை பயன்படுத்தல் (நிதி அற்ற), கொள்கைகளை மாற்றல், அல்லது மேலதிக நிதி வழங்கப்படல் போன்றவற்றின் அடிப்படையில் இந்த நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம், சிறுவர்களுக்காக நீங்கள் அடையக் கூடியது என்ன,

**"இலச்சினை" பொருத்தம்:** சேவ் த சில்ரன் "இலச்சினையை" அது பரவலாக்குகின்றதா அல்லது இழிவடையச் செய்கின்றதா (சேவ் த சில்ரனின் அடையாளத்தை சிறப்புறச் செய்யும்)? இந்த ஒன்றிணைதலுக்கு 'இல்லை' அல்லது 'ஆம்' எனக் கூறுவதன் மூலம் உங்களுடைய பிரதிநிதித்துவத்திற்கு ஏற்படக் கூடிய சவாலின் அளவு என்ன?

- சேவ் த சில்ரனின் முக்கியமான பெறுமதிகள் மற்றும் நோக்கத்துடன் நிறுவனத்தின் உற்பத்தி விபரக் கோவை எவ்வாறு பொருந்துகின்றது?
- சேவ் த சில்ரனின் பெயர் மற்றும் பிரதிநிதித்துவத்தின் மூலம் இணையும் பங்காளருக்கு ஏற்படக் கூடிய தாக்கம் என்ன?
- குறித்த நிறுவனம் அண்மையில் ஏதேனும் சிக்கல்கள் அல்லது சட்ட நடைமுறைகளை எதிர்கொண்டதா (5 தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலப் பகுதியை பின்னோக்கிப் பார்க்கவும்)? ஆம் எனின், எவ்வாறான விடயத்தை எதிர்கொண்டனர்? உத்தேசிக்கப்பட்டுள்ள பங்காளித்துவத்துடன் அது எவ்வாறு தொடர்புபடுகின்றது?
- நிதி ரீதியாக நிறுவனம் உறுதியாக உள்ளதா?
- அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான ஒருங்கிணைந்த சமூக பொறுப்புடைமை கொள்கை அல்லது நடவடிக்கையை நிறுவனம் ஸ்தாபித்துள்ளதா?

**வளங்கள்:** செயற்பாட்டு ரதியாக மற்றும் உங்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும் விதிக்கப்பட்டுள்ள பிரயோக ரீதியான நிபந்தனைகள் எவை? சாத்தியமான செலவு அல்லது பயன் என்ன?

**முரண்பாடுகள்:** உங்களுடைய முக்கிய நிகழ்ச்சிகள் அல்லது பரப்புரை முன்னுரிமைகள் அல்லது சிறுவர்கள் உரிமைகளை மதித்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளனவா?

- நிறுவனத்தின் உரிமம் மற்றும் கட்டமைப்பு என்ன? உப நிறுவனங்கள் மற்றும் பிரதான விநியோகஸ்தர்கள் யார்?
- நெருக்கடி மிக்க துறை அல்லது அரசியல் மற்றும் மத நிறுவனங்களுடன் தொடர்புகள் ஏதேனும் உள்ளதா?
- குறித்த நிறுவனம் தவிர்க்கப்பட்ட பொருட்களின் (ஆயுத நிறுவனம், புகைப்பொருட்கள் அல்லது மதுபான நிறுவனங்கள்) பிரதான விநியோக நிறுவனமாக உள்ளதா?
- ஏனைய நாடுகளில் நிறுவனத்தின் செயற்பாடுகள் அல்லது விநியோகங்கள் அல்லது சந்தைகள் எவை?
- இந்த நாடுகள் ஏதேனிலும் விசேட கவனங்கள் ஏதேனும் (உதாரணமாக, சேவ் த சில்ரன் ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பில்) உள்ளனவா?
- அதன் சிறுவர் தொழிலாளர் தொடர்பான கொள்கை உட்பட நிறுவனத்தின் வேலைவாய்ப்பு கொள்கைகள் மற்றும் பயிற்சிகள் எவை?

**வேறு:** இந்த உறவு முறையின் சந்தர்ப்ப செலவு என்ன – எடுத்துக்காட்டாக: மிகவும் முக்கியத்துவமான அல்லது மிகவும் பெறுமதியுடைய விடயம் ஒன்றை உங்களால் செய்ய முடியாது என்பதனையா அது வெளிப்படுத்துகின்றது?

கூகுள் (Google) இணையத்தளத்தில் தேடலை செய்வதன் மூலம் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பிலான தகவலையும் நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். நிறுவனத்தின் பெயரை (அதன் ரீதியாக பதிவு செய்யப்பட்ட பெயர்) தட்டச்சு செய்து, "சிறுவர் உரிமை மீறல்", "துஷ்பிரயோகம்", "சுரண்டல்", இன்னபிற சொற்களை பிரதானமாக உள்ளடக்கி உங்கள் தேடலை முன்னெடுக்கலாம். இந்த தேடலின் மூலம் நிறுவனம் தொடர்பில் வெளிவந்துள்ள தகவல்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். இந்த தகவல்கள் நிறுவனத்தின் இணையத்தளத்திலும் வெளியாகியுள்ளதா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். நிறுவனம் தொடர்பான நம்பகத் தன்மையை வளர்ப்பதற்கு இது துணை புரியும்.

**தனியார் துறையுடன் இணைவது தொடர்பில் வேறு அக்கறைகள்**

உரிய முயற்சி சிரத்தை பரீட்சையை செய்ததன் பின்னர், உங்களுடைய மாற்றத்திற்கான குறிக்கோள்களை அடைவதற்கு மிகுந்த பயனுறுதியுடன் அவர்களுடன் இணைந்து செயற்பட முடியுமா என்பது தொடர்பில் அவர்களிடம் முக்கியமான சில கேள்விகளை கேட்பதன் மூலம், உங்களுடைய பங்காளித்துவத்தை வெற்றிகரமாக ஆரம்பிக்க முடியும்.

குறித்த பங்காளரிடம்....

- சிறந்த சேவை அனுபவம் உள்ளதா?
- அவர்கள் சார்ந்த துறையில் நியாயமான நிலை அல்லது மதிப்பு உள்ளதா?
- வேறு துறைகள் மற்றும் வேறு பிரதான நபர்களிடம் நியாயமான நிலை அல்லது மதிப்பு உள்ளதா?
- அவர்களிடம் இருந்து பரந்த அளவிலான மற்றும் பயனுள்ள தொடர்புகளை பெற்றுக் கொள்ள முடியுமா?
- சம்பந்தப்பட்ட தகவல்கள் அல்லது வளங்கள் அல்லது அனுபவங்களுக்கான பிரவேசம்?
- உங்களுடைய நிறுவனம் அல்லது வேறு பங்காளர்களுக்கு உதவக் கூடிய தகைமைகள் மற்றும் திறன்கள்?
- குரல் முகாமைத்துவம் மற்றும் ஆட்சிமுறைமை கட்டமைப்புக்கள்?
- நிதி ஸ்திரத்தன்மை மற்றும் பொருத்தப்பாடு தொடர்பான அறிக்கை?
- ஸ்திரமான ஊழியர் குழு?
- நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அதிகாரத்தை பயன்படுத்தல்?

**தனியார் துறையுடன் பங்காளர்களாக இணைந்து செயற்பட தீர்மானித்தல்**
சாத்தியமான பயன்கள் மற்றும் சவால்களை மதிப்பீடு செய்த பின்னர் தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து செயற்படுவதற்கு நீங்கள் தீர்மானித்தால், அதே கேள்விகள் மற்றும் விடயங்களை நீங்கள் பங்காளித்துவத்தை வழங்கும் நிறுவனத்திற்கும் பிரயோகித்து பார்க்க வேண்டும் (கூட்டமைப்புக்களுடன் செயற்படல் தொடர்பிலான பகுதி 7.1ஐ பார்க்கவும்). பொது அதிகார சபைகளுடனான இணக்கமின்மைகள் எவ்வாறு கையாளப்பட வேண்டும் மற்றும் ஊழல் அல்லது லஞ்சத்துடன் தொடர்புடைய விடயங்களில் பொது மக்களின் இணக்கமின்மை அல்லது தூண்டும் விடயங்கள் என்பன தொடர்பில் நீங்கள் அவதானஞ் செலுத்த வேண்டிய தேவையுள்ளது.

## கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்வு (CSR)

வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள், சமுதாயம் மற்றும் சூழல் அக்கறைகள் என தமது செயற்பாடுகளின் அனைத்து அம்சங்களிலும் கவனஞ் செலுத்தும் எண்ணக்கருவே கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்வு எனப்படுகின்றது. இந்த பொறுப்பானது, நிறுவனத்தின் சட்ட ரீதியான பொறுப்பிற்கு வெளியே பொறுப்புக்களை பரவச் செய்கின்றது.

**கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்வு என்பதால் கருதப்படுவது என்ன?**
கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்வு என்பது வேறுபட்ட மக்களால், வேறுபட்ட வகையில் விளக்கப்படுகின்றது. ஆனால், கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்வை சேவ் த சில்ரன் பின்வருமாறு விளக்குகின்றது:

- நிறுவனம் ஒன்று செயற்படும் சமூகத்தில் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்குமான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்.
- முக்கியமாக, குறித்த நிறுவனத்தின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட தொழில் வலு, சமுதாயங்கள் மற்றும் நாடுகளின் ஊடாக சமூக பொறுப்பு அணுகுமுறைகளை உறுதி செய்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகும்.
- ஆகக் குறைந்த தேவை: தமது செயற்பாடுகள் வேறுபட்ட பங்குதாரர்களை பாதிக்காது என்பதனை நிறுவனம் உறுதி செய்ய வேண்டும்.

கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்பு என்பது பொதுவாக "ஜன்னல்களுக்கு திரையிடல்", "மக்கள் தொடர்பு" என அடையாளங் காட்டப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், மாற்றங்களை ஏற்படுத்தாது சமூகத்தில் தமது பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு நிறுவனங்கள் கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்பு என்பதனை பயன்படுத்தலாம். நபருக்கு, நபரும் மற்றும் நிறுவனத்திற்கு நிறுவனமும் இந்த யதார்த்த தன்மை வேறுபடலாம். பிரயோகத்தில் வேறுபாட்டினை நாம் அறிந்து கொள்ள முடியும்.

**வர்த்தகத்திற்கு கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்பு அவசியமாக இருப்பது ஏன்?**
கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்ச்சியை தமது பாதுகாப்புக்குரிய மூலோபாயமாக சில நிறுவனங்கள் கருதுகின்றன. எதிர்மறையான விளம்பரம், நுகர்வோரின் எதிர்ப்பு, குற்றவியல் வழக்கு தொடரல் அல்லது உரிமை கோரிக்கை வழக்கு போன்றவற்றினை குறைப்பதற்கான மூலோபாயமாக இந்த பொறுப்பு கருதப்படுகின்றது. வேறு நிறுவனங்கள் கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்பை தீங்கு விளைவிக்கக் கூடிய மூலோபாயமாக கருதுகின்றன. தமது போட்டியாளர்களிடம் இருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டுவதற்கு, புதிய வாடிக்கையாளர்களை பெற்றுக் கொள்வதற்கு, தமது இலச்சினை பிரதிநிதித்துவத்தை பரவச் செய்வதற்கு, மற்றும் நிரந்தரமான பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்குவதற்கு என அவற்றை கூறலாம்.

**சேவ் த சில்ரன் எவ்வாறு இதில் பங்குபற்ற முடியும்?**
சிறுவர்களின் நன்னடத்தையை பல்வேறு வழிகளில் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் நிறுவனங்களுக்கு சேவ் த சில்ரனால் உதவி வழங்க முடியும். உதாரணமாக:

- நிறுவனங்களின் செயற்பாடு அல்லது செயற்படாது இருத்தல் சிறுவர்களில் தாக்கம் புரியும் சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டல்.
- சிறுவர்கள் மீது சாதகமான தாக்கத்தை எவ்வாறு ஏற்படுத்தலாம் என நிறுவனங்களுக்கு சுட்டிக்காட்டல்.
- சிறுவர்கள் மீது சாதகமான தாக்கத்தை நிறுவனங்கள் செலுத்துவதை உறுதி செய்வதற்கு அரசாங்கங்களுக்கு உதவுதல்.
- தற்போது பயன்பாட்டில் உள்ள சட்டங்கள் மற்றும் வழிகாட்டிகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல் (உதாரணமாக, சிறுவர்களை பாதுகாப்பதற்கு சரியான ஒழுக்கக் கோவையை அடையாளங் காண்பதற்கு நிறுவனங்களுக்கு உதவி செய்தல், நெறிமுறைகளை கண்காணித்தல்).
- பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கான நிறுவனங்களின் முயற்சிகளை வடிவமைப்பதற்கு, தயாரிப்பதற்கு மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு உதவி வழங்கல்.
- நன்னடத்தை தொடர்பிலான ஒருங்கிணைந்த தலைமைத்துவ உதாரணங்களை உருவாக்கல்.

**சில பொருத்தமான நெறிமுறைகள் மற்றும் சட்ட தரங்கள்:**

**வெளியக சட்ட தரங்கள்**

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (ILO): சிறுவர் தொழிலாளர் தொடர்பான சாசனங்கள்
ஐக்கிய அமெரிக்கா சுங்க விதிமுறைகள்
ஐரோப்பிய விதிமுறைகள்
பல்தேசிய வர்த்தகங்களுக்கான OECD வழிகாட்டிகள்
வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் நெறிமுறைகள்

**பல்வகை பங்குதாரர் முனைப்பு நெறிமுறைகள்:**

நியாயமான தொழிலாளர் ஒன்றியம் (FLA)
சமூக பொறுப்புடைமை 8000
ஒழுக்கஞ் சார்ந்த வர்த்தக முனைப்பு
பிரிக்கப்பட்ட தொழில் துறைகளின் வெளிப்படையான முனைப்பு
முரண்பாட்டு பல்வகைத் தன்மை தொடர்பான கிம்பர்லி (Kimberley) செயன்முறை

**பொதுவான தன்னார்வ கோட்பாடுகள் அல்லது வழிகாட்டிகள்**

ஐக்கிய நாடுகளின் உலகச் சுருக்கம்
உலக அறிக்கையிடல் முனைப்பு
உலக சுல்லிவன் கோட்பாடுகள்
பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தன்னார்வ கோட்பாடுகள்

## சொக்கலட் உற்பத்தி தொழில் துறையில் சிறுவர் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படும் அவலத்தை ஒழிப்பதற்கு பரப்புரை செய்தல்

1990களின் முற்பகுதியில் மேற்கு ஆபிரிக்காவில் சிறுவர்கள் ஆட்கடத்தல் தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் கீழ் மட்ட நிறுவனங்களிடமிருந்து சேவ் த சில்ரன் அறிந்து கொண்டது. சிறுவர்கள் பல பகுதிகளிலும் இருந்து பிடித்து வரப்பட்டு, மாலி மற்றும் புர்கினோ ∴பாசோ பகுதிகளில் விற்கப்படுகின்றனர். பின்னர் இவர்கள் ஐவரி கோஸ்ட்டில் உள்ள கொக்கோ பண்ணைகளில் பலவந்தமாக வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

2000ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட பிரித்தானிய தொலைக்காட்சி ஆவணப்படத்தில், மாலியிலிருந்து கடத்தப்படும் சிறுவர்கள் ஐவரி கோஸ்ட் கொக்கோ பண்ணைகளில் அடிமைகளாக பணியாற்றும், சிறுவர் தொழிலாளர்களின் மோசமான நிலை தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஐக்கிய அமெரிக்காவில், செனட்டர் ஹார்கின் (Harkin) மற்றும் மக்களவையிலிருந்து எலியட் எங்கல் (Eliot Engel) ஆகியோர் உடனடியாக இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தனர். கொக்கோ பண்ணைகளில் "சிறுவர்கள் அடிமைநிலையை" இல்லாதொழிப்பதற்கு தெளிவான பொறியமைப்பு ஒன்றை வடிவமைக்குமாறு ஐக்கிய அமெரிக்க சொக்கலட் தொழில் துறைக்கு அவர்கள் உத்தரவிட்டனர். கொக்கோ தொழில் துறையில் சிறுவர் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படும் மோசமான நிலையை ஒழிப்பதற்காக 2005 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஹார்கின்-எங்கல் கொக்கோ நெறிமுறை உருவானது.

இதேவேளை, இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுதல் மற்றும் ஏனைய சிறுவர்களை பாதுகாத்தல் போன்றவற்றில் கனடாவில் அமைந்துள்ள சேவ் த சில்ரன் உதவி புரிகின்றது. மாலி மற்றும் ஐவரிகோஸ்ட் எல்லைகளில் கடத்தப்படும் சிறுவர்களை தடுத்து நிறுத்துதல் மற்றும் சொந்த இடங்களுக்கு மீள அனுப்பி வைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இடைத்தங்கல் நிலையங்களை நாம் நிறுவினோம். தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான வலையமைப்பு ஒன்றையும் நாம் உருவாக்கினோம். சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தகவல்களை வெளியிடுவதற்கு உள்ளூர் ஊடகங்களை பயன்படுத்தினோம். புர்கினோ ∴பாசோ மற்றும் மாலி ஆகிய பகுதிகளில் முறைசாரா மற்றும் முறை சார் கல்விக்கு நாம் ஆதரவு வழங்கத் தொடங்கினோம். புதிய பாடசாலைகளை திறத்தல், சிறுவர்கள் கடத்தப்படுவதற்கு எதிராக புதிய விபரக் கோவைகளை வடிவமைத்தல் மற்றும் உள்ளூர் விழிப்புணர்ச்சியை கட்டியெழுப்பல், சமுதயாத்தை விழிப்படையச் செய்தல் என்பவற்றிலும் நாம் உதவி வழங்கினோம்.

இத்தாலி சேவ் த சில்ரன் அமைப்புடன் பங்காளித்துவத்துடன் செயற்பட்டு, "நேர்நிலையான சொக்கலட்" என்ற உலக பொது மக்கள் பிரசார நடவடிக்கையை நாம் ஆரம்பித்தோம். ஜி 8 மற்றும் ஆபிரிக்க அபிவிருத்திக்கான புதிய பங்காளித்துவம் (New Partnership for Africa's Development - NEPAD) போன்ற பாரிய சர்வதேச மாநாடுகளுக்கு நாம் சென்றோம். எமது இடைத்தங்கல் நிலையங்களில் தங்கியுள்ள கொக்கோ விநியோகச் சங்கிலியின் ஊடாக கொண்டு வரப்பட்டு விற்கப்பட்ட சிறுவர்களின் சான்றுகளை நாம் சமர்ப்பித்தோம். கனடா மற்றும் சர்வதேச ஊடகங்கள் இந்த விடயத்தை பிரதானப்படுத்தியதாக செய்திகள் வெளியிட்டன. மேற்கு ஆபிரிக்காவில் இருந்து எங்கள் உறுப்பினர்களின் நேர்காணலுடன் இந்த செய்தியை பி.பி.சி வெளியிட்டது. இந்த விடயம் தொடர்பில் ஆய்வு கொள்கை ஆவணத்தையும் நாம் தயாரித்து கனடா, அமெரிக்கா மற்றும் மேற்கு ஆபிரிக்க அரசாங்க அதிகாரிகள், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பரந்த அளவில் விநியோகித்தோம்.

சொக்கலட் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள பிரதான நிறுவனங்கள் எம்மை தொடர்பு கொண்டன. அவர்களுடைய விநியோக சங்கிலியில் காணப்படும் சிறுவர் தொழிலாளர்களை அடையாளங் காண்பதற்கு உதவுமாறு கோரினர். கனடாவின் இனிப்பு பண்டங்கள் உற்பத்தி ஒன்றியம் (The Confectionery Manufacturers Association), ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஹேர்செஸ் (Hershey's), மாஸ்டர் ∴பூட்ஸ் (Masterfoods), மற்றும் உலக கொக்கோ நிதியம் (World Cocoa Foundation) என்பன ஹார்கின்-எங்கல் கொக்கோ நெறிமுறை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான தேர்ச்சி அறிக்கைக்காக எம்மை தொடர்பு கொண்டன

2005ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் இந்த நிறுவனங்களுடன் நேரடியாக இணைந்து செயற்பட ஆரம்பித்தோம். சிறுவர் தொழிலாளர்களின் சூழ்நிலையை விசாரணை செய்வதற்காக 'உரிய முயற்சி சிரத்தையின்' மூலம் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஹேர்செஸ் (Hershey's), மற்றும் உலக கொக்கோ நிதியம் (World Cocoa Foundation) ஆகியவற்றுடன் இணைந்து நாங்கள் மேற்கு ஆபிரிக்காவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டோம். ஹார்கின்-எங்கல் கொக்கோ நெறிமுறை தொடர்பில் சொக்கலட் நிறுவனங்களின் செயற்பாடு சம்பந்தமாக நடைபெற்ற பல்வகை பங்குதாரர்கள் கூட்டத்தில் நாங்கள் பங்குபற்றினோம். வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச ஒழுங்கு சார் நிறுவனத்தின் மாநாட்டில் குழுவொன்றை நாங்கள் ஒன்றிணைத்தோம். இதில் ஒட்டாவா மற்றும் வொஷிங்டனில் அமைந்துள்ள ஐவரி கோஸ்ட் தூதுவர்களும், எங்கல்ஸ் அலுவலகத்தின் பிரதான

ஊழியர்கள், உலக கொக்கோ நிதியம் (World Cocoa Foundation) மற்றும் கனடா, சேவ் த சில்ரனின் பங்குபற்றுநர்களாக கலந்து கொண்டனர். அரசாங்க தீர்மானம் எடுப்பவர்களில் செல்வாக்கு செலுத்துவது தொடர்பில் நாம் பணியாற்றினோம். எமது பணிகளின் அறிக்கையை செனட்டர் ஹோர்கின்ஸ் அலுவலகம் மற்றும் ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் ஊழியர்கள் குழு என்பவற்றுக்கு நாம் சமர்ப்பித்தோம்.

கொக்கோ பண்ணைகளில் இருந்து சிறுவர்கள் அடிமைகளாக வேலைக்கு அமர்த்தப்படுவதனை ஒழிப்பதற்கு ஹார்கின்-எங்கல் கொக்கோ நெறிமுறையை நிர்ணயிப்பதற்கான இலக்கு தினமாக 2005ஆம் ஆண்டு ஜுன் மாதத்தை தீர்மானித்தோம். இதன் அடிப்படையில் எமது நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்துடன் பொருந்தியதாக, "வேளாண்மை பண்டங்களின் மூலப்பொருட்கள் வர்த்தகத்தில் சிறுவர் பாதுகாப்பு: கொக்கோ தொடர்பான விடயம்" என்ற சர்வதேச நிபுணர்கள் மன்றத்தை நாம் ஒழுங்கு செய்தோம். இதில் கனடா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் மேற்கு ஆபிரிக்காவின் அரசாங்கத் தலைவர்கள், சொக்கலட் தொழில் துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சேவ் த சில்ரன் உறுப்பினர்களும் இந்த மன்றத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஹார்கின்-எங்கல் கொக்கோ நெறிமுறையில் அடையாளங் காட்டப்பட்டுள்ள கொக்கோ சான்றுபடுத்தல் செயன்முறையை கண்காணித்தல் மற்றும் அறுதியீடு செய்தல் போன்ற விடயங்களில் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கு சர்வதேச ஒத்துழைப்பை கட்டியெழுப்புவது எமது இலக்காக இருந்தது. சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பில் முந்தைய காலங்களில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள், அரசாங்கத்தின் மேற்பார்வையுடன் தொடர்புபடாமையால் அதிகளவு வெற்றியளிக்காத நிலையில், சுயாதீனமான குழுவின் கண்காணித்தல் பணிகளை நாம் முன்வைத்திருந்தோம்.

**நாங்கள் அடைந்தது**
இந்த அனைத்து நடவடிக்கைகளிலும் பயனாக சிறுவர் விடயங்களில் ஓரளவு தாக்கமே ஏற்பட்டுள்ளது. ஹார்கின்-எங்கல் கொக்கோ நெறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான கால எல்லையாக நாங்கள் நிர்ணயித்த 2005ஆம் ஆண்டு ஜுன் மாதம் வந்து போன பின்னரும், கொக்கோ பண்ணைகளில் சிறுவர்கள் பலாத்காரமாக ஈடுபடுத்தப்படும் நிலை தொடர்ந்த வண்ணமே உள்ளது. "நெறிமுறையில் குறிப்பிடப்பட்ட ஜுலை 1ஆம் திகதி என்ற கால அவகாசத்தில் எந்த விடயமும் எட்டப்படவில்லை என்பதனால் நான் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளேன்" என செனட்டர் ஹோர்கின் தெரிவிக்கின்றார். பெறுபேறுகள் தொடர்பில் தமது திருப்தியின்மையை சட்ட ஆக்குநர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால், சொக்கலட் உற்பத்தி நிறுவனங்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படவில்லை. இந்த நெறிமுறை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு புதிய கால எல்லையை அவர்கள் கோரியிருந்தனர். அதன் அடிப்படையில் ஐவரி கோஸ்ட் மற்றும் கானா பகுதிகளில் கொக்கோ உற்பத்தி செய்யும் 50 வீதமான பகுதிகளை உள்ளடக்கும் வகையில் 2008ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரையிலான காலப்பகுதி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**அழுத்தத்தை மேம்படுத்துவதற்கு பொது மக்கள் வெளிப்பாடு**
இந்த பெறுபேறுகள் தோல்வியைத் தந்தமையினால், சொக்கலட் தொழில் துறையில் சிறுவர்கள் தொழிலாளர்களாக பயன்படுத்துவது தொடர்பிலான விடயத்தில் பொது மக்களின் கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கு கனடா, சேவ் த சில்ரன் அமைப்பு தீர்மானித்தது. கனடாவின் ஊடகவியலாளர், 2006ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட "கசப்பான சொக்கலட(Bitter Chocolate)" என்ற புத்தகத்தின் ஆசிரியர் கரோல் ஓப் (Carol Off)உடன் நாங்கள் இணைந்து பணியாற்றினோம்.

**நமது தற்போதைய நிலை என்ன?**
கால அவகாசம் நீடிக்கப்பட்ட ஹார்கின்-எங்கல் கொக்கோ நெறிமுறையின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் கண்காணிப்பு செய்வதற்காக ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தினால் மேற்பார்வை குழுவொன்று நியமிக்கப்பட்டது. சிறுவர்கள் கடத்தப்படுவதை மற்றும் சொக்கலட் தொழில் துறையில் சிறுவர்கள் தொழிலாளர்களாக நியமிக்கப்படும் மோசமான நிலை ஆகியவற்றை ஒழிப்பது தொடர்பில் அனைத்து பங்குதாரர்களுடனும் இடைவிடாத முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.


**நாங்கள் கற்றது**
**பலமான ஆதாரம்:** எங்களுடைய பரப்புரை நடவடிக்கையின் பிரதான பலங்களில் ஒன்றாக வளர்ந்து செல்லும் குறித்த பிரச்சினை தொடர்பில் நாங்கள் வழங்கிய உறுதியான ஆதாரம் இருக்கின்றது.

**சர்வதேச மற்றும் தேசிய சட்ட கருவிகளை பயன்படுத்தல்:** சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன சாசனம் 182இன் சிறுவர் தொழிலாளர்களின் மோசமானை நிலையை தடுத்தல் மற்றும் மேற்கு ஆபிரிக்க சூழ்நிலைக்கு ஏற்ற உள்ளக சட்டங்கள் உள்ளிட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனம் ஆகியவற்றின் மூலம் பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் தலையீடு செய்வதற்கும் மற்றும் கவனஞ் செலுத்துவதற்குமான நேர்த்தியான சட்ட விவாதங்களை எம்மால் வழங்க இயலுமானதாக இருந்தது.

**நம்பகத்தன்மையை கட்டியெழுப்புவதற்கு உள்ளூர் அறிவை சர்வதேச அரங்கில் பயன்படுத்தல்:** மேற்கு ஆபிரிக்காவில் இருந்து நம்பகத் தன்மை வாய்ந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட நாங்கள், அதனை சர்வதேச அரங்கில் சமர்ப்பித்தோம். ஐக்கிய அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்ட சொக்கலட் தொழில் துறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றல் ஊடாக, ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் முக்கிய அதிகாரிகளுடன் உறவை கட்டியெழுப்புவதற்கும் மற்றும் அவர்களை அணுகிச் செல்வதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது. இதன் மூலம் எமது செய்திகளை சமர்ப்பிப்பதற்கான செல்வாக்கும் எமக்கு கிடைத்தது.

**அவதானமாக உருவாக்கப்பட்ட செய்திகள் மற்றும் ஊடகத்துடன் சிறந்த உறவு:** சர்வதேச ஊடகங்களுடனான உறவு மற்றும் நன்கு இலக்கு வைக்கப்பட்ட செய்திகளை வடிவமைத்தல் என்பவற்றின் ஊடாக குறித்த விடயம் தொடர்பான கண்ணோட்டத்தை பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்லக் கூடியதாக இருந்தது. எந்தவொரு ஊடாக அறிக்கைப்படுத்தலுக்கும் முன்னர் பிரதான கொள்கை வகுப்பாளர்களுக்கு ஊடக அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**தனியார் துறையுடன் எவ்வாறு இணைந்து செயற்படல் தொடர்பில் புரிந்து கொள்ளல்:** கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்வு மற்றும் தனியார் துறையுடன் இணைந்து செயற்படல் என்பவற்றில் எங்களுடைய நிபுணத்துவத்தின் மூலம் கொக்கோ துறை விநியோக சங்கிலியின் சிக்கல் தன்மையை குறித்த எங்கள் புரிந்துணர்வை வெளிப்படுத்தக் கூடிய மூலப் பொருளை தயாரிக்கக் கூடியதாக இருந்தது. கொக்கோ உற்பத்தியாளர்களின் முழுமையான செயற்பாடுகள் தொடர்பில், சொக்கலட் உற்பத்தியாளர்கள் அறிந்து கொண்டுள்ள அளவு குறைவாக உள்ளமையை நாம் அறிந்து கொண்டோம். பொதுவான தளம் ஒன்றை அமைப்பதற்கு இது உதவியாக இருந்தது.



செயன்முறைப் படிவம்

7.3 தனியார் துறை செயற்பாட்டாளர்கள்

| சாத்தியமான நண்பர்கள் அல்லது தனியார் துறையில் உள்ள எதிரிகள் | நிறுவனம் A | நிறுவனம் B | நிறுவனம் C |
|---|---|---|---|
| உங்களுடைய பரப்புரை விடயம் தொடர்பில் அவர்களுடைய ஆர்வம் என்ன? | | | |
| சாத்தியமான பரப்புரை கூட்டணியின் ஊடாக அவர்கள் கொண்டு வரக் கூடிய பலங்கள் எவை? | | | |
| இந்த நிறுவனத்துடன் கூட்டணி சேர்வதால் ஏற்படக் கூடிய சவால்கள் எவை? | | | |
| கூட்டாண்மை பயிற்சியில் மாற்றத்தை எதிர்பார்க்கும் போது செல்வாக்கு செலுத்துக் கூடிய குறிப்புக்கள் எவை (வாடிக்கையாளர்குள், பங்குதாரர்கள், ஊழியர்கள், கொள்கை வகுப்பவர்கள், இன்னபிற)? | | | |
| இந்த ஒவ்வொரு செல்வாக்கு புள்ளிகளினதும் நெம்புதிறன் என்ன? | | | |

## 8.1 செயற்பாடு திட்டத்தை வடிவமைத்தல்



## அத்தியாயம் 8

# அறிமுகம்

உங்களுடைய பரப்புரை மூலோபாயத்திற்கு தேவையான பெரும் அளவிலான பகுப்பாய்வுகளை நீங்கள் முன்னெடுத்துள்ளீர்கள். தற்போது, நீங்கள் உண்மையாக செய்ய வேண்டியது என்ன, எப்போது அதனை செய்ய வேண்டும் மற்றும் யார் அதற்கு தலைமை வகிக்க வேண்டும் மற்றும் என்பது தொடர்பில் திட்டமிடலாம். அத்துடன், ஒரு நடைமுறைப்படுத்தல் திட்டத்திற்குள் உங்களுடைய பரப்புரை பணி முழுவதிலும் வழிகாட்டும் வகையில், உங்களுடைய பணிகளை ஒருங்கு திரட்டலாம்.

கொள்கை செயன்முறை தொடர்பிலான உங்களுடைய பகுப்பாய்வு, தீர்மானம் எடுத்தலில் செல்வாக்கு செலுத்துவதற்கு உங்களுடைய பரப்புரையில் எங்கு கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் என்பதனை தீர்மானிப்பதற்கு உதவி செய்யும். இலக்குக் குழுக்களாக நீங்கள் அடையாளங் கண்டுள்ள தீர்மானம் எடுப்பவர்கள் மற்றும் அவர்கள் மீது செல்வாக்கு செலத்தக் கூடியவர்கள் ஆகியோர் தீர்மானம் எடுத்தல் நடைமுறையின் வேறுபட்ட படி நிலைகளில் உங்களுடைய மிகவும் பயன் தரத்தக்க அணுகுமுறையை தீர்மானிப்பார்கள்.

எவ்வகையான செய்திகளை நீங்கள் வழங்கப் போகின்றீர்கள், யாருக்கு வழங்கப் போகின்றீர்கள் மற்றும் அவை எவ்வாறு வழங்கப்படவுள்ளன என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதாக உங்களுடைய திட்டம் இருத்தல் வேண்டும். நீங்கள் யாருடன் இணைந்து பணியாற்ற வேண்டும், எந்த கூட்டணிகள் மற்றும் கூட்டமைப்புக்கள், மற்றும் சிறுவர்களை ஈடுபடுத்துவதற்கு நீங்கள் எவ்வாறு முயற்சிக்கலாம் என்பவற்றை உள்ளடக்கியதாக அது இருத்தல் வேண்டும். பொது மக்களின் அழுத்தத்தை ஒன்று திரட்டுவதற்கு நீங்கள் எதிர்பார்த்திருந்தால், அதனை எவ்வாறு, எங்கு செய்யப் போகின்றீர்கள் என்பதனை திட்டத்தில் குறிப்பிட வேண்டும். உங்களுக்குத் தேவையான வளங்கள் எவை, அவற்றில் உங்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருப்பவை எவை, அவற்றில் நீங்கள் அணுகக் கூடியவை எவை என்பன தொடர்பில் நீங்கள் கவனஞ் செலுத்தல் வேண்டும்.

இவை அனைத்தையும் நீங்கள் தயார் செய்த பின்னர், பரப்புரை பணியை முன்னெடுப்பதற்கு எதிர்வரும் காலங்களில் வரக் கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தவும். அத்துடன், இயலுமான வரையில் அவற்றில் இருந்து முழுமையான சாதக விளைவுகளை ஏற்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பிலும் கவனஞ் செலுத்தவும்.

## 8.1 செயற்பாடு திட்டத்தை வடிவமைத்தல்

பரப்புரை சக்கரத்தின் வேறுபட்ட படி நிலைகளின் ஊடாக நிறுவனத்தின் தகைமைகளை கட்டியெழுப்புதல் தொடர்பில் இதுவரை நாங்கள் கவனஞ் செலுத்தி வந்தோம். தற்போது, இதுவரை காலமும் நீங்கள் புரிந்த பணிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, ஒரு தனியான நடைமுறைப்படுத்தல் திட்டத்தில் இடவும். உங்களுடைய செயற்பாட்டு திட்டத்தை தயாரிக்கும் போது:

தீர்மானம் எடுத்தல் நடைமுறை மற்றும் அது எப்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது போன்ற வேறுபட்ட படி நிலைகளை அடையாளங் காண்பதற்கு கொள்கை செயன்முறையின் வரைபடத்தை பயன்படுத்தவும். அத்துடன், வேறுபட்ட படிநிலைகளில் இலக்குக் குழுக்கள் மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

பிரிவு 4.2 இல் கூறப்பட்டுள்ள பரப்புரை சந்தர்ப்பங்களை மீண்டும் வாசிக்கவும். அத்துடன், இந்த சந்தர்ப்பங்கள் எவ்வாறு உங்களுடைய கால அட்டவணையில் தாக்கத்தை செலுத்தும் என்பதில் கவனஞ் செலுத்தவும்.

வேறுபட்ட படி நிலைகளில் சிறுவர்குள் எவ்வாறு ஈடுபடுத்தப்படலாம் என கவனஞ் செலுத்தவும்.

இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்கள் தொடர்பில் உங்களுடைய பகுப்பாய்வை பயன்படுத்தி, ஒவ்வொரு இலக்குக் குழுவுக்கும் மிகவும் பயன்தரக் கூடிய அணுகுமுறைகள் மற்றும் உத்திகளை தீர்மானிக்கவும்.

வேறுபட்ட மக்களுக்கான செய்திகள் தொடர்பான உங்களுடைய பகுப்பாய்வை பயன்படுத்தி, ஒவ்வொரு மக்களுக்கும் செய்தியை வழங்கக் கூடிய மிகவும் பயன் தரக் கூடிய வழிமுறையை கண்டறியவும்.

அடுத்த இரண்டு அத்தியாயங்களிலும் உங்களுடைய பரப்புரை பணியை எவ்வாறு கண்காணிப்பது மற்றும் மதிப்பீடு செய்வது என்பது தொடர்பிலும் (அத்தியாயம் 9), வளங்களை எவ்வாறு பாதீடு செய்வது மற்றும் திரட்டுவது என்பது தொடர்பிலும் (அத்தியாயம் 10) நீங்கள் கவனஞ் செலுத்துவீர்கள். உங்கள் மூலோபாயத்தின் இந்தப் பகுதிகளை நீங்கள் தயாரிக்கும் வேளையில், உங்களுடைய செயற்பாடு திட்டத்திலும் அதனை உள்ளடக்க முடியும்.

*உதாரணம்:*

**உலக எய்ட்ஸ் தினம், அடிஸ் அபாபா, எத்தியோப்பியா, 2006 டிசம்பர் 01.**

நீண்ட கால பரப்புரை மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, எத்தியோப்பியாவில் உள்ள சேவ் த சில்ரன் நிறுவனம், உலக எய்ட்ஸ் தினத்தை தமது செய்திகளை சுட்டிக்காட்டுவதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமான சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டது. அடிஸ் அபாபா ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுமார் 350 பேர் கலந்து கொண்டனர். சேவ் த சில்ரன் ஊழியர்கள், சிறுவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரச சார்பற்ற நிறுவன பங்காளர்கள், நிதியுதவி வழங்குவோர், அரசியல்வாதிகள் மற்றும் ஊடகம் ஆகியோரே பங்குபற்றினர். எத்தியோப்பிய சிறுவர்களுக்கான தரமான கல்வியில் முதலீடு செய்வதற்கான அவசியம் தொடர்பில் கொள்கை வகுப்பாளர்களுக்கான செய்திகளை அவர்கள் முன்வைத்தனர். எச். ஐ. வி மற்றும் எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தேவைகளை இந்த நிகழ்வு சுட்டிக்காட்டியது. கல்வி இன்றி மற்றும் கல்வியுடன் தமது வாழ்க்கையை நிலையை வெளிப்படுத்தக் கூடிய ஓவியப் போட்டியில் சிறுவர்கள் கலந்து கொண்டனர். பங்குபற்றிய சுமார் 24 பங்குபற்றும் பாடசாலைகளை சேர்ந்த 3,000 சிறுவர்களில் இருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட ஓவியங்கள் நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டதோடு, ஓவியத்தை வரைந்த சிறுவர்களும், தமது ஓவியம் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு அருகில் இருந்தனர். பிரதான சொற்பொழிவாளராக கலந்து கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலாளரான மெடலின் அல்பிரைட், வெற்றி பெற்ற சிறுவர்கள் 24 பேருடனும் அமர்ந்திருந்து, அவர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். அத்துடன், தமது ஓவியம் தொடர்பில் கதைப்பதற்கும் மற்றும் தரமான கல்வியின் அவசியம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவும் இரண்டு இளம் ஓவியர்கள் மீட் ஈரீவீ (Meet ETV) தொலைகாட்சி நேரடி கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

**நடவடிக்கைகளை திட்டமிடல் மற்றும் வகை பிரித்தல்**

- நீங்கள் ஏனையோருடன் எவ்வாறு செயற்படுவீர்கள், உங்களுடைய நண்பர்கள் யார், நீங்கள் பொது மக்களுடன் செயற்பட வேண்டுமா அல்லது தனியார் துறையுடன் செயற்பட வேண்டுமா என்பது தொடர்பில் சிந்திக்கவும்.
- இயலுமான வரையில் மிகவும் பயன் தரக் கூடியதாக உங்களுடைய செய்திகளை வழங்குவதற்கு சந்தர்ப்பத்தை அளிக்கக் கூடிய வெளியக நிகழ்வுகள் தொடர்பில் சிந்தித்துப் பார்க்கவும்.
- இறுதியாக, உங்களுடைய பரப்புரை இலக்குகளை அடைவதற்கு உதவக் கூடிய விசேடமான நடவடிக்கைகளை திட்டமிடவும். யார், எப்போது மற்றும் எங்கே அதனை முன்னெடுக்க வேண்டும் என்பதனை தீர்மானிக்கவும்.

உங்களுடைய பரப்புரை நடவடிக்கைகளை நீங்கள் திட்டமிடும் போது, முக்கியமான சந்தர்ப்பங்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் நீங்கள் பின்னோக்கியதாக செயற்பட வேண்டிய தேவை ஏற்படும். கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஒன்றில் இருந்து நீங்கள் பெறக் கூடிய அதிக கூடிய பலன்களை முதலில் தீர்மானிக்கவும். அதன் பின்னர் என்ன செய்ய வேண்டும் மற்றும் எப்போது செய்ய வேண்டும் என தீர்மானிக்கவும். நேர்த்தியாக தயாராகவும்.

உலக வங்கி பிரதிநிதிகளின் விஜயத்தினைச் சார்ந்ததாக பரப்புரை நிகழ்வு ஒன்றினை திட்டமிட்டமை தொடர்பிலான உதாரணம் கீழே தரப்படுகின்றது.

கல்வி அமைச்சரே *இலக்கு குழு* ஆவார். கல்விக்கான விபரக் கோவை மேம்படுத்தலில் சிறுவர்களை ஆலோசிப்பதன் பெறுமதியை அவரை உணரச் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

திட்டமிடப்பட வேண்டிய *நிகழ்வு*: உலக வங்கியின் உயர் மட்ட பிரதிநிதிகள் அடுத்த வருடம் ஜூன் மாதம் இங்கு விஜயம் செய்யவுள்ளனர். அமைச்சரை அணுகுவதற்கான ஒரு ஊடகமாக அவர்களை பயன்படுத்தலாம்.

*செல்வாக்குகள்*: உலக வங்கி பிரதிநிதிகளை அடைவதற்கு, கல்வி தொடர்பான சிவில் சமூக ஸ்தாபனங்கள் ஊடாகவே செயற்பாட்டுக்கான திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். ஏனெனில், நீங்கள் வங்கி பிரதிநிதிகளை நேரடியாக அணுகுவதிலும் பார்க்க, இவ்வாறு அணுகுவதே பயனுடையதாக இருக்கும் என நீங்கள் நம்புகின்றீர்கள்.

**நடவடிக்கைகள்:**

- ஸ்தாபன உறுப்பினர்களுடன் உடனடியாக தனிப்பட்ட உறவுகளை கட்டியெழுப்பவும். பின்வரும் விடயங்களை அவர்களை ஏற்கச் செய்யவும்:
- புதிய விபரக் கோவையை தயாரிப்பது தொடர்பில் சிறுவர்களை ஆலோசிப்பதற்கு பரிந்துரை செய்வது தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்தல் (விஜயத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அறிக்கை தயாராக இருத்தல் வேண்டும்).
- இந்த முறை உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்கு உயர் மட்ட உறுப்பினரை கண்டறியவும்.
- இந்த அறிக்கையை அறிமுகம் செய்வதற்கு ஊடகவியலாளர் மாநாட்டை ஒழுங்கு செய்யவும் (விஜயத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர்). அறிக்கை தொடர்பாக நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்கு இது உதவி புரியும்.
- அறிக்கை பயனுடையதாக அமைவதற்கு, அதில் உறுதியான உதாரணங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். வேறு நாடுகளில் புதிய விபரக் கோவையை தயாரிப்பதற்கு சிறுவர்களின் ஆலோசனை உள்வாங்கப்பட்டு, பயன் பெற்ற விபரங்கள் குறிப்பிடப்படல் வேண்டும். ஆலோசனை பொறியமைப்பு எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது மற்றும் மதிப்பீட்டுக்கான செலவு என்பவற்றையும் அது விளக்க வேண்டும். இதில் சில பரீட்சார்த்த செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவையும் ஏற்படும். விசேடமாக ஆய்வுக் குழுவின் ஸ்தாபனத்தின் உறுப்பினரைக் குறிப்பிடலாம்.

நடவடிக்கைகள் உரிய ஒழுங்கில் முன்னெடுக்கப்படுகின்றமையை உறுதி செய்து கொள்வதற்கு அவை வரைபடமாக்கப்படலாம். பின்வரும் வரைபடம் அது தொடர்பில் உங்களுக்கு உதவி புரியும்.

| | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்ரம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸ்தாபனத்துடன் தொடர்பினை ஏற்படுத்தல் | | | | | | | | | | | | | | | |
| பரீட்சார்த்த பொறியமைப்பு | | | | | | | | | | | | | | | |
| அறிக்கை எழுதல் | | | | | | | | | | | | | | | |
| உலக வங்கிக்கு அறிக்கை சமர்ப்பித்தல் | | | | | | | | | | | | | | | |
| ஊடகவியலாளர் மாநாடு மற்றும் அறிக்கை அறிமுகம் | | | | | | | | | | | | | | | |
| நாட்டிற்கு உலக வங்கியின் விஜயம் | | | | | | | | | | | | | | | |

செயற்பாட்டு திட்டம்

யார் என்ன செய்வார்கள், எப்போது செய்வார்கள் என்பது தொடர்பில் பிரயோக ரீதியான அட்டவணை ஒன்றை தற்போது நீங்கள் தயாரிக்க வேண்டும். உங்களுடைய சுயமான கருவிகளை நீங்கள் பயன்படுத்தலாம். ஆனால், எளிமையான சுருக்கம் பின்வருமாறு அமைய வேண்டும்: (பின்வரும் உதாரணமானது, மேலே குறிப்பிட்ட கால அட்டவணையிலும் பார்க்க வேறுபட்ட பரப்புரை முயற்சிக்கானது என்பதனை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்).

***உதாரணம்***

**உள்ளடக்க கல்வி**

**இலக்கு:** சூடானில் உள்ள அனைத்து சிறுவர்களும், விசேடமாக ஆயுத முரண்பாட்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தரமான கல்வி சந்தர்ப்பங்களுக்கு சமமான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுப்பதற்கு, சிறுவர்கள் தமது உரிமைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படுவதனை உறுதி செய்வதற்கான கற்பித்தல் மற்றும் பாதுகாப்பை வழங்குதல்.

**குறிக்கோள்:** 2010ஆம் ஆண்டளவில், சிறுவர்களின் இனம், பால், நிதியின்மை, மற்றும் அல்லது அவர்களது உடலியல் தன்மை, புலனுணர்வு அல்லது உணர்வு நிலைகள் என்பவற்றை பாராது அனைத்து சிறுவர்களுக்கு கல்வி வசதி கிடைப்பதனை உறுதி செய்யக் கூடிய கல்விக் கொள்கையை கல்வி அமைச்சின் ஊடாக வெளிக் கொணரல்.

| விளைவு | நடவடிக்கைகள் | எப்போது | யாரால் முன்னெடுக்கப்படும் | தேவையான வளங்கள் எவை |
|---|---|---|---|---|
| மையப் புள்ளி அடையாளங் காணப்பட்டுள்ளது- டேவிட் ஒனுன்டா | செயலமர்வு | | | |
| செயற்பாட்டு திட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளது. | பின்னூட்டத்திற்காக அனைவருக்கு ஆவணத்தை விநியோகித்து, இறுதி ஆவணத்தை தயாரித்தல். | 2007, மே 30 | டேவிட் | ஊழியர் நேரம் |
| பிரதான செய்திகள் இறுதி செய்யப்பட்டுள்ளது | பிரதான செய்திகளை ஆவணப்படுத்தல். ஒரு வார கால எல்லையில் பின்னூட்டத்துக்காக அனுப்பி வைத்தல். இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட செய்திகளை தயாரித்தல். | ஜுன் 07 | அட்-டேடிரி சாலிய | ஊழியர் நேரம் |
| உள்ளடக்க கல்வியின் (மற்றும் விசேடக கல்வி தொடர்பான தகவல்களை சேகரிக்கவும்) விசேடக் கல்விக்கான (மற்றும் வேறு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள்) பணிப்பாளர் நாயகம் | தற்போதைய அரசாங்க திட்டங்கள், கிடைக்கக் கூடிய வளங்கள், ஆதரவளிக்கக் கூடிய தொடர்புகள் தொடர்பில் விசேட கல்விக்கான பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து, உள்ளடக்கக் கல்விக்கு ஆதரவளிக்க அவரைத் தூண்டுதல் | ஜுன் | KHT சாரா, அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த மாநில பிரதிநிதிகள் | பணிப்பாளர் நாயகத்துக்காக வளங்களை வழங்கவும், ஊழியர் நேரம் போக்குவரத்து |
| அனுமதி பிராசரத்தில் எழுப்பப்பட்ட உள்ளடக்கக் கல்வி விழிப்புணர்ச்சி | பாரம்பரிய பேச்சாளர்கள், பாடல்கள் மற்றும் நாடகம் ஊடாக உள்ளடக்கக் கல்வி குறித்த தகவல்களை அனைவருக்கும் வழங்கல் | ஜுன் | அனைவரும் | யுனிசெப் வளங்களை வழங்கும் |
| பரப்புரை கண்காணிப்பு கருவியாக லிஸ்ட்சேர்வ் முறை | உள்ளடக்கக் கல்வி லிஸ்ட்சேர்வ் பின்னூட்டங்களை தயாரித்தல் | ஜுன் - ஜுலை | டேவிட்டும், அனைவரும் | தகவல் தொழில் நுட்பம் ஊழியர் நேரம் |
| சிறுவர் ஒலிபரப்பு தினத்தில் உள்ளடக்க கல்வி பிரசாரப்படுத்தல் | ஒலிபரப்பு செய்வதற்கான, செயலமர்வு நடத்துவதற்கான சிறுவர்களை அடையாளங் கண்டு, உள்ளடக்கக் கல்வியை மேம்படுத்துவதற்கான செயலமர்வை நடத்தல் | செப்ரம்பர் | அனைவரும் | யுனிசெப் அல்லது சேவ் த சில்ரன் ஊழியர் நேரம் |
| சூடானின் முக்கியமாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. | தேசிய கல்வி பிரதிநிதித்துவ மதிப்பீடுகளில் உள்ளடக்கக் கல்வி கேள்விகள் மற்றும் சம்பந்தப்பட்ட அடிப்படைகள் உள்ளமையை உறுதி செய்தல், | முன்னெடுக்கப்பட்டு வருகின்றது | அனைவரும் | யுனிசெப் அல்லது சேவ் த சில்ரன் ஊழியர் நேரம் |
| உள்ளடக்கக் கல்வி தொடர்பில் பங்குதாரர்கள் பயிற்றப்பட்டுள்ளனர் மற்றும் சூடானில் உள்ளடக்கக் கல்விக்கு ஆதரவு வழங்குவதற்கு தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | உள்ளடக்கக் கல்வி தொடர்பில் பயிற்சி வழங்குவதற்கான பங்குதாரர்களை அடையாளங் கண்டு, தொடர்பு கொள்ளல். பிராந்தியங்களில் உள்ளடக்கக் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கு ஒழுங்கு செய்யவும். பயிற்சிக்கான தரவுகள் தயாரிக்கப்பட்டு, கிடைக்கக் கூடியதாக உள்ளதாக உறுதி செய்யவும். | முன்னெடுக்கப்பட்டு வருகின்றது | அனைவரும் | யுனிசெப் அல்லது சேவ் த சில்ரன் ஊழியர் நேரம் போக்குவரத்து பயிற்சி சாதனங்கள் |
| சூடானில் வெற்றிகரமான செய்திகள் சேரிக்கப்பட்டு பரவலாக விநியோகிக்கப்பட்டுள்ளன. | தமது கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்த மக்களின் அல்லது உள்ளடக்க சுற்றாடலில் சிக்கியுள்ள மக்களின்சம்பவ கற்கைகளை அடையாளங் காணல், அவர்களை நேர்காணல் செய்து, அவர்களுடைய புகைப்படத்துடன் அறிக்கையிடுங்கள். | முன்னெடுக்கப்பட்டு வருகின்றது | அனைவரும் | வெற்றிகரமான சம்பவங்களை பெற்று தொகுப்பதற்கு தொடர்பாடல் உதவி ஊழியர் நேரம் |
| உள்ளடக்கக் கல்வி சார்ந்த நிறுவனங்கள் தொடர்பு கொள்ளப்பட்டன மற்றும் உள்ளடக்கக் கல்விக்கு ஆதரவு வழங்க ஒன்று திரட்டப்பட்டன | உள்ளடக்கக் கல்வி குறித்த தகவல்களை பகிர்வதற்கு நிறுவனம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தை அடையாளங் கண்டு, அவற்றை சந்திக்கவும். | ஜுன் | | ஊழியர் நேரம் போக்குவரத்து தொடர்பாடல் சாதனம் |

செயன்முறைப் படிவம்

## 8.1 செயற்பாட்டு திட்டம்

| நாங்கள் செய்ய வேண்டியது என்ன? | | எப்போது? | யார் அதனைச் செய்வார்? | தேவையான வளங்கள் எவை? |
|---|---|---|---|---|
| விளைவுகள் | நடவடிக்கைகள் | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் பரப்புரை

9.1 பரப்புரையை கண்காணிப்பதற்கான பிரயோக ரீதியான வழிமுறைகள்
9.2 பரப்புரையின் விளைவுகளை மதிப்பீடு செய்தல்



அத்தியாயம் 9

# அறிமுகம்

பரப்புரை மற்றும் எதிர்பாராமை என்பன ஒன்றிணைந்தே இருக்கும். எதிர்பாராத விடயங்கள் இடம்பெறலாம். அவ்வாறான சூழ்நிலைகளில், உங்களுடைய குறிக்கோள்களை அடைவதற்கான பயணத்தின் எந்தவொரு நிலையிலும் நீங்கள் எங்கு செல்கின்றீர்கள் மற்றும் தற்போது எங்கு இருக்கின்றீகள் என்பதனை உறுதி செய்வதன் ஊடாக நீங்கள் தயாராக இருக்க வேண்டிய தேவை உள்ளது. அப்போது நீங்கள் வெற்றிகளை கொண்டாடலாம். அத்துடன், இவ்வாறான பின்னடைவு ஏற்படும் மற்றையவருக்கும் உதவலாம்.

**கண்காணித்தல்**
பரப்புரையானது எதிர்பார்க்க முடியாததாக இருப்பதனால், நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள முடிவதுடன், எந்தவொரு புதிய அபிவிருத்திக்கும் பதிலளிக்கக் கூடிய தன்மையை உறுதி செய்வதற்கு நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதனை தொடர்ச்சியாக கண்காணிப்பு செய்வது மிகவும் முக்கியமானதாகும். பகுதியளவிலான வெற்றிகளை எப்போது தொகுப்பது மற்றும் குறிப்பிட்ட உத்தியானது பயனளிக்கவில்லை என்பதை எப்போது கண்டறிவது என்பது தொடர்பில் நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம். நண்பர்கள் மற்றும் குழு உறுப்பினர்களுடனான உறவை கட்டியெழுப்பல் மற்றும் வலுப்படுத்தலுக்கு தொடர்ச்சியான கூட்டங்கள் மற்றும் பின்னூட்டங்கள் வாயிலான கண்காணிப்பு உதவும். அத்துடன், நீங்கள் அனைவரும் அத்தியாவசியமான தகவல்களை பகிருகின்றீர்களா என்பதனை உறுதி செய்யவும் அது உதவும். கண்காணிப்பானது ஆவணங்களை உங்களுக்கு வழங்கும். உங்களுடைய பரப்புரை மூலோபாயத்தை மதிப்பீடு செய்வதற்கு, அது உங்களுக்கு உதவும்.

பரப்புரை செயற்பாட்டை கண்காணிப்பு செய்வதைப் போன்றே, உங்களுடைய நீண்ட கால இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பில் நீங்கள் தொடர்ச்சியாக உங்களுடைய செயற்பாட்டை மதிப்பீடு செய்தல் வேண்டும். எவ்வாறு முன்னோக்கிச் செல்வது என்பது தொடர்பில் சாதகமான தீர்மானங்களை மேற்கொள்கின்றீர்கள் என்பதனை உறுதி செய்வதற்கு இந்த நடவடிக்கை உதவுகின்றது.

உங்களுடைய நாளாந்த பரப்புரை நடவடிக்கைகளை எவ்வாறு கண்காணிப்பு செய்வது, உங்களுடைய செயற்பாட்டை எவ்வாறு பின்தொடர்வது, மற்றும் உங்களுடைய பரப்புரை பணியின் விளைவுகளை எவ்வாறு மதிப்பீடு செய்வது என்பதனை இந்த அத்தியாயம் ஆராய்கின்றது. உங்களுடைய பரப்புரை குறிக்கோள்களின் அடிப்படையில் நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள் என்பது குறித்து கட்டமைப்பை கண்காணித்தல் வரைபு அமைப்பானது உங்களுக்கு வழங்கும்.

**மதிப்பீடு செய்தல்**
நீண்ட காலத்தின் பின்னர் உங்களுடைய பரப்புரை பணியின் விளைவுகளில் மதிப்பீடு செய்தலானது சுயாதீனமான கண்ணோட்டத்தை கொண்டுள்ளது. கொள்கை மாற்ற குறிக்கோள்களை அடைதல் மற்றும் சிவில் சமூகத்தின் இயலுமையை அதிகரித்தல் அல்லது தீர்மானம் எடுத்தலில் சிறுவர்கள் பங்குபற்றலுக்கான புதிய வழிகளை வழங்கல் போன்ற மாற்றத்தின் வேறு பகுதிகள் என்பதன் அடிப்படையில் விளைவுகளில் அது கவனஞ் செலுத்துகின்றது. மதிப்பீடு செய்வதன் மூலம் கண்டறியப்படும் விடயங்கள் குறிப்பிட்ட கொள்கை மாற்றத்தை அடைவதற்கு வேறுபட்ட உத்திகளை முன்மொழிவதன் மூலம் அல்லது உங்களுடைய அணுகுமுறைகளை நீங்கள் எவ்வாறு மேம்படுத்த முடியும் என பகுப்பாய்வு செய்வதன் மூலம் உங்களுடைய பரப்புரையை மேம்படுத்துவதற்கு உங்களுக்கு உதவி புரியும்.

## உலக வங்கியின் ஊட்டச் சத்து கொள்கையில் செல்வாக்கு செலுத்தல்

**பின்புலம்**

உலக வங்கியின் ஊட்டச் சத்து கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதற்கான பாரிய பரப்புரை முயற்சியை 2005ஆம் ஆண்டு சேவ் த சில்ரன் முன்னெடுத்திருந்தது. உலக வங்கியின் பிரசாரப்படுத்தப்பட்ட ஊட்டச் சத்து மாதிரி பயனுறுதி அற்றது எனவும், அது மாற்றி அமைக்கப்பட வேண்டும் எனவும் காட்டுவதற்காக பங்களாதேஷ், உகண்டா மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளின் ஊட்டச் சத்து செயற்றிட்டங்களில் இருந்து லண்டன் அலுவலகத்தைச் சேர்ந்த ஊட்டச் சத்து ஆலோசகர்கள் ஆதாரங்களை சேகரித்தனர். உலக அளவில் உலக வங்கியின் ஊட்டச் சத்து கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதற்கும், கவனஞ் செலுத்தப்பட்டுள்ள நாடுகளின் ஊட்டச் சத்து நிகழ்ச்சிகளில் செல்வாக்கு செலுத்துவதற்கும் இந்த ஆதாரம் பயன்படுத்தப்பட்டது. இதன் அர்த்தம் ஒவ்வொரு நாட்டிலும் பரப்புரை பணியானது கண்காணிக்கப்படல் வேண்டும் என்பதாகும். அத்துடன், இலண்டன், பங்களாதேஷ், உகண்டா மற்றும் எத்தியோப்பியா ஆகியவற்றுக்கு இடையில் ஒருங்கிணைக்கப்பட்டது என்பதாகும்.

**கண்காணித்தல்**

கண்காணிப்பு பணிகள் வேறுபட்ட நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அனைத்து வேறுபட்ட மட்டங்களிலம் பரப்புரை பணிகளை கண்காணிப்பதற்கு மற்றும் ஒருங்கிணைப்பதற்கு பகுதி நேர பதவி நிலை ஒன்று லண்டனில் நிறுவப்பட்டது. நாங்கள் இதனை பின்வருமாறு முன்னெடுத்தோம்:

- யார் என்ன, எங்கே மற்றும் எப்போது செய்கின்றார்கள் என்பது தொடர்பில் எளிமையான பதிவிடல்.
- வேறுபட்ட நாடுகளில், வேறுபட்ட பரப்புரை நடவடிக்கைகளின் செயற்பாடு மற்றும் விளைவுகள் தொடர்பில் தொடர்ச்சியாக புதிய தகவல்களை சேர்த்தல் மற்றும் விநியோகித்தல்.
- சேவ் த சில்ரன் ஊழியர்கள் மற்றும் வேறுபட்ட பரப்புரை இலக்குக் குழுக்களும் மற்றும் நண்பர்களுக்கு இடையிலான உறவின் புதிய நிலை தொடர்பில் அனைவருக்கும் தகவல் தெரிவிப்பதற்கும், கூட்டங்கள் தொடர்பில் அறிக்கை வெளியிடுவதற்கும், கூட்டங்கள் முறையாக நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதற்கும் எளிமையான வடிவத்தை பின்பற்றல்.
- பரப்புரை விடயம் தொடர்பில் கேள்விகளின் பட்டியல் மற்றும் அது சம்பந்தப்பட்ட பதில்களை ஒன்று சேர்த்தல்.

கண்காணிப்பு உறவு முறையும் மிகவும் முக்கியமானது ஆகும். வேறுபட்ட சேவ் த சில்ரன் ஊழியர்கள் உலக வங்கி ஊழியர்களை பல்வேறு மட்டங்களில் சந்திக்கின்றனர். யார் என்ன தெரிவித்தனர், யார் மிகுந்த நட்புறவுடன் உள்ளனர், எதிரிகள் யார், எங்களுடைய செய்திகளின் விளைவாக எவருடைய நடத்தைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது, மற்றும் வேறு விடயங்கள் குறித்த புதிய அபிவிருத்தி தொடர்பில் அனைவரும் அறிந்து வைத்திருப்பது மிகவும் முக்கியமானது ஆகும்.

கொள்கை வகுப்பவர்கள் தமது அணுகுமுறையை மாற்றக் கூடியதாக எமது ஆதாரங்களை பயன்படுத்தும் முயற்சியில் இருந்து பரப்புரை நடவடிக்கை ஆரம்பிக்கின்றது. இந்த செயற்பாடு பயன் தராத சந்தர்ப்பங்களில், உலக வங்கி மற்றும் தேசிய அரசாங்கங்களின் உறுதியான நடவடிக்கையை எடுப்பதற்கு ஊக்குவிக்கும் மேலும் பாதுகாப்பான அணுகுமுறை உள்வாங்கப்படும். விடயம் தொடர்பில் வேறுபட்ட எண்ணக்கருக்களை கொண்டுள்ள கூட்டமைப்பின் வேறு உறுப்பினர்களுக்கு இடையில் இது பிரசித்தம் அடையாததாக உள்ளது. நாங்கள் என்ன சொல்கின்றோம், ஏன் சொல்கின்றோம் மற்றும் வேறுபட்ட மக்கள் எவ்வாறு அதற்கு பதிலளிக்கின்றனர் என்பது தொடர்பில் உண்மையான நிலைவரங்களை அனைவருக்கும் அறியச் செய்வது மிகவும் முக்கியமானதாகும். வேறுபட்ட சந்தர்ப்பங்களில் நாடுகளின் அக்கறைகளை கருத்திக் கொண்டதாக எங்களுடைய ஆய்வு உலக ஊட்டச் சத்து கூட்டத்தில் வெளியிடப்பட்டது. எனவே, உலக அளவிலும் மற்றும் தேசிய அளவிலும் கண்காணிப்பு செய்வது, ஊடகங்கள் செய்தியை கொண்டு செல்வதனை கண்காணிப்பது மற்றும் எங்கள் நிலைக்கு ஆதரவு வெளிப்பாட்டை வலுப்படுத்தல் மூலம் நேர்நிலையான பெறுபேறுகள் தொடர்பில் சாதகத் தன்மையை நாங்கள் பயன்படுத்திக் கொள்வதனை உறுதி செய்வது என்பன மிகவும் முக்கியமானது ஆகும்.

**மதிப்பீடு செய்தல்**

2006ஆம் ஆண்டில், கண்காணிப்பு முறையிலிருந்து ஆவணப்படுத்தல் மற்றும் பிரதான தகவல் தருநர்களுடனான நேர்காணல்கள் என்பவற்றின் அடிப்படையில் எங்களுடைய பரப்புரையின் விளைவுகள் தொடர்பில் சுயாதீனமான மதிப்பீடு செய்தல் ஒன்று நடைபெற்றது. மாற்றத்தை கொண்டு வருவதற்கு தனித்து ஆதாரத்தில் மாத்திரம் தங்கியிராது, உறவு முறையை கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை அந்த மதிப்பீடு எமக்கு சுட்டிக்காட்டியது.

**நாங்கள் கற்றது**

சர்வதேச ஊட்டச் சத்து சமூகத்திற்கு இந்த விடயத்தை வெளிப்படுத்தியதன் மூலம் நாம் பெற்ற வெற்றியை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது தொடர்பிலான ஆலோசனைகளை மதிப்பீடு முன்வைத்தது. எதிர்காலத்தில் உலக வங்கியின் கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதற்கு, வெளியிலிருந்து விளம்பரஞ் சார்ந்த அணுகுமுறையை கடைப்பிடிப்பதிலும் பார்க்க, உள்ளக ரீதியாக உறவு முறையை கட்டியெழுப்பல் பயனுறுதி மிக்க அணுகுமுறையாக இருக்கும் எனவும் மதிப்பீடு ஆலோசனை வழங்கியிருந்தது.

## 9.1 பரப்புரையை கண்காணிப்பு செய்வதற்கான பிரயோக ரீதியான வழிமுறைகள்

குறிப்பிட்ட விடயம் தொடர்பில் உருவாகக் கூடிய பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை அடையாளங் கண்டு அதனை துரிதமாக இல்லாது செய்வதே கண்காணிப்பு செய்தலின் நோக்கமாகும். வெளியக சூழ்நிலை தொடர்பிலான மாற்றங்களில் உடனடியாக பதிலளித்து மற்றும் அதற்கு ஏற்ற வகையில் உங்களுடைய திட்டத்தை மாற்றியமைப்பதற்கும் அது உதவுகின்றது. உங்களுடைய பரப்புரை மூலோபாயத்தை மதிப்பீடு செய்வதற்கு செயன்முறைகளை ஆவணப்படுத்தல் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

*நினைவு கொள்ளுங்கள்*

எந்த சந்தர்ப்பத்தில் கண்காணித்தல் உதவியாக இருக்கும்:[17]

- செயன்முறையின் ஊடாக உருவாக்கப்பட்ட தகவல்கள் பயனுடையதாகவும், பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.
- வலுப்படுத்தலுக்கு அது உதவி புரிவதுடன், ஒருங்கிணைந்த நடவடிக்கைக்கும் பயன்படுகின்றது.
- இதற்கு அதிகளவிலான நேரம் செலவாகாது.

பரப்புரையில் நாங்கள் பின்வரும் விடயங்களை கண்காணிப்போம்:

1. நாங்கள் திட்டமிட்ட நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள்.
2. எங்கள் நடவடிக்கைகளின் விளைவாக நாங்கள் அடைவதற்கு எதிர்பார்த்துள்ள மாற்றங்கள்- மக்கள் வாழ்க்கையில், அவர்களது உரிமையில் மற்றும் சக்தி கட்டமைப்புக்கள் மற்றும் உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள்,
3. பாதிக்கப்பட்டவர்களை வலுப்படுத்தல் மற்றும் அவர்கள் வெற்றிகரமாக கட்டியெழுப்பும் கூட்டமைப்புக்கள்
4. நாங்கள் பயன்படுத்திய மூலோபாயங்கள் மற்றும் உத்திகளின் எதிர்பாராத விளைவுகள்.
5. இதன் ஒரு கட்டமாக, நாங்கள் பரப்புரையை மேற்கொண்ட சூழ்நிலையில் எவ்வாறு மாற்றம் ஏற்படுகின்றது என்பதனை நாங்கள் கண்காணிப்போம்.
6. நாங்கள் முதலீடு செய்த வளங்கள்: நேரம், சக்தி, பணம்

உங்களுடைய பரப்புரை நடவடிக்கைகளை ஆவணப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு செய்வதற்கு நீங்கள் பயன்படுத்தக் கூடிய சில கருவிகள் கீழே தரப்பட்டுள்ளன (மேலதிக தகவல்களுக்கு 2007ஆம் ஆண்டின், ஐக்கிய இராச்சிய சேவ் த சில்ரன், பரப்புரை கருவித்தொகுதியை பார்க்கவும்).

**கண்காணித்தல் வரைபு அமைப்பு**

யார் எதனை கற்க வேண்டும், பரப்புரை திட்டமிடலில் கற்றலை நேரடியாக எவ்வாறு உட்செலுத்துவீர்கள் என்பவற்றை தெளிவுபடுத்திக் கொள்வதற்கு கண்காணித்தல் வரைபு அமைப்பு உங்களுக்கு உதவி புரியும். உங்களுடைய நடவடிக்கைகள் எவை என்பது தொடர்பில் நீங்கள் அறிந்து கொள்ளும் போது மற்றும் அதனை தலைமை தாங்குவதற்கு யார் பொறுப்பானவர்கள் என்பது தொடர்பில் உங்களுடைய செயற்பாடு திட்டத்தை நீங்கள் தயாரிக்கும் போதே, உங்களுடைய கண்காணித்தல் வரைபு அமைப்பையும் நீங்கள் தயாரிக்க வேண்டும். நீங்கள் உங்களுடைய பரப்புரையை முன்னெடுக்கும் போது மற்றும் திட்டங்களை தயாரிக்கும் போதும் கண்காணித்தல் வரைபு அமைப்பை நீங்கள் திருத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**கவனஞ் செலுத்த வேண்டிய கேள்விகள்:**

- யார் எதனை செய்ய வேண்டும்?
- உங்களுடைய பரப்புரை தொடர்பில் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்ன?
- நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்ன என்பது தொடர்பில் நீங்கள் எவ்வாறு கண்டறிந்து கொள்வீர்கள்?
- கண்காணித்தல் எப்போது முன்னெடுக்கப்படும்?
- கண்காணித்தலை முன்னெடுக்கப் போகின்றவர் யார்?

---

[17] Adapted from: ActionAid International, *Critical Webs Of Power And Change*, 2005

## பரப்புரை செயன்முறையை கண்காணித்தல்

| நீங்கள் கண்காணிப்பது என்ன? உதாரணமாக | அது எவ்வாறு முன்னெடுக்கப்படும்? உதாரணமாக | அது எப்போது முன்னெடுக்கப்படும்? | யார் அதனை முன்னெடுப்பார்? யர் அதனை பதிவு செய்வார் | அவற்றின் விளைவாக நீங்கள் எவ்வாறான நடவடிக்கை எடுப்பீர்கள்? |
|---|---|---|---|---|
| **உள்ளக:** நிறுவனம் எத்தனை சிறப்பாக செயற்படுகின்றது? குழுச் செயற்பாடு, தொடர்பாடல் மற்றும் இன்னபிற என்பவற்றில் உள்ள பிரச்சினைகளை அடையாளங் கண்டு சமாளிக்கவும் | • உருவாகக் கூடிய பிரச்சினைகளை அடையாளங் காணபதற்கு தொடர்ச்சியான சந்திப்புக்கள் | மாதாந்தம்? | ஒருங்கிணைப்பாளர் | தனிப்பட்ட செயற்பாடு திட்டத்தை திருத்தவும் ஒன்றாக இணைந்து பணிபுரிவதை திருத்தவும் |
| **வெளியகம்:** எவ்வாறான வேறுபட்ட பரப்புரை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன, வெளியக சூழ்நிலையில் என்ன மாற்றங்கள், எவ்வாறான சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன? இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்கள் தொடர்பில் நீங்கள் அறிந்து கொண்டது என்ன? | • தொடர்ச்சியான சந்திப்புக்கள்<br>• செயற்பாடு நடவடிக்கையை புதுப்பித்தல்<br>• நிகழ்வுகளின் பதிவு செய்தலை பராமரித்தல்<br>• ஒரு வழியானவர்களின் பதிவுகளை பகிர்தல்<br>• சந்திப்புக்கள் இன்னபிறவற்றின் ஆவணப்படுத்தல் | வாராந்தம்?<br>வாராந்தம்? | ஒருங்கிணைப்பாளர் | இலக்குக் குழுக்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் தொடர்பிலான புதிய தகவல்களை பகிர்ந்து, புதுப்பிக்கவும் செய்திகளை புதுப்பிக்கவும் உத்திகள் மற்றும் செயற்பாட்டு திட்டத்தை புதுப்பிக்கவும் |
| **ஏனையோருடன் பணிபுரிதல்:** கூட்டணிகளுடன் பணிபுரிதல் அல்லது ஏனையோருடன் இயலுமையை கட்டியெழுப்பலில் என்ன விடயங்கள் தோன்றுகின்றன? | • தொடர்ச்சியான சந்திப்புக்கள்<br>• கூட்டணி சந்திப்புக்களின் ஆவணப்படுத்தல் | வாராந்தம்? | ஒருங்கிணைப்பாளர் | ஏனையோருடன் பணிபுரிவதற்கான உத்திகளை புதுப்பிக்கவும் நீங்கள் இணைந்து பணிபுரியும் கூட்மைப்புக்கள் மற்றும் எவ்வாறு பணிபுரிகின்றீர்கள் என்பது தொடர்பில் அட்டவணையை புதுப்பிக்கவும் |
| **குறிக்கோள்களை எட்டுவதனை நோக்கிய செயன்முறை** | • மைல்கல்லை நோக்கிய செயன்முறையை மதிப்பீடு செய்யும் தொடர்ச்சியான சந்திப்புக்கள்<br>• பிரதான தகவல் தருநர்களுடன் பருவகால நேர்காணல்கள் | மாதம் ஒன்றிற்கு 3 இலிருந்து 6? | ஒருங்கிணைப்பாளர் | உத்திகள் பலன் அளிக்காவிடின் அவற்றை புதுப்பிக்கவும் செயற்பாட்டு திட்டத்தை புதுப்பிக்கவும் |

### கூட்டங்களை ஆவணப்படுத்துவதற்கான வடிவம்

தலைப்புக்களுடன் எளிமையான சொற்களில் தயாரிக்கப்பட்ட கூட்டங்களின் ஆவணப்படுத்தல்: (கூட்டத்தின் தலைப்பு, இடம், திகதி மற்றும் நேரம், பங்குபற்றுபவர்கள் யார், கூட்டத்திற்கான உங்களுடைய குறிக்கோள், அந்த குறிக்கோள்கள் சார்ந்த என்ன நடைபெற்றுள்ளது, இலக்குக் குழுக்கள் நடத்தைகள் என்பதன் அடிப்படையில் என்ன நடைபெற்றுள்து, பொதுவான கருத்துக்கள், மற்றும் பின்தொடரும் நடவடிக்கை).

### நடவடிக்கைகளின் பதிவு

தலைமையகம் மற்றும் செயற்றிட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர்களுக்காக சர்வதேச மற்றும் தேசிய அளவில் பரப்புரை மூலோபாயத்துடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் குறித்த எளியைமான வடிவில் கால அட்டவணை மற்றும் பதிவு. எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சிகளின் நாள் பதிவேடு மற்றும் நடைபெற்ற விடயங்களின் பதிவு ஆகிய இரண்டு வகையிலும் இது பயன்படுத்தப்படலாம்.

### நடவடிக்கைகள் மற்றும் அடைந்த இலக்குகள் தொடர்பில் பகிரப்பட்ட குறிப்பு

பரப்புரை செயற்றிட்டம் சம்பந்தப்பட்டதாக நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை கண்காணிப்பு செய்வதற்கான எளிமையான முறையாக இது காணப்படுகின்றது. பரப்புரையில் ஈடுபட்டுள்ள அனைவரும் தமது நடவடிக்கைகளை, அபிவிருத்திகளை அல்லது வெற்றிகளை குறிப்பிடக் கூடிய, பகிரப்படக் கூடிய வகையில் ஒன்றை Word document தயாரிக்கவும்.

செயன்முறைப் படிவம்

## 9.1 பரப்புரை செயன்முறையை கண்காணித்தல்

| நீங்கள் கண்காணிப்பது என்ன? | அது எவ்வாறு நடைபெற வேண்டும்? | அது எப்போது நடைபெற வேண்டும்? | யார் அதனை முன்னெடுப்பார்? யார் அதனை பதிவு செய்வார்? |
|---|---|---|---|
| உள்ளக | | | |
| வெளியக | | | |
| ஏனையோருடன் பணிபுரிதல் | | | |
| குறிக்கோளை அடைவதனை நோக்கிய செயன்முறை | | | |

**சில கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் பதங்கள் விளக்கப்பட்டுள்ளன**

நீங்கள் செய்வது என்ன, மற்றும் நீங்கள் செய்வதன் விளைவாக என்ன நடக்கின்றது என்பவற்றிற்கு இடையிலான பேதத்தை பிரித்து காட்டுவதற்கு பின்வரும் பதங்கள் பொதுவாக கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலில் பயன்படுத்தப்படுகின்றன. உங்களுடைய நாளாந்த நடவடிக்கை தொடர்பில் பதிவொன்றை வைத்துக் கொள்வதற்கு மற்றும் உங்களுடைய குறிக்கோள்களை அடைவதனை நோக்கிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்பதனை உறுதி செய்வதற்கும் அவை உதவுகின்றன. ஒவ்வொரு நிலைக்கும் வேறுபட்ட குறிகாட்டிகளை பயன்படுத்தி, வேறுபட்ட விடயங்களை நீங்கள் அளவிட வேண்டிய தேவை உள்ளது.

**நடவடிக்கைகள்:** நீங்கள் உண்மையாக செய்வது.

**நடவடிக்கைகளுக்கான உதாரணம்:** பங்குபற்றுதல் கற்பித்தல் நுணுக்க பயிற்சி நிகழ்ச்சியை முன்னெடுப்பதற்கு மற்றும் வடிவமைப்பதற்கு யுனான் மாகாணத்தில் உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்.

**வெளியீடுகள்:** உங்களுடைய பங்களிப்பின் நேரடி பெறுபேறு, செயற்றிட்ட நடவடிக்கைகளின் இறுதியில் விநியோகிக்கப்பட்ட உறுதியான உற்பத்திகள்

**வெளியீடுகளை அளவிடுவதற்கு:** எவ்வளவு பணிகள் நடைபெற்றுள்ளன என்பது தொடர்பில் நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தலை பார்த்தல்: எவ்வாறான முயற்சி பிரயோகிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு குறிகாட்டிகளின் உதாரணம்:** ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை, செயலமர்வை திட்டமிடுதல் மற்றும் நடத்துவதில் ஈடுபட்டுள்ள உள்ளூர் அதிகாரிகள்

**விளைவுகள்:** உங்களுடைய நடவடிக்கைகளின் நேரடி பெறுபேறாக வெளிவரும் உங்களுடைய பரப்புரை குறிக்கோள்களுடன் சம்பந்தப்பட்டதாக உடனடியான மற்றும் பார்க்கக் கூடிய மாற்றங்கள்.

**விளைவுகளை அளவிடுவதற்கு:** ஆரம்ப சூழ்நிலையில் பரப்புரை உருவாக்கிய உடனடி விளைவை பார்க்கவும். முயற்சியின் விளைவாக ஏற்பட்டது என்ன, மாற்றப்பட்டது என்ன?

**விளைவு குறிகாட்டிகள் உதாரணம்:** கற்கை முறைகள் மற்றும் நுணுக்கங்களை பயன்படுத்தும் பயிற்றப்பட்டவர்களின் வீதம். இந்த அணுகுமுறை பயன்படுகின்றது என்ற நம்பி மாற்றமடைந்த உள்ளூர் அதிகாரிகள் மற்றும் மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கம்.

**தாக்கம்:** சிறுவர்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் நீண்ட கால மற்றும் நிரந்தரமான மாற்றங்கள். தாக்கமானது உங்களுடைய இடையீட்டின் விசேடமான குறிக்கோள்கள் சம்பந்தப்பட்டதாகவும் அல்லது எதிர்பாராத மாற்றங்கள் சார்ந்ததாகவும் இருக்கும் (நீங்கள் இலக்கு வைக்காத மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய). தாக்கமானது நேர்நிலையானதாக அல்லது எதிர்மறையானதாக இருக்கலாம். ஆனால் இரண்டும் சம அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

**தாக்கத்தை அளவிடுவதற்கு:** பரப்புரையின் பெறுபேறாக ஏற்பட்டுள்ள நீண்ட கால மாற்றம் மற்றும் உண்மையான நிலையில் இருந்து மாற்றம் என்பன குறித்து கவனஞ் செலுத்தவும்.

**தாக்க குறிகாட்டிகளின் உதாரணம்:** நாடு முழுவதிலும் இந்த முறைமை பிரதிபலித்துள்ளது: பாடசாலையில் உள்ள சிறுவர்களின் செயன்திறனை முன்னேற்றியுள்ளது.

**ஆனால் பரப்புரை என்பது நீண்ட காலத்திற்குரியதாக மற்றும் சிக்கலானதாக உள்ளது.**

பரப்புரை என்பது பொதுவாக நீண்ட காலத்திற்குரியதாக மற்றும் சிக்கலான நடைமுறையாக உள்ளது. நீண்ட கால மாற்ற குறிக்கோள்களை கொண்டு வருவதற்கு பல மாற்றங்களை உள்ளடக்கியதாக அது காணப்படுகின்றது. எனவே வழமையாக குறுகிய கால விளைவுகள், இடைநிலை விளைவுகள் மற்றும் நீண்ட கால விளைவுகள் அல்லது தாக்கம் தொடர்பில் சிந்திப்பது பயனுடையதாக இருக்கும். உங்களுடைய இலக்கை நோக்கிச் செல்வதற்கான வழியில் ஒரு படி நிலையாக இருப்பதனால், இடை நிலை விளைவுகள் சில சந்தர்ப்பங்களில் மைல்கற்களாக கருதப்படுகின்றன.

பதப் பிரயோகங்கள் சில சந்தர்ப்பங்களில் சிக்கலானதாக இருக்கலாம். அது குறித்து அதிகம் சிந்திக்க வேண்டாம். உங்களுடைய குறிக்கோள்களை அடைவதற்கான, இறுதியாக இலக்கை அடைவதற்கான உங்களுடைய பயணத்தில் நீங்கள் கண்காணிப்பு செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் முயற்சிக்கின்றீர்கள் என்பதனை நினைவில் வைத்திருக்க வேண்டியது முக்கியமாகும்.

## 9.2 பரப்புரையின் விளைவுகளை மதிப்பீடு செய்தல்.

உங்களுடைய பரப்புரை மூலோபாயத்தின் நாளாந்த நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்வதனைப் போல், உங்களுடைய குறிக்கோள்களை நோக்கிய உங்களின் செயற்பாடு தொடர்பிலான கண்காணிப்பையும் நீங்கள் முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது.

நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றங்களை கொண்டு வருவதற்கு உங்களுடைய பரப்புரை எவ்வாறு பயனுறுதி மிக்கதாக இருக்கின்றது, அத்துடன், திட்டமிடாத மாற்றங்கள் மற்றும் உங்களுடைய எதிர்கால பரப்புரை செயன்முறையிலிருந்து நாங்கள் கற்கக் கூடியது என்ன என்பன தொடர்பில் என்பதனை கணிப்பதே மதிப்பீடு செய்வதன் நோக்கமாகும்.

உங்களுடைய தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு பல வழிகள் உள்ளன. நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்ன, யாருக்கு இதனை அறிந்து கொள்ள வேண்டும், எவ்வளவு முயற்சி தேவைப்படும் மற்றும் கிடைக்கக் கூடியதாக இருக்கின்ற வளங்கள் என்பதன் அடிப்படையிலேயே சிறந்த முறை பயன்படுத்தப்படும். நீங்கள் சுயாதீனமான வெளியக மதிப்பீட்டை முன்னெடுக்கலாம் அல்லது அது உள்ளக செயன்முறையாகவும் இருக்கலாம். மதிப்பீடு செய்தல் என்பது கற்றல் என்பதனையும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளவும். நீங்கள் கற்றுக் கொள்ளும் விடயம், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் மாற்றத்தை ஏற்படுத்தும். சில பொதுவான முறைகளை கீழே தருகின்றோம்.

**அடிமட்ட மற்றம் பின்தொடரல் ஆய்வு உள்ளடங்கலாக தொகை அடிப்படையிலான முறை**

நீங்கள் பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் மற்றும் பணியை ஆரம்பித்த பின்னர் உள்ள சூழ்நிலையை ஒப்பீடு செய்வதற்கு நீங்கள் தொகை அடிப்படையிலான ஆய்வினை முன்னெடுத்து மாற்றத்தை அளக்கலாம். உதாரணமாக, உங்களுடைய பரப்புரை பணி ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலைக்கு சமூகமளித்த சிறுபான்மை இனக் குழுக்களைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் பரப்புரை பணியை ஆரம்பித்த பின்னர் பாடசாலைக்கு சமூகமளித்த சிறுபான்மை இனக் குழுக்களைச் சேர்ந்த சிறுவர்களின் வருகை வீதம் குறித்த தகவலை நீங்கள் ஒப்பிட்டு பார்க்கலாம். கல்வி கற்ற மக்கள் மற்றும் பங்குதாரர்களின் நடத்தைகள் என்பன தொடர்பில் அறிவு மட்டத்தின் அளவு குறித்த தகவல்களையும் நீங்கள் ஆய்வின் மூலம் சேகரிக்க முடியும். ஆனால், அந்த ஆய்வுக்கு நிறைய நேரம், அதிக தகைமைகள், அதிக பணம் செலவாகலாம் என்பது குறித்து நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அத்துடன், அவை நேர்த்தியாக முன்னெடுக்கப்பட்டாவிட்டால், அதன் பெறுமதியும் குறைந்து விடும்.

**பிரதான தகவல் தருநர்கள் மற்றும் இலக்குக் குழு கலந்துரையாடல்கள் உட்பட, தர அடிப்படையிலான முறைகள்**

உங்களுடைய தாக்கத்தை மதிப்பீடு செய்யக் கூடிய நல்ல நிலையில் உள்ள சிறு எண்ணிக்கையிலான மக்கள் குறித்த தீர்மானங்களை கண்டறிதல் போன்ற நீங்கள் தர அடிப்படையிலான அணுகுமுறையையும் பயன்படுத்தலாம். அவ்வாறான பிரதான தகவல் தருநர்கள் (உங்களுடைய இலக்குக் குழுக்கள் அல்லது செல்வாக்கு செலுத்துநர்களாக இருக்கலாம்) நீங்கள் எத்தனை தூரம் பயனுறுதி மிக்கவர்களாக இருந்தீர்கள் என்பது தொடர்பில் விடயஞ் சார்ந்த தீர்மானத்தை தரலாம். உதாரணமாக, உங்களுடைய செய்தியின் முக்கியத்தும் தொடர்பில் எவ்வாறு ஊடகம் விளக்கமளிக்கின்றது என்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் பின்னூட்டத்தை வழங்கலாம். அரசியல்வாதிகளின் எண்ணங்கள் மாற்றமடைகின்றது என்பது பொது ஊழியர்கள் கருத்துக்களை கூறலாம். பல விடயங்களை ஒன்றாக பார்ப்பதற்கு மற்றும் உங்களுடைய பரப்புரையின் விளைவுகள் தொடர்பிலான கலந்துரையாடலை தூண்டுவதற்கு இலக்குக் குழுக்கள் உதவி புரியும்.

குறிக்கோள் மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகள் என்பன இரண்டுமே தீர்மானஞ் சார்ந்தது என்பதும் முக்கியத்துவமானது.

கற்றலை பகிர்ந்து கொள்வதற்கு கண்காணித்தல் மற்றும் உங்களுடைய பணியை மதிப்பீடு செய்வதற்கு **பார்வையாளர்களை ஈடுபடச் செய்து, சிறுவர்களை உள்ளடக்கல்.** செயன்முறையை பகிர்வதனை மேம்படுத்துவதற்கு மிகவும் சிறந்த வழியாக மதிப்பீடு செய்தலில் நண்பர்கள் மற்றும் பிரதான தகவல் தருநர்களை ஈடுபடச் செய்வது காணப்படுகின்றது. உங்களுடைய பணியின் பயனுறுதித் தன்மை குறித்த நடுநிலையான தீர்மானத்தை எடுப்பதற்கு உங்களுடைய பார்வையாளர்கள் சிலரும் நல்ல நிலையில் நிறுத்தப்படல் வேண்டும்.

**உங்களுடைய பெறுபேறுகளை பகிர்ந்து கொள்ளல்.** உங்களுடைய மதிப்பீடு செய்தல் செயன்முறையில் பார்வையாளர்கள் நேரடியாக ஈடுபடுத்தப்படாத போதிலும், நீங்கள் கற்ற பாடங்களை எவ்வாறு சிறந்த முறையில் பகிர்வது என்பது தொடர்பில் நீங்கள் கவனஞ் செலுத்த வேண்டியது அவசியமாகும். உதாரணமாக, சம்பவ கற்கை ஒன்றை நீங்கள் வெளியிடலாம். அல்லது பொருத்தமான சமுதாய சந்திப்பில் உரையொன்றை சமர்ப்பிக்கலாம்.

**மதிப்பீடு செய்தலின் நேரக் கணிப்பு.** நீங்கள் கற்ற பாடங்களை திட்டமிடலில் இணைத்துக் கொள்ளல்ல மற்றும் நீங்கள் தொடர்ந்து செல்வதற்கு ஊக்குவிக்கக் கூடிய நேரம் தொடர்பில் நீங்கள் மதிப்பீடு செய்தல் வேண்டும். உதாரணமாக, மூன்று வருடங்களுக்கான பரப்புரை மூலோபாயத்தின் முதல் ஒரு வருடத்தின் பின்னர். மதிப்பீடு செயன்முறையும் உங்களுடைய பரப்புரை மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும். அது நண்பர்கள், இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்களுடனான உறவை வலுப்படுத்துவதற்கு உதவும். அத்துடன், தமது கருத்துக்களை செயன்முறையில் உள்ளடக்குவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்கும்.

மேலும் நிரந்தரமான மாற்ற குறிக்கோள்களை அடைவதற்கு மற்றும் உங்களுடைய பரப்புரையின் தாக்கத்தை அடைவதற்கு செயன்முறையின் குறிகாட்டிகளை பின்வரும் வரைபு அமைப்பு நிர்ணயிக்கின்றது.

**A very simple model:**




*உதாரணம்*

*முதலாவது வரிசையில் உங்களுடைய நடவடிக்கைகளை குறிப்பிடவும், இறுதி வரிசையில் உங்களுடைய மாற்ற குறிக்கோள்களை குறிப்படவும். அதன் பின்னர் நீங்கள் எதிர்பார்க்கும் செயன்முறை தொடர்பில் சிந்திக்கவும்.*

| பரப்புரை நடவடிக்கைகள் | வெளியீடுகள் | குறுகிய கால மற்றும் இடைநிலை வெளியீடு குறிகாட்டிகள் | நீண்ட கால குறிக்கோள்கள் மற்றும் தாக்கங்களின் குறிகாட்டிகள் |
|---|---|---|---|
| இலக்கு விடயம் தொடர்பில் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளின் சந்திப்பு | கூட்டங்களின் எண்ணிக்கை | • இலக்கு விடயம் தொடர்பில் உங்களுடைய செய்தியை நம்பும் செல்வாக்கு செலத்துபவர்களில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் வீதம்<br>• சட்ட மூலம் தொடர்பில் உப அனுசரணையாளர்களின் எண்ணிக்கை | • மாற்றப்பட்ட கொள்கை அல்லது சட்டவாக்கம்<br>• நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை அல்லது சட்டவாக்கம்<br>• தெரிவு செய்யப்பட்ட பகுதிக்கு ஒதுக்கப்பட்ட அரசாங்க நிதியின் அளவு அதிகரிப்பு<br>• (நீண்ட காலத்தின் அடிப்படையில்), கொள்கை அல்லது சட்டவாக்க மாற்ற பெறுபேற்றின் காரணமாக மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டு சாதகமான மாற்றம் (தாக்கம்) |
| விசாரணையின் போதான சான்று | சான்றுகளின் எண்ணிக்கை விசாரணையில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை | முறை சார் கூட்ட சுருக்கத்தில் பயன்படுத்தப்பட்ட நிறுவன புள்ளிவிபரங்கள் | |
| தொடர்ச்சியான மின்னஞ்சல் பட்டியலை நிர்ணயிக்கவும் | பட்டியலில் கையொப்பமிட்ட மக்களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்புவதற்கு முன்வந்துள்ள அதிகரித்துள்ள மக்களின் எண்ணிக்கை | |
| பரப்புரை பயிற்சி செயலமர்வு | செயலமர்வுகளின் எண்ணிக்கை பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | தனிப்பட்ட உறுப்பினர்களின், தகைமைகள், இயலுமைகள். அறிவு மற்றும் பயனுறுதித் தன்மையில் மாற்றம் | |

## மாற்றத்தை அளவிடல்

தொகை அடிப்படையிலான மற்றும் அல்லது தர அடிப்படையிலான அளவீடுகளை பயன்படுத்தி நீங்கள் மாற்றத்தை கணிக்க முடியும். உங்களிடம் கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்களின் அடிப்படையிலேயே பொருத்தமான முறை தெரிவு செய்யப்படும். ஐக்கிய இராச்சியத்தின் சேவ் த சில்ரன் அமைப்பின் *பரப்புரைக்கான கருவித்தொகுதி* அவ்வாறான வகையைச் சேர்ந்தது. உங்களுடைய சுயத் தேவைகளுக்கு அதனை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

# பரப்புரையை மதிப்பீடு செய்வதில் எதிர்நோக்கும் சவால்கள்

கொள்கை மாற்றத்தில் உங்களுடைய பரப்புரை பணி மற்றும் பெறுபேற்றின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல் என்பது சிக்கலுக்குரியதாகும். மதிப்பீட்டை வடிவமைக்கும் போது மற்றும் அதன் பெறுபேறுகளை விளக்கும் போதும் நீங்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

**சிக்கலான தன்மை:** கொள்கை பகுதி என்பது சிக்கலானதும், எப்போதும் மாற்றம் அடையாததும் ஆகும். தொகுதி கட்டியெழுப்பல், ஆய்வு, பொது மக்கள் விழிப்புணர்ச்சி, கூட்டங்கள் மற்றும் அதிகாரிகளுடன் உறவை கட்டியெழுப்பல், இன்னபிற போன்ற அதனுடன் இணைந்த பல படிநிலைகள் உள்ளன. அவையும் அளவிடப்படுவதுடன், கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். வெற்றி என்பது அடைவதற்கு கடினமானது. அத்துடன், சிறுவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகளைச் சூழவுள்ள விடயங்கள் பொதுவாக தீவிரமான கலாசார கட்டுப்பாடுகளை சந்திக்க நேரிடும். இதன் காரணமாகவே எதிர்பாராத மாற்றங்கள் மதிக்கப்பட வேண்டியன. விடயம் ஒன்று அடுத்த நிலைக்கு செல்வதற்கான படிகளை அவை கட்டமைக்கின்றன.

**வெளியக சக்திகளின் பாத்திரம்:** உங்களுடைய கட்டுப்பாட்டுக்கு வெளியில் உள்ள செயற்பாட்டாளர்களும், பல் வகைத் தன்மையும் பொதுவாக உங்களுடைய பரப்புரை பணி மற்றும் கொள்கையில் செல்வாக்கைச் செலுத்தும். எனவே, உங்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள அனைத்தையும் சரியாக புரிவது சாத்தியமாகும். அத்துடன், வெளியக காரணங்களினால் இதுவரை நீங்கள் உங்களுடைய இறுதி இலக்கை அடையவில்லை (உதாரணம்: கட்சி சட்டவாக்கத்தில் மாற்றம்).

**நேர வரைபு:** கொள்கை மாற்ற இலக்குகள் எப்போதும் நீண்ட காலத்திற்கு உரியனவாக இருக்கும். இருப்பினும், கொள்கையானது அங்கீகரிக்கப்பட்டு மற்றும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். கொள்கை சுற்றாடலில் செல்வாக்கு செலுத்தி மற்றும் அதனை திருத்தி அமைப்பதற்கு பல படி நிலைகள் உள்ளன. உங்களுடைய முழுமையான பரப்புரை மூலோபாயம் என்ற ரீதியில் பார்க்கும் போது இவை முக்கியமானவையாகும். ஒரு முக்கியமான புள்ளியாக இவை அளவிடப்பட வேண்டியது முக்கியமாகும்.

**மூலோபாயங்கள் மற்றும் மைற்கற்களை நகர்த்தல்:** மாற்றமடையும் சுற்றாடலுக்கு ஏற்ற வகையில் இலக்குகள் மற்றும் மூலோபாயங்களை மாற்றுவது தொடர்பில் பரப்புரை செய்பவர்கள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் வேண்டும்.

**அடைதல்:** பரப்புரையில் பல் வேறுபட்ட செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டிருப்பர். அத்துடன், எனவே, எந்தவொரு தனி செயற்பாட்டாளரினதும் பணிக்கும் கொள்கை மாற்றத்தை வழங்குவது சிக்கலாகும். மாற்றத்தை கொண்டு வருவதற்கு பாராட்டுக்களை வழங்குதலும் அரசியல் நடவடிக்கையாக இருக்கும். விசேடமாக, அரசாங்க பங்காளர்களுடன் அல்லது வேறு சிவில் சமூக நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் போது. பாராட்டுக்களை பகிர்தலே சிறந்த கொள்கையாக இருக்கும். மாற்றத்தை கொண்டு வருவதற்கு சேவ் த சில்ரன் அமைப்பு பயன்படுத்திய முக்கியமான நடவடிக்கைகள் மற்றும் செல்வாக்குகளை நீங்கள் உங்கள் தொகுதிகளுக்கு வெளிப்படுத்தலாம். ஆனால், பாராட்டுக்களை மற்றையவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் என்பது, எதிர்கால சவால்களுக்காக ஒன்றிணைந்து செயற்படுவதற்கான முதலீடாக இருக்கும். பொதுவில், உரையின் ஊடாக, ஊடக மாநாட்டின் ஊடாக, வானொலி நேர்காணல் அல்லது பொது கூட்டங்களின் ஊடாக பாராட்டுக்களை பகிர்தலே சிறந்த மற்றும் பாதுகாப்பான கொள்கையாக இருக்கும்.

**யதார்த்தமான எதிர் வெளிப்படையான மாற்றம்:** சிறுவர்கள் மீது மாற்றத்தை ஏற்படுத்தாமல், வெளித் தோற்றத்திற்கான மாற்றத்தை பரப்புரை கொண்டு வரலாம். உதாரணமாக, நடைமுறைப்படுத்தவில்லை அல்லது அமுல்படுத்தவில்லையெனின், கொள்கையில் மாற்றம் கொண்டு வருவதால் எவ்வித மேலதிக தாக்கமும் ஏற்படப் போவதில்லை. பரப்புரையின் பெறுபேறாக உண்மையில் மாற்றமடைந்தது எது என்பது தொடர்பில் உங்களுடைய மதிப்பீடு ஆய்வு செய்ய வேண்டும். சிறுவர்களில் முன்னேற்றம் அடைந்துள்ளது எது, எந்த கதைகள் இதனை விளக்குகின்றன? இன்னும் செய்ய வேண்டியது என்ன? உங்களுடைய பரப்புரை மூலோபாயம் எந்த மாற்றத்தையும் அடையவில்லையாயின், நீங்கள் உங்களுடைய எதிர்கால பரப்புரை பணிக்கான முக்கியமான பாடங்களை நீங்கள் கற்க வேண்டும். சிறுவர்களுக்கான மாற்றங்களை உருவாக்குவது என்பது நீண்ட தூர முயற்சியாகும். அதற்கு பலம் மற்றும் விடாமுயற்சி அவசியமாகும்.

**நேரடியான மற்றும் மறைமுகமான விளைவுகள்:** கொள்கை மாற்றம் என்பது பொதுவானதாக இருக்கும் பொது, பரப்புரை மூலோபாயத்தின் பிரதான குறிக்கோள் மதிப்பீடு என்பது வேறு விளைவுகள் தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். உதாரணமாக, சிவில் சமூக குழுக்களின் பரப்புரை இயலுமையை அதிகரித்தல், அல்லது தீர்மானம் எடுத்தலில் சிறுவர்களின் பங்குபற்றலை அதிகரித்தல். எந்தவொரு எதிர்கால நடவடிக்கையினதும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்கு உங்களுடைய மதிப்பீடு செய்தலானது பிரதான கேள்விகளை கேட்க வேண்டும். உதாரணமாக, பிரதான இலக்குக் குழுக்களுடனான உங்களுடைய உறவு நிலையில் பரப்புரையினாது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? முக்கியமான கூட்டணியின் பலங்கள் மற்றும் பலவீனங்களில் அது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? வேறுபட்ட பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடைய பிரதிநிதித்துவத்திற்கு அது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? விடயத்தின் பரந்த எண்ணக் கருவில் அது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

## பாகிஸ்தான், காஷ்மீரில் சிறுவர் பாதுகாப்பு பரப்புரையின் செயன்முறை குறிகாட்டிகள்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான எங்கள் பணியில் பின்வரும் செயன்முறை குறிகாட்டிகளை பாகிஸ்தான் சேவ் த சில்ரன் கிளை அடையாளங் கண்டுள்ளது.

**உயர் மட்ட தீர்மானம் எடுப்பவர்களை சந்திப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது:** பிரதமர் மற்றும் முதல் செயலாளர் உள்ளிட்ட உயர் மட்ட அரசாங்க அதிகாரிகள், அமைச்சர்களை சந்திப்பதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. காஷ்மீரில் எங்களுடைய பணி தொடர்பில் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தவர்களாக இருந்தனர். சிறுவர் பாதுகாப்பு தொடர்பான எங்கள் பணியை அவர்கள் மதித்தனர். அதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்டதுடன், இது தமக்கு புதிய விடயம் என்பதனையும் அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

**சிறுவர் பாதுகாப்பு பொறி அமைப்பை பிரதமர் ஆரம்பித்து வைத்தார்:** எங்கள் உதவியுடனான மத்திய ஊடகவியலாளர் கழகத்தின் சிறுவர் பாதுகாப்பு அமர்வினை ஆரம்பித்து வைப்பவராக பிரதமர் கலந்து கொண்டனர். எங்களுடைய சமுதாய அடிப்படையிலான வலையமைப்புக்களில் இருந்து சிறுவர் உரிமை மீறல்கள் தொடர்பில் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான பொறி அமைப்பாக இது இருந்தது. சமூக அமைச்சில் புதிததாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த சிறுவர் பாதுகாப்பு கண்காணிப்பு பிரிவு குறித்து அவர் சுட்டிக்காட்டினார். இந்த பிரவு நம்மால் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது.

**தீர்மானம் எடுத்தல் நடைமுறையில் பங்குபற்றல்:** சுமார் 18 மாதங்களாக நாம் முன்னெடுத்த பணியின் திரட்டப்பட்ட எங்களுடைய தகவல்களின் பயனாக, 2007-2012ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத்திட்ட அமர்வில் கலந்து கொள்வதற்கு எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது (இதில் பங்குபற்றுவதற்கு அழைக்கப்பட்ட ஒரே ஒரு அரச சார்பற்ற நிறுவனமாக சேவ் த சில்ரன் காணப்படுகின்றது). இதன் பயனாக, எதிர்வரும் நிதியாண்டான 2007/08 காலப்பகதிக்கான வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நான்கு பிரதான செயற்றிட்டங்களில் எமக்கு ஏனையோருடன் இணைந்து பணியாற்றக் கூடியதாக இருந்தது.

**நாங்கள் கற்றது**

அரசாங்கம் பின்வரும் விடயங்களில் உறுதி வழங்கியது:

- அனைத்து மாவட்டங்களிலும் **சிறுவர் பாதுகாப்பு பிரிவை ஸ்தாபனமயமாக்கல்,** மற்றும் ஊழியர்களை நியமித்தல் மற்றும் நடத்துவதற்கான செலவை உள்வாங்கிக் கொள்வதற்கும் முன்வந்தது. இரண்டு மாவட்டங்களில் பரீட்சார்த்த பிரிவுகளை ஸ்தாபித்த சேவ் த சில்ரன், அதனை ஸ்திரமாக்குவது தொடர்பில் அஷாட் ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றுகின்றது.
- சிறுவர்கள் மீதான **அனைத்து உடற் சார் தண்டனைகளையும் வெளிப்படையாக தடைசெய்தல்** அத்துடன் சட்டவாக்கம் முறையாக உள்வாங்கப்பட்டுள்ளமை மற்றும் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றமையை உறுதி செய்தல். பெற்றோர்கள், பாதுகாவலர்கள், ஆசிரியர் மற்றும் வேறு கடமை வகிப்பவர்களுக்கு சிறுவர்களின் நேர்நிலையான நடத்தை முகாமைத்துவம் தொடர்பில் நிபுணத்துவ பயிற்சி உள்ளடங்கிய பொது மக்கள் கல்வி பிரசாரத்தின் ஊடாக சட்ட திருத்தங்கள் முன்வைக்கப்படும்.
- **சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு** எங்களுடைய வாழ்வாதார திட்டங்களில் ஆதரவு வழங்கல். குடும்பங்கள் தமது வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்காக சமுதாய வலையமைப்புக்களின் ஊடாக இந்த செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, சிறுவர்கள் தொழில் செய்து விட்டு பாடசாலைக்கு போக வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. எமது சமுதாய வலையமைப்புக்களையும் ஸ்தாபனமயமாக்குவதற்கு அவர்கள் இணங்கியுள்ளனர். அரசாங்கத்தின் நிதியிடலுடன் இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் தொழில் அமைச்சுடன் இணைந்து செயற்படவுள்ளோம்.
- திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி திணைக்களத்திற்குள் **சிறுவர் உரிமைகள் அதிகாரி ஒருவரை நியமித்தல்.** அரசாங்க அதிகாரிகள் மத்தியில் UNCRC குறித்த விழிப்புணர்ச்சியை வளர்த்தல்: சிறுவர்களை பாதிக்கும் விடயம் தொடர்பில் கவனஞ் செலுத்தி அவர்களுக்கு ஆலோசனை வழங்கல்: சிறுவர்கள் தொடர்பிலான அரசாங்கத்துடன் இணைந்து பரப்புரைக்கு உதவி செய்தல், மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளில் காணப்படும் இடைவெளிகளை அடையாளங் காணல், அத்துடன் அரசாங்கத்துடன் UNCRC பொருத்தப்பாடு தொடர்பில் அறிந்து வைத்தல் என்பனவே அவரது பொறுப்பாக இருக்கும்.
- அஷாட் ஜம்மு மற்றும் காஷ்மீரில் சிறுவர் பராமரிப்பு ஸ்தாபனங்களுக்காக (சேவ் த சில்ரனால் உருவாக்கப்பட்டது) அரசாங்க கொள்கையாக சமூக நலன்புரி அமைச்சு **பராமரிப்பு தரங்கள் மற்றும் நெறிமுறைகளின் ஆகக் குறைந்த தரத்தை** உள்வாங்கும்.
- மேற்குறிப்பிட்ட விடயங்களை அடையாளங் காண்பதற்கு **பிராந்தியத்தில் சிறுவர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்கான நிழல் செயற்றிட்டம் ஒன்றை** உருவாக்கவுள்ளதாக அஷாட் ஜம்மு மற்றும் காஷ்மீர் முதல் செயலாளர் மற்றும் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி திணைக்களத்தின் தலைவர் ஆகியோர் அறிவித்துள்ளனர். பொருத்தமான திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்த செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். தொழில் நுணுக்க உதவி, இயலுமையை கட்டியெழுப்பல் மற்றும் சில நிதி வளங்களை சேவ் த சில்ரன் வழங்கும்.

## சிறுவர் உரிமைகள் தொடர்பான விடயங்களை சீனாவின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கல்

**சீனாவின் முன்னாள் சேவ் த சில்ரன் பணிப்பாளர் மீள அழைக்கப்பட்டார்:**

*''பேணி பராமரித்தல் தரங்கள் உருவாக்கத்திற்காக நாங்கள் சிவில் விவகார அமைச்சுக்கு உதவி செய்தோம். மற்றும் நிர்க்கத்தியானவர்களுக்கான புதிய கொள்கை அறிமுகம் செய்யப்பட்ட அரசாங்க கூட்டத்தில் சமூகமளிப்பதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இது தான் எங்களுடைய பிரதான செய்தி:*

*ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர்களின் உரிமைகள் என்பது பொதுப்படையானது மற்றும் மறுக்க முடியாது என்பதனையும் நான் உறுதி செய்ய வேண்டும். இந்த சாசனத்தில் குறிப்பிட்டுள்ள கொள்கைகள் உண்மையில் நீண்ட தூரம் செல்ல வேண்டியவை. உதாரணமாக, சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான அனைத்து தீர்மானங்களும் சிறுவர்களின் நல்லார்வங்கள் சார்ந்ததாக இருத்தல் வேண்டும். சிறுவர்களின் நல்லார்வங்கள் என்பது என்ன என்பது தொடர்பில் நாம் நீண்ட கலந்துரையாடல்களை நடத்த முடியும். உண்மையாகவே இது சிறிய விடயல்ல என்பதனையும், முக்கியமான அர்ப்பணிப்பு என்பதனையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். சிறுவர்களின் அக்கறைகளான ஏற்கும் தன்மை அல்லது நிர்வாக வசதி என்பவற்றிலும் பார்க்க சிறுவர்களின் தேவைகள் மற்றும் ஆர்வங்கள் மிகவும் முக்கியமானது என்பதே அதன் அர்த்தம். இவையே, சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு முறைகளின் தயாரிப்பில் மத்தியப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.*

*எனவே, சிறுவர்களின் நல்லார்வங்கள் என்ன என்பது தொடர்பிலான விவாதங்கள், தனிப்பட்ட சம்பவங்கள் மற்றும் முழுமையான சிறுவர் பாதுகாப்பு முறைமைகளை வடிவமைத்தல் ஆகிய இரண்டு நிலைகளிலும் முன்னெடுக்கப்படல் வேண்டும். சிறுவர்களின் கருத்துக்களும் அந்த விவாதங்களில் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.''*

**நாங்கள் அடைந்தது**

சிறுவர் உரிமைகள் என்பது சீனாவில் தீண்டப்படாத ஒன்றாக இருந்தது. ஆனால், தற்போது உயர்மட்ட அரசியல் கலந்துரையாடலில் அது முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இந்த கொள்கையை அறிமுகப்படுத்தும் உரையின் போது, எது நடந்தாலும் "சிறுவர்களின் நல்லார்வம் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்" என பிரதி அமைச்சர் முதலில் குறிப்பிட்டார்.கடந்த 10 வருடங்களில் முதன் முறையாக அரசாங்க அதிகாரியால் இவ்வாறான கருத்து முன்வைக்கப்பட்டமையை நான் செவிமடுத்தேன். இந்த கூட்டத்தின் பின்னர் என்னை சந்தித்த அமைச்சிற்கான சமூக நிவாரண திணைக்களத்தின் தலைவர் ''*இது உங்களாலேயே சாத்தியமானது. இது சேவ் த சில்ரன் பணியின் காரணமாகவே இடம்பெற்றது.*'' எனத் தெரிவித்தார்.

**நாங்கள் கற்றது**

நிலை நிற்றல் கவனத்திற் கொள்ளப்பட்டது. இந்த குறிப்பை நாங்கள் மீண்டும் மீண்டும் கவனத்திற் கொண்டு வந்தோம். நாங்கள் கூறிய விடயம் மற்றும் சீனாவில் நாங்கள் உருவாக்கிய மாதிரி நிர்க்கதியானவர்களுக்கான தேசிய கொள்கையை உருவாக்குவதில் முக்கிய பங்கினை வகித்தமையை நாம் நம்புகின்றோம்.



Weng Tong, 15, benefits from the skills of teachers trained in learner-centred methodology, with support from Save the Children.

## பல்கேரியாவில் பொது மக்கள் விழிப்புணர்ச்சி பிரசாரத்தின் விளைவை அளவிடல்




உள்ளடக்கக் கல்வி குறித்தும் மற்றும் அனைத்து சிறுவர்களுக்குமான அதன் பயன்கள் குறித்தும் பொது மக்களின் விழிப்புணர்ச்சியை அதிகரிக்கும் நோக்குடன் அனைத்து பிரசாரங்களுக்குமான தனித்த பாடசாலை சேவ் த சில்ரன் மற்றும் பல்கேரியாவின் உள்ளடக்கக் கல்விக்கான நிலையத்தினால் உருவாக்கப்பட்டது. பிரதான பாடசாலை முறைமைக்குள் மாற்றுத் திறனுடைய சிறுவர்களை உள்ளடக்கக் கூடிய நிலையை அது மேம்படுத்தியது. அத்துடன், அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ற பாடசாலை சூழலை ஏற்படுத்துவது தொடர்பிலும் அது கவனஞ் செலுத்தியது. அனைவருக்குமான ஒரு பாடசாலை என்பது மூன்று தொலைக்காட்சி மற்றும் வானொலி தளங்களை உள்ளடக்கியதாக அமைந்தது. சுமார் மூன்று மாத காலங்களுக்கு இந்த பிரசாரம் தொடர்பான அறிவிப்பு நாடு முழுவதிலும் சுமார் 14 தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் 15 வானொலி நிலையங்களால் ஒலி/ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்த ஒவ்வொரு பிரசாரக் காட்சியிலும் மாற்றுத் திறனுடைய சிறுவர்கள் தமது சிறந்த நண்பர்களுடன் கதைத்து, விளையாடிக் கொண்டிருப்பது பதிவு செய்யப்பட்டிருந்தது. அச்சிடப்பட்ட விளம்பரங்கள், சுவரொட்டிகள், இணையத்தள விளம்பரங்கள் மற்றும் இணையத்தளங்களும் தயாரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சிறுவர்களுக்கும் கற்பதற்கான உரிமை உள்ளது என்பதும், தமது மாற்றுத் திறனால் அவர்கள் நிராகரிப்புக்கோ அல்லது புறக்கணிப்புக்கோ உள்ளாக்கப்படக் கூடாது என இந்த விளம்பரங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. ''*மதாரா கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவரால் பிரசாரத்தின் செய்தி நன்கு விளக்கப்பட்டிருந்தது. 'நாங்கள் தற்போது ஒன்றாக பாடசாலைக்கு செல்லவில்லையாயின், நாங்கள் வளர்ந்த பின்னர் எவ்வாறு ஒன்றிணைந்து வாழ முடியும்' என அந்த சிறுவன் கூறினார்*'' என பல்கேரியாவுக்கான வதிவிட முகாமையாளர் இவா பொனேவா கூறினார்.

இந்த பிரசாரத்தின் பயனை அளவிடுவதற்கு சமூக விஞ்ஞான ஆய்வொன்றை நாம் ஒழுங்கு செய்தோம். 51% ஆன பல்கேரிய மக்கள் இந்த பிரசார விளம்பரங்களில் ஏதோ ஒன்றினையாவது பார்த்துள்ளனர் என இந்த ஆய்வின் முடிவுகள் தெரிவித்தன. மிகவும் முக்கியமாக, இந்த பிரசாரமானது விசேடமான சமூக விடயமொன்றை சுட்டி காட்டுவதாக 78% ஆன மக்கள் தெரிவித்தனர். மாற்றுத் திறனுடைய சிறுவர்களின் கல்வியின் நடத்தையில் மாற்றத்தை உருவாக்கியுள்ளோமா என்பதனை கண்டறிவதற்கு, பிரசாரத்திற்கு முன்னரும் பிரசாரத்திற்கு பின்னரும் நாம் பொதுமக்களின் கருத்துக் கணிப்பை நடத்தினோம். பிரசாரம் சென்றடையாத மக்களின் நடத்தையில் எவ்வித மாற்றமும் இன்றி காணப்பட்டது. ஆனால், பிரசாரத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் பார்த்தவர்களின் உள்ளடக்கக் கல்விக்கான ஆதரவு 62% இலிருந்து 82% ஆக அதிகரித்துள்ளது.

''*பிரசாரத்தின் குறுகிய கால அளவை கருத்திற் கொண்டு பார்க்கும் போது கருத்தளவில் 20% ஆனவர்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக கருத்துக்களில் மாற்றத்தை ஏற்படுத்த நீண்ட காலம் தேவையாக இருக்கும். பல்கேரியாவில் உள்ள மாற்றுத் திறன் வாய்ந்த சிறுவர்கள் வழி வழியாக கற்பதற்கு தகுதியில்லாதவர்கள் என்றே கருதப்பட்டு வருகின்றனர். அத்துடன், அவர்கள் சாதாரணமான பாடசாலைகளில் இருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும் என அந்த மக்கள் கருதுகின்றனர். பிரதான பாடசாலைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான விசேட கல்வி வசதிகள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என வெளிப்படுத்துவதே பிரசாரத்தின் நோக்கமாக இருந்தது. தீவிரமாக மாற்றுத் திறன் உடைய சிறுவர்கள் மாத்திரமே விசேட பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டும்*'' என பல்கேரியாவின் சேவ் த சில்ரன் தொடர்பாடல் மற்றும் மக்கள் தொடர்பு அதிகாரியான லடின்கா டுச்சேவா தெரிவித்தார்.

**நாங்கள் கற்றது**

முக்கியமான விடயங்களிற்கான பொது மக்கள் பிரசாரத்திற்கு, மக்களை அடைவதற்கு மற்றும் நடத்தைகளை மாற்றுவதற்கு அவர்களது ஒத்துழைப்பை பெறுவதற்கும் நம்பகத் தன்மையான தரவுகளை பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை எங்கள் அனுபவம் வெளிப்படுத்தியது.

செயன்முறைப் படிவம்

## 9.2 A பரப்புரையை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

| பரப்புரை நடவடிக்கைகள் | வெளியீடுகள் | குறுகிய கால மற்றும் இடைநிலை விளைவுகளின் குறிகாட்டிகள் | நீண்ட கால விளைவுகள் மற்றும் தாக்கத்தின் குறிகாட்டிகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## நீண்ட கால தாக்கங்கள் குறித்து கவனஞ் செலுத்தல்

உங்களுடைய கொள்கை மாற்ற குறிக்கோள் சம்பந்தப்பட்ட தாக்கத்தை நீங்கள் கொண்டிருக்கும் போது, வேறு பகுதிகளில், விசேடமாக சிறுவர்களின் நீண்ட கால மாற்றத்திற்காக. சிவில் சமூகத்தை பரப்புரை செய்வதன் பொருட்டு இயலுமையை வளர்ப்பதற்கு பரப்புரையும் தாக்கத்தை கொண்டுள்ளது. வேறுபட்ட வகையிலான தாக்கங்களை கண்டுணர்வதற்காக தமது சுயமான வரைபு அமைப்புக்களை பல சேவ் த சில்ரன் நிறுவனங்கள் கொண்டுள்ளன. உலக தாக்க கண்காணிப்பு (Global Impact Monitoring) என்ற முறையை ஐக்கிய இராச்சிய சேவ் த சில்ரன் அமைப்பு பயன்படுத்துகின்றது. எங்கள் பணியின் தாக்கத்தை சிறுவர் வாழ்க்கையில் மாற்றங்கள், கொள்கை மற்றும் பிரயோகத்தில் மாற்றங்கள், சிறுவர் பங்குபற்றலில் மாற்றங்கள், ஒப்புரவில் மாற்றங்கள் மற்றும் சிறுவர் உரிமைகளுக்கு உதவும் வகையில் சிவில் சமூகத்தின் இயலுமையை வளர்ப்பதற்கான மாற்றங்கள் என மாற்றத்தின் ஐந்து பரிணாமங்களின் அடிப்படையில் அது ஆய்வு செய்கின்றது.

சீனாவின் யூனான் மாகாணத்தில் சிறுபான்மை அடிப்படை கல்வியை அறிமுகப்படுத்துவதற்கான பரப்புரையின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு எவ்வாறு இந்த வரைபு அமைப்பு பிரயோகிக்கப்படுகின்றது என்பதனை பின்வரும் உதாரணம் விளக்குகின்றது (சம்பவ கற்கையையும் பார்க்கவும் பக்கம் 28-29)..

*உதாரணம்*

| சிறுவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் | சிறுவர்களின் உரிமைகளை பாதிக்கும் கொள்கைகள் மற்றும் பிரயோகங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் | சிறுவர்களின் பங்குபற்றல் மற்றும் செயற்றிறன் மிக்க பிரஜாவுரிமை தொடர்பில் ஏற்பட்ட மாற்றங்கள் | சிறுவர்களின் ஒப்புரவு மற்றும் பாரபட்சமின்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் | சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கான இயலுமையை வளர்ப்பது தொடர்பில் சிவில் சமூகங்கள் மற்றும் சமுதாயங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் |
|---|---|---|---|---|
| சிறுவர்களின் மனவுறுதியும், தன்னம்பிக்கையும் வளர்ந்துள்ளது.<br><br>கற்பித்தல் பிரயோகம் வளர்ந்துள்ளது.<br><br>மாணவர்கள் அதிகமாகவும், வேகமாகவும் கற்கின்றனர்.<br><br>வகுப்பறை சுற்றாடல் மேம்பட்டுள்ளது.<br><br>பாடசாலை வருகை அதிகரித்துள்ளது<br><br>மிகவும் வறிய குடும்பங்களின் பொருளாதார சூழ்நிலை மாறியுள்ளது. | ஆசிரியர் மேம்படுத்தல் மற்றும் செயற்றிறன் மதிப்பீடு என்பவற்றிற்கான அணுகுமுறை புதிய கற்பித்தல் முறையை பிரதிபலிக்கின்றன. ஆனால் கொள்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை<br><br>அரசாங்க அதிகாரிகளின் நடத்தை மாற்றமடைந்துள்ளது.<br><br>சிறுவர்கள் எவ்வாறு கற்பார்கள் என்பது தொடர்பில் ஆசியர்களுக்கு சிறந்த புரிந்துணர்வு உள்ளது<br><br>பாடசாலை முகாமைத்துவ நடவடிக்கை மேம்பட்டுள்ளது.<br><br>செயற்படல் மற்றும் மேற்பார்வை வழிகள் மேம்பட்டுள்ளன. | வகுப்பறை, பாடசாலை மற்றும் ஏனையோருக்கு உதவுதலில் சிறுவர்கள் செயற்றிறனுடன் உள்ளனர்.<br><br>சிறுவர்களுடன் மேலும் ஆலோசனைகள்: சிறுவர்களுக்கு ஆசிரியர்கள் மேலும் பொறுப்புணர்வு உடையவர்களாக இருத்தல்<br><br>ஒருங்கிணைத்தல் செயற்றிட்டம் ஊடாக சிறுவர்கள் வாழ்வதற்கான புதிய தகைமைகளை கற்றுக் கொள்ளலாம்.<br><br>முன்னரை விட தீர்மானம் எடுத்தலில் சிறுவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் உள்ளனர். . | சிறுவர்களுக்கு இடையிலான வேற்றுமை அடையாளங் காணப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br><br>பால் நிலை சார்ந்த பாரபட்சத்தின் எண்ணிக்கை குறைந்துள்ளது.<br><br>சிறுவர்கள் குறித்த மதிப்பீடு, அவர்களின் வேறு பரிமாண தகைமைகளை வெளிப்படுத்துகின்றது. | தீர்மானம் எடுத்தல் அணுகுமுறையில் அரசாங்கம் சுயமாக உள்ளடக்க அணுகுமுறையை உள்வாங்கியுள்ளது<br><br>ஆலோசனையில் பெற்றோர்கள் ஈடுபட்டுள்ளனர்.<br><br>சமுதாயம் மற்றும் பாடசாலைக்கு இடையிலான தொடர்பு வலுவாகியுள்ளது. |

செயன்முறைப் படிவம்

9.2 **B** மாற்றங்களின் பரிமாணத்தின் அடிப்படையில் பரப்புரையின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்

| மாற்றத்தின் பரிமாணங்கள் | முந்தைய விளைவுகள் | இடைநிலை வெளியீடுகள் | நீண்ட கால தாக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

# வளங்களை ஒன்று திரட்டல்



அத்தியாயம் **10**

---

# அறிமுகம்

நேரம், பணம் மற்றும் உபகரணங்கள் என்பதன் அடிப்படையில் குறிப்பிடத்தக்க அளவு வளங்கள் பரப்புரைக்கு தேவையாக இருக்கின்றன. உங்களுக்குத் தேவையாகவுள்ள வளங்கள் மற்றும் அதனை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது தொடர்பில் இந்த அத்தியாயம் ஆராய்கின்றது.

வளங்களை ஒன்று திரட்டல் என்பது பரப்புரையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு பெறுமதி மிக்க தகைமையாக இருக்கும். கட்டுப்படுத்தப்பட்ட நிதியுடன் இல்லாது, அதிக நிதியிடலை அடைவது என்பது உங்களுடைய தெரிவுகளை விஸ்தரிப்பதற்கு மற்றும் புதிதாக மற்றும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேலும் பல விடயங்களை பரப்புரை செய்வதற்கு முயற்சிக்கவும் பயன்படும். எவ்வாறாயினும், போதிய நிதியினை சேகரிக்க முடியாத சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் பின்வாங்க வேண்டும் என்பதில்லை. தலைமைத்துவம், அர்ப்பணிப்பு மற்றும் ஊழியர்கள் மற்றும் நண்பர்களின் சக்தி ஆகிய நவீன நிதி வளங்களின் ஊடாக வெற்றிகரமான பிரசாரத்தை நீங்கள் முன்னெடுக்கலாம்.

குறிப்பிட்ட வடிவம் மற்றும் தமது பரப்புரை விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாக யதார்த்தமான இலக்குகளை நிர்ணயிப்பதன் முக்கியத்துவத்தை நிதி சேகரிப்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். சாத்தியமான உதவி வழங்குநர்களை எவ்வாறு இலக்கு வைப்பது மற்றும் அவர்களை அடைவதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையீடுகளை எவ்வாறு உருவாக்குவது என்பன அவர்களுக்கு தெரியும். இரு வழி அபிவிருத்தி நிறுவனங்களிடம் சிறிய கடன் உதவிகளை பெறுவதிலிருந்து, தமது சமூகங்கள் தொடர்பில் தனியார் துறையினரின் அக்கறைகளை இலக்கு வைப்பது வரை பணம் சேகரிப்பதற்கு அவர்கள் புதுமையான மூலோபாயங்களை நிறுவுவர். ஒரு மூலத்திலிருந்து, மேலதிக வளங்களை பெறுவதற்கு எவ்வாறு பங்களிப்புக்களில் அழுத்தம் செலுத்த வேண்டும் என்பதனையும் அவர்கள் அறிவார்கள். அவ்வாறான நடவடிக்கைகள் எதிர்கால பரப்புரை நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும்.

கவனத்திற் கொள்ள வேண்டிய சில வரவு செலவுத் திட்ட தலைப்புக்கள் இந்த அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன. பின்னர், பரப்புரைக்காக சட்ட சிக்கல்கள், நிதியுதவியாளர்கள் முன்னுரிமை, பரப்புரைக்கு உதவுவதற்கு தனிப்பட்ட ஆதரவாளர்களை ஊக்குவித்தல், தனியார் துறையிடமிருந்து பணத்தை ஏற்றுக் கொள்ளல் மற்றும் கூட்டமைப்புக்கள் மற்றும் கூட்டணிகளில் வளத்தை பகிரல் போன்ற பணம் சேகரிப்பதனை சூழவுள்ள பிரதான விடயங்கள் தொடர்பில் அது கவனஞ் செலுத்தும்.

## உங்களுடைய பரப்புரைக்கு வரவு செலவுத் திட்டத்தை அமைத்தல்

பரப்புரை என்பது பரந்த நிகழ்ச்சிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டது, பரப்புரை வரவு செலவுத் திட்டமும் முழுமையான நிகழ்ச்சிக்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். பரப்புரை இயலுமையை பேணுதல் மற்றும் வலுப்படுத்தலுக்கான பிரதான செலவீனங்களை நீங்கள் உள்ளடக்கல் வேண்டும். அத்துடன், விசேட நடவடிக்கைகளுக்கு தேவையான வளங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். வரவு செலவுத் திட்டத்திற்கான சில தலைப்புக்கள் பின்வருமாறு:

பிரதான செலவீனங்கள்

- **குழு இயக்கச் செலவுகள்**

போக்குவரத்து மற்றும் வாழ்வுத் தேவை, மாநாட்டு அழைப்புக்கள், தன்னார்வ ஊழியர்களின் செலவீனங்கள், ஊழியர்கள் இணைத்துக் கொள்ளல், ஊழியர் மற்றும் அணி அபிவிருத்தி, இயலுமையை கட்டியெழுப்பல்

- **பரப்புரை மற்றும் பிரசாரத்திற்கான பிரதான செலவுகள்**

ஆரம்ப பிரசார தகவல், பிரசார பொருட்கள் மற்றும் நிகழ்வுகள்

- **தேசிய மற்றும் பிராந்திய அளவில் (தேவையாயின்) அரசாங்கத்துடன் வலையமைப்பை ஏற்படுத்தல்**

கட்சி மாநாடுகளுக்கு சமூகமளித்தல், கொள்கை வகுப்பவர்கள் மற்றும் நிதியுதவியாளர்கள் சுற்றுலாக்கள், கொள்கை வகுப்பவர் நிகழ்வுகள், கொள்கை வகுப்பவர் தகவல், பிரதிநிதித்துவ செலவுகள்

- **பரம்பரவியலினால் பொதுவான கூட்டணி செலவுகள்**

தெரிவு செய்யப்பட்ட வலையமைப்புக்கள் மற்றும் கூட்டணிகளின் உறுப்புரிமை

- **ஊழியர் செலவுகள்**

முழு நேரச் சம்பளம் அல்லது தனிநபர் மணித்தியாலங்கள்

முக்கியமான பரப்புரை மூலோபாயங்களுக்கான வளங்கள்
உங்களுடைய விளக்கமான பரப்புரை திட்டத்தின் அடிப்படையிலானது. உங்களுடைய வரவு செலவுத் திட்ட தலைப்புக்களும் உள்ளடக்கப்படலாம்.

- **ஒருங்கிணைப்பு மற்றும் திட்டமிடல்**
    - உங்களுடைய சுயமான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வேறு நிறுவனங்களுடன் பணியாற்றல்.
    - நிகழ்ச்சி வரவு செலவுத் திட்டத்திற்குள் பணியை ஒருங்கிணைத்தல்
    - திட்டம் மற்றும் மதிப்பீடு செய்தலின் நடைமுறைப்படுத்தலை கண்காணித்தல்
- **ஆய்வு மற்றும் உபகரணங்கள்**
    - பரப்புரைக்கு உதவுவதற்கான ஆய்வை ஒழுங்கு செய்தல் மற்றும் முன்னெடுத்தல்.
    - அறிக்கைகள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள், இன்னபிறவற்றை எழுதுதல், திருத்துதல், பிரசுரித்தல் மற்றும் அச்சிடல்
    - புகைப்படங்கள், ஒளிப்பதிவுகள், இன்னபிறவற்றை தயாரித்தல், திருத்துதல் மற்றும் வெளியிடல்
- **பரப்புரை நடவடிக்கைகளில் (செயற்பாடு திட்டத்தின் அடிப்படையில்) உள்ளடக்கப்படக் கூடியன**
    - ஆதரவு நாடல், பொது அல்லது வெகுசன தொடர்பாடல்
    - சிறுவர்களுடன் இணைந்து பணியாற்றல்
    - கூட்டணிகளுடன் இணைந்து பணியாற்றல்
    - தளங்களுக்கான ஆதரவு
    - தனியார் துறையுடன் இணைந்து பணியாற்றல்
    - தன்னார்வ ஊழியர்களுக்கான செலவு
    - போக்குவரத்து, தொடர்பாடல்
    - இணையத்தளம் சார்ந்த பரப்புரை

*உதாரணம்*

தமது நிகழ்ச்சிகளில் தொடர்பாடல் மற்றும் பரப்புரையின் பாத்திரங்கள் குறித்த புரிந்துணர்வை பெற்றுக் கொள்வதற்கு உதவுவதற்காகவும் மற்றும் தமது பிரேரணைகளில் பரப்புரை நடவடிக்கைகள் மற்றும் வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்காகவும் சீனாவின் சேவ் த சில்ரன் அமைப்பு கைநூல் ஒன்றை ஊழியர்களுக்காக தயாரித்தது.

## பரப்புரைக்கான மாதிரி வரவு செலவுத் திட்டம்

| இலக்குக் குழுக்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்கள் | நடவடிக்கைகள் | வள உள்ளீடு | உத்தேசிக்கப்பட்ட செலவு |
|---|---|---|---|
| **தொடர்பாடல்**<br>(செயற்றிட்ட விளக்கத்தை பிரசாரப்படுத்தல், எங்கள் செயற்றிட்டம் மற்றும் அதன் தாக்கல் குறித்து பரந்தளவிலான மக்களை புரிந்து கொள்ளச் செய்தல்) | பிரசுரங்கள்<br>• நிகழ்ச்சி செய்தி மடல்கள்,<br>• சிறுவர் செய்தி மடல்கள்<br>• இணைய செய்தி மடல்கள்<br>• சம்பவ கற்கை<br>• செயற்றிட்டம் சம்பந்தப்பட்ட பிரசுரங்கள்<br>• அரசாங்க அறிக்கை<br>• ஒளி ஆவணம்<br>• விநியோகம் | • 1/3 தகவல் அல்லது தொலைத்தொடர்பு அதிகாரிகளின் நேரம்<br>• 1/4 தகவல் அல்லது தொலைத்தொடர்பு முகாமையாளர்களின் நேரம்<br>• வடிவமைத்தல்/ அச்சிடல்/ விநியோகித்தல்<br>• ஒளிப்பதிவு தயாரிப்பு<br>• தபால் செலவு | |
| | வெகுசன ஊடக பிரசாரம்<br>• வானொலி நிகழ்ச்சி<br>• செய்தி பத்திரிகை பிரிவு<br>• வெளியக பஸ் விளம்பரம்<br>• இணையத்தள பிரசாரம்<br>• விசேட நிகழ்வு | • 1/3 தகவல் அல்லது தொலைத்தொடர்பு அதிகாரிகளின் நேரம்<br>•1/4 தகவல் அல்லது தொலைத்தொடர்பு முகாமையாளர்களின் நேரம்<br>• 1/5 பணிப்பாளரின் நேரம்<br>• வானொலி நிகழ்ச்சி வடிவமைப்பு அல்லது தயாரிப்பு<br>• நிகழ்வு | |
| **ஊடக வெளிப்படுத்தல்**<br>(பொது மக்கள் மீது செல்வாக்கு செலுத்தி மற்றும் அடையாளப் படுத்தப்பட்ட நிகழ்ச்சி தலைப்பு தொடர்பில் பொது மக்கள் விழிப்புணர்ச்சியை வளர்த்தல்) | • ஊடக செயலமர்வு<br>• செயற்றிட்ட பகுதிக்கு ஊடக சுற்றுலா<br>• ஊடக செய்தி மடல் | • 1/3 ஊடக அதிகாரியின் நேரம்<br>• 1/5 பணிப்பாளரின் நேரம்<br>• செயலமர்வை நடத்துவதற்கு<br>• செயற்றிட்ட பகுதி சுற்றுலா<br>• செய்தி மடல் தயாரிப்பு | |
| **பரப்புரை**<br>(அரசாங்க அதிகாரிகள் அல்லது கல்வியியலாளர்கள், அல்லது வேறு கொள்கை வகுப்பாளர்களில் செல்வாக்கு செலுத்துவதற்கு, கொள்கை மற்றும் விதிமுறைகள் மாற்றத்தை அடைவதற்கு, நிகழ்ச்சியின் தாக்கத்தை வளர்ப்பதற்கு) | • செயற்றிட்டங்களுக்கு கல்விச் சுற்றுலா<br>• தாக்கம் குறித்த ஆய்வு<br>• செயற்றிட்ட தாக்கங்கள் அல்லது பெறுபேறுகள் அல்லது ஆய்வுகளை பகிர்வதற்கும், விநியோகிப்பதற்கும் கருத்தரங்கு அல்லது மாநாடு<br>• பரப்புரை தேவைக்காக தேசிய அல்லது சர்வதேச ரீதியில் கூட்டங்களில் கலந்து கொள்ளல் | • 1/3 பரப்புரை ஆலோசகரின் நேரம்<br>• 1/5 பணிப்பாளரின் நேரம்<br>• செயலமர்வை நடத்துவதற்கு<br>• கற்கை நேரம்<br>• கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு<br>• ஆய்வு | |

## கூட்டணிகள் மற்றும் கூட்டமைப்புக்கள் ஊடாக வளங்களை பகிர்தல்

கூட்டணி அல்லது கூட்டமைப்பு ஊடாக நீங்கள் பணிபுரிவதாய் இருந்தால், யார், எவ்வகையான பரப்புரை வளங்களை வழங்க முடியும் என்பது தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு நீங்கள் வர வேண்டும். சூழ்நிலை மாற்றமடைவதற்கு அமைவாக நீஞ்கள் சில நெகிழ்வுத் தன்மையையும் கொண்டிருக்க வேண்டிய தேவை உள்ளது. வளத் தேவை ஏற்படும் போது எவ்வாறு அதனை சந்திப்பது என்பது கூட்டணியில் பணிக் குழு ஒன்று இருப்பதனை உறுதி செய்து கொள்ளுங்கள்.

நிதி சேகரித்தல்

**சட்ட விடயங்கள்**

நிதி கிடைப்பதனையும் மற்றும் வழங்குவதனையும் நிர்வகிக்கும் சட்டங்கள் நாட்டுக்கு, நாடு வேறுபடுகின்றன. உங்களுடைய நாட்டில் உள்ள இது குறித்த சட்டங்கள் தொடர்பில் நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம் ஆகும். உங்களுடைய ஆய்வில் பின்வரும் கேள்விகள் உங்களுக்கு உதவியாக அமையும்:

1. நிதி தேடல் மற்றும் பெறுதல் தொடர்பில் உங்களுடைய நாட்டில் வழக்கில் உள்ள சட்டங்கள் எவை?
2. பரப்புரை மற்றும் கொள்கை மாற்ற இலக்குகளுக்காக நிதியுதவி அளிக்கப்பட்ட பணத்தை பயன்படுத்துவதில் ஏதேனும் கட்டுப்பாடுகள் (சட்ட ரீதியான அல்லது ஒழுக்காற்று ரீதியான) உள்ளனவா?
3. தொழில் நுணுக்க கட்டுப்பாடுகள் உள்ளனவா? சட்ட ரீதியானதாக இல்லையாயினும், குறிப்பிட்ட நிதியுதவியாலரிடம் இருந்து நிதியைப் பெறுவது மற்றும் எங்கள் நோக்க ஆவணத்திற்கு அவை தாக்கத்தை ஏற்படுத்தலாம்.
4. பரப்புரை மற்றும் கொள்கை மாற்ற இலக்குகளுக்காக தனிப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்கள் வழங்கக் கூடிய நிதியின் அளவு தொடர்பில் கட்டுப்பாடு உள்ளதா?
5. நிதியுதவி வழங்கப்பட்ட வருமானம் தொடர்பில் அறிக்கையிடுவதற்கான தேவைகள் என்ன?

இந்த பகுதியிலிருந்து வெளியே வருவது என்பது சிக்கலான விடயமாகும். விதிகள் மற்றும் விதிமுறைகளின் திட்டமிடாத மீறல் உங்களுடைய பரப்புரை முயற்சிகள் முடங்கிப் போவதற்கு காரணமாக மாறிவிடும். பிற்காலத்தில் வரக் கூடிய சிக்கல்களை தவிர்ப்பதற்கு நிபுணத்துவ உதவிக்கு செலவிடுவது பெறுமதி மிக்கதாக இருக்கும்.

**நிதியுதவியாளர்கள் முன்னுரிமைகள்**

பிரேரணைகளை சமர்ப்பித்தல் மற்றும் விளைவுகள் தொடர்பில் அறிக்கைப்படுத்தல் போன்ற வழமையான நடைமுறைகளின் அடிப்படையிலானதாக நிதியுதவியாலளரின் உதவிகள் அமைந்திருக்கும். வெற்றிகரமான பிரரேணை ஒன்றை தயாரிப்பதற்கு தெளிவான குறிக்கோள்கள் மற்றும் மைல்கற்கள் அவசியமாக இருக்கின்றன.

பரப்புரை பணிக்கு நிதியுதவி வழங்குவதற்கு சில தனிப்பட்ட நிதியங்கள் மற்றும் நிதியுதவியாளர்கள் விரும்புகின்றனர். பரப்புரை நடவடிக்கைகளுக்கு மாத்திரம் தனித்து, பல ஸ்தாபன ரீதியான நிதியுதவியாளர்கள் இணங்காத நிலை உள்ளது. ஆனால், ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பரந்த அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பரப்புரைக்கு நிதியுதவி வழங்குவதற்கு அவர்கள் விருப்புடன் உள்ளனர். தொகுதி, உறுப்புரிமை, சிவில் சமூகம், ஊடகம் மற்றும் பொது அதிகாரிகளின் கல்வியாக சட்டரீதியாக பரப்புரை பணி முன்னெடுக்கப்படலாம்.

**பரப்புரையானது பயனுள்ளது என்பதனை ஆதரவாளர்களை ஏற்கச் செய்தல்**

இரண்டு சம்பந்தப்பட்ட விடயங்களில், ஆனால் வேறுபட்ட வகைகளில் செயற்படுவதற்கு சேவ் த சில்ரனின் ஆதரவாளர்கள் இன்றியமையாதவர்களாக உள்ளனர். முதலாவதாக, பரப்புரை உட்பட எங்களுடைய அனைத்து பணிகளுக்கும் எங்களுக்கு தேவையான பொதுவான நிதியை அவர்களுடைய நிதியுதவி வழங்குகின்றது. இரண்டாவதாக, நாங்கள் அவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போது அவர்கள் எங்களுடைய பரப்புரை ஊடாக நாம் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான பெறுமதிகள் மற்றும் கொள்கைகளுக்கு ஆதரவு வழங்குவர்.

**பணம் சேகரித்தல்**
எளிமையான மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட காரணங்களை ஆதரவாளர்களுக்கு வழங்குவதற்கு சந்தர்ப்பம் அளிப்பதே பணம் சேகரிப்பதற்கான மிகவும் பயனுள்ள வழியாக உள்ளது ("பிரதிபலிப்புக்கான ஓட்டுநர்" என நிபுணர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றது). தெளிவான, வெளிப்படையான மற்றும் பூர்த்தியான தேவை, அந்த தேவையை அடைவதற்கு நாம் என்ன செய்கின்றோம் என்பது குறித்த தெளிவான தீர்வு, அது எவ்வாறு சிறுவர்களின் வாழ்க்கையில் நேரடியான மற்றும் கண்கூடான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பவற்றை நீங்கள் குறிப்பிட வேண்டும்.

உதாரணமாக, நைஜீரியாவில் இன்னலுறும் சிறுவர்களை பாதுகாப்பதற்கு நேரடியான தலையீட்டினை பார்க்கும் போது, நாம் அவர்களுக்கு ஊட்டச்சத்து மேம்படுத்தலுக்கு ஏற்ற உணவுகளை வழங்கலாம். அதன் மூலம் அவர்களது வாழ்க்கையை உறுதி செய்யலாம். பரப்புரை செய்தியானது, சிறுவர்களின் வாழ்க்கையை காப்பாற்றுவதற்கான உணவு கிடைக்கக் கூடியதாக கொள்கையை உள்வாங்குவதற்கு நைஜீரிய அரசாங்கம் மற்றும் வேறு பங்காளர்களுடன் இணைந்து நாம் செயற்படுவோம்.

தாக்கமானது நீண்ட காலத்திற்குரியதாகவும், தீர்வானது மிகவும் நெருக்கடிக்கு உரியதாகவும் விளங்கும் சந்தர்ப்பங்களில் பரப்புரையின் மூலம் தெளிவான மற்றும் பூர்த்தியான செய்தியை உருவாக்குவது மிகவும் சிக்கலான விடயமாகும். தாக்கமானது நீண்ட காலத்துக்கானதாக இருக்கும் போது, உங்களுடைய பரப்புரையானது மூலோபாயம் மிக்கது என்பதனை நீங்கள் வெளிப்படுத்தலாம். தொடர்ச்சியான வளர்ந்து வரும் மாற்றங்களின் தொடராக அது கட்டியெழுப்பப்படும். மேம்படுத்தப்பட்ட கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலின் மூலம் உங்களுடைய பரப்புரை பணி எவ்வாறான தாக்கத்தை கொண்டுள்ள என்பதனை நீங்கள் அறிவீர்கள். எனவே நீங்கள் உங்களுடைய பரப்புரை பணியை, விசேடமாக நிகழ்ச்சிப் பணியுடன் ஒருங்கிணைந்ததாக இருக்கும் போது பூர்ததியான "பிரதிபலிப்பு ஓட்டுநராக" சமர்ப்பிக்கலாம்.

**ஆதரவாளர்களை இணைத்தல்**
எங்களுடைய பணி தொடர்பில் ஆதரவாளர்களுக்கு அறியப்படுத்தி, அவர்களையும் பங்கு கொள்ளச் செய்வதற்கு சேவ் த சில்ரன் செய்தி மடல்களின் மூலம் தகவல்களை வழங்குகின்றது. பரப்புரையின் தேவை மற்றும் மேலதிக சிறுவர்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு அது எவ்வாறு எமக்கு உதவும் என்பது தொடர்பில் ஆதரவாளர்களுக்கு மேலும் அறியச் செய்வதற்கு இது சிறந்த சந்தர்ப்பமாக அமையும்.

எங்களுடைய பரப்புரை நடவடிக்கைகள் வெற்றி பெற்று, சிறுவர்களின் வாழ்க்கையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவ கதைகள் மற்றும் சம்பவ கற்கைகளே இதனை புரிவதற்கு மிகவும் சிறந்த வழியாக இருக்கின்றன. உங்களுடைய பரப்புரையினால் மேம்படுத்தப்பட்ட தனிப்பட்ட சிறுவர்களின் நம்பகத் தன்மையான உதாரணங்களை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். படங்கள் எப்போதும் பயனுடையதாக இருக்கும்.



**தனியார் நிறுவனங்களிடம் இருந்து நிதியை பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை விதித் தொகுப்பு**

ஆயுத விற்பனை நிறுவனங்கள், புகைத்தல் மற்றும் மதுபான விற்பனை நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு நிதியுதவியை பெறாது. இந்த பொதுவான விதிக்கு வெளியே, தனியார் நிறுவனங்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கு ஒவ்வொரு சேவ் த சில்ரன் நிறுவனங்களும் வேறுபட்ட நடைமுறைகளை பின்பற்றுகின்றன. பொதுவான வழிகாட்டியில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

1. ஆய்வு அல்லது சுற்றுச் சூழல்: நிறுவனம் ஒன்று உங்களை அணுகினால் அல்லது நீங்கள் நிறுவனத்தை அணுகினால், நீங்கள் எப்போதும் நிறுவனத்தின் "உரிய முயற்சி சிரத்தை" மதிப்பீட்டை முன்னெடுக்க வேண்டும் (பிரிவு 7.3ஐ பார்க்கவும்). கூகுள் இணையத்தளத்தில் தேடுதலை புரிவதன் ஊடாக நீங்கள் இதனை இலகுவாக செய்ய முடியும். நிறுவனத்தின் பெயரை தட்டச்சு செய்யவும் (சட்டரீதியான பெயர்) மற்றும் "சிறுவர் உரிமைகள் வன்முறை", "துஷ்பிரயோகம்", "சுரண்டல்", இன்னபிற போன்ற குறிச் சொற்களையும் பயன்படுத்தலாம். இந்த தேடலின் மூலம் நிறுவனம் தொடர்பில் வெளிவந்துள்ள தகவல்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். இந்த தகவல்கள் நிறுவனத்தின் இணையத்தளத்திலும் வெளியாகியுள்ளதா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். நிறுவனம் தொடர்பான நம்பகத் தன்மையை வளர்ப்பதற்கு இது துணை புரியும்.

2. நிறுவனம் தொடர்பிலான மதிப்பீடு செய்தலை நீங்கள் நிறைவு செய்த பின்னர், உங்களிற்கு மூன்று தெரிவுகள் உள்ளன:

- **நிபந்தனைகளின்றி நிறுவனத்திடமிருந்து நிதியுதவியை பெற்றுக் கொள்ளல்.** சிறுவர் உரிமைகள் அல்லது நிபந்தனைகளை நிறுவமானது மீறாது இருக்கும் சந்தர்ப்பத்தில்.
- **நிபந்தனைகளுடன் நிதியுதவியை பெற்றுக் கொள்ளல்:** சிறுவர் உரிமைகள் அல்லது நலனை நிறுவனம் மீறியுள்ளது. ஆனால் அதனை திருத்திக் கொள்வதனை நோக்கி தற்போது செயற்பட்டு வருகின்றது. அவர்கள் எவ்வாறு சிறுவர்களுக்கு உதவி வழங்கும் தமது செயற்பாட்டை முன்னெடுக்கின்றார்கள் என்பது தொடர்பில் பருவ கால கண்காணிப்பு நடத்துவதற்கான விடயங்கள் உங்களுடைய நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். சிறுவர்களை பாதுகாப்பு தொடர்பில் அவர்களுக்கு உதவக் கூடியதாக, அவர்களின் செயற்பாடுகளை திருத்தியமைப்பதற்கு நீங்கள் உதவி புரிய முடியும்.
- **நிதியுதவியை புறக்கணித்தல்:** நிறுவனமானது சிறுவர் உரிமைகள் அல்லது நிபந்தனைகளை மீறியுள்ளது. சூழ்நிலையை திருத்துவதற்கு அவர்கள் எதுவிதமான நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. நிதியை மீள வழங்குவது என்பது, சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பின் ஒருங்கிணைந்த தன்மையை வெளிப்படுத்துவதற்கு சிறந்த சந்தர்ப்பமாக இருக்கும். அத்துடன், சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் எங்களுடைய உறுதியை விளக்கும்.

அருளுடைமை மற்றும் கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்வுக்கு இடையிலான வேறுபாடு

**அருளுடைமை:** என்பது அறக்கட்டளை சார்ந்த கொடையாகும். காரணம் ஒன்றுக்கு நிதியுதவி வழங்குவதற்கான அவர்களது விருப்பம் அல்லது தெரிவு சார்ந்ததாக அது உள்ளது.

**கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்வு:** கூட்டாண்மை ஒருங்கிணைதல் அல்லது பங்காளித்துவம். இது கடப்பாடு ஆகும். நன்னடத்தை விதித் தொகுப்பு அல்லது அதனிலும் மேலான சட்ட உறுதிகள் அல்லது சாசனங்களின் அடிப்படையிலானது. இந்த அடிப்படையில், நிதியுதவியாளர்களுக்கு (கூட்டாண்மையாளர்கள்) ஸ்திரமான சுற்றுச் சூழலை கட்டியெழுப்பல் மற்றும் செயற்படச் செய்வதற்கும், சமுதாய அபிவிருத்தி மற்றும் நலனுக்கு பங்களிக்க கூடியதாகவும் இருக்க வேண்டிய பொறுப்பு உள்ளது (மேலதிக விபரங்களுக்கு பிரிவு 7.3ஐ பார்க்கவும்).

## அடுத்தது என்ன?

நீங்கள் தற்போது இந்த கைநூலின் இறுதிக்கு வந்துள்ளீர்கள். இந்த கைநூலின் உள்ளடக்கங்களை வாசித்தறிந்ததன் மூலம் உங்களுடைய பரப்புரை பணி தொடர்பில் நீங்கள் மனவுறுதியைப் பெற்றுள்ளீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். அத்துடன், வேறுபட்ட சேவ் த சில்ரன் பரப்புரை சம்பவங்கள் உங்களுக்கு புதிய எண்ணங்களை உருவாக்கியிருக்கும் என நாங்கள் எண்ணுகின்றோம்.

ஆனால், இந்த கைநூலை வாசித்தல் அல்லது பரப்புரை செயலமர்வில் பங்கு கொள்வது என்பது ஒரு ஆரம்பம் மாத்திரமே. பரப்புரையை கற்றுக் கொள்வதற்கு சிறந்த வழியாக இருப்பது, அதனை நடைமுறையில் பிரயோகித்து பார்ப்பதாகும். நீங்கள் தற்போது பரப்புரை பணி தொடர்பில் ஆர்வத்துடன் உங்களுடைய பணியை தொடர்வீர்கள் என நாம் நம்புகின்றோம்.

பரப்புரை என்பது ஒரு சாகசம் போன்றது. அது எதிர்பார்க்க முடியாதது. சந்தர்ப்பங்கள் தொடர்பில் சாதகத் தன்மைகளுக்கு தயாராக இருப்பதற்கு உங்களுடைய பரப்புரை மூலோபாயத்தை நீங்கள் திட்டமிட வேண்டிய தேவை உள்ளது. அத்துடன், உங்களுடைய அறிவு மற்றும் புதிய உறவுகளை கட்டியெழுப்பல் தொடர்பில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதற்கு புதிய தகவல்களை தொடர்ச்சியாக பெற்று வரும் நிலையில், எவ்வாறு உங்களுடைய குறிக்கோள்களை அடைவது என்பது தொடர்பில் நீங்கள் சிந்திக்க வேண்டும்.

சிறுவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கும் மற்றும் அவர்களுடைய குரல்கள், செல்வாக்குகள் மற்றும் கிளைகளுக்கு ஆதரவு வழங்குவதற்கும் தமது பரப்புரையை வளர்க்கவும் மற்றும் வலுப்படுத்துவதற்கும் உங்களுடைய அனுபவங்கள் சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்புக்கு உதவியாக இருக்கும். நீங்கள் எங்களிடமிருந்தும், நாங்கள் உங்களிடமிருந்து கற்க வேண்டிய தேவை உள்ளது. இந்த கைநூல் தொடர்பான உங்களுடைய பின்னூட்டம் மற்றும் உங்களுடைய பரப்புரை அனுபவங்கள் ஆகியவற்றை நாம் பெருமையுடன் வரவேற்கின்றோம்.

உங்கள் பின்னூட்டங்களை அனுப்பி வையுங்கள்:
சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு பரப்புரை தூண்டற் குழு,
campaigns@savethechildren.org.uk

இலகுபடுத்துநர் கைநூலின் இறுதியில் பின்னூட்ட படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

## பரப்புரை பதங்களின் அரும்பத விளக்கம்

இந்த கைநூலின் பல சூழ்நிலைகளில் பயன்படுத்தபட்ட பிரதான பதங்கள் சிலவற்றின் விளக்கங்களை இந்த அரும்பத விளக்கம் தருகின்றது. இது இறுதியானதும், உறுதியானதும் விளக்கம் அல்ல (வேறு நிறுவனங்கள் இந்த பதங்களை வேறு அர்த்தங்களுக்காக பிரயோகிக்கலாம்). உங்களுக்கு தோணுகின்ற சந்தர்ப்பங்களில் நீங்கள் வேறு பதங்களையும் இந்த பட்டியலில் இணைக்கலாம்.

**பொறுப்புடைமை:** ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் தரங்கள் அடிப்படையில் பூரணமாக பணியானது நிறைவு செய்யப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்துவதற்கான கடமை அல்லது நீதியாகவும் மற்றும் நேர்த்தியாகவும் செயற்பாட்டு பெறுபேறுகளின் எதிர் எதிரான பாத்திரங்கள் மற்றும் அல்லது திட்டங்கள் தொடர்பிலான அறிக்கை. பொதுவாக வளங்களின் பத்திரமான பயன்படுத்தல் குறித்து தெளிவாக விளக்கப்பட்ட பொறுப்புக்கள், பாத்திரங்கள் மற்றும் செயற்பாட்டு எதிர்பார்ப்புக்கள் அடிப்படையில் செயற்பட வேண்டியது பங்காளர்களின் பொறுப்பு என்பதாகவும் இது பயன்படுத்தப்படும்.

**நடவடிக்கைகள்:** மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நாங்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கை.

**பரப்புரை:** சிறுவர்களுடன், அவர்களது பெற்றோர்களுடன் மற்றும் சமூகத்துடன் நேரடியாக செயற்படுவதன் அனுபவம் மற்றும் அறிவின் அடிப்படையில் சிறுவர்களின் வாழ்க்கை நிலை தொடர்பில் ஏனையோர் நேர்நிலையான மாற்றங்களை அடைவதற்கு கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட நடவடிக்கைகளின் தொகுதி.

**நல்லார்வங்கள்:** "சிறுவர்கள் சார்ந்த அனைத்து நடவடிக்கைகள், பொது மக்கள் அல்லது தனியார் சமூக நலன்புரி நிறுவனங்கள், சட்ட நீதிமன்ங்கள், நிர்வாக அமைப்புக்கள் அல்லது சட்டவாக்க அமைப்புக்கள், என அனைத்திலும் சிறுவர்களின் நல்லார்வங்களே பிரதான அக்கறையாக உள்ளது"( UNCRCஇன் உறுப்புரை 3).

**பிரசாரம் செய்தல்:** ஆதரவு நாடல் நடவடிக்கை, வலையமைப்பை ஏற்படுத்தல், ஊடகம் மற்றும் மக்களின் ஈடுபாடு என்பவற்றின் ஊடாக கொள்கை, பயிற்சி அல்லது நடத்தை தொடர்பிலான எதிர்பார்க்கப்படும் மாற்றங்களுக்காக பொது மக்களின் அழுத்தத்தை உருவாக்கல் மற்றும் ஒன்று திரட்டல் செயற்பாடு.

**சிறுவர்களை பிரதானப்படுத்திய பரப்புரை:** பரப்புரை மூலோபாயத்தில் சிறுவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ள பரப்புரை. அவர்களது ஆர்வங்கள் மத்தியப்படுத்தப்பட்டதாகவும் மற்றம் அவர்கள் குரல்கள் செவிமடுக்கப்பட்டதாகவும் இருக்கும் நடவடிக்கை. பெரியவர்களால் குறிப்பிடப்படுவதாக இல்லாது, சிறுவர்களால் தெரிவிக்கப்பட்ட தேவைகளின் அடிப்படையிலான பரப்புரை நடவடிக்கைகள்.

**சிறுவர்கள் தலைமையிலான பரப்புரை:** தமக்கு பிரதானமானதாக இருக்கும் விடயங்கள் தொடர்பில் சிறுவர்கள் முன்னெடுக்கும் பரப்புரை. அல்லது சேவ் த சிலரன் அல்லது வேறு பெரியவர்கள் பரப்புரையை முன்னெடுப்பதற்கு உதவும் நிலை.

**சிவில் சமூகம்:** தன்னார்வ சிவில் அமைப்புக்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் மற்றும் ஸ்தாபனங்கள் ஒன்றிணைக்கப்பட்டது. அரச கட்டமைப்புக்கள் அல்லது வர்த்தக ஸ்தாபனங்களுக்கு எதிரிடையாக செயற்படும் சமூகம். இதில் பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகள், அபிவிருத்தி அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக குழுக்கள், மகளிர் நிறுவனங்கள், நம்பிக்கை சார்ந்த நிறுவனங்கள், நிபுணத்துவ நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள், சுய உதவி குழுக்கள், சமூக முன்னணிகள், வர்த்தக கூட்டமைப்புக்கள், கூட்டணிகள் மற்றும் பரப்புரை குழுக்கள் உள்ளடங்கும்.

**சிறுவர் உரிமைகள் நிகழ்ச்சிகள்** : சிறுவர்களுடனான அனைத்து நிவாரண மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைக்கான பகுப்பாய்வு, திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பான வரைபு அமைப்பு. அபிவிருத்தி மற்றும்

மனித நேய தலையீடுகளில் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் பல எண்ணங்கள், கருத்துக்கள் மற்றும் அனுவங்களை அது ஒன்றிணைக்கும். சிறுவர்களின் மனித உரிமைகள் சார்ந்த கொள்கைகள் மற்றும் தரங்கள் அடிப்படையிலானதாகும். ஆனால், சிறுவர்களுடனான பணியின் போது பல இடங்களில் இது பிரயோகிக்கப்பட்டுள்ளது. (எடுத்துக்காட்டாக, சிறுவர்களின் உடலியல், உணர்வு, புலன் உணர்வு சார்ந்த மற்றும் சமூக அபிவிருத்தி, சிறு பராய கற்கைகள், ஆரம்ப சிறு பராய கல்வி, சிறுவர் உளவியல் மற்றும் இன்னபிற). அத்துடன், பொதுவாக அபிவிருத்தி பயிற்சிகளிலும் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

**உரிமை கோரல்:** பொறுப்பு வகிப்பவர்களை அடையாளப்படுத்தும் மற்றும் அவர்களை கணக்கில் வைத்துக் கொள்ளும். மரியாதை, பாதுகாப்பு அல்லது பூரணத்துவம் உரிமை அல்லது குழுக்களின் உரிமைகள். உரிமைகளை கோரும் தன்மையானது சிறுவர் உரிமைகள் நிகழ்ச்சிக்கு மிகவும் முக்கியமான அம்சமாக இருக்கின்றது. தமது உரிமைகளின் பூரணத்துவம் தொடர்பில் உரிமை கோரக் கூடியவர்களாக அனைத்து சிறுவர்களும் இருப்பதில்லை. அவர்கள் பொதுவில் மற்றையவர்களை தங்கியே உள்ளனர் (அவர்களது குடும்பங்கள், சமூகம் மற்றும் சிவில் சமூகம்). சிறுவர்களின் ஈடுபடும் இயலுமைகளின் அடிப்படையில் இது அமைகின்றது.

**கூட்டாண்மைக்குரிய சமூக பொறுப்புணர்வு:** தாம் செயற்படும் சமூகத்தில் சிறுவர்குளின் உரிமைகளை பாதுகாக்கவும் மற்றும் மேம்படுத்தவும் செய்வதற்கான நிறுவனம் ஒன்றின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள். வேலைப்பளு, சமுதாயங்கள் மற்றும் அந்த நிறுவனத்தின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட நாடுகளில் சமூக ரீதியான பொறுப்பான அணுகுமுறைகளை உறுதி செய்வதற்கு, மற்றும், ஆகக் குறைந்த தகுதியாக வேறுபட்ட பங்குதாரர்களை தமது செயற்பாடுகள் பாதிக்காது என்பதனை உறுதி செய்தல்.

**ஒன்று திரட்டல்:** குறிப்பிட்ட குழுக்களுக்கு இடையிலான வேறுபாடுகளை காட்டுவதற்கு வேறுபட்ட குழுக்கள் அடிப்படையில் தரவுகளை பகுப்பாய்வு செய்தல் (பால் நிலை சார்ந்த, வயது சார்ந்த, இனக் குழுக்கள் சார்ந்த, இன்னபிற).

**பாரபட்சம்:** தமது சமூக அடையாளத்தின் அடிப்படையில் சிறுவர்கள் பாரபட்சத்திற்கு உள்ளாகலாம் (உதாரணமாக, பெண்கள் என்ற ரீதியில், மாற்றுத் திறனுடையவர்கள் அல்லது குறிப்பிட்ட இனக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற ரீதியில்), அல்லது சூழ்நிலையின் காரணமாக (உதாரணமாக, எச்.ஐ.வியினால் பாதிக்கப்பட்டவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், வீதிச் சிறுவர்கள்). பல சந்தர்ப்பங்களில் இந்த கருத்துக்கள் மற்றும் காரணங்கள் சிறுவர்கள் வித்தியாசமானவர்கள் என்பதனை வெளிப்படுத்துவதற்கு பயன்படுகின்றன. அடையாளத்தின் இந்த அம்சங்களும் மற்றும் வேறுபாடும் ஒன்றிணைந்து இரண்டு மடங்கு பாரபட்சத்திற்கு வழி வகுக்கலாம். இது சிறுவர் உரிமைகள் மீறல் வளர துணை புரியும்.

**உரிய முயற்சி சிரத்தை:** குறிப்பிட்ட நிறுவனத்துடன் செயற்படுவது குறித்த சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களை அடையாளங் காண்பதற்கான ஆழமான ஆய்வு.

**பொறுப்பு வகிப்பவர்:** சர்வதேச மற்றும் தேசிய சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் கருவிகளில் பாதுகாக்கப்பட்ட உரிமைகளை கொண்டுள்ளோரை நோக்கிய பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை கொண்ட அமைப்பு அல்லது தனி நபர். நாடு ஒன்று, பொறுப்பு வகிப்பவர் என்ற ரீதியில் மக்களின் உரிமைகளை பாதுகாத்து, சிறுவர் உரிமைகளை வழங்க வேண்டிய கடமை உள்ளது (*உரிமைகள் வகிப்பவரை பார்க்கவும்*).

**மதிப்பீடு செய்தல்:** வேறுபட்ட நோக்கங்களை கொண்டிருக்கக் கூடிய ஒரு நிலையில் மதிப்பீடு. ஆனால், நீங்கள் எதிர்பார்த்த மாற்றத்தை கொண்டு வருவுதற்கு உங்களுடைய பரப்புரை பணி எத்தனை பயனுள்ளதாக இருந்தது என்பதுடன் முன்னர் தீர்மானித்த பரப்புரை குறிக்கோள்களை அடைவதற்கான அடிப்படையில் தாக்கங்களை அளவீடு செய்வது குறித்து கவனஞ் செலுத்தும் (*கண்காணித்தலை பார்க்கவும்*).

**இலக்கு:** நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை விளக்குகின்றது. உங்களுடைய பரப்புரை முயற்சி மற்றும் உங்களுடைய மாற்றத்திற்கான பார்வையின் நீண்ட கால விளைவாக இது இருக்கின்றது. பரப்புரை இலக்கு என்பது பொதுவானதாக இருக்கலாம் (*குறிக்கோள்களை பார்க்கவும்*).

**மனித உரிமைகள்:** மனிதன் என்ற வகையில் அவன் அல்லது அவள் கொண்டிருக்குக் கூடிய உரிமைகள். மனித உரிமைகள் என்பது அனைத்து மனிதர்களுக்கும் சமமானதாக மற்றும் மாற்றித் தர இயலாததாக உள்ளன. நவீன அரசுகள் மற்றும் நவீன சந்தைகளால் திணிக்கப்படும் மனித கண்ணியத்திற்கான நியம அச்சுறுத்தல்களில் இருந்து தனிநபர்களை பாதுகாப்பதற்கு அவை சமூக மற்றும் அரசியல் உத்தரவாதமாகும்.

**தாக்க மதிப்பீடு:** முன்னெடுத்த நடவடிக்கை அல்லது தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலம் மக்களின் வாழ்க்கையில் கொண்டு வரப்பட்ட நீடிக்கும் அல்லது முக்கியமான மாற்றங்கள், நேர்நிலையானதா அல்லது எதிர்மறையானதாக, திட்டமிடப்பட்டதா அல்லது இல்லையா என்பதற்கான முறை சார்ந்த பகுப்பாய்வு.

**குறிகாட்டிகள்:** செயற்பாடு எட்டப்பட்டு விட்டது என்பதனை அளவிடுவதற்கான (குறிகாட்டும்) குறிக்கோள் வழிகள். இவை செயற்றிட்டத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் சார்ந்ததாக இருக்கலாம்.

**செல்வாக்கு செலுத்துபவர்கள்:** இலக்குக் குழுவின் சிந்தனை மற்றும் நடவடிக்கையில் வேறுபட்ட தேவைகளுக்காக செல்வாக்கு செலுத்துக் கூடிய நிலையில் உள்ள தனிநபர் அல்லது நிறுவனம் *(இலக்குக் குழுக்கள் பார்க்கவும்).* எடுத்துக்காட்டாக, நிதி அழுத்தம், நிலை மற்றும் பிரதிநிதித்துவம், அதிகார உறவுகள், இன்னபிற).

**சட்ட உரிமை நிலை:** நிறுவனமானது சட்ட ரீதியானது, முறையானது மற்றும் தாம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்பட்டது என்பதன் அடிப்படையில் சமூகத்தில் ஒன்றை செய்வதற்கான உரிமை உடைமை. சட்ட முறைமை (தேச மற்றும் சர்வதேச சட்டத்துடன் தொடர்புடையது), நம்பகத் தன்மை (உ-ம்: ஆதாரம் மற்றும் அறிவு, ஆதரவின் அளவு) மற்றும் பங்குதாரர்களின் பொறுப்புடைமை போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியேத சட்ட உரிமை நிலை. எனவே சட்ட உரிமை நிலை என்பது ஒரு பதமாக கருதப்படாது, ஒரு எண்ணகருவாக கருதப்படல் வேண்டும்.

**ஆதரவு நாடல்:** தம் மீது செல்வாக்கு செலுத்தக் கூடிய தீர்மானம் எடுப்பவர்கள் மற்றும் ஏனையோருடன் நேரடியாக தொடர்பு கொள்ளல். இந்த பதம் 'வராந்தா' என்ற நுழைவாயில் பகதி அல்லது சந்திப்பு அறை என்பதனை விளக்கும் பதத்திலிருந்து உருவானது. பரப்புரையில் இந்த பதம், அதிகாரத்தில் உள்ளவர்களை அணுகி கலந்துரையாடல்கள் மற்றும் சந்திப்புக்களை நடத்தலை குறிப்பிடுகின்றது.

**கண்காணித்தல்:** செயற்றிட்டம் அல்லது நிகழ்ச்சியின் செயன்முறை தகவல் தொடர்பில் தொடர்ச்சியாக முறை சார்ந்த சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் *(மதிப்பீடு செய்தலை பார்க்கவும்).*

**குறிக்கோள்:** உங்களுடைய இலக்கை அடைவதற்கு உதவக் கூடிய வகையில் நீங்கள் கொண்டு வரக் கூடிய மிகவும் முக்கியமான மாற்றமாக குறிக்கோள் என்பது பரப்புரையில் கருதப்படுகின்றது. அது மிகவும் முக்கியமானது. அளவிடக் கூடியது. அத்துடன், நீங்கள் எதனை, எங்கே, எப்போது மற்றும் யாரால் பூர்த்தி செய்யப் போகின்றீர்கள் என்பதனை விளக்குவது. பொதுவாக, பரப்புரை குறிக்கோளுக்கான நேர வரைபு 1 முதல் 3 வருடங்களாகும். ஸ்தாபனம் ஒன்று எடுக்கக் கூடிய முக்கியமான நடவடிக்கை தொடர்பில் குறிக்கோள் கவனஞ் செலுத்த வேண்டும். நீங்கள் கொண்டு வரப் போகும் மாற்றமானது எது மாற்றமடைய வேண்டும், யார் அதனை செய்ய வேண்டும், மற்றும் எப்போது செய்ய வேண்டும் என்ற பதங்களில் விளக்கப்பட்டிருக்க வேண்டும்.

**பங்குபற்றல்:** கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு, தீர்மானம் எடுத்தலில் செல்வாக்கு செலுத்துவதற்கு மற்றும் மாற்றத்தை அடைவதற்கு உள்ள சந்தர்ப்பம். சிறுவர்களின் பங்குபற்றல் என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மாற்றுத் திறன்களை உடைய சிறுவர்கள் உள்ளடங்கலாக நேரடியாக அல்லது மறைமுகமாக சிறுவர்களின் தெரிவிக்கப்பட்ட மற்றும் விருப்புடைய ஈடுபாடு ஆகும். சிறுவர்களின் பங்குபற்றல் என்பது பணியொன்றை நோக்கிச் செயற்படும் வழியாகும். மற்றும் வீட்டிலிருந்து அரசாங்கம் வரை, உள்ளூரிலிருந்து சர்வதேசம் வரை அனைத்து நிகழ்ச்சிகளையும் நிறுத்தும் ஒரு அத்தியாவசியமான கொள்கையாகும்.

**நிகழ்ச்சி:** ஒரே துறையில், ஒரே எண்ணக்கருவில், ஒரே புவியியல் பகுதியில் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையின் அடிப்படையில் மற்றும் முழுமையான இலக்கை நோக்கிய செயற்பாட்டுக்கு நிறுவனம் ஒன்றினால் ஆதரவளிக்கப்பட்ட பணி. நேரடி தலையீடுகள், சேவை வழங்கல் மற்றும் பரப்புரை என்பவற்றை உள்ளடக்கியதாக நிகழ்ச்சிகள் உள்ளன.

**உரிமைகள் உடையவர்:** உரிமையானது மதிக்கப்பட்டுள்ளது, பாதுகாக்கப்பட்டுள்ளது மற்றும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என கோக் கூடிய உரிமையுடைய நிலையில் உள்ள தனிப்பட்ட நபர்கள் அல்லது தனிப்பட்ட நபர்களின் தொகுதி. ஏனைய உரிமைகள் உடையவர்கள் சம்பந்தப்பட்ட கடமைகளும் பொறுப்புக்களும் உரிமைகள் உடையவருக்கு உள்ளன *(பொறுப்பு உடையவரை பார்க்கவும்)*.

**பங்குதாரர்கள்:** சிறுவர்கள், தனிப்பட்ட நபர்கள், ஸ்தாபனங்கள், வர்த்த துறைகள் அல்லது சிறுவர்களுடன் தொடர்புடைய அரசாங்க அமைப்புக்கள் உள்ளடங்கலாக உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கையால் பாதிக்கப்படக் கூடிய அல்லது பாதிக்கப்பட்ட அனைத்து மக்கள் குழுவும். அனைத்து பங்குதாரர்களினதும் பிரவேசம், வளங்கள் மீதான அவர்களது கட்டுப்பாடுகள் மற்றும் தீர்மானம் எடுத்தலில் அவர்களது நிலை என்பது தொடர்பில் பொறுப்புக்கள் மற்றும் பாத்திரங்களில் பல வேறுபாடுகள் உள்ளன.

**சூழ்நிலை பகுப்பாய்வு:** எந்தவொரு நிகழ்ச்சி திட்டத்திற்குமான அடிப்படை. நீங்கள் மாற்றுவதற்கு முயற்சிக்கின்ற பிரச்சினையின் பகுப்பாய்வினை அது உங்களுக்கு வழங்கும். அது எவ்வாறு அடையாளப்படுத்தப்படலாம் என்ற வழியினையும் அது உங்களுக்கு வழங்கும். சூழ்நிலை பகுப்பாய்வை முன்னெடுப்பதற்கு பல வழிகள் உள்ளன. ஆனால், பல சேவ் த சில்ரன் நிறுவனங்கள் சிறுவர் உரிமைகளையே வரைபு அமைப்பாக பயன்படுத்துகின்றன.

**இலக்குக் குழு(க்கள்):** நீங்கள் எதிர்பார்க்கும் கொள்கை மாற்றத்தை கொண்டு வரக் கூடிய பிரதான தனி நபர்கள் *(செல்வாக்கு செலுத்துபவர்களை பார்க்கவும்).*

**UNCRC**:சிறுவர் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் சாசனம் (1989, அனைத்து சிறுவர்களின் உரிமைகளையும் நிலைநாட்டுவதற்கான உரிமைகள், நியமங்கள் மற்றும் கண்காணித்தல் பொறியமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய சர்வதேச உரிமைகள் சாசனம்.

# ஆதாரங்களின் பட்டியல்


**சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பரப்புரை கையேடுகள்**

சேவ் த சில்ரன், டென்மார்க் (2006) *சிறுவர் உரிமைகள் பரப்புரை, செயற்பாட்டு வழிகாட்டிகள்*

சேவ் த சில்ரன், ஐக்கிய இராச்சியம் (2007) *பரப்புரை கருவித் தொகுதி. பரப்புரை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தும் கருவிகளின் சேகரிப்பு.*

சேவ் த சில்ரன், ஐக்கிய இராச்சியம் (2000) *கல்விக்கான மாற்றத்திற்கு செயற்படல், பரப்புரை திட்டமிடலுக்கான கைநூல்.*

சேவ் த சில்ரன், ஐக்கிய அமெரிக்கா (2005) *மூலோபாய பரப்புரை பிரசாரத்தை வடிவமைத்தல்: சேவ் த சில்ரன் கள அலுவலகங்களுக்கான ஆதார வழிகாட்டி.*

**சேவ் த சில்ரன் செயலமர்வுகள்**

சேவ் த சில்ரன், டென்மார்க் (2006) கல்வி, கொள்கை மற்றும் வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வு செயலமர்வுக்கான பரப்புரை, எத்தியோப்பியா

சேவ் த சில்ரன், டென்மார்க் பரப்புரை தூண்டற் குழு.
சேவ் த சில்ரன், சுவீடன் (2005) *சிறுவர் உரிமைகளை யதார்த்தமாக்கலுக்கான பரப்புரைக்காக பிராந்திய இயலுமையை கட்டியெழுப்பல்*

சேவ் த சில்ரன் சுவீடன் பிராந்திய நிகழ்ச்சி, தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்காக, காத்மண்டு.

சேவ் த சில்ரன் சுவீடன் (2006) *சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சமுதாய மற்றும் சிறுவர் மத்தியப்படுத்தப்பட்ட பரப்புரை, உலகளாவிய இயலுமையை கட்டியெழுப்பல் செயலமர்வு*
சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் சேவ் த சில்ரனின் உலக செயற்பாட்டு குழு.

**வெளியக நிறுவனங்கள், பரப்புரை கையேடுகள்**

எக்ஷன் எய்ட் இன்டர்நெஷனல் (2005) *அதிகாரம் மற்றும் மாற்றம் தொடர்பான சிக்கலான வலை: மக்கள் மத்தியப்படுத்தப்பட்ட பரப்புரைக்கான திட்டமிடல், பிரதிபலிப்பு மற்றும் கற்றலுக்கான ஆதாரப் பொதி*
சுருக்கமான புத்தகம் மற்றும் இறுவட்டு
www.actionaid.org

கொஹென் டீ டி லா வெகா, ஆர் மற்றும் வொட்சன், ஜி (2001) *சமூக நீதிக்கான பரப்புரை, உலக நடவடிக்கை மற்றும் பிரதிபலிப்பு வழிகாட்டி,* ஒக்ஸ்பார்ம்/குமாரியன் அச்சகம்.

கோட் ஜே. மெண்டிசபல், ஈ ஒஸ்போர்ன், டீ மற்றும் யங், ஜெ (2006) *கொள்கை ஒப்பந்தம், எவ்வாறு சமூகம் மேலும் பயனுடையதாகும்.* வெளிநாட்டு அபிவிருத்தி ஸ்தாபனம் www.odi.org.uk

சர்வதேச எச்.ஐ.வி/எய்ட்ஸ் கூட்டமைப்பு (2002) *பரப்புரை நடவடிக்கையில்: எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பில் பதிலளிக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமுதயாஞ் சார்ந்த நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குவதற்கான கருவித் தொகுதி.*www.aidsalliance.org

கொள்கை செயற்றிட்டம் (1999) *கொள்கை மாற்றத்திற்கான வலையமைப்பு: பரப்புரை பயிற்சி கையேடு,* கொள்கை செயற்றிட்டம்.www.policyproject.com/pubs/AdvocacyManual.cfm

பாதுகாப்பான உலகம் (2005) *நடவடிக்கைக்கான பயிற்சி,* பாதுகாப்பான உலகம்
www.saferworld.org.uk

சர்மா, ஆர் (1997) *பரப்புரைக்கான அறிமுகம்:* பயிற்சி வழிகாட்டி, AED, SARA செயற்றிட்டம், AFR/SD, HHRAA செயற்றிட்டம். www.aed.org

ஸ்பிரக்மன் எஸ் மற்றும் பெல்டன் ஈ (2001) *பரப்புரை கருவிகள் மற்றும் வழிகாட்டிகள்: கொள்கை மாற்றத்தை பிரசாரப்படுத்தல்,* CARE.www.care.org/getinvolved/advocacy/tools.asp

ட்ரொகெயார், (2007) *அரசாங்க கொள்கைகளை கண்காணித்தல்: ஆபிரிக்காவில் உள்ள சிவில் சமூக நிறுவனங்களுக்கான கருவித் தொகுதி,* Trocaire, CAFOD மற்றும் Christian Aid, www.trocaire.org

வெனிகிளேசன், எல். மில்லருடன், வி (2002) *அதிகாரத்தின் புதிய பின்னல், மக்கள் மற்றும் அரசியல்: பரப்புரை மற்றும் பிரஜைகள் பங்களிப்புக்கான நடவடிக்கை வழிகாட்டி, ஜஸ்ட் அசோசியட்ஸ்* www.justassociates.org

**சிறுவர் உரிமைகள்**

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு (2007) *சரியாக பெற்றுக் கொள்ளல்: சிறுவர் உரிமைகள் நிகழ்ச்சிக்கான தொழில் நடத்துநர் வழிகாட்டி,* சிறுவர் உரிமைகளுக்கான சாசனத்தின் அரச சார்பற்ற நிறுவன குழு (2001), *சிறுவர் உரிமைகளுக்காக வலையமைப்பு: அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான வழிகாட்டி.* www.crin.org

சேவ் த சில்ரன் ஐக்கிய இராச்சியம் (2007) *சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் குழுவுக்கு அறிக்கையிடல்:* வதிவிட நிகழ்ச்சிகளுக்கான ஆரம்ப தொகுதி. (உள்ளக சேவ் த சில்ரன் ஆதாரம், சேவ் த சில்ரன் ஐக்கிய இராச்சியத்தின் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கானது)

**பரப்புரையில் சிறுவர் பங்குபற்றல்**

பண்டாரி, என் (2005), *சிறுவர் மற்றும் சிறுமியர் மீதான உடலியல் மற்றும் பிறபடுத்தல்.:அவமானப்படுத்தல் தண்டனைகளுக்கு எதிரான பணி, இந்தியாவின் ஆந்திரா பிரதேசம் மற்றும் ஒரிசாவின் அனுபவங்கள்,* சேவ் த சில்ரன் சுவீடன்.

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு (2003) *எனவே நீங்கள் சிறுவருடன் ஆலோசிக்க வேண்டுமா? நல் பயிற்சிக்கான கருவித் தொகுதி,* சேவ் த சில்ரன் www.savethechildren.net

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பு (2005) *சிறுவர் பங்குபற்றல் தொடர்பான பிரயோக நியமங்கள்,* சேவ் த சில்ரன். பிரெஞ்சு மற்றும் ஸ்பானிய மொழிகளில் மொழிபெயர்ப்பு கிடைக்கின்றது. தற்போது போர்த்துக்கேய மொழியிலும் பெயர்க்கப்பட்டுள்ளது. www.savethechildren.org.uk/en/docs/practice_standards_participation.pdf

சேவ் த சில்ரன் சுவீடன் (2004) *எனவே நீங்கள் சிறுவர்களை ஆய்வில் ஈடுபடுத்த விரும்புகின்றீர்களா? சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பிலான ஆய்வில் சிறுவர்களின் அர்த்தமுள்ள மற்றும் ஒழுக்கரீதியான பங்குபற்றலை ஆதரவளிக்கும் கருவித் தொகுதி,* சேவ் த சில்ரன். www.savethechildren.net

சேவ் த சில்ரன் சுவீடன் (2005) *சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வரும் சிறுவர்களின் நடவடிக்கைகள் - சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான ஐ. நா கற்கைக்கான ஒத்துழைப்பு,* சேவ் த சில்ரன். www.rb.se

**பரப்புரையில் ஆதாரம்**

லோவ்ஸ், எஸ் (2003) *அபிவிருத்திக்கான ஆய்வு: பிரயோக வழிகாட்டி,* சேவ் த சில்ரன்/சாகே.

ஸ்டார்ட் டீ மற்றும் ஹொவ்லேண்ட், ஐ (2004) *கொள்கை தாக்கத்திற்கான கருவிகள்: ஆய்வாளர்களுக்கான கை நூல்,* அபிவிருத்திக்கான நிகழ்ச்சியில் ஆய்வு மற்றும் கொள்கை (RAPID), வெளிநாட்டு அபிவிருத்தி ஸ்தாபனம் www.odi.org.uk/publications/rapid/tools1.pdf

**அவசர காலத்தில் பரப்புரை**

சர்வதேச சேவ் த சில்ரன் கூட்டமைப்பில் பரப்புரை சம்பந்தான அத்தியாயம், *அவசர கால பிரதிபலிப்பு கருவித்தொகுதி,* (ஆரம்ப ஆவணம், மார்ச் 2007) கூட்டமைப்பு இணையத்தளத்தில் கிடைக்கும். www.savethechildren.net/xtranet/emergencies/index.html

**வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வு**
சர்வதேச வரவு செலவுத் திட்ட செயற்றிட்ட இணையத்தளம்:
www.internationalbudget.org/

உலக வங்கி இணையத்தளம், வறுமை மற்றும் சமூக தாக்க பகுப்பாய்வு (PSIA கருவி): www.worldbank.org/psia

**பரப்புரையை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்**
பரப்புரை மதிப்பீட்டு செயற்றிட்டம், புதுமையான வலையமைப்பு. JEHT நிதியம் மற்றும் அட்லாண்டிக் பிலன்த்ரோபிஸ் இன் அனுசரணையுடன், தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.
www.innonet.org

பரப்புரை ஸ்தாபனம் (1992) *உங்கள் கதையை கூறுங்கள்: பரப்புரை சம்பவ கற்கைகளை தயாரிப்பதற்கான வழிகாட்டி.*
www.advocacy.org

நீதிக்கான கூட்டமைப்பு (2005) *"உங்களுடைய பரப்புரை மானியம் தயாரித்தல்: பரப்புரை மதிப்பீடு செய்தல் கருவி, பரப்புரை இயலுமை மதிப்பிடல் கருவி."* ஜோர்ஜ் குன்ட் நிதியத்தின் பரப்புரைக்கான மதிப்பீடு செய்தல் செயற்றிட்டத்தினால் அனுசரணை வழங்கப்பட்டது.
www.advocacyevaluation.org

அஸ்பென் ஸ்தாபனத்தின் உலக சார்புள்ளமைக்கு இடையிலான முயற்சி*(GII)*. தொடர்ச்சியான செயன்முறை, 2006.
www.continuousprogress.org

செப்மேன், ஜெ மற்றும் அம்போகா டபிள்யு (2001) *பரப்புரையை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்: கற்கைக்கான வழி,* அக்ஷன் எய்ட் www.actionaid.org

எக்பர்ட், எம் மற்றும் ஹோக்ஸ்டெட்டர், எஸ் *"சாத்தியமான நோக்கம்" பரப்புரை மானியங்களை மதிப்பீடு செய்தல்.* நிதியச் செய்திகள் மற்றும் வர்ணனை, இதழ் 47, இல 1, ஜனவரி/பெப்ரவரி 2006. www.foundationnews.org

கொஸ்லிங், எல், எட்வர்ட்ஸ்டன், (2003) *பரப்புரை திட்டமிடல், கண்காணித்தல், மற்றும் மதிப்பீடு செய்தல். கருவித் தொகுதிகள்: திட்டமிடல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் தாக்க மதிப்பீடுக்கான பிரயோக வழிகாட்டி,* சேவ் த சில்ரன் ஐக்கிய இராச்சியம்.

குத்ரி கே. லூயி, ஜெ. டேவிட், ரி. மற்றும் கிறிஸ்டல் ∴பொஸ்டர், சி (2005), *பரப்புரையை மதிப்பீடு செய்வதற்கான சவால்கள்: கொள்கை மாற்றம் மற்றும் பரப்புரையை மதிப்பீடு செய்வதற்கான வாய்ப்புள்ள அணுகுமுறைகளுக்கான மூலோபாயங்கள்,* புளுபிரின்ட் ஆய்வு மற்றும் வடிவமைப்பு, கலிபோர்னியா என்டோவ்மன்டின் அனுசரணையுடன்.
www.calendow.org

குத்ரி கே. லூயி, ஜெ. டேவிட், ரி. மற்றும் கிறிஸ்டல் ∴பொஸ்டர், சி (2006), *கொள்கை மற்றும் பரப்புரை நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதில் சவால்கள்: பகுதி 2 – கோட்பாட்டிலிருந்து பிரயோகத்திற்கு நகரல்.* புளுபிரின்ட் ஆய்வு மற்றும் வடிவமைப்பு, கலிபோர்னியா என்டோவ்மன்டின் அனுசரணையுடன். www.calendow.org

ஹார்வட் பெமிலி ஆய்வு செயற்றிட்டம். "பரப்புரை மற்றும் கொள்கை மாற்றம்" *மதிப்பீட்டு பரிமாற்றம்,* பகுதி 8, இல 1, வசந்த காலம் 2007, கல்விக்கான ஹார்வட் பட்டதாரிகள் பாடசாலை. www.gse.harvard.edu

நிறுவனமய ஆய்வு சேவைகள் (2004) "செல்வாக்கு மற்றும் ஊக்குவித்தலை ஆவணப்படுத்துவதற்கான பிரயோக வழிகாட்டி" *சமுதாயத்திற்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தல்.* எனி ஈ. கேசி நிதியம் www.aecf.org

ரீஸ்மேன், ஜெ. கீன்அப், ஏ மற்றும் ஸ்ரேக்கோவியக், எஸ். *தரவு சேகரிப்பு கருவிகளின் கை நூல்: "பரப்புரை மற்றும் கொள்கையை அளப்பதற்கான வழிகாட்டி" சகா.* எனி ஈ. கேசி நிதியத்தினால் தயாரிக்கப்பட்டது மற்றும் நிதியுதவி அளிக்கப்பட்டது. நிறுவன ஆய்வு சேவைகளால் உருவாக்கப்பட்டது. www.organizationalresearch.com

ரோக், சி (1999) "தாக்க மதிப்பீடு மற்றும் பரப்புரை": *அபிவிருத்தி நிறுவனங்களுக்கான தாக்க மதிப்பீடு: பெறுமதி மாற்றத்தை கற்றல்,"* ஒக்ஸ்பாம் ஜிபி.

-பின் அட்டை-